# வள்ளல் சீதக்காதி வரலாறு

26989



கலைமாமணி கவி கா.மு. ஷெரீப்

# வள்ளல் சீதக்காதி வரலாறு

கலைமாமணி
கவி கா.மு.ஷெரீப்

அபிராமி நிலையம்
307, லிங்கி செட்டி தெரு
சென்னை-600 001

இரண்டாம் பதிப்பு: செப்டம்பர்.1985

விலை ரூ. 17-00

அச்சிட்டோர்:
விசாலம் பிரிண்டிங் ஹவுஸ்,
சென்னை-600 024.

# பதிப்புரை

ஈதல் இசைபடவாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

என்பது வள்ளுவர் வாக்கு.

வள்ளுவரின் சொல்லுக்கேற்ப தமிழகத்தை ஆண்ட மன்னர்கள், வணிகர்கள், பெருஞ்செல்வர்கள் பலர் கொடை உள்ளம் படைத்தவர்களாக வாழ்ந்தனர். அதன் பின்னர் அறச்சிந்தனையாளர் அருகிவிட்டனர் என்னும் நிலை பெருகி வந்துள்ளது. கடையேழு வள்ளல் களுக்குப் பின்னர் ஒருவர் 'வள்ளல்' என்னும் பெரும் புகழோடு தமிழ் நூல்களில் பேசப்படாதிருந்த சாலம் நீண்டபோதுதான், 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்னும் புகழ் ஒளி பரப்பும், இள ஞாயிறாக வள்ளல் சீதக்காதி தமிழ் இலக்கியங்களிலும், நாட்டு மக்களிடை யும் புகழடைந்த அறத்தினராக நிலை பெற்று வருகிறார்.

வள்ளல் சீதக்காதி இஸ்லாம் மதத்தினராயினும், மாண்புள்ள மனிதனுக்கு மத-மொழி-இன வேறுபாடில்லை என்பதற்கிணங்க அனைத்து மக்களாலும் போற்றிப் புக ழப்படுகிறார்.

வள்ளல் சீதக்காதியின் வாழ்க்கையை அறிய முழு நூல் ஏதுமற்ற நிலையில் கலைமாமணி கவிஞர் கா.மு. ஷெரீப் அவர்கள் இந்நூலை சிறப்புற ஆக்கியுள்ளார்கள். பல்வேறு ஆதாரங்களுடன் வள்ளல் சீதக்காதி வாழ்ந்த தமிழகத்தை நம் கண் முன்னே நிறுத்துவதில் கவிஞர் வெற்றி பெற்றுள்ளார். இந்நூல் அவராலேயே முதல் பதிப்பாகப் பதிப்பிக்கப் பட்டு அறிஞர் மத்தியில் வர வேற்கப்பட்டது. இரண்டாம் பதிப்பாக அபிராமி நிலை யம் சார்பில் வெளியிட இசைந்த கவிஞர் பெருந்தகைக்கு எங்களது நன்றி என்றும் உண்டு.

அன்புடன்

**பதிப்பகத்தார்**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தொன்மைத் தமிழகம் | 33 |
| தமிழர் - அரபியர் உறவு | 40 |
| இஸ்லாம் என்றால் என்ன? | 48 |
| தமிழகமும் வரலாறும் | 51 |
| எது கொற்கை? | 54 |
| பெயர்க் காரணம் | 61 |
| கெஜெட்டியர் செய்திகள் | 65 |
| தமிழகத்தில் மார்கோபோலோ இபுனுபதூதா பயணப் பாதைகள் (வரைபடம்) | 71 |
| தமிழகத்தில் முஸ்லிம் வருகை | 74 |
| வள்ளல் சீதக்காதியின் முன்னோர் | 84 |
| வள்ளல் சீதக்காதி | 101 |
| வள்ளல் சீதக்காதியின் வழித் தோன்றல்கள் | 103 |
| வள்ளல் சீதக்காதியின் முதல் தம்பி மாமுநயினா மரக்காயர் | 107 |
| பட்டத்து அபூபக்கர் மரக்காயர் | 108 |
| பட்டத்து செய்யது முகமது ஆலிம் மரக்காயர் | 109 |
| ப. அத்தாவுல்லா ஹாஜி மரக்காயர் | 110 |
| பள்ளிகள் கட்டியவர் | 111 |
| ஹபீபரசர் | 111 |

| | |
|---|---|
| கிளையினர் | 112 |
| வள்ளல் சீதக்காதி வாழ்ந்த காலம் | 112 |
| டில்லி பாதுஷா அவுரங்கஜேப் தொடர்பு | 117 |
| பொன்னும் நெல்லும் | 120 |
| தமிழ்த்தொண்டு | 122 |
| வள்ளலை மணந்த மனைவி | 124 |
| தொழில் வளம் | 125 |
| நெஞ்சில் நிறுத்துக | 126 |
| வள்ளல் பற்றிய நூல்கள் | 127 |
| செய்தக்காதி நொண்டி நாடகம் | 131 |
| வள்ளலைப் பாடிய புலவர்கள் | 133 |
| உமறுப் புலவர் | 134 |
| சீதக்காதியின் பெயரால் சொல்லப்படும் கதைகள் | 138 |
| வள்ளல் சீதக்காதியின் தன்மை | 139 |
| வள்ளல் சீதக்காதி வகித்த பதவிகள் | 141 |
| அன்பளிப்புகள் | 143 |
| சீதக்காதி பேரில் தனிப் பாடல்கள் | 145 |
| செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து | 152 |
| செய்தக்காதிறு நொண்டி நாடகம் | 191 |
| முடிவுரை | 227 |

[இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தமிழ்நாடு மாநிலத் தலைவர் சிராஜ் மில்லத் ஆலி ஜனுப் அல்ஹாஜ் A. K. A. **அப்துல் ஸமத் சாஹிப் M.A., M.P.** அவர்கள் அன்புடன் வழங்கிய]

# முன்னுரை

**"இஸ்லாம் எங்கள் வழி**
**இன்பத் தமிழ் எங்கள் மொழி"**

என்ற முழக்கம் இன்று ஓங்கி ஒலிக்கிறது.

இந்த முழக்கமே ஓர் இயக்கமாக உருவெடுத்து நிற்பதையும் பார்க்கிறோம்.

தொன்மையான மொழி தமிழ். அதைப் போன்றே, தொன்மையான சமயம் இஸ்லாம் ஆகும்.

மனிதன் முதன்முதலாக நாவசைத்தபோது எழுந்த ஒலி தமிழ் என்று சொல்லப்படுவது உண்டு.

ஆதி மனிதனுக்கு இறைவன் அருளிய வழ்முறை, வாழ்க்கை நெறி இஸ்லாமே ஆகும்.

எனவே, தமிழுக்கும் இஸ்லாத்திற்கும் உள்ள தொடர்பு உலகத் தொடக்கத்திலிருந்து உள்ளதாகும்.

இடையிலே தொய்யல் விழுந்திருந்து—தொடர்பு அற்றுப் போயிருந்த உறவு—அரபுத் திருநாட்டில் 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அண்ணலம் பெருமானார் நாயகத் திருமேனி முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமியத் திருநெறியை முழுமைப்படுத்தி நிலைநாட்டிய அந்தக் காலத்திலிருந்து புதுப்பிக்கப்பட்டது.

பல்சந்தமாலை 83, 84, 89, 90, 91, 97

இலக்கிய வரலாற்றுநூல் 84

சீதக்காதி திருமண வாழ்த்து 86, 87, 102, 103, 104

பழங்காலத்துத் தக்காணம் (Ancien Dehkan) 86

சூளவம்சம் 86

எலியட் அண்ட் தாசன் III 88

திருப்புல்லாணிக் கல்வெட்டு 93, 94, 95, 96

இராமநாதபுரம் மானுவல் 101

சீதக்காதி வள்ளல் 106, 227, 228

17ம் 18ம் நூற்றுண்டுகளின் ஜெசியூட் சங்க வரலாறு 121

இலக்கிய வரலாறு, இரண்டாம் பாகம் 136

தமிழ் இலக்கிய வரலாறு 137

ஆலிம் புலவரின் ஆன்ற ஒழுக்கம் 137

முஸ்லிம் தமிழ்ப் பாடல்கள் 230

The Madras District Gazeteers, Tinnevelly 64

Record of Fort St. George and Diary Consultation Book 67, 68, 116

Indlsehe Alter Thous Kunde Vohchvishan Lassen 69

The Hundreds (நூற்றுவர்) 74, 78

Mabar VenkataRamalah, vol xxii 84

South India and Her Muhammadan Invaders 100

Twenteith Century Impressions of Ceylon 230

இஸ்லாம் முழுமை பெற்று நிலைநாட்டப் படுவதற்கு முந்திய காலத்திலிருந்தே தமிழகத்திற்கும் அரபகத்திற்கும் வணிகத் தொடர்பு வலுப்பெற்று இருந்தது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கடல் வாணிபத்தின் நாயகர்களாக விளங்கிய பெருமை மூன்று இனத்தாருக்கு உண்டு.

மேலைப் பகுதியில் அரபுகளும், கீழைப் பகுதியில் சீனர்களும் இருந்தனர். இவ்விரு திசைகளுக்கும் இடைப்பட்ட நடுப்பகுதியில் இருந்த காரணத்தால, மேற்கூறிய இரு சமுதாய வணிகத்தையும் இணைத்து, இடை நிலைத் தொடர்பு வணிகர்களாகச் சிறந்து ஓங்கும் வாய்ப்புத் தமிழர்களுக்கு இருந்து வந்தது.

இந்த விதத்தில் தமிழகக் கரைகளில் வந்தணைந்த அரபகத்துக் கலங்களில் வந்த வணிகர்கள் கொள்வினை கொடுப்பினைப் பண்டங்களை மாத்திரமின்றி, கொள்கைகளையும் கொண்டு வந்தார்கள்.

அப்படி வந்து சேர்ந்த அறநெறியாம் இஸ்லாம் தமிழக மக்களால் அவர்கள் தம் பண்டைய பொருள்களைப் போலவே கருதி மனமார வரவேற்கப்பட்டு மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"அறிவு ஞானம் எங்கே கிடைக்கப்பெறினும் அதை நீங்கள் ஏற்கனவே இழந்துவிட்ட பொருளாகக் கருதி அதனை ஆவலுடன் பற்றிப் பிடித்துக் கொள்க" என்ற பொருள் பொதிந்த அண்ணலம் பெருமானார் பொன்மொழி ஒன்று உண்டு.

அந்த அடிப்படையிலேயே ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் அரபகத்து வணிகர்கள் கொண்டு வந்த பொருள்களையும் ஏற்றனர். அவர்கள் கடைப்பிடித்த அருள் வழியாம் இஸ்லாத்தையும் உவந்து தழுவினர்.

கைபர் கணவாய் வழியாக கஜினி முஹம்மது இந்திய எல்லையில் நுழைவதற்கு முன்னரே தமிழகத்துக் கடற் கரைகளில் அரபகத்தில் தோன்றிய அண்ணலரின் திருப் போதங்கள் எதிரொலித்தன; எடுத்துரைக்கப்பட்டன.

இஸ்லாமியத் திருநெறி, புதிய செழுநெறி என்று சொல்லப்படுவதாயினும், அது தமிழகத்தைப் பொறுத்த வரை ''ஆயிரங்காலத்துப் பயிர்'' என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்தப் பயிர் தழைத்து, செழித்து, மரமாக வளர்ந்து, கிளை பரப்பி, தமிழகத்தில் அடர்ந்த தருவாக நிழல் அளித்து வந்திருக்கிறது.

இதன் செழுங்கிளையில் எத்தனையோ வள்ளல்கள் பிறந்து சிறந்திருக்கிறார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் ஷெய்கு அப்துல் காதிர் என்னும் சீதக்காதி என்பவராவார்.

அவருடைய எழிலார் வரலாற்றை ''வள்ளல் சீதக் காதி வரலாறு'' என்ற தலைப்பில் **கலைமாமணி கவிஞர் கா. மு ஷெரீப்** அவர்கள் நமக்குத் தருகிறார்கள்.

**தமிழின் இனிமையும், இஸ்லாத்தின் பெருமையும், வரலாற்றின் சுவையும், இலக்கியத்தின் நயமும் ஒருங்கே பொருந்தியதாக இந்த நூல் அமைந்திருக்கிறது.**

நம்முடைய **கலைமாமணி கவிஞர் கா. மு. ஷெரீப்** அவர்கள தமிழை முறையாக ஆய்ந்தவர்கள். இந்த உண்மை தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

வரலாற்றையும் சிறப்பாக அவர்கள் ஆய்ந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாக வள்ளல் சீதக்காதி வரலாறு விளங்குகிறது.

தலைப்பைப் படித்தால் இது தனி ஒரு மனிதனின் வரலாறோ என்ற தயக்கம் சிலருக்கு ஏற்படக்கூடும். ஆனால்,

சீதக்காதி வழியே தொன்மைத் தமிழகம் தொட்டுக் காட்டப்படுகிறது.

'இஸ்லாம் என்றால் என்ன?' என்று எடுத்தியம்பப் படுகிறது. 'எது கொற்கை' என்பது நிலைநாட்டப்படு கிறது.

இவற்றுக்கெல்லாம் சான்றாக இலக்கியம் விரித்துரைக் கப்படுகிறது, செப்பேடு படித்துக் காட்டப்படுகிறது. சீதக்காதி பெயரில் உள்ள தனிப்பாடல்கள் மட்டும் அல் லாமல், எட்டயபுரம் உமறு கத்தாப்புலவர் பாடிய ''திருமண வாழ்த்து'' மற்றும ''நொண்டி நாடகம்'' போன்ற இலக்கியங்களும் இங்கே புதுப்பிக்கப்படு கின்றன.

கலைமாமணி அவர்கள் சின்னஞ்சிறு சொற்றொடர் களில் பென்னம் பெரிய உண்மைகளைச் சொல்லிச் செல் லும் பாங்கு நம்மை வெகுவாகக் கவர்கிறது.

இந்நூலைப் படித்துப் பார்த்தால் இது வரலாறா, தத்துவ விளக்கமா, இலக்கிய விரிவுரையா, இலக்கண விசாரணையா, ஆய்வின் முடிவா? என்ற கேள்விகள் எல்லாம் எழக்கூடும்.

மேற்கூறிய அத்தனையும் ஒருங்கே பொதிந்த கருத்துக் கருவூலம்தான் 'வள்ளல் சீதக்காதி வரலாறு.'

இது,

தமிழுக்கு வலிமை சேர்க்கிறது.

இஸ்லாத்துக்குப் புகழ் சேர்க்கிறது.

நம் அறிவை விசாலப்படுத்துகிறது.

எனவே,

பல வகைகளிலும் பயன்தரும் நூல்.

22-8-81

சென்னை

ஆ. கா. அ. அப்துஸ்ஸமத்

பன்னூலாசிரியர், பன்மொழிப் புலவர், உயர்திரு.

**கா. அப்பாத்துரைப்பிள்ளை**, எம்.ஏ.எல் டி., **(விசாரத்)**

அவர்கள் வழங்கிய

# திறனாய்வு முன்னுரை

தமிழகத்தின் முன்னணிக் கவிஞர் வரிசையில் நாட்டுப் பற்றார்வத்துடன், சமதரும சமுதாய ஆக்க ஆர்வமும் குழைத்து ஊட்டும் தமிழ்க் கவி வாணராகக் கவிஞர் கா. மு. ஷெரீப்பைத் தமிழகம் நன்கு அறியும். அத்துடன் அவர் தேசியக் கவிஞர் பாரதி, பாரதிதாசனைப் போலத் தேசத் தொண்டராகவும், சொற்பொழிவாளராகவும், தமிழார்வலராகவும் மக்களிடையே பீடுநடை போட்டு வருபவர் ஆவார். ஆனால், கவிதையேயன்றி வேறு இரு பெருந்துறைகளிலும் அவர் குறிப்பிடத்தக்க சிறந்த சாதனை செய்துள்ளார். அவரது சீறாப்புராணத்தின் வானொலிச் சொற்பொழிவுத் தொகுப்பேடும், வள்ளல் சீதக்காதி வரலாறு என்கின்ற வரலாற்றாராய்ச்சி ஏடும் இதை நம் கண் முன் முனைப்பாகக் கொண்டு வந்து காட்டுகின்றன.

பாரதிமரபு, பாரதிதாசன் மரபு ஆகியவற்றுக்கு முன்பே, அவற்றின் முன்னோடியாகத் தமிழகத்தில் கம்பர்மரபு என்ற ஒரு நெடுநீள் புகழ் மரபு உண்டு. அதில், கம்பர் பெருமானை அடுத்து வந்து, அம்மரபின் புதுமலர்ச்சி முதல்வராக விளங்கியவர் சீறாப்புராணம் கண்ட உமறுப்புலவர் பெருமான் ஆவார்.

உருவ வணக்கம், இறை அவதாரக் கருத்து, பிறப்புயர்வு தாழ்வு, பலதெய்வப் புராணக் கற்பனை, இறைமைப் பண்பு வாய்ந்த காவியத் தலைவர், தலைவியின் அங்க வருணனைகள், உயர்வு நவிர்ச்சியணிகள் போன்றவற்றை ஒரு சிறிதும் சகித்துக் கொள்ளாது சீறும் இயல்

புடையது இசுலாமிய சமுதாயம். அத்தகைய சமுதாய மக்களிடையே ஓர் இசுலாமிய கம்பர் மரபுக் காப்பியம் இயற்றிவிடுவது என்பது, வாள்முனையின் மேல் நடப்பது போன்ற அரிய சாதனை ஆகும். ஆனால் வியத்தகு முறையில், தமிழ் மரபில் நின்றே உமறுப்புலவர், பெருமான் இதனை சாதித்துள்ள அழகும் அருமைப்பாடும் வியந்து போற்றற்குரியன ஆகும். இவ்வகையில் அவர் பின் னுளைய கிறித்தவப் பெருங்கவிஞர்களான வீரமாமுனிவர் கிருஷ்ணப்பிள்ளை ஆகியோருக்கு வழிகாட்டியாக திகழ்பவர் ஆவார்.

இறைக்காப்பியக் கவிஞர் என்ற முறையில் காப்பியக் கவிஞரான கம்பரும், பக்திக் கவிஞரான சேக்கிழாரும் ஆங்காங்கே சீரிய ஆன்மீக அறிவுலக உவமைகளை ஓர் உத்தியாகக் கையாண்டுள்ளனர். அவர்கள் இலைமறை காயாகப் பயன்படுத்திய இம்மரபைப் பேரளவாக, கிட்டத்தட்ட முழு அளவாகக் கையாண்டு உமறுப்புலவர் பெருமான் தம் சீறுப்புராணத்தைக் கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகியவற்றின் தமிழ் மரபிலேயே வந்து கனிந்த ஓர் இசுலாமிய ஆண்மீகக் காப்பியம் ஆக ஆக்கியுள்ளார். தமிழ் மொழிக்கு இது பழம் புதுமை என்றால், அரபுமொழி நீங்கலான இசுலாமிய உலக மொழிகளுக்கு இது முற்றிலும் புதிது என்றே கூறத்தகும்.

கவிதையில் உமறுப்புலவர் செய்த இந்தச் சாதனையை நன்கு எடுத்துக் காட்டி, அதே சாதனையைத் திறனாய்வுத் துறையில் இயற்றி வீறு கொண்டவர் கவிஞர் கா. மு. செரீப். இது மட்டுமோ? தமிழ் மரபு, இசுலாமிய மரபு ஆகிய இரண்டும் மேலீடான வெளிப்பார்வையில் வேறு வேறு போலத் தோன்றினாலும், இரு மரபுகளிலும் ஒருங்கே ஊறிய பெருமான் உமறு சங்க இலக்கியம், அதனுட்பட்ட பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய சமய இலக்கியம், பண்டைய தமிழ்ப் புத்த-சமண இலக்கியங்கள் ஆகியவற்றின் மரபினைக் கம்பர், சேக்கிழார்

வழிநின்றே கண்டு இந்த இரு மரபுகளின் அடிப்படை ஒருமைப்பாட்டை வலியுறுத்தியுள்ளார். புதை மறை வாயிருந்துள்ள இந்த மெய்ம்மையைத் தமிழகத்துக்கு விளக்கமாகப் புலப்படுத்திய அருந்திறனாய்வாளர் கவிஞர் கா. மு. செரீப். இந்த வகையில் அவரை நாம் உமறுப் புலவரின் பண்புருவுக்கு ஒரு புதிய ஒளிவிளக்கம் தந்தவர் எனலாம்.

கவிஞர் கா. மு. செரீப் சிறந்து விளங்கும் மூன்றுவது துறை வரலாற்றாராய்ச்சித் துறை என்பதை வள்ளல் சீதக் காதி வரலாறு என்ற இவ் ஆய்வேடு மலை மேல் விளக்கு மாகத் தெரிவிக்கிறது. உண்மையில், கவிதையிலும் திற னாய்விலும் ஒருங்கே சிறந்து நிற்கும் அவரது தனி மாண் பினுக்கே மூலகாரணமாயிருப்பது இவ்வேட்டில் காணப் படும் அவரது தமிழ் மரபாராய்ச்சித் திறமே என்னலாம். இதனாலேயே காலத்தில் மிகுந்து, தமிழர் வாழ்க்கை மரபில் இடையே தோன்றி மறையும் கவிஞர், எழுத் தாளர் போலன்றி, அவர் பாரதி, பாரதிதாசனைப் போலத் தமிழ் மரபில் வேரூன்றி நின்றே புத்துலகப் பேரொளியில் புதுமை மலர்ச்சி காணத்தக்க ஒரு காலங் கடந்த உயர்மரபுக்கவிஞர், எழுத்தாளராக இலங்கு கிறார்.

சீதக்காதி வரலாறு என்னும் இவ்வேடு பெயரளவில் ஒரு புகழ் வாய்ந்த தமிழ் வள்ளலின் வரலாறுகத் தோற்றம் தருகிறது. ஆனால் அது ஒரு குட்டித் தமிழக வரலாறுகவும், ஒரு குட்டித் தமிழக இசுலாமிய மரபு வரலாறுகவும், இந்த இரண்டையும் பின்னணியாகக் கொண்டே முழு விளக்கம் பெறத்தக்க ஒரு தமிழ் வள்ளல் பெருமானின் வரலாறுகவும் திகழ்கிறது. ஏனெனில் வள்ளல் சீதக்காதி அவர் காலத்தில் (பதினேழாம் நூற் றுண்டின், நான்கு நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே) நீண்ட புகழுடைய குடியரசு மரபினராகவும் தமிழக, இந்திய, உலகப் புகழ்பெற்ற வள்ளலாகவும் விளங்கி இருந்தவரானாலும், இடைப்பட்ட அயல்மரபாட்சி, அயல் பண்பாட்சி நாட்களில் அவரது ஈடும் எடுப்புமற்ற

வள்ளல் புகழ்மரபு ஒன்று தவிர, மற்றத் தமிழ்மரபு, தமிழ் வரலாற்று மரபு ஆகிய பின்னணி மரபுகள் யாவும் படிபபடியாக மறக்கப்பட்டு மங்கி மறைந்து போயின. தமிழ்மரபு, தமிழக இசுலாமிய மரபு, தமிழக வரலாற்றுப் பின்னணி மரபு ஆகிய யாவும் பெரிதும் மறக்கப்பட்டு, திரித்து மாற்றப்பட்டுப் பல மயக்கங்களுக்கும் தப்பெண்ணங்களுக்கும் ஆளாகியுள்ளன.

வள்ளல் சீதக்காதியின் வரலாற்றைக் கவிஞர் கா. மு. செரீப் ஒரு வள்ளலின் வரலாருக மட்டுமின்றி, ஓர் அரிய பெரிய ஆராய்ச்சி வரலாருகவும், முழுத்தமிழக மரபு வரலாருகவும், முழுத் தமிழக இசுலாமிய மரபு வரலாருகவும் பலபட விரித்தெழுத வேண்டி வந்ததன் காரணம் இதுவே. ஏனெனில் தமிழ்மரபு. தமிழ் இசுலாமிய மரபு ஆகியவற்றின் ஆராய்ச்சி பூர்வமான, மெய்யான முழு வரலாற்றையும் விளக்கிஞலன்றி, தாம் அத்தமிழ்மரபு பற்றியும் தமிழக இசுலாமிய மரபு பற்றியும் பொதுவாக நிலவும் பல தப்பெண்ணத் திரைகளை நீக்கி மெய்யொளி காணமுடியாது. வள்ளல் சீதக்காதி வரலாறு இன்றும் இத்தப்பெண்ணங்களில் சிக்கி மயக்கமடைந்துள்ள நிலையில், ஆராய்ச்சி ஒளி மூலமாக மட்டுமே மெய் வரலாறு காண இயலும்.

தமிழ் உணர்ச்சி அடிப்படையில் வள்ளல் சீதக்காதியின் புகழுக்கு யாரும் இனி புதுப்புகழ் சேர்க்கமுடியாது. ஏனெனில் அவர் பெயரையே தமிழாக்கி, தமிழகத்தின் ஒரு ஒப்பற்ற வரலாற்றுக் கால வள்ளல் வேந்தாக, செத்தும் கொடை கொடுத்த சீதக்காதியாக அது பாடி விட்டது. ஆனல், உணர்ச்சி அடிப்படையிலன்றி அறிவடிப்படையில் நோக்கிஞல் கவிஞர் கா. மு. செரீப் போன்ற ஆய்வாராய்வு அறிஞரின் கைத்திறம் இன்று ஒரு மாபெருந் தேவை ஆகும்.

கவிஞரின ஆராய்ச்சித் திறம், ஆராய்ச்சிப் பண்பு ஆகியவற்றின் ஆய்வில் இறங்குமுன் அவற்ருல் நீக்கப்பட்டுள்ள பொது நிலையான பல தப்பெண்ணங்களையும்,

அவற்றை அவர் விலக்கி ஒளி கண்டுள்ள ஆராய்ச்சிபூர்வமான வழிவகைகளையும் எடுத்துக் காட்டுவது இங்கே பொருத்தமுடையதாகும்.

*1.* இந்தியாவின் வடமேற்குவழி வந்து வட இந்தியாவில் தில்லியிலும் தென்னகத்திலும சில ஆண்டுகள் மதுரையிலும கூட ஆட்சி செய்து பரவிய இசுலாமிய மரபும், தமிழக இசுலாமிய மரபும் சமயத்தால் ஒரே நிலையிலான இசுலாமிய மரபேயானாலும், இன மரபு, வரலாற்று மரபு, பண்பு மரபு ஆகியவற்றால் முற்றிலும் வேறு வேறான இயல்புடையவை ஆகும். முந்தியவர் பெரிதும் 12-ஆம் நூற்றாண்டுக்குப்பின் வந்தவர்கள். அவர்கள் நிலவழியாக அரசியல் முறையில் படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றியவர்கள். இதற்கு மாறாகத் தென்னக இசுலாமிய மரபினர் அராபிய இன மரபினர். தமிழகத்துடன் கடல்வழி வணிகத் தொடர்பு கொண்டு, கரையோரத் தலை நகரங்களில் வந்து தங்கி, வணிக வாழ்வு வாழ்ந்து வளர்ந்தவர்கள். தவிர, அரபு நாட்டில் இசுலாம் ஒரு முழு நெறியாகத் தோன்றுமுன்பே (கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே), சங்க காலத்திலிருந்தே (கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக்கு முன்னிருந்தே) அவர்கள் தமிழகம் வந்தவர்களாதலால், அவர்கள் தமிழருடன் தமிழராக நேச வாழ்வே வாழ்ந்தனர். சேர-சோழ-பாண்டிய அரசர்கள் தமிழகப் பெருமக்களைப் பிள்ளைகள் எனக்கொண்டு மதித்தது போலவே, சிரியக் கிறித்தவர், யூதர் ஆகியவர்களையும், இசுலாம் தோற்றுவதற்கு முன்னும், பின்னும் வந்த அராபியர், அராபிய இசுலாமியர் ஆகியவர்களையும் மேற்கடற்கரையில் மாப்பிள்ளைகள் என்றும் தெற்கு, கிழக்குக் கடற்கரைகளில் மரக்கலராயர்கள்-தற்கால வழக்கில் மரக்காயர்கள்- என்றும் பட்டமளித்துப் பெருமைப்படுத்தினர். தமிழகத் தென் மாவட்டங்களில் இந்துக்கள் முசுலிம்களிடையே இம்மரபு வழியான மைத்துன உறவு இன்னும் பாராட்டப்பட்டு வருகிறது.

வடதிசை அயலாட்சி மரபுவழி வந்த இசுலாமிய மரபு போலன்றி, கடல்வழி வணிக நேசத் தொடர்பு வழி வந்த தென்னக இசுலாமிய மரபு மெய்யான தமிழ் மரபு, தூய இசுலாமிய மரபு ஆகியவற்றையே பின்பற்றித் தமிழருடன் தமிழராக, தமிழ்மொழி அல்லது நாட்டுத் தாய்மொழி மரபிலே நின்று, தமிழக மன்னராலே நாட்டுப் பெருமக்களாக மட்டுமின்றி, சீதக்காதி மரபினர் போல அரசுத் தூதர், அமைச்சர், மண்டல ஆட்சித் தலைவர் அல்லது சிற்றரசர்களாகவும் உயர்வுறுத்தப் பட்டுப் புகழ் வாழ்வு வாழ்ந்தனர்.

ஆராய்ச்சி அறிஞர் கா.மு.செரீப் இவற்றை இந்த வரலாற்றுச் சித்திரத்தை வாய்மையுறத் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளார்.

2. இரண்டாவது தப்பெண்ணம், தமிழகத்தில் மட்டுமின்றி, உலகெங்குமே பரவியுள்ள ஒன்றும். இசுலாம் மரபு இறை மரபு ஆதலின் அது தொன்று தொட்டு மனித இன முதல்வராகிய ஆதம் நபி காலத்தி லிருந்து இபுராகீம்நபி (அப்ரகாம்) மூசாநபி (மோசசு) ஈசாநபி (இயேசுபிரான்) ஆகிய நீண்டநபி மரபில் வந்த முழுநிறை நபியான இறைத்தூதர் நபிகள் நாயகம் அவர்கள் காலத்தில் இறைவனின் நன்மறையாகிய திருக் குர்ஆன், மனித உலகிலே வாழ்க்கை நெறியாகப் பரப் பப்பட்டது.

தூய தமிழ் மரபுக்கும் தூய இசுலாமிய மரபுக்கும் அடிப்படை வேறுபாடு குறைவு. அடிப்படை ஒற்றுமை மிகுதி. இதனால். வணிக மரபினராகவும், சமுதாய மர பினராகவுமே தமிழகம் வந்து, இசுலாமிய நெறி வளர்த்த தமிழ் இசுலாம் மரபு, தமிழ்மொழி இலக்கியம், சமயம் ஆகிய எல்லாத் துறைகளிலும் தமிழருடன் தமிழராக இழைய முடிந்தது. அதுமட்டுமோ? தமிழரிடையே அரசியல் சூழலின் அயல் மரபாட்சி காரணமாக மொழியும் இலக்கியமும் தமிழ் மரபும் தட்டுக்கெட்டு வரத் தொடங்கிய காலத்தில், தமிழ் இசுலாமிய மரபும்

அதன் பல நூற்றுண்டுக்காலத் தலைமை மரபான வள்ளல் சீதக்காதி மரபும் தமிழகத் தனிப்பண்பு காத்துத் தலை நின்ற செய்தியை ஆராய்ச்சி அறிஞர் கவிஞர் கா.மு. செரீப் நமக்கு நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். வள்ளல் சீதக்காதி சமய இன நாட்டு வேறுபாடின்றி, எல்லாத் தமிழ்ப் புலவராலும் தமிழ் எழு வள்ளல் மரபு புதுப் பித்த ஒரே அக்காலத் தமிழ் வள்ளலாகப் போற்றப் பட்டவர் ஆவார். அவர் ஆதரவில் இசுலாமியப் பள்ளிகள் மட்டுமின்றி, இதர சமயக் கோயில்களும் கூடத் தழைக்கத் தவறவில்லை.

3. வள்ளல் சீதக்காதிக்கும் உமறுப் புலவருக்கும் அல்லது உமறுப் புலவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆனால் உமறுப்புலவர் என்ற பெயரில் இருவர் பெயர் ஒன்றாக மயங்கிஉள்ளன. ஏனெனில் இருவரும் அவ்வள்ளலைப் பாடிய அல்லது அவரால் புரக்கப்பட்ட அவர் காலத்தவர்களே. அவர்களுள் அவரது திருமண விழாவில் செய்தக்காதிறு மரக்காயர் திருமணவாழ்த்து என்ற அரியகாப்பியம் பாடியவர் ஒருவர், மற்றவர் வள்ளலைப்போலவே கீழக்கரையில் பிறந்து வாழ்ந்து சீறுப்புராணம் பாடியவர். இதனை ஆராய்ச்சியாளர் கூடியவரை தெளிவு படுத்தியுள்ளார்.

4. சங்ககாலத்துக்கு நெடிது முன்பிருந்தே தமிழருடன் எகிப்தியரும் கிரேக்க உரோமரும் மேலை ஆசிய நாகரீக மக்களும் கடல்வழி வணிகத் தொடர்பும் பிற தொடர்பும் கொண்டிருந்தனர். ஆனால் சங்க இலக்கியம் யவனர் பற்றி மட்டும் குறிப்பிடுகிறது. பிற்காலத் தமிழ் மரபும் இந்திய மரபும் யவனர் சோனகர் மிசுரதேசம் என்ற பெயர்களைக் குறிக்கின்றன மிசுரம் என்பது எகிப்து. யவனர், சோனகர் ஆகிய சொற்கள் முறையே கிரேக்க உரோமரையும் அராபிய இசுலாமியரையும் குறிப்பதாக வரலாற்றாசிரியர் பலர் கொண்டுள்ளனர். ஆராய்ச்சி அறிஞர் கா. மு. செரீப், இசுலாம் நெறி முழு நெறியாகத் தோற்றுவதற்கு முன்பு வந்த

அராபியரை யவனர் என்ற சொல்லும் அதன் பின் வந்த அராபியரைச் சோனகர் என்ற சொல்லும் குறிக்கின்றன என்று வரலாற்ருய்வாராய்வு மூலம் நன்கெடுத்துக் காட்டியுள்ளார இதுமட்டுமன்று, சங்ககால, அதனை அடுத்த முற்கால நாகரிகத்தில் சேர சோழ பாண்டியராட்சி எல்லை அதன் பெருவாழ்வின் அகவட்டமாக மட்டுமே கருதப் படத்தக்கது.

இலங்கையும், பர்மாவும், பிற தென் கிழக்காசியப் பகுதிகளும், வட இந்தியாவும் போலவே அரபு நாகரிகப் பரப்பு அதன் புறவட்ட எல்லையுட்பட்டது என்பதை ஆசிரியர் திறம்படக் காட்டியுள்ளார்.

5. பண்டைத் தமிழகத்தில் பாண்டியநாட்டுக்கு மட்டு மன்றித் தமிழகத்துக்கே, தமிழுக்கே தலைநகராயிருந்த தனிப் பெருமை மதுரைக்கு உண்டு. இதுபோலவே சேர சோழ நாடுகளுள் ஒன்றனுக்க யன்றித் தமிழக முழுவதற்குமே துறைநகராக இருந்த முன்துறை மரபு பூம்புகாருக்கு உண்டு என்பதையும், சங்ககாலத்தில் முதற்கரிகாலன் நாட்கள் —(கி.மு. 2-ம் நூற்றுண்டு) முதல் மணிமேகலை காலம்—(கி.பி. 3-ம் நூற்றுண்டு)வரை அம்மரபில் நின்று வந்துள்ளது கொற்கை மரபு அல்லது கீழக்கரை மரபென்றும் கவிஞர் நெடு நீள் ஆய்வாராய்வு விளக்கங்கள் மூலம் நிறுவியுள்ளார்.

கொற்கை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காயல் பட்டணத்தின் அருகிலுள்ள அப்பெயருடைய சிற்றூரே என்று அறிஞர் பலர் கருதிவந்துள்ளதை அவர் திறம்பட மறுத்து விளக்கம தந்துள்ளார்.

6. வள்ளல் சீதக்காதியைத் தமிழ்மரபு 'மன்னன் சீதக்காதி' என்றே பாராட்டியுள்ளது. பெருவணிகரையும் செல்வ வள்ளல்களையும் குடிமன்னராகப் போற்றுவது கவிஞர்மரபே. கவிஞர் கா மு செரீப் இதுவே மெய்ம்மை நிலை என்பதை ஏற்றுக் கொள்கிறார். ஆனல் அவர் இத னுடன் அமையவில்லை. இந்தக் கவிதை மரபுக்குப் பின்ன

ணியில் நின்று, இவ் வொளிக்கு ஒளிதரும் நீள் வறலாற்று மரபாய்வில் இறங்கி சீதக்காதியின் குடிமரபின் முன்னோர்கள் 13-ம் நூற்றுண்டிற்கு முன்பிருந்து, 17, 18-ம் நூற்றுண்டு வரை சுந்தர பாண்டியன் காலத்து ஐந்து பாண்டியர்கள்—(மண்டலத் தலைவாகள்)—மரபுடன் ஆருவதாக எண்ணப்பட்டு, அகில உலகப் புகழ் படைத்த ஒரு மன்னர் மரபில் வந்தவர் என்பதையும் வெள்ளிடை மலையாக விளக்கியுள்ளார்.

ஆராய்ச்சி அறிஞர் என்ற முறையில் கவிஞர் கா. மு. செரீப காட்டும் நடுநிலை, நிமிர்ந்த நடுநிலையே ஆகும். வள்ளல் புகழ்மரபில் நீண்ட காலமாக வழங்கி வரும் தமிழர் ஆய்வு மரபுக் கதைகளைச் சுருக்கமாகவே சுட்டிக் காட்டி அவற்றை அவர் கதைகள் என்றே கூறி அமைந்துவிடுகிருர்.

தம் ஆய்விற்கு முன்னேடியாக பேராய்வாளர்களைச் சுட்டிக்காட்டிப் பெருமை படுத்த அவர் தவறவில்லை.

இனி வருங்கால ஆராய்ச்சிகளே வள்ளல் மரபின் மெய்ம்மைகளை இன்னும் சீரியதாக விளக்க வேண்டும் என்று ஆராய்ச்சி மரபின் முடிவிலாத் திறங்காட்டியே அவர் நூல் முடிகிறது.

சீதக்காதி மணவாழ்த்துப் போன்ற சிறந்த ஆராய்ச்சிகளுக்கு ஆதரவான பாடல்கள் (தமிழ் இலக்கியங்கள் பலவற்றைப் போல) அழிந்து விடாமல் காக்கும் நிலையில் அவை இவ் வேட்டில் முழுமையாகவே தரப்பட்டுள்ளன.

சீதக்காதியின் உறவினர், முன்னோர், பின்னோர் ஆகிய எல்லோரைப் பற்றியும் கூடுமானவரை ஆதாரங்களைத் துருவித்தேடித் தகவல் சேகரம் செய்து தந்துள்ளது இந்த வள்ளல் சீதக்காதி வரலாறு.

மன்னராயில்லாமல் வணிகராகவும் வள்ளலாகவும் தூய இசுலாமிய மரபின்படி ஈட்டியதெல்லாம் ஈந்து வாழ்ந்தவர் சீதக்காதி என்பதையும் அவர் தமிழகமும் இந்தியாவும் அந்நாளைய உலகம் அளாவிய புகழுடன்

மன்னரினும் ஆழ்ந்த உயரிய அகன்ற பெருமையும் செல்வாக்கும் உடையவராய் இருந்தார் என்பதை ஆசிரியர் தெளிவு படுத்தியுள்ளார்.

பண்டைய தமிழரசருக்கும், கபிலர் பிசிராந்தையார் போன்ற புலவருக்கும் இடையே இருந்த நட்புறவு சீதக்காதிக்கும் படிக்காசுப் புலவருக்கும் இடையே நிலவியிருந்தது.

தமிழகத்தின் சீதக்காதி கால வரலாறு எழுதுவோருக்குக் கூட (வரலாற்றுப் புதினம் எழுதுவோருக்கும்) பயன் படத்தக்க வகையில் வரலாற்றறிஞர் கா. மு செரீப் ஒளிவண்ணம் படத் தீட்டிக் காட்டியுள்ளார்.

கவிஞர் கா. மு. செரீப் கவிஞர் என்ற முறையில் உமறுப் புலவர் மரபில் வந்து, பாரதி, பாரதிதாசன் மரபில் உலவுபவர். திறனாய்வாளர் என்ற முறையிலும் அவர் முன்மரபும் நம்மரபும் இணைந்து வருங்காலம் நோக்கி நடைபோடுபவரே. ஆனால், வரலாற்றுத் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும், சிறப்பாக தமிழ்மரபு, இசுலாமியமரபு, தமிழ் இசுலாமிய மரபு ஆகியவற்றின் ஆராய்ச்சித் துறையிலும அவர் ஒரு கலங்கரைவிளக்கமாய் (திருவள்ளுவர் சுட்டிய அறிதோறும் அறியாமை என்ற எல்லையிலா ஆராய்ச்சிப் பேரறிவுக் கடலில்) வருங்கால ஆராய்ச்சியாளருக்கும் வழிகாட்டுபவர் ஆவார். அவரது ஆன்ற தமிழறிவும, ஊன்றிய தமிழ் மரபிழைவும, அகன்ற பண்பாட்வுத் திறனும் அவரை அந்நாளைய வள்ளல் சீதக்காதி போன்றே இந்நாளைய தமிழருக்கு ஓர் கருவூலமாக்குவதாகும்.

வாழ்க கவிஞர் கா. மு. செரீப்! வாழ்க அவர் அறிவுத் திறன், அவர் புகழ்ஒளி.

அன்னை இல்லம்
சென்னை-18. கா. அப்பாதுரை
14-8-1981.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர், பேராசிரியர், சிந்தனைச் செம்மல்
**டாக்டர் ந. சஞ்சீவி எம்.ஏ., எம்.லிட்., பி எச்.டி.**
அவர்கள் அளித்த

# வணக்கவுரை

## I

கவிஞர் கா. மு. ஷெரிப் அவர்களை முப்பதாண்டுகளாக அறியும பேறு பெற்றவன் அடியேன் தமிழரசுக் கழகத்தார்கள் என்ற அடிப்படையில அரும்பிய எங்கள் நட்பு, போதாகிப பூத்து மலர்ந்துள்ளது. அம்மலரின் மணமே இவ்வெழுத்து. கவிஞர் கா.மு.ஷெரிப் அவர்கட்கும் எனக்குமு உள்ள உறவு ஒரு சிறிய தந்தைக்கும் மகனுக்கும் உள்ள சீரிய உறவு என்றால் மிகையாகாது. இந்து-முஸ்லிம உறவு ஒரு சிறு நெருக்கடிககு உரியதாகியுள்ள இந்நாளிலும் இதை அழுத்திச் சொல்லக் கடமைப் பட்டுள்ளேன். இதுபோல் உறவுடைய இந்து-முஸ்லிம்கள் ஏராளம் ஏராளம். மதத்தில் ஒன்றாகாமலேயே மனத்தில் ஒன்றாகி இருத்தலே மாண்பு. இஸ்லாமை—நபிகள் நாயகததைச் சரியாகப் புரிந்துகொளள எளியேனுக்கும் கண்கொடுத்த கருணையாளர் கவிஞர் கா. மு. ஷெரிப். அதனால் அவர்க்கு அடியேன் என்றென்றும கடமைப்பட்டுள்ளேன்.

## II

ஒரு சில வாரங்கட்கு முன்பு அருமை நண்பர்—தஞ்சை வாணன்—தொலைக்காட்சியில் 'புரவலர் வளர்த்த தமிழ்' என்னும் பொருள் பற்றி என்னைப் பேசுமாறு பணித்தார். அப்போதுதான்—அதற்காகச் சிந்தித்த போதுதான்—இத்தலைப்பில் விரிவான ஒரு நூலை எழுதலாம் என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் அன்றைய

பேச்சில் பாரி, சடையப்பர், சீதக்காதி ஆகிய மூவரைப் பற்றி மட்டுமே சிறப்பாகக் குறிக்க முடிந்தது. 'புரவலர் போற்றிய புலமைத்தமிழ்' என்ற தலைப்பில் என் உள்ளம் சுழன்று கொண்டிருந்த நேரத்தில் கவி கா மு. ஷெரிப் தாம் எழுதிய **'வள்ளல் சீதக்காதி வரலாறு'** என்ற நூலைக் கொடுத்துப் பார்த்துக் கருத்துரை தருமாறு கட்டளையிட்டார்கள். எளியேனின் கருத்து ரையே இந்த வணக்கவுரை.

## III

கடலினும் கடலுக்கருகில் உள்ள ஊருணியையே உலகம் உவந்து பயன்படுத்தும் மரபு பழந்தமிழ் நாட்டிலேயே—சங்க காலத்திலேயே—வேரூன்றிவிட்ட விழுமிய மரபு. இம்மரபு வழிவந்த மாபெரும் வள்ளலே சீதக்காதி. சீதக்காதியின் சிறப்பு அவர் இசுலாமியராயினும், இந்துக்களாலும் மதிக்கப்பட்ட சிறப்பே ஆகும். பின்னுளில் படிக்காசுத் தம்பிரானுகவும் மாறி மதிக்கப்பட்ட ஒருவர் சிவந்தெழுந்த பல்லவனுலா, சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத்தமிழ், உமை பாதர்பதிகம், பாம்பலங்காரர் வருக்சக் கோவை, தொண்டை மண்டல சதகம், புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்னும் நூல்களையும், பற்பல தனிப் பாடல்களையும் பாடி, படிக்காசுப் புலவர் என்று எங்கும் போற்றப்பட்ட நிலையில் வள்ளல் சீதக்காதியின் புகழை வான்புகழாக்கி இருப்பதே புரவலர் புலவர் இருவருக்கும தமிழ்/தமிழக வரலாற்றில் தனிப் பெருமை தருவதாகும்.

நொண்டி நாடக வகையில் காலத்தாலும் கனத்த புகழாலும பெருமைபெற்ற சீதக்காதி நொண்டி நாடகமும், வள்ளல் சீதக்காதியின் புகழை வளர்பிறை ஆக்கியதாகும்.

இவ்வாறு புலவர் புகழ் புரவலனுக வாழ்ந்த சீதக்காதியின் வரலாற்றை முறையாக ஆராய்ந்து கூறும்

வரலாற்று நூல் கவி.மு. ஷெரிப்பின் 'வள்ளல் சீதக்காதி வரலாறு' ஆகும். டாக்டர் எஸ். முகம்மது உசேன் நயினர் 1953ஆம் ஆண்டிலேயே 'சீதக்காதி வள்ளல்' என்ற சிறந்த நூலை ஆக்கித் தந்துள்ளார். ஆயினும் அந்நூல் இப்போது கிடைப்பது அரிதாகலானும் புதிய செய்திகளைப் புதிய உணர்ச்சியோடு புகழ்வதாலும் கவிஞர் கா.மு. ஷெரிப்பின் 'வள்ளல் சீதக்காதி வரலாறு' கண்களில் ஒற்றிக்கொள்ளத் தகும்.

## IV

கவிஞரின் 'வள்ளல் சீதக்காதி வரலாறு' 230 பக்கங்கள் கொண்டது. இதில் சற்றேறுப்ப, பாதி வரலாறு; ஆராய்வு. மற்றொரு பாதி வரலாற்றாய்வுக்கும் வள்ளல் புகழ் அறிவதற்கும துணை புரியும் சீதக்காதி புகழ் செந்தமிழ் நூல்கள். வரலாற்றுப்பகுதி 1. தொன்மைத் தமிழகம், 2. தமிழர் அரபியர் உறவு, 3. இஸ்லாம் என்றால் என்ன? 4. தமிழகமும் வரலாறும், 5. எது கொற்கை, 6. பெயர்க்காரணம், 7. கெஜட்டியர் செய்திகள், 8. தமிழகத்தில் முஸ்லிம் வருகை, 9. வள்ளல் சீதக்காதியின் முன்னோர், 10. வள்ளல் சீதக்காதி, 11. வள்ளல் சீதக்காதியின் வழித்தோன்றல்கள், 12. வள்ளல் சீதக்காதியின் முதல் தம்பி மாமுநயினு மரக்காயர், 13. பட்டத்து அபூபக்கர் மரக்காயர், 14. பட்டத்து செய்யது முகம்மது ஆலிம் மரக்காயர், 15. அத்தாவுல்லா ஹாஜி மரக்காயர், 16. பள்ளிகள் கட்டியவர், 17. ஹபீபரசா, 18 கிளையினர், 19, வள்ளல் சீதக்காதி வாழ்ந்த காலம், 20 டில்லி பாதுஷா அவுரங்கஜேப் தொடர்பு, 21. பொன்னும் நெல்லும், 22. தமிழ்த்தொண்டு, 23. வள்ளலை மணந்த மனைவி, 24. தொழில் வளம், 25. நெஞ்சில் நிறுத்துக, 26. வள்ளல் பற்றிய நூல்கள், 27. செய்தக்காதிநொண்டி நாடகம், 28. வள்ளல்களைப் பாடிய புலவர்கள், 29 உமறுப் புலவர், 30. சீதக்காதியின் பெயரால் சொல்லப்படும்

கதைகள், 31. வள்ளல் சீதக்காதியின் தன்மை, 32. வள்ளல் சீதக்காதி வகித்த பதவிகள், 33. அன்பளிப்புகள் என்னும தலைப்புகளில் 14½ பக்கங்களில் விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

இனி, சீதக்காதி பற்றிய செந்தமிழ் நூல்கள்: அவை வருமாறு 1 சீதக்காதி பேரில் தனிப் பாடல்கள்; அ.படிக் காசுப் புலவர் - 9; ஆ. நமச்சிவாயப் புலவர் - 11 ; 2. எட்டயபுரம் உமறுகத்தாப் புலவர் பாடிய செய்தக் காதிரு மரக்காயர் திருமண வாழ்த்து; 3. செய்தக்காதி நொண்டி நாடகம்.

V

கவிஞர் கா. மு. ஷெரிப் சிறந்த படைப்பிலக்கியர் (கவிஞர், நாவலாசிரியர், சிறுகதையாளர், நாடகாசிரியர்) என்பது ஏற்கெனவே நிலைநாட்டப்பட்ட ஒன்று. ஆனால் கவிஞரின் ‘வள்ளல் சீதக்காதி வரலாறு’ அவர் ஓர் சிறந்த ஆய்வாளர் என்பதையும், மேலும் அத் துறையில் மேன்மை பெறக்கூடியவர் என்பதையும் நிலைநாட்டும்.

இவ்வாய்வு பற்றி தலைமையாகக் குறிக்கத்தக்க நிறை: ஆய்வாளரின் பாராட்டத்தக்க நூலறிவும் நுண்ணறிவு மாம்; குறை: ஆய்வாளர் ஒன்றி மேற்கொள்ள வேண்டிய ஆய்வு நூல் அடிப்படை முறைகள் (நூல்களை மேற்கோள் காட்டும் முறை போன்ற) சிலவற்றையும் ஆய்வு நடைக் குரிய கூறுகளையும் பின் பற்றாமை. இதற்குக் காரணம் எளிதில் உய்த்துணரக் கூடியதே அது, நீண்ட நெடுங் காலம் ஆய்வாளர் படைப்புத் துறையிலே படிந்து விட்டமைதான். எனவே ஆசிரியர் ஆய்வாளராய் அரும்பி யுள்ள நிலையில் தம் முதல நூலிலேயே காட்டியுள்ள நூல றிவு — நுண்ணறிவு மாட்சியை எண்ணி எண்ணிப் போற் றக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆய்வாளரின் ஆய்வில் தலைசிறந்த தன்மையாக விளங்குவது அவர்தம் ஆய்வுப் பொருள் பற்றிய ஆய்வில் நேரே பாயாமல் ஆய்வுப் பொருளுக்குரிய பின்னணியில் ஆழ்ந்து கருத்துச் செலுத்தியிருப்பதே ஆகும். ஆய்வில் வேர் கொண்டு ஆய்தல் விழுமியதாகும். அத்தகைய ஆய்வை ஆசிரியர் செய்துள்ளார். தமது நூலின் பக்கங்களில் பாதிக்குமேல் பின்புலம் (Back ground) பற்றிய ஆய்வே. இது போற்றத்தக்கது. இவ்வாய்வில் ஆசிரியர் கொண்டிருக்கும் புது நோக்கு, தமிழர் - அராபியர் நட்புறவை வளர்க்க நனி உதவுவது ஆகும். ஆனால் இத்தகைய ஆய்வுகட்கு இன்னும் அதிகமான சான்றுகள் கிடைப்பின் பேருதவி ஆகும்.

ஆய்வாளர் ''மற்றும், இங்கு அக்காலை இருந்த தாழ்ந்தோர் உயர்ந்தோர் மனப்பான்மையும் இஸ்லாம் இங்கே காலூன்ற உதவிற்றென்றும் கூறலாம். தீண்டத்தகாதார் என ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தோர் இஸ்லாமியரானதும் அவர்களை இஸ்லாமியர் சகல வகையிலும் தமமுடன் சமமானவராக நடத்தியதைக் கண்டபோது ஏனையோருக்கும் இஸ்லாமியத்தைத் தழுவுவதே சரி என்ற எண்ணத்தை உண்டாக்கி இருக்க வேண்டும். எனவே தமிழகத்தில் இஸ்லாம் அதன் அடிநாளிலேயே காலூன்றி வேரூன்றிற்றெனலாம்,'' என்று கூறும கூற்று இன்றும் ஏற்கத்தக்கதே. இக்குறை நீங்க, சமபந்திச் சாப்பாட்டினும் சம்பந்தி சாப்பாடே சரி.

கவிஞரின் ஆய்வில் 'வேர் கொண்டு' ஆயும் ஆய்வின் விழுப்பத்திற்கு அடுத்த நிலையில் நாம் காணும் நற்சிறப்பு நுண்ணிய வேறுபாடுகளைத் துல்லியமாக விளக்குவதே ஆகும். ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

> அதாவது வடபுலம் போந்து நாடாண்ட முஸ்லிம் அனைவரும் அரபியினமல்லாதாரே! தமிழகம்

> வந்த முஸ்லிம்களில் அரபியீனமல்லாதார் ஒருவர் கூட இல்லை.(ப. 47)

ஆய்வாளரின் முக்கிய முன்னுரை முடிவுகளுள் ஒன்று வருமாறு:

> பிற்காலத்தே வைகை விலகிச் சென்று விட்டதைப் போன்றே, பாண்டியரின் ஆட்சியும் செம்பி நாட்டை விட்டு அகன்று விட்டது. அதன் பின்னர்க் கொற்கை என்கின்ற பெயரும் மறைந்து வைகையம்பதி, வகுதை மாநகர், காயல், தென் காயல் என்றெல்லாம் மாறி இறுதியாகக் கீழக் கரை என்று ஆகியுள்ளது.

இனி, ஆய்வாளரின் அடுத்த பெரும் முடிவு யவனர் என்பது அரேபியரே என்பதே ஆகும் ஆனல்(Ionians) அயோனியன்ஸ் என்போரை யவனர் என்ற சொல் குறிக்காது என்பதற்கு ஆய்வாளர் நேரடிச் சான்று ஏதும் காட்டவில்லை. 'சோனகர்' என்ற சொல்லின் வேர் பற்றியும் ஆசிரியர் ஆய்வேதும் நிகழ்த்தவில்லை.

தொடர்ந்து ஆய்வாளர் 'பல்சந்த மாலை' யின் பாட்டுடைத் தலைவர் பற்றி நிகழ்த்தியிருக்கும் ஆய்வு நெஞ்சையும் நெகிழ்விக்கிறது, அறிவையும் இசைவிக்கிறது.

பாண்டியன் குலமகளைச் சீதக்காதியின் முன்னேர் மணந்த செய்தியை ஆசிரியர் கூறும் முறை உள்ளத்தை மகிழ்விக்கிறது. ஆனல் இம்மணத்தில் மதமாற்றம் ஏதும் நிகழ்ந்ததா என்பது தெரியவில்லை; தெரிந்தால் இன்னும் நன்ருக இருக்கும்.

பல்சந்த மாலைப் பாடல்களைத் தகியுத்தீன் விரும்பி யேற்றுக்கொண்டதற்கு ஆசிரியர் பக்கம் 97ல் கூறியிருக்கும் அமைதி படைப்பாளனின் கற்பனை ஆய்வாளனுக்கு உதவும் பண்பை உணர்த்தும்.

நிஜாமுத்தீன் மகள் வரலாறு தமிழினத்தில் இருந் திருக்கக்கூடிய ஒருமைப்பாட்டுணர்வையும் அதன் விளைவு களான காதல்/ கற்பு/ கல்லறை ஆகியவற்யையும் உணர்த்தி நெஞ்சுருகச் செய்யும்.

ஆய்வாளர் நொண்டி நாடகத்தின் நுழைவுப் பெரு மையைப் போற்றியிருக்கும் முறையும் திறமும் பாராட் டிற்குரியன.

கவிஞர் ஆய்வில் தமிழர் அனைவரையும் கவர வல்லது;

''பட்டத்துலெப்பை நெய்னு மரக்காயர், ஐதுரூஸ் என்னும் பெயரில், மிகப் பெரிய புதிய கப்பல் ஒன் றைக்கட்டி, முதல் பயணமாக அக் கப்பலைப் புனித ஹஜ்யாத்திரைக்கு ஓட்டினார்,'' என்றிருப்பது.

கப்பலோட்டிய தமிழர் கணக்கற்றோர். அவர்களுள் வெள்ளையரை எதிர்த்து வீரக்கப்பல் ஓட்டிய வ உ.சி க்கு விடுதலை இந்தியா நாளும் நன்றிக்கடன் பட்டுள்ளது. வ.உ.சி.யின் ஆளுமை வாழையடி வாழையாக வந்த ஆள் வினை. அவ்வகையில் முன்னோடிகளாய் இருந்த மொய்ம் புடையோரைப் பற்றிய விவரங்களைத் தேடிப்பார்த்து, பட்டியலிட்டு மகிழ்வது இன்றியமையாதது. அதில் அண் மையில் யான் அறிந்து அறிவித்த ஒன்று புதுவை வள்ளல் ஆனந்தரங்கர் 'ஆனந்தபுரவி' என்று ஓர் தனித்த கப்பல் தமக்கென வைத்து வாணிபம் நடத்தினார் என்பது. இப் போது கவிஞரின் ஆய்வால் கிடைக்கும் இன்னொரு புதிய செய்தியே பட்டத்து லெப்பை நெய்னு மரக்காயர் ஓட்டிய 'ஐதுரூஸ்' என்னும் பெருங்கப்பல் பற்றியதாகும்.

வள்ளல் சீதக்காதியின் பெருமையை ஆய்வாளர் துரு வித்துருவி ஆராய்ந்து கூறும் உண்மைகள் வியந்து மகிழ்ந்து போற்றத்தக்கன. சிறப்பாக அவர்,

''கி-பி. பத்தாம் நூற்றாண்டிற்கப்பால் தமிழகத் தில் வாழ்ந்த வள்ளல்களில், மக்களைச் சமயவழி. சா

வழி பிரித்துப் பார்க்காமல், அறிவுடைய புலவ னென்று ஆதரித்தும் அறிவற்ற பாமரர்களென்று ஒதுக்காமலும் அனைவருக்கும் அள்ளி வழங்கிய வள்ள லாகச் சீதக்காதி ஒருவரே தென்படுகின்றார். அத்தகு அறத்திற்கு அடிப்படை இசுலாமிய நெறியேயாகும். ஆம். கேட்போனை நோக்காமல், கேடற அறம் புரி யுமாறு வலியுறுத்துகின்ற மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம். 'ஏழை வரியை (ஜாக்காத்தை) கட்டாய மாககியுள்ள மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம்.''

என்று எடுத்துரைக்கும் பகுதி இதயத்தில் பதியத்தக்கது.

ஆசிரியர் 'செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து' 'செய்தக்காதி நொண்டி நாடகம்' ஆகிய இரு நூல்களையும் படிக்காசுப்புலவர் முதலியோர் தனிப்பாடல் களையும் துணைகொண்டு எழுதியுள்ள ஆய்வுக் குறிப்புகள் முறையாக ஆய்வுத் தொழில் புரிவோர்க்கும் அகமிக மகிழ்ச்சி தருவதாகும்.

ஆய்வாளரின் நாட்டுப்பற்றுக்கும் மொழிப்பற்றுக்கும் ஆணிவேர்ச் சான்றுகள் வருமாறு:

''இந்நூலாசிரியரோ...தமிழ்க் காயல் என்று பாடி மகி ழக் காண்கிறோம்.'' சீதக்காதியின் ஆற்றல் பற்றிக் கூறும் போது,

''கோரப் பறங்கிக் குலங்களெல்லாம் வேரறுத்துச்

சூரத் தனமிகுந்த சுத்தரண கேசரிகாண்''

என்றுரைக்கின்றார். இவ்வரிகள் நமக்கு நினைவூட்டுவது பிரஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் கால் ஊன்று முன்னம் தமிழகத்தின் தென் கடற்கரைப்பகுதியின் மீது ஆக்கிர மிப்பு நடத்திய போர்த்துக்கீசிய - டச்சு வெள்ளை நிறத் தவரை, அவர் தம் ஆதிக்கத்தை, வள்ளல் சீதக்காதி

எதிர்த்த வீரத்தையே இப்பாடல் கூறுகின்றது என்பதே யாம்.

மேற்கண்ட குறிப்பு இந்நூல் தென்னக விடுதலை வரலாற்றுக்குத் தரும் சிறந்த சீதக்காதி பரிசாகும்.

'சீதக்காதியின் பெயரால் சொல்லப்படும் கதைகள்' என்ற தலைப்பில் ஆசிரியர் வெளியிட்டிருக்கும் எண்ணங்கள் அவர் தம் நடுநிலைத்திண்ணம் காட்டும் வண்ணங்கள் ஆகும்.

இனி, இவ்வணைக்கவுரையை முடிக்குமுன் கவிஞரைச் சிறிய தந்தையெனப் பெரிதும் மதிக்கும் யான் கூறத் தக்கதெல்லாம் 'வள்ளல் சீதக்காதி வரலாறு' பற்றிய இந்நூல், எல்லாம் வல்ல அல்லாவின் அருளால் விரைவில் விற்பனையாகி மறுமதிப்புப் பெற வேண்டும். அது இந்நூற்பொருளுக்கு மறுபதிப்பாக மட்டுமன்றி மறுமதிப்பாகவும் விளங்கும் வகையில் செப்பமாகவும் செறிவாகவும் நடைபெற்று அதிகப் படங்களுடன் வெளிவர வேண்டும். இலக்கியப பகுதிகளும உரைக் குறிப்புகளுடன் ஒளி பெற வேண்டும். அவ்வளவே - அவ் அளவே!

சென்னை - 5
18- 8- '81

**ந. சஞ்சீவி**

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியின்
தமிழ்த்துறைத் தலைவர், பெரும்புலவர், பேராசிரியர்,
ஆல்ஜனுப் சி நயினுர் முகமது எம்.ஏ அவர்களின்

# சான்றுரை

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி பெற்று வருகிறது. கருத்தரங்குகளும், மாநாடுகளும், சொற்பொழிவுகளும் நடைபெற்று வருகின்றன. மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சித் துறை இயங்கி வருகின்றது திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் தமிழ் முதுகலை (எம்.ஏ ) வகுப்பில் 'உமறுப்புலவர்' சிறப்புப் பாடமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றது. ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வினிய சூழ்நிலையில் கலைமாமணி கவி கா. மு. சரீபு 'வள்ளல் சீதக்காதி வரலாறு' எனும் புதியதொரு அரிய ஆராய்ச்சி நூலை இயற்றியுள்ளார்கள். கவிஞர் ஆராய்ச்சி அறிஞராக இருப்பது அரிது; எழுத்தாளர் இனிய சொற்பொழிவாளராக இருப்பதும் அரிது. ஆனுல் நம் கலைமாமணி நாடறிந்த நல்ல பாவலராகவும் நாவலராகவும் ஆராய்ச்சி அறிஞராகவும் திகழ்கின்றார்கள்.

'தொன்மைத் தமிழகம்' முதல் அன்பளிப்புகள் முடிய 34 தலைப்புகள் கொண்ட இந்நூலில் தமிழகத்தின் தொன்மை, அரபியர் வருகை, கீழக்கரை, சீதக்காதியின் முன்னோர் வாழ்ந்த காலம், தொடர்பு கொண்டவர்கள், கொடை, வழித்தோன்றல்கள் பற்றி ஆராயப்படுகின்றன. வரலாற்று நூல்கள், கல்வெட்டுகள், அந்நிய நாட்டினர். பயணிகள் குறிப்புகள், அரசுப் பதிவேடுகள், கடிதங்கள் இலக்கியங்கள் முதலிய பலவற்றிலிருந்து தக்க சான்றுகள் காட்டித் தம் கருத்துக்களை நிறுவியுள்ளார்கள்.

"... ஆதியில் மனித இனம் தோன்றிய நிலம் தமிழ் நிலம என்பதும் அவ்வினம் பேசிய மொழி தமிழ்மொழி என்பதும் ஏற்புடைத்தாகவே உள்ளன." (பக்-34)

''சங்க காலம் தொட்டு மூவேந்தர் ஆட்சி முடிவுற்ற காலம் வரை, தமிழக மக்களின் வாழ்வுக்கிணையான வாழ்வு பெற்றிருந்த இனம் பிறிதொன்றில்லை'' (பக்-39) முதலிய பகுதிகள் கலைமாமணியின் தமிழ்நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும், இனப் பற்றையும் வெளிப்படுத்துகின்றன.

இக்காலத்தில் தொழில் குறித்து நம் தாயகத்திலிருந்து அரபு நாட்டிற்குப் பலர் செல்கின்றனர். அரபு மொழி பயிலுகின்றனர். இஃது அரபு மண்ணில் எண்ணெய் வளம் ஏற்பட்ட பின்னரே. முற்காலத்தில் வணிகத்தின் பொருட்டு அரபியர் நம் தாயகம் வந்தனர்; வணிகம் செய்து வளம் சேர்த்தனர் என்பதனைப் பல சான்றுகள் காட்டி விளக்கும் கலைமாமணி, நம் நாட்டு அரண்மனைகளில் அரபுமொழி பேசினர் எனப் பெருங்கதை, மகா பாரதம் கொண்டு நிறுவுகிறார்கள். அரபியர் வருகைக்கும் வெள்ளையர் வருகைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளையும் விளக்குகின்றார்கள். அரபி முஸ்லிம்கள் தமிழகம் வந்து, வாழ்ந்து, வணிகம் செய்தனரேயன்றி உள்நாட்டரசியலில் தலையிட்டதில்லை. கோட்டை கொத்தளங்கள் கட்டிப் படை வைத்துக் கொண்டு பகை வளர்த்ததில்லை. அரபு நாட்டு முஸ்லிம்களின் நேரிய அற வாழ்வும் இஸ்லாத்தின் இனிய கொள்கைகளுமே தமிழக மக்களுள் பலரைக் கவர்ந்தன; திட்டமிட்டு மதப் பிரச்சாரம் செய்யவில்லை என்பனவற்றைத் தெளிவு படுத்துகின்றார்கள். வடபுலத்தற்கு வந்த முஸ்லிம்களுக்கும், கடல் வழி தென்னகம் வந்த முஸ்லிம்களுக்கும் உள்ள வேறுபாடுகளையும் குறிப்பிடாமலில்லை. வடக்கிருந்து வந்தவர்கள் நாடாளும் வேட்கை கொண்டவர்கள்; அரபியரல்லர். கடல் வழி தென்னகம் வந்தவர்கள் வணிக நோக்கம் கொண்டவர்கள்; அன்பும் அறமும் குறிக்கோளாகக் கொண்டவர்கள். இவர்கள் அனைவரும் அரபியர் என்பதும் சிந்தனைக்குரியது.

நாணல் புல்லைக் குறிக்கும் கொறுக்கை என்பதே கொற்கை என்ருயிற்று என்றும் திருப்புல்லணை என்பதே திருப்புல்லாணியாயிற்றென்றும் பெயர் ஆய்வு செய்து, கொற்கை என்பது கீழக்கரையே என்று பல காரணங்கள் காட்டி நிறுவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பல்சந்தமாலை வடநாட்டிலிருந்து படையெடுத்து வந்த ஒரு முஸ்லிம் கொடுங்கோலனைக் கண்டு அச்சமுற்று ஒரு புலவன் பாடிய புகழ்ப்பா நூல் என்று இலக்கிய வரலாற்ருசிரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளதைத் தக்க காரணங்காட்டி மறுத்துள்ளார்கள். பல்சந்தமாலை போற்றும் வின்னன் என்னும் மன்னன் சீதக்காதியின் முன்னேராகிய சுல்தான் தகீயுதீனைக் குறிக்கும் என்று விளக்குவது 'பல்சந்தமாலை' ஆராய்ச்சி போல் அமைந்து விடுகின்றது. சிதைந்து போன இந்நூல் முழுமையாக கிடைக்காதது ஓர் இழப்பாகும் கிடைத்துள்ள எட்டுப் பாடல்கள் இந்நூலின்கண் திறனாய்வு செய்யப்பட்டுள்ளன.

கலையாமணி, வள்ளல் சீதக்காதியின் முன்னேர்களைப் பட்டியலிட்டுக் காட்டி விடுகின்ருர்கள். வழித்தோன்றல்களையும் வரிசைப்படுத்தி விவரிக்கின்ருர்கள் ஆசாரக்கோவை இயற்றிய அப்துல் மஜீதுப் புலவர் வள்ளலின் மகள் வழித்தோன்றலாவர் எனக் கூறி, தம்பியர் வழி வந்தோரை விவரித்து, இன்று வாழ்ந்து வரும் இரு வாரிசுகளையும் குறிப்பிடுகின்ருர்கள். இச்செய்திகளுள் பல முன்வந்த நூல்களிலும் கட்டுரைகளிலும் காணப்படாதன.

புகழிற் சிறந்தவரை தம்மைச் சேர்ந்தவர் எனக் கூறிப் பெருமை கொள்வது மனித இயற்கை. வள்ளல் சீதக்காதி பற்றியும் இப்படிப்பட்ட உரிமைப் போட்டி எழுந்துள்ளது. தமது ஊரைச் சேர்ந்தவர் எனக் கூறி மகிழ்வர் காயல் பட்டணத்தார். இல்லை எங்கள் ஊரைச் சேர்ந்தவர் தான் என்று உரிமை பாராட்டுவர் கீழக்கரை

பெருமக்கள். இவ்விரு ஊர்ப் பெருமக்களிடை நெடுங் கால உறவு உண்டு. ஆதலின் வள்ளல் சீதக்காதி குறித்து உறவும் உரிமையும் கொண்டாடுவது இயல்புதான்.

'தினங் கொடுக்கும் கொடையானே தென்காயல்
பதியானே...சீதக்காதி' (தனிப்பாடல்-14)
'காயற்றுரை சீதக்காதி' (தனிப்பாடல்-8)
'தமிழ்க்காயலாதிபதி' (சீதக்காதி திருமண
வாழ்த்து 6)

**காயல் மன்னவன் செய்தக்காதி** (சீத-நொண்டி
நாடகப-விருத்தம்)

முதலிய தொடர்புகளைச் சான்று காட்டிச் சீதக்காதி காயல் பட்டணத்தைச் சேர்ந்தவரே என்று வாதிப்பர். காயல் பட்டணத்தில் பிறந்து கீழக்கரை சென்று வாழ்ந் திருக்கலாம் என்பாரும் உளர்.

காயல் எனும் சொல் கடற்பகுதியிலுள்ள சதுப்பு நிலம், உப்பளம், கழிமுகம் எனப பொருள் பயக்கும். ஆதலின் கடற்பகுதியிலுள்ள ஊருக்கு இது பெயராக அமையலாம். இங்கு இச்சொல் கீழக்கரையையே குறிக் கும் என டாக்டர் S. முகம்மது ஹுசைன் நயினார் நிறுவி யுள்ளார்.

வள்ளல் சீதக்காதி வாழ்ந்த வீடு, கட்டிய பள்ளி வாசல், வசந்த மாளிகை, தோபபுகள் முதலிய எல் லாமே கீழக்கரையில் உள்ளன. இவர் தம் தந்தை, தாய், தாயின் தந்தை முதலிய முன்னோர் வாழ்ந்து மறைந்துள் ளதும் இங்குதான். இவரின் அடக்கத்தலம் இவரின் மூத்த தமபியின் அடக்கத்தலமும் இங்குள்ளன என்பன போன்ற சான்றுகளை எடுத்துக் காட்டி வள்ளல் சீதக்காதி பிறந்ததும் வாழ்ந்து சிறந்ததும், இறந்து முடிந்ததும் கீழக்கரையில்தான் எனக் கலைமாமணி உறுதி செய்கின் றார்கள்.

வள்ளல் சீதக்காதி சாதி சமய வேறுபாடு கருதாமல் வருவோர்க்கெல்லாம் வரையாது வழங்கி வந்தார் என்

பத்தை விளக்கி இராமேசுவரக் கோயிலுக்கும் அறக் கட்டளை செய்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இது சமய வேற்றுமை பாராட்டுவார்க்குச் சமரசம் உணர்த்துவல்லது.

''கடையெழு வள்ளல்களுக்குப் பின்னர் வள்ளலில்லை என்கின்ற குறைதீர்க்கத் தோன்றியவர் வள்ளல் சீதக்காதி மரக்காயர். இவருக்குப் பின்னர் இவரையொத்த வள்ளல் ஒருவரைத் தமிழ்நிலம் இன்றுவரை பெற்றிருக்கவில்லை'' (பக்.100) என வள்ளல் சீதக்காதியின் வள்ளன்மை பற்றி வியந்து போற்றுகின்றார்கள். பெரிய வணிகராகவும் சிறந்த வள்ளலாகவும் உயரிய தமிழ்ப் புலவராகவும் பன் மொழிகள் தெரிந்தவராகவும் ஏழைகளின் தோழராகவும் எல்லோர்க்கும் உதவும் மனிதப் புனிதராகவும் வள்ளல் சீதக்காதி இந்நூலில் காட்சி தருகிறார்.

'சீதக்காதி திருமண வாழ்த்து' 'சீதக்காதி நொண்டி நாடகம்' ஆகிய இரு சிற்றிலக்கியங்களும், சிதைந்து போன 'பல்சந்தமலை' எனும் இலக்கியத்தில் கிடைத்துள்ள 8 பாடல்களும் இதன்கண் இடம் பெற்றுள்ளன இவை கிடைத்தற்கரியன. ஒவ்வொன்று பற்றியும் சுருக்கமான திறனாய்வும் அமைந்துள்ளது வள்ளல் சீதக்காதி பற்றிய தனிப்பாடல்கள் 20-ம் இதில் தரப்பட்டுள்ளன.

தக்க சான்றுகளும் மேற்கோள்களும் வேண்டிய இடங் களில் அமைந்து ஆராய்ச்சிக்கு வலிவும் பொலிவும் ஊட்டு கின்றன; கலைமாமணி அவர்களின் புலமைப்பரப்பையும், நுண்மாண் நுழைபுலச் சிறப்பையும் ஆராய்ச்சித் திறத் தையும் புலப்படுத்துகின்றன.

பயனுள்ள இவ்வரிய ஆராய்ச்சி நூலை இயற்றியுள்ள தெளிவும், துணிவும், கனிவும் கொண்டுள்ள கலைமாமணி அவர்களைப் பாராட்டுகின்றேன். இது போன்ற பயனுள்ள நூல்கள் பல இயற்ற இறைவன் அருள் புரிவானாக! சமுதா யம் ஆர்வமுடன் ஆதரித்து உற்சாகப்படுத்துமாக!

திருச்சி
13-9-81

**சி நயினார் முகமது**

# புகுமுகம்

என் தலை முறையில் எனக்கு முன் மூவர் வள்ளல் சீதக்காதியைப் பற்றி எழுதியுள்ளனர்.

ஒருவர் நெல்லை மாவட்டம் ஏர்வாடியைச் சேர்ந்த பேராசிரியர் K.M.K. அப்துல் காதர் எம். ஏ. பி.டி. அவர்கள் இன்னொருவர் பன்னூலாசிரியர் ஆலிஜனாப் எம். ஆர். எம். முஸ்தபா அவாகள் மூன்றுமவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் அரபி, பார்சி, உருது மொழிப் பிரிவின் தலைவர் காலம் சென்ற எஸ், முகம்மது ஹுசைன் நயினார் எம் ஏ , எல். எல். பி. ,பிஹெச். டி. அவர்கள்.

இவர்களையொட்டி, தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் புகழ்கின்ற வள்ளல் சீதக்காதி வரலாற்றைத் தக்க ஆதாரங்களுடன் கூடிய ஓர் ஆய்வு நூலாக எழுத அவாவுற்றேன். அதற்கான ஆதாரங்களைத் தேட முயன்றேன். வள்ளல் சீதக்காதியைப் பற்றி வெளிவந்துள்ள நூல்களே யின்றி, அவரைப் பற்றிய கட்டுரைகள், இதர நூல்கள் நுவல்கின்ற குறிப்புகள், மற்றும் தனியார் பலர் சேகரித்து வைத்திருந்த தகவல்கள் போன்றவை வற்றையெல்லாம் முயன்று சேகரித்தேன்.

1977-ஆம் ஆண்டு, பிப்ரவரி மார்ச்சுத் திங்கள்களில் வெளியான முஸ்லிம் முரசு பிறை, ஹ்மத் ஆகிய திங்கள் ஏடுகளில் விளம்பரம் செய்தேன்.

> **வள்ளல் சீதக்காதி பற்றிய விவரம் அறிந்தோர் தங்களிடம் உள்ள - அறிந்த - கேள்விப்பட்ட தகவல்களை அனுப்பி உதவுமாறு கோருகிறேன். வள்ளல் சீதக்காதி பற்றி எழுதவிருக்கின்ற விரிவான நூலில் அவை சேர்த்து வெளியிடப் படும்.**

இவை அந்த விளம்பரத்தின் சுருக்கம். கொழும்பு நகரிலுள்ள ஒருவரிடமிருந்து ஆம், ஒரே ஒருவரிடமிருந்து மட்டுமே கடிதம் வந்தது. தம்மிடம் சில ஆதாரங்கள் இருப்பதாக அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். படி எடுத்தனுப்புமாறு எழுதினேன், பதிலில்லை.

அதே ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 17-ஆம் நாள் கீழக்கரையில் வள்ளல் சீதக்காதியின் பெயரில் ஒரு நூலகம் திறந்தார்கள். அதில் சொற்பொழிவாற்றுமாறு என்னை அழைத்திருந்தார்கள். சென்று கலந்து கொண்டேன். மறுநாள் முதல் பதினைந்து நாட்கள் அவ்வூரில் தங்கி, சீறாப்புராணம் விரிவுரை செய்கின்ற வாய்ப்பு கிட்டிற்று. இந்த நாட்களில் வள்ளல் சீதக்காதியைப் பற்றி விரிவான முறையில் கேட்டு ஆய்ந்து அறிந்து விவரம் சேகரித்துக் கொள்ள முடிந்தது.

1978— ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13, 14, 15— ஆம் தேதிகளில் காயல்பட்டணம் நகரில் அனைத்துலக மூன்றுவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு நடந்தது. அதில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தேன். மாநாடு நடந்த மூன்று நாட்களிலும் அவ்வூரில் இருந்தேன். அக்காலை நான் சந்தித்த காயல்பட்டண அன்பர்களிடம் விசாரித்தேன். அனைவருமே ஒரே சொல்லாக "சீதக்காதி எங்களூர்க்காரரே" என வலியுறுத்திச் சொன்னார்கள். ஆனால் கீழக்கரையில் உள்ளது போன்று சான்றுகளில்லை. "இருந்தவை அனைத்தும் அழிந்து விட்டன" என்பதே அவர்களின் கூற்றாயிருந்தது. பின்னர், சென்னைக்கு மீண்டேன். தக்காரை அடுந்தேன் நூல் நிலையங்கட்குச் சென்றேன். அக்காலை சென்னை ஜார்ஜ் டவுனில் செட்டித் தெருவிலுள்ள கீழக்கரை ஆலிஜனாப எம். இத்ரீஸ் மரக்காயர் அவர்களிடம் தம்த பேசிககொண்டிருந்தபோது, வள்ளல் சீதக்காதியைபபற்றிப் பேச்சு வநதது. நான் அவரைப் பற்றி நூல் எழுதவிருப்பதைக் கூறினேன் அவர்கள் தம்மைச் சீதக்காதியின் வழித்தோன்றல் எனக் கூறிக்கொண்டதுடன் பல பயனுடைய தகவல்களையும்க தந்தார்கள். காலவிரைவினையும், எனது முதுமையையும் கருத்தில் கொண்டு, விரைந்து நூல் ஆக்கம் காண்பதில் ஈடுபடலானேன். எனினும் 1977-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஆண்டவனருளால் இப்பொழுதுதான் நிறைவு காண்கின்றது.

இந்த எனது ஆய்வுதான் முடிவானதெனக் கூறிட இயலாது. ஆனால், நான் ஆய்ந்தவரை வள்ளல் சீதக்காதி

கீழக்கரைக்காரர் என்றே தெரிய வருகின்றது. அதற்கான ஆதாரங்களே கிட்டியுள்ளன. எனக்கு முன்னர் ஆய்வு நடத்தியுள்ள டாக்டர் முகம்மது ஹுசைன் நயினர் அவர்களும், காலம் சென்ற காதிர் முகையிதீன் மரைக்காயர் அவர்களும் இதே கருத்தைததான் வலியுறுத்தியுள்ளார்கள். பல ஆண்டுகளாகியும் அவற்றை இன்று வரை மறுத்தாரில்லை. உண்மை அவர்களின் கூற்றிற்கு மாறுபட்டதென்றால், வல்ல இறைவன் அதை வெளிப்படுத்தி வைப்பானாக. நான் இந்த அளவுக்கு எழுதி முடிக்க உதவியோர் மூவர். அதாவது தேவையான நூல்களைத் தேடிக் கொணாந்து கொடுத்து உதவியவர் முஸ்லிம் முரசு முன்னாள் ஆசிரியர் ஆலிஜனுப் சையதுமுகம்மது 'ஹசன்' அவர்கள். தக்க ஆலோசனைகளை அவ்வப்போது நல்கி, நூல் செம்மையாக அமைய உதவியவர் உயர்திரு. கலைமாமணி ரா.வே அவர்கள். உடனிருந்து ஊக்குவித்துதவியவர் ஆலிஜனுப் என். பி. அப்துல் ஜப்பார் அவர்கள். முதல்கண் இம்மூவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இடையறுப் பல அலுவல்கட்கிடையேயும் எனது இந் நூலினை ஊன்றிப் படித்து, ஆய்ந்து, தமது அரிய கருத்துக்களை வழங்கியுள்ள அகில இந்திய முஸ்லிம் லீக்கின தமிழ் நாடு கிளைத் தலைவர் ஆலிஜனுப் அல் ஹாஜ் ஆ.கா.அ. அப்துஸ்ஸமத் சாகிப் எம்.ஏ., எம்.பி. அவர்கட்கும், பன்னூல் ஆசிரியர், பன்மொழிப் புலவர் உயர் திரு. கா. அப்பாதுரைப்பிள்ளை எம்.ஏ., எல்.டி.(விசாரத்) அவர்கட்கும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பன்னூலாசிரியர் சிந்தனைச் செம்மல் டாக்டர் உயர்திரு. ந. சஞ்சீவி அவர்கட்கும், எனது மனம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

இந் நூலைத் தக்க முறையில் அச்சடித்துதவிய நவஜோதி அச்சக உரிமையாளர் திரு. ம. நவநீதன் அவர்கட்கும நன்றி.

நூல் நுகர்வாளர்களே! உங்கள் அனைவருக்கும் நன்றி.

சென்னை-600 002.
1-9-81

கவி கா மு ஷெரீப்

# மேற்கோள் நூல்கள் பட்டியல்


பழங்காலத் தமிழர் வணிகம் 41

பெருங்கதை 43

பாண்டியர் வரலாறு(சதாசிவப் பண்டாரம்) 54, 86

பட்டினப்பாலை 55, 56, 79

பெரும்பாணாற்றுப்படை 55, 76, 79

சிலப்பதிகாரம் 56, 58 ,78, 79, 80, 83, 120

மதுரைக்காஞ்சி 58

(ராமநாதபுரம், திருநெல்வேலி) கெஜட்டியர்- 64, 65, 66, 69, 71

தமிழகக் கடற்கரைகளில் முத்துக் குளியல் பற்றிய வரலாறு 65

இப்னுபதூதா பயண நூல் 68

இம்பீரியல் கெஜட்டியர் ஆப் இந்தியா 70, 71

மதுரை நாயக்கர் வரலாறு 56

சிலப்பதிகார உரை 76, 77

திவாகர நிகண்டு 76, 80

சூளாமணி நிகண்டு 76

தமிழ் லெக்ஸிகன் 76

இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் 76

அகதர்சிடாஸ் 78

நீலகண்ட சாஸ்திரியார் நூல் 81, 82, 83



கீழக்கரையில் சீதக்காதியாப் அஸ்திவாரமிடப்பட்டு அவரின் தம்பி பட்டத்து மாமு நெயினு என்னும் முகம்மது அப்துல் காதர் மரைக்காயரின் மகன் அபூபக்கர் மரைக்காயரின் இரண்டாவது மகனுன அவ்வாக்கார் மரைக்காயர் என்ற அப்துல் காதர் மரைக்காயரால் கட்டி முடிக்கப்பட்ட புகழ் பெற்ற ஜும்ஆப் பள்ளிவாசல்

# தொன்மைத் தமிழகம்

தமிழகத்தின் வரலாறு தொன்மையானது உலக வரலாற்றினை எழுதுபவரோ, பூமிஇயல் ஆய்வாளரோ, மானுட வரலாற்றினை ஆய்ந்தெழுத முற்படுபவரோ, மனித நாகரிகம், பண்பாடு, கலை, கலாசார விளக்கநூல் படைப்பவரோ தமிழ் நாட்டைத் தொட்டுக் காட்டாமல் விட்டுச்செல்ல வியலாது. சொல்லப் போனால், இவற்றின் துவக்கமே தமிழ் நிலம் என்றுதான் ஆரம்பித்தாக வேண்டும்.

ஆம்,லெமூரியாக் கண்டம் என்று ஓர் கண்டமிருந்தது. உயிரினங்களும், மனித இனமும் முதன் முதலில் தோன்றியது இந்த லெமூரியாக் கண்டத்தில்தான் என்பது நிலவியல் ஆய்வாளர் அனைவரும் ஒப்பியுள்ள முடிவு. லெமூரியாக் கண்டம் நீரில் மூழ்கிய பின்னர் எழுந்ததே இமயப் பெருங்குன்றம். அதற்கு முன்னம் இமயப்பகுதி ஆழ்கடலா யிருந்ததென்பர்.

லெமூரியாக் கண்டம், இந்துமாக்கடலினுலும் ஏனைய கடல்களாலும் பிரிக்கப்பட்ட பின்னர், இன்றைய இந்தியாவாகிய நாவலந்தீவு தோன்றிற்று. நாவலந்தீவின் வடபகுதி,அந்நாளில்மானுடர் வாழத் தகுதியற்றிருந்தது. விந்திய மலைக்கு இப்பால் உள்ள நிலப்பரப்பே மனித வாழ்க்கைக்கு ஏற்புடையதாய்இலங்கிற்று.அதிலும்,தென் மாநிலமாகிய தமிழ் நிலமே, 'குமரிநாடு' என்கிற நிலப் பகுதியே மக்கள் வாழத் தகுதியுடையதாய்த் திகழ்ந்தது. இங்கேதான்—இந்த நிலப்பரப்பிலேதான் மனிதன் முதன் முதலில் தோன்றி வாழத் தொடங்கினுன். அவன் பேசிய மொழியே தமிழ் மொழி என்பதனைப் பெரும்பாலாக எல்லா வரலாற்றுசிரியருமே ஏற்று இயம்பியுள்ளனர். இஸ்லாமியமும் இதனை ஏற்றிருக்கக் காணலாம்.

''சரந்தீப்''என்றொரு தீவிருந்தது. அத்தீவிலுள்ள உயரமான மலையின் மீதுதான் ஆண்டவனின் விருப்பினுக்கு மாருன செயல் புரிந்ததால் ஆதம்நபி (Adam) என்பவர் வானுலகிலிருந்து நீக்

கம் பெற்று வந்து தங்கினர். அவர் தாம் இன்றைய உலக மானிடரின் தந்தையாவார்'' என்பது இஸ்லாமியம் இயம்புகின்ற செய்தி. ஆதம்நபி அவர்கள், பாவமன்னிப்புக்கோரி இறைவன்பால் இறைஞ்சி வேண்டி நின்றமலை இலங்கையில் ஹட்டன் (தொப்பித் தோட்டம்) என்னும் பகுதியில் உளது. இம்மலையை முஸ்லிம்கள், 'ஆதம்பாவா மலை' என்கின்றனர். இந்துக்கள் சிவன்பாத மலை என்பர். பௌத்தர்கள்,கிறித்துவர்கள் போன்ற அனைவராலும் உரிமையுடன் ஏற்றிப் போற்றிக் கொண்டாட ப்படுகின்ற மலை இம்மலை,

ஆதம்நபி தான் உலக மானிடரின் தந்தை என்பதாலும், பாவமன்னிப்புக் கோரி இறைவன் பால் அவர் துதித்து வேண்டி நின்றிருந்தமலை, இலங்கை ஹட்டன் பகுதியில்தான் உள்ளதென்பதாலும், இந்த இலங்கை முந்திய லெமூரியாக் கண்டத்தின் சிதறுண்ட ஒரு துண்டு நிலம் என்பதாலும், இலங்கையிலும் இந்தியாவின் தென்கோடியான தமிழகத்திலும் காலந்தெரியாக் காலந்தொட்டே தமிழின மக்கள் வாழ்ந்து வருவதாலும், ஆதியில் மனித இனம் தோன்றிய நிலம தமிழ் நிலம் என்பதும் அவ்வினம் பேசிய மொழி தமிழ் மொழி என்பதும் ஏற்புடைத்தாகவே உள்ளன.

லெமூரியாக் கண்டம் நீருள் மூழ்கிய போது, குமரி நாடும் அதனின்றும் வடக்கு நோக்கிச் செல்கின்ற நாவலந்தீவ (இந்தியாவு)ம் தான் அன்றைய உலகின்கண் நிலவிய முதல் நிலப்பரப்பு என்கின்ற ஆய்வாளர்களின் முடிவு ஒப்புடைத்தென்றால், மனித இனத்தின் தோற்றுவாய் நிலம் தமிழ் நிலமே என்பதில் ஐயமில்லை. இந்த இனம் பேசிய மொழி தமிழ் மொழி, இம்மொழியிலிருந்தே ஏனைய மொழிகள் தோன்றின என்கின்ற கூற்றும் உண்மையேயாகும். தமிழகத்திலிருந்தே இந்தியாவின் ஏனைய பகுதிகட்கும் உலகின்கண் உள்ள எல்லாக் கண்டங்கட்கும் மக்கள் சென்று குடியேறிப் பரவி நிலைத்து நின்று

வாழலாயினர் என்பதும் கொள்ளத் தக்கதேயாம். இதனை மெய்ப்பிப்பான் போன்றுள்ளதே. ''கல் தோன்றி, மண்தோன்ருக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி''என்னும் முதுமொழி

மனிதன் தோன்றிய நிலத்தில்தான், அவன் நிலைத்து வாழ்ந்த பகுதியில்தான் நாகரிகம், பண்பாடு, கலை, கலாசாரம் போன்றவை தோன்றி வளர இயலும். எனவே மனித நாகரிகம் அனைத்தும் முதன்முதலில் தோன்றிய நிலம் தமிழ் நிலமே என்கின்றனர் ஆய்வாளர்கள்.

மனிதன் தோன்றினன். பின்னர்,அவன் மொழிதோன்றி வளரலாயிற்று. அம்மொழியின் வளர்ச்சியை ஒட்டி, கலை, கலாசாரம், பண்பாடு, நாகரிகம் அனைத்தும் வளர்ந்தன. இவற்றைச் செம்மையுற நடத்தத் தலைவர்கள் தோன்றினர். தலைமை என்பது குடியுரிமையாயிற்று. இத்தலைவர்களே பின்னர் மன்னர்களாயினர். இந்த நிலை மானிடர் வாழுகின்ற எல்லாப் பகுதிகட்குமே ஏற்புடைத்தாயிற்று. இவ்வடிப்படையில், தமிழகத்தை முப்பிரிவாக்கி, மூன்று மன்னர் தனித்தனியே ஆளத்தலைப்பட்டனர். சேர, சோழ, பாண்டியர் என்கிற பெயரும் அப்பெயர்களைக் கொண்ட நாடுகளும் தோன்றலாயின.

சேர, சோழ, பாண்டியர்கள் தொல்தமிழ்க் குடியினர். இவர்கள் வீரம், விவேகம், வாய்மை, நேர்மை, நீதி போன்ற நலன்கள் துலங்க நாடாண்ட நன் மன்னராவர். இத்தகைய ஆளுந்திறத்தோர், அவனியில் வேறு எங்கும் வாழ்ந்ததில்லை என்பர் வரலாற்றறிஞர்.

இவர்கட்குப் பிறர் நிலத்தை அடிமைப்படுத்தி ஆளுகின்ற பேராசை இருந்ததாகத் தெரியவில்லை. வீறுரையாளரை வெல்லவும், தமது வாள்வலி காட்டவுமே இவர்கள் சடல் கடந்தும் போர் மேற்கொண்டுள்ளனர், ஆனால், அப்படி வென்ற நாடுகளில் நின்று நிலைத்து ஆட்சி நடத்தாமல், தம்மால் வீழ்த்தப்பட்டோரிடத்தே ஆட்சியைத் தந்து வந்ததே

இய மாமன்னர்களின் வரலாறு. இத்தகு நன்மனத்தோர் தமக்குள் ஒருவரை ஒருவர் பகைக்காமல் எதிர்க்காமல், வீழ்த்தாமல் வாழ்ந்தனர் என்பதாக வரலாறில்லை. ஒருவரை ஒருவர் எதிர்த்து ஓயாமல் போரிட்டு நின்றனர் என்பதே இவர் தம் வரலாறு. ஆயினும், இவர்களிடையே ஒற்றுமை, உறவுமுறை, திருமணம் ஆகியவை நடைபெறுமலில்லை. இவர்களின் அன்புவழி அரசு, கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டுவரை பிறருக்கடிமை யின்றிப் பீடுடன் நடந்து வந்துள்ளது.

பன்னிரண்டாம் நூற்றுண்டுக்குப் பின்னா் எழுந்த அரசியல் பேரலைகள் சேர, சோழ, பாண்டிய வல்லரசுகளின ஆற்றலைக் குறைத்துக் கொண்டே வந்து, பதினைந்தாம் நூற்றுண்டிற்கிப்பால் நிலைத்து நிற்க இயலாதவாறு செய்து விட்டிருக்கக் காண்கின்றோம். இம் மூவேந்தர்தம் ஆட்சியின் வீழ்ச்சி, தமிழின மக்களின் நல்வாழ்வில் வீழ்ந்த பேரிடியாயிற்று!

ஆம்; இதன்பின்னர், தமிழின மக்கள் அரசியலில் மட்டுமின்றி, மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, வணிகம் போன்ற அனைத்திலும் பின்னுக்குத் தள்ளப் பட்டுவிட்டனர். பொருளாதாரத்திலோ பெரும் வீழ்ச்சி...!

ஈந்து வாழ்ந்த தமிழின மக்கள், அணி அணியாக அந்நிய நாடுகட்குக் கூலிகளாக ஏக ஆரம்பித்தது இதன் பின்னர்தான்.

பர்மா நாட்டின் விளைபொருட்களின் விற்பனை, தமிழகக் கடல் துறைகளில் நடந்தகாலம் மாறி, தமிழின மக்கள் பர்மா நாட்டிற்கேகி, நிலம் கிளறி, மரம் அரிந்து வாழும் நிலையை அடைந்தது தமிழ்ப் பேரரசுகள் வீழ்ந்துபட்ட பின்னரேயாம்.

இலங்கை நாட்டின் இயற்கைவளம் தருகின்ற விளை பொருட்கள் புகார்த் துறையிலும், கொற்கையிலும் விற் பனையாகித் தீரவேண்டிய காலம்போய், தமிழக மக்கள் இலங்கைத் தீவின் தேயிலைத் தோட்டங்களில் கொழுந்து

கிள்ளி அட்டைக் கடிகட்கு ஆளாகி நொந்ததும் மூவேந்தர், ஆட்சி முடிவுற்றபின் நிகழ்ந்ததே!

கங்காணிகளின் கைப்பிடிகட்கு ஆளாகித் தமிழினக் காளையரும் கன்னியரும், பிஜி நேடால் முதலிய அன்னிய நாட்டுக் கரும்புத் தோட்டங்களில் 'அல்லலுற்றழுவதைக் கேட்டிருப்பாய் காற்றே!' எனப் பாரதி பாட்டிசைக்க வழிகண்டதும் தமிழகத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சி அகன்ற பின்னரேயாம்!

மலேயா, சிங்கபபூர் போன்ற நாடுகட்கேகித் தமிழர்கள் மரங்களில் பால் வடித்துக் கண்களில் கண்ணீர் வடிக்க நேர்ந்திருக்காது மூவேந்தாகளின் ஆட்சி இங்கே நீடித்திருந்தால்!

பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் கூடத் தமிழகம் செல்வச் செழிப்பில் மூழ்கித் திளைத்ததையும், தமிழர்கள் வளமாக வாழ்ந்ததையும் தமிழகம் போந்த வெளிநாட்டுப் பயணிகள் கண்டு வியந்துரைத்துள்ளனர்.

ஆம், மார்க்கோபோலாவும் இபுனுபதூதாவும் இங்கே வருகை புரிந்தது பதின்மூன்றும், பதினான்காம் நூற்றாண்டில் என்பர். அவர்கள் இங்கே வந்துற்ற காலை, தமிழின் இனிமையைச் செவியேற்றனர்.

கூத்திலும் பாட்டிலும் தமிழ் குடிகொண்டிருக்கக் கண்டனர்.

தமிழ் மன்னர்கள் கோலோச்சக் கண்டனர். தமிழகத்தின் வள்ளல்களைக் கண்டனர். வாளோச்சும் வீரர்களைக் கண்டனர். பொன்னை இறக்குமதி செய்து விட்டு, பண்டங்களை ஏற்றிச் செல்கின்ற, கப்பல்களைக் கண்டனர். தமிழ் மன்னர்களின் அவைகளிலே மாமேதைகள் வீற்றிருக்கக் கண்டனர். அன்றைய தமிழ் மக்களிடையேயும் சமயங்கள் இருந்தன. ஆனால் சண்டைகள் இல்லை. சாதிகள் உண்டு, பேதங்கள் இல்லை. பஞ்சமில்லை, பட்டினியில்லை, கற்றோர்பால் கல்லாதாரை ஏமாற்றுகின்ற கயமைத்தனமில்லை.

நிலம் விளைந்தது; தொழில் வளர்ந்தது; நிலவளம், மலைவளம், கடல்வளம், மக்களின் மனவளம், வாழ்க்கை

நலம் ஆகிய அனைத்தும் செழிப்புற்று விளங்கின; ஞானமும் கல்வியும் நற்கலைகளும் மேலோங்கித் திகழ்ந்தன; கற்றோர் மற்றோரால் மதிக்கப்பட்டனர். கல்லாதார் தொழில் செய்து உழைத்து உயர்ந்தனர்:

தமிழர்களின் கைவினைப் பண்டங்களையும், மலை, கடல், நிலம் தந்த பொருட்களையும் சொன்ன விலை கொடுத்து வாங்கிச் செல்வதற்கு அன்னிய நாட்டினர் கப்பலுடன் வந்து காத்து நின்றனர்.

இத்தன்மைகளால், தமிழக வணிகவாழ்வினர் சுறு சுறுப்புடன் இயங்கினர். அவர் தம் கப்பல்கள் ஜாவர்வரை சென்று சரக்குகளைத் தரம்பார்த்து வாங்கி ஏற்றிச் சுமந்து வருவதை, தமிழகக் கடல்கள் அலை எழுப்பி அறிவித்துக் கொண்டிருந்தன.

ஆம், கடாரத்தின கூலம், தேக்கு, மலேசியத்தின் புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி குங்குமப்பூ, சீனத்துப்பட்டு, ஜாவா, மற்றும் கிழக்கிந்தியத் தீவுகளின் சந்தனம், அகில், மிளகு, கிராம்பு போன்ற பண்டங்களைக் கொள்முதல் செய்வதிலே தமிழக வணிக வாழ்வினர் முனைந்து ஈடுபட்டனர்.

வடபுலப் பண்டங்கள் யாவும் தமிழகக் கடல் துறையை வந்தடைந்து விற்பனையாயின. இவற்றை வாங்கிச் செல்லுகின்ற நாடுகளின் மரக்கலங்கள் தமிழகக் கடல் முன் துறையில் வந்து மொய்த்துக் கிடந்தன. இதனால் தமிழகக் கடற்கரைப் பகுதிகள் எந்த நேரத்திலும் பரபரப்புடன் காணப்பட்டன,

வணிகத்தால் வர்த்தகர் உயர்ந்தனர். வணிக வளத்தால் நாடு உயர்ந்தது நாடாள்கின்ற நன்மன்னர் கள் உயர்ந்தார்கள். மக்களோ தம் தம் உழைப்பினுக் கேற்ப ஊதியம் பெற்று மகிழ்ந்தனர். விவசாயிகளும், கைவினைத் தொழிலரும் நிலையான வருவாய் பெற்றுச் சிறப்புற்று நல்வாழ்வு வாழ்ந்தனர்.

நாடெங்கினும் ஆலயங்கள் பரவின. அறச்சாலைகள் ஓங்கின. வள்ளல்கள் பெருகினர். வளமார்ந்த கவிதை களைப் படைக்கின்ற புலவர்கள் தோன்றினர்.

கடலில் நங்கூரம பாய்ச்சி நிற்கின்ற கப்பல்களைக் கண்ட ஒரு புலவன், பெருத்த யானைக் கூட்டம் கட்டுண்டு, அசைந்தாடி நிற்பதை ஒத்திருப்பனவாகப் பாடியின்புறுகின்றான்.

வள்ளல்கள் வீட்டிலிருந்து இருகை நிறைய சோற்றினைப் பெற்று அணிவகுத்துச் செல்கின்ற சிறுவர்கூட்டம் எறும்புகள் தம்தம் வெண்முட்டைகளை வாயிற் கவ்விய வண்ணம் சாரை வகுத்துச் செல்வதை ஒத்திருப்பதாக இன்னொரு புலவர் பாடுகின்றார்.

பிஞ்சுதிராதிருக்க, காய்த்த காலத்தே மாமரத்தின் அடிப்புரத்தை அரிவாள் கொண்டு கொந்தி விட்டால் எப்படி இருக்குமோ அப்படி இருந்ததாம் போரிலே விழுப் புண்களை ஏற்ற மறவனின் மார்பகம் எனக் காட்சிப் படுத்துகின்றார் பிறிதோர் புலவர்.

புலவர்களால் போற்றப்படாதான் ஏற்றமிலாதான் என்ற நிலை தெரிந்து, மன்னர்களும் வள்ளல்களும் ஈந்து சிவந்த கரங்களைப் பெற்று வாழ்ந்தனர்.

சங்க காலம் தொட்டு, மூவேந்தர் ஆட்சி முடிவுற்ற காலம்வரை தமிழக மக்களின் வாழ்விற்கிணையான வாழ்வு பெற்றிருந்த இனம் பிறிதொன்றில்லை என்னுமாறு வாழ்ந்த வாழ்வு தமிழர் வாழ்வு!

**அயோனிய- கிரேக்க நாகரிகம், உரோம நாகரிகம், எகிப்து நாகரிகம், சீன நாகரிகம் என்கின்ற கீர்த்தி மிகுந்த எந்த நாகரிகத்திற்கும் பின்னடைந்ததன்று தமிழர் நாகரிகம்.**

''இவள் என்று பிறந்தனள்? என்றறியாத இயல்பினளாம் எங்கள் தாய்,'' எனப் படுவான் பாரதி. அந்தத் தமிழ் மொழியைத் தாய்மொழியாய்க் கொண்ட தமிழரின் நாகரிகமும் அத்தகையதே! அதாவது, தோன்றிய காலஞ் சொல்ல ஒண்ணுக் காலத்தது தமிழர் நாகரிகம்.

''இறப்பதாயினும் சரியே; எனது தாய்மொழியின் இனிமையைச் செவியேற்கத் தவறமாட்டேன்!'' என்று

கூறி, அவ்வழி நின்ற மன்னன் வாழ்ந்த நாடு தமிழ் நாடு

இங்கே தோன்றி, தமிழை வளர்த்த வள்ளல்கட்கு அளவேயில்லை. அத்தகு வள்ளல்களின் வாழையடி வாழையாக வந்தவரே வள்ளல் சீதக்காதி.

வள்ளல் சீதக்காதியைப் பற்றி அறியுமுன், அவர் சார்ந்திருந்த சமயம் (இஸ்லாம்) பற்றிச் சிறிதளவேனும் அறிந்து கொள்வது அவசியம். இந்த ஆய்விற்கு அடிப் படையாகத் தமிழர்-அரபியர் உறவு பற்றி அறிதல் வேண்டும். ஏனெனில், இஸ்லாமிய சமயம், அரபு நாட் டில் தோன்றிய சமயம். அச்சமயம் சார்ந்த குடும்பம் ஒன்றில் பிறந்தவர் வள்ளல் சீதக்காதி. ஆகவே, அவர் சார்ந்திருந்த சமயம் தமிழகத்திற்கு எப்போது வந்தது? எப்படி வந்தது? எனத் தெரிந்து கொள்வது பயனுடைய தாம். இதை அறிந்து கொள்ள முதலில் நாம் தமிழர்-அரபியர் உறவுபற்றி ஆய்தல் வேண்டும்.

# தமிழர்-அரபியர் உறவு

தமிழர்-அரபியர் உறவு என்பது (இன்று) நேற்றுத் தோன்றிய தன்று. சுமார் நான்காயிரம் ஆண்டுகட்கு முந்தியதென்பர் ஆய்வாளர்.

அரபி இன மக்கள் வாழுகின்ற நாடு அரபிநாடு. இந்த நாடு ஆசியாக் கண்டத்தின் தலை போல் உள்ளது. ஆம், ஜப்பான் நாட்டை ஆசியாக் கண்டத்தின் கால் எனக் கொண்டு நோக்கினால்,அரபு நாடு தலையாகக் காட்சி தரும்.

ஐரோப்பா-ஆபிரிகாக் கண்டங்களின் நிலவழிச் செலவு அரபு நாட்டின் மீதாகத்தான் நடந்தாக வேண்டும்.

விண்வெளிப் பயணம் தோன்று முன்னர், கடல்வழிப் பயணமும் கடினமாக இருந்த நாளில், அரபுநாடு அண்டை அயல் நாட்டினரால் விரும்பி நட்புக் கொள்ளத் தக்க வகையில் அமையப் பெற்ற நாடாகத் திகழ்ந் துள்ளது.

உதாரணமாக், கி. மு. முதலாம் நூற்றுண்டு தோன்றும்வரை கிரேக்க-உரோமர்கள் இந்தியாவை வந்தடைய அரபு மண்ணை மிதித்துத் தீர வேண்டிய அவசியமிருந்தது.

நில வரைபடத்தை உற்று நோக்கின் இவ்வுண்மை செவ்வனே புரியும். இப்பொழுது ஒன்றை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்கின்றோம். அதாவது, உரோமர்கள் தமிழகத்திற்கு விரைந்து வரக் கூடிய மார்க்கம் அக்காலத்தில் அரபு தீபகற்பத்தின் ஊடே புகுந்து வருவதாகத்தான் அமைந்திருந்தது. அரபியர்கள் பெரும்பாலும் வணிகவாழ்வினரானதினுல், கிரேக்க-உரோமர்கட்குத் தடம் விடுவதில் எச்சரிக்கையாக இருந்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

அரபியர் துணை இன்றி, அல்லது அரபு நாட்டினுள் நுழையாமல் கடல் வழியில் இந்தியாவை வந்தடைய உரோமர்கட்கு கி.பி. ஒன்றும் நூற்றுண்டில்தான் வழி ஏற்பட்டது. ஆம், கி.பி. ஒன்றும் நூற்றுண்டிலே உரோமர்கள் எகிப்து நாட்டை வென்று கைப்பற்றினர். இதன் பின்னரே மத்திய தரைக்கடலை ஒட்டியுள்ள அலெக்சாந்திரியாவைக் கடல் துறையாகப் பயன்படுத்த அவர்களால் இயன்றது. அதன்பின்னரும் அவர்கள் கடலின் ஓரமாக மரக்கலம் செலுத்தி, பாரசீக வளைகுடாப் பகுதி நாடுகட்கும், இந்தியாவில் சிந்து-கட்சு-குஜராத் பகுதிகட்கும் வருகை புரிவோராயினர். ஆழ்கடல் வழிக் கப்பல் செலுத்துகின்ற முறையைக் கிரேக்க — உரோமர்கள் அந்நாளில் அறிந்திருக்கவில்லை. எனவே எகிப்தைக் கைப்பற்றிய பின்னரும் உரோமர்கட்குத் தமிழக வரவு கடினமாகவே இருந்தது. பின்னர் அவர்கள் ஆழ்கடல் வழிப் பயணத்தை அறிந்தனர். இதன் பின்னர் தமிழகத்தின் மேற்புறக் கடல் துறையாகிய முசிறிக்கு வரலாயினர்.

எகிப்தைக் கைப்பற்றியவுடன் அரபியர் வசமிருந்த வணிகத்தை உரோமர்கள் தம் வயமாக்கிக் கொள்ளத் தவறவில்லை. ஆனுல் இந்த வாழ்வு அவர்கட்கு மூன்று நூற்றுண்டுகட்கு மேல் நிலைக்கவில்லை. (இதனை இன்னும் விரிவாக அறிய, அறிஞர் திரு. மயிலை சீனி வேங்கடசாமி

அவர்கள் எழுதியுள்ள ''பழங்காலத் தமிழர் வணிகம்'' என்ற நூலின் 51, 52, 53 ஆவது பக்கங்களைக் காண்க).

உரோமியப் பேரரசு புகழின் உச்சக்கட்டத்தை எய்திய நாளிலே (எகிப்தைக் கைப்பற்றிய பின்னர், தமிழகப் பேரரசர்களின் நட்பைப் பெறுவதில் உரோமியப் பேரரசன் பெரிதும் ஆர்வம்கொண்டான். பாண்டியப் பேரரசைப் போன்றே தமிழகப் பேரரசர்களும் உரோமர் உறவைப் பெரிதும் விரும்பினர் எனலாம்.

பாண்டிய மன்னனொருவன் உரோமப் பேரரசனுக்குப் பரிசுப் பொருள்களை அனுப்பினான் என்பதும், உரோமப் பேரரசன் பாண்டியனுக்குப் பரிசனுப்பினான் என்பதும் இவ்விரு நாடுகட்கிடையே தூதுவர்களை உண்டு பண்ணிக் கொண்டனர் என்பதுவும் இதனை மெய்ப்பிக்கும் சான்றுகள் என்பர் வரலாற்றாய்வினர்.

தமிழர்-கிரேக்கர்-உரோமர் உறவு எட்டத்து உறவு என்றால், அரபியர்-தமிழர் உறவு அண்மித்த நாட்டினர் உறவெனலாம். அதாவது, இந்தியாவின்,குறிப்பாகத் தமிழகத்தின் மேற்குப் புறத்தில் உள்ளது அரபிக் கடல். குறுகிய அகலமுடைய இக்கடலைக் கடந்தால் தமிழர் அரபி மண்ணில் கால் வைப்பதும், அரபியர் தமிழ் மண்ணில் கால் வைப்பதும் எளிதே. இதனால் கிரேக்க-உரோமியரைவிடத் தமிழகத்துடன் அரபியர்கட்கு அதிக அளவில் உறவு இருந்திருக்கக்கூடும். அதுவும் கிரேக்க-உரோமர் உறவு தமிழகத்திற்கு ஏற்படுவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முந்தியதாகவே இருக்க வேண்டும். அதனால்தான் தமிழர்-அரபியர் உறவு நான்காயிரம் ஆண்டுகட்கும் முந்தியதென ஆய்ந்து உரைக்கின்றனர் வரலாற்றாய்வுப் பணியினர்.

வணிக உறவு மட்டுமின்றி கலை, இலக்கிய, கலாசார உறவுகளிலும் தமிழகத்துடன் நீண்ட நெடுங்காலமாக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர் அரபியர் என்று கொள்ள இடமுண்டு.

தமிழர்களை மட்டுமின்றி, தமிழகக் காற்றையும் கூட அரபியர் விரும்பி நேசித்திருக்கின்றனர் என்பதற்கு ஆதாரம் உண்டு.

தமிழகத்தின் எஃகை, அவ்வெஃகினுல் செய்யப்பட்ட ஆயுதங்களை அணிவதிலே அரபியர் பெருமிதம் உற்றனர் எனக் கூறப்படுகின்றது.

அரபு இலக்கியங்களில் காணப்படுகின்ற பல நிகழ்ச்சிகள் இந்திய இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இதனுல், தமிழகத்துடன் மட்டுமின்றி இந்தியாவுடனும் அரபியர்கட்கு நீண்ட நெடுங்காலத் தொடர்பு உண்டெனத் தெரிய வருகின்றது.

அரபி (யவனர்) நாட்டு வீரர்களும், விற்பன்னர்களும், யந்திரப் பொறிகளின் இயக்குநர்களும் தமிழகப் பேரரசரிடம் பணிபுரிந்துள்ளதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உண்டு.

''பெருங்கதை'' என்னும் நூலின் வாயிலாக அக்கால அரண்மனையில் அரபி மொழி அறிந்தோர் இருந்ததை அறிய முடிகின்றது.

மகாபாரதக் கதையில் வருகின்ற, அரக்கு மாளிகைக்குத் தீயிடவிருக்கின்றுன் துரியோதனன் என்பதைப் பஞ்ச பாண்டவர்கட்கு விதுரன் அறிவித்தது, அரபு மொழி வாயிலாகத்தான் என்ற கருத்தும் உண்டு.

இவை போன்றவற்ருல அறிய வருவது யாதெனில், தமிழர்-அரபியர் உறவு மட்டுமின்றி, இந்தியர்-அரபியர் உறவும்கூட மிகமிகத் தொன்மையான தென்பதேயாம்,

இவற்ருலும், கிரேக்க-ரோமர்கட்கு முன்பிருந்தே தமிழர்-அரபியர் வணிக உறவு இருந்து வந்துள்ளதென்பதாலும், இரண்டு நாடுகளும் அண்மைநாடுகள் ஆனதினுலும், நட்பு வணிகம் மட்டுமின்றித் தமிழகம் வந்து குடியேறி வாழ்பவராகவும் அரபியர் அடிநாளிலிருந்தே இலங்கி வந்துள்ளனர் எனக்கொள்ள வியல்கின்றது.

ஆண்டிற் கொருமுறை மக்கா நகர் நேர்க்கி ஹஜ் [புனிதப்பயணம்] செய்வது என்பது, அரபு நாட்டினர் இடையே ஐயாயிரமாண்டுகட்கும் முன்பிருந்தே பழக்கத்தில் இருந்து வந்துள்ளது, [இன்று இது உலக முஸ்லிம்கள் அனைவரின் மார்க்கக் கடமையாக ஆக்கப்பட்டுள்ளது.] இந்த ஹஜ் என்னும் புனிதச்சடங்கைநிறைவேற்றுங்

கால் அணியப்படுகின்ற— ஆடை, பழங்காலத் தமிழின மக்கள் அணிகின்ற— மேலே போர்த்திக் கொள்ள ஓர் துண்டு, இடையில் கட்டிக்கொள்ள ஓர் துண்டு என்ற— வகை அமைந்திருக்கக் காணுகிறோம். ஒரே முறையாக ஹஜ் செய்கின்ற அனைவரும் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்து அணிந்து வருகின்ற இந்த ஆடை அணிமுறை, அரபியர்-தமிழரின் உறவில் உள்ள தொன்மையை உணர்த்துவதாக இலங்கக் காணுகின்றோம்.

தமிழ் நாட்டிலிருந்தே முற்கால அரபியர் உருவோடமைந்த பல தெய்வ வணக்க முறையைப் பயின்று சென்று தங்கள் நாட்டில் பரப்பினர் என்று சொல்லப் படுமேயானால் மறுப்பதற்கியலாதுதான். காரணம், அவ்வளவு பழமையானதாக உள்ளது இங்கே உள்ள உருவ வணக்க ஒழுகல்.

ஆகவே, தமிழர்-அரபியர் உறவு, கிரேக்க-உரோம நாட்டிரினடையே தமிழர் கொண்ட உறவினைப் போன்று வெறும் வணிகவழி உறவன்று; கலை, கலாசார, இலக்கிய உறவாகவும் நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்துள்ளதெனக் கொள்ளுவது பொருந்தும்.

கி. பி. ஏழாம் நூற்றுண்டிற்கு முன்புவரை அரபியர்கள் பெரும்பாலும் உருவ வணக்கமும் பல தெய்வ வழிபாடும் உடையோரராயத் திகழ்ந்துள்ளனர். கி.பி. ஏழாம் நூற்றுண்டில் இஸ்லாமிய சமயம காலூன்றிய பின்னரே அரபியர் அனைவரும் உருவமற்ற ஓர் இறைவனை ஏற்போராயினர்.

இஸ்லாமிய சமயத்தை ஏற்குமுன்னர்த் தமிழகம் போநது வணிகம் புரிந்து வந்ததுபோன்றே இஸ்லாமியரான பின்னரும் அராபியர் தமிழகத்திற்கு வணிகம் புரிய வருகின்ற நிலை தொடர்ந்து வந்துள்ளது.

அராபியர் எந்த நாளிலும் வாக்குறுதியைக் காப்பாற்றுவதைத் தமது இன மரபாக ஏற்று வந்துள்ளனர். இஸ்லாமியரான பின்னர் இத் தன்மை இன்னும் விரிவடைந்திருப்பதைத் தமிழர்கள் கண்டார்கள். ஆம், வாக்குறுதியைக் காப்பாற்றுவதுதான் இஸ்லாம். இதை

விட்டு விட்டால் இஸ்லாம் என்பதே இல்லை என்றாகி விடும். அதாவது—

இறைவன் ஒருவனே, அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. முகம்மது நபி (சல்) அவர்கள் இறைவனின் உண்மைத் தூதுவர் ஆவர் என்று உள்ளத்தால் ஏற்று உறுதி பூணுவதே இஸ்லாத்தின் அடிப்படை. இறைவனுக்குச் செய்து கொடுத்த இந்த வாக்குறுதியைக் காப்பாற்றாது விடுபவன் இஸ்லாமியனாக இயங்க இயலாது. இந்த நெறிக்குப் பழக்கப்பட்டு விட்டபின்னர், மானுடரிடத்தும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுகின்ற தன்மை தானாக அமைந்து விடுகின்றது.

இவ்வுண்மையை இஸ்லாமியராக சமயமாற்றம் பெற்றிருந்த அரபியர்களிடையே நிறைந்திருக்கக் கண்டார்கள் தமிழக மக்கள்.

இஸ்லாமியராவதற்கு முன்னர் அரபியர் மதுப் பிரியராயிருந்தனர். மங்கையராசையில் வரம்பும் முறையும் கடந்தவராயிருந்தனர். கடவுளை வணங்குவதில், ஆசார அனுஷ்டானங்களில், இனவெறியில், குலப்பெருமையில், சூதாடுவதில் தங்களை நிகர்த்தோர் உலகிலே இல்லை எனுந் தன்மையினராய்த் திகழ்ந்தனர். அவர்கள் இஸ்லாமியரான பின்னர் இவை அனைத்திலும் மாறுதல் பெற்றுத் திகழ்வதைத் தமிழர்கள் கண்டார்கள். இந்த நிலையை அரபியர்கட்கு அளித்தது இஸ்லாமிய சமயம்தான் என்பதைக் கண்டபோது இஸ்லாத்தின்பால் தமிழர்கட்கு அன்பு தோன்றியிருக்குமாயின் அதில் ஆச்சரியமில்லை தானே?

மற்றும், மனிதரில் தாழ்வு உயர்வு கூறல் தீது என்பதை வெறும் வாய்ச் சொல்லோடு மட்டுமின்றி, செயலிலும் இஸ்லாமியர் கடைப்பிடித்துக் காட்டினர். சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் என்பன இஸ்லாமியரின் தாரகமாக மட்டுமின்றி, நடைமுறைச் செயலாகவும் இருந்தது. இஸ்லாமியராகி விட்டோரைத் தம்மில் ஒருவராகக் கொண்டு ஒழுகும் முறையைக் கண்ட தமிழினத்தாருக்கு இஸ்லாம் ஏற்புடைத்தாகத் தோன்ற

லாயிற்றெனலாம். மற்றும், இங்கு அக்காலே இருந்த தாழ்ந்தோர் உயர்ந்தோர் மனப்பான்மையும் இஸ்லாம் இங்கே காலூன்ற உதவிற்றென்றும் கூறலாம். தீண்டத் தகாதார் என ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தோர் இஸ்லாமியரானதும் அவர்களை இஸ்லாமியர் சகல வகையிலும் தம்முடன் சமமானவராக நடத்தியதைக் கண்டபோது ஏனையோருக்கும் இஸ்லாத்தைத் தழுவுவதே சரி என்ற எண்ணத்தை உண்டாக்கி இருக்க வேண்டும். எனவே தமிழகத்தில் இஸ்லாம் அதன் அடிநாளிலேயே காலூன்றி, வேரூன்றிற்றெனலாம்.

இஸ்லாம் தோன்றுவதற்கு முந்திய அரபியரும் சரி, இஸ்லாம் வந்தபின் வந்த அரபியரும் சரி, தமிழகத்தில் வந்து வாழ்ந்து வணிகம் புரிந்ததன்றி, உள்நாட்டரசியலில் தலையிட்டதில்லை; கோட்டை கொத்தளங்கள் கட்டி வாழ எண்ணியதில்லை; படைகள் வைத்துக் கொண்டிருக்கவில்லை: அரசர்களிடையே பகைமூட்டிவிடவில்லை; வணிகம், தொழுகை, இல்வாழ்க்கை: ஈந்து வாழ்தல் போன்ற நற்பண்புகளுக்கு இலக்கணமாகவே இருந்தனர். அவர்களின் இந்த உயரிய பண்புகளே, பிரச்சாரமின்றி, இஸ்லாம் அதன் அடிநாளிலேயே இங்கே பரவ உதவின எனலாம். இன்றைய கேரளம் அன்றைய தமிழகத்தின் (சேரநாடு எனும்) ஒரு பாகமாதலின் இந்த நிலை கேரளத்திற்கும் ஏற்றதாக இருந்ததெனல் உண்மையேயாம்.

இஸ்லாம் பரவிய அதன் அடிநாளிலேயே இஸ்லாமிய வணக்கத்திற்குரிய பள்ளிவாசல்கள் இங்கே தோன்றலாயின. இஸ்லாமிய ஞானிகளின் அடக்கத்தலமாகிய தர்காக்களும் தோன்றின. அவற்றில் சில இன்றும்கூட கேரளம் உள்ளிட்ட தமிழகத்தில் திகழக் காணுகின்றோம்.

வரலாற்றாசிரியரான கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே அரபியரின் வருகை தமிழகத்தில் பெரும் அளவில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடுகின்ற அரபியர் அனைவரும் இஸ்லாமியரே. காரணம், எட்டாம் நூற்றாண்டில அரபியரில் முஸ்லிம் அல்லாதாரே இல்லை.

அரபியர் கப்பல் வணிகராதலின், அடி நாளில் அவர்களின் குடியேற்றங்கள் கடற்கரை நகரங்களில் தான் ஏற்பட்டிருக்க வியலும்.

கடற்கரை முஸ்லிம்களை மரக்காயம் என்பர் மக்கள். மரக்கலம் ஊர்ந்து அவர்கள் இங்கு வணிகம் புரியவந்தோர் என்பதனை இச் சொல் சுட்டுகின்றதென்பர். மரக்கல ஆயர் என்பது மருவி மரக்காயர் என ஆயிற்று. மரக்காயர் என்பது மட்டுமின்றி, மாலுமி, தண்டையார், சுக்கானி, என்கின்ற பட்டப் பெயர்களும் கடற்கரை முஸ்லிம்கட்கு உண்டு. இவை அனைத்தும் கப்பல் தொழில் புரிவோருக்குரிய தொழிற் பெயர்களே! உள் நாட்டில் வாழுகின்ற முஸ்லிம்களை ராவுத்தர் என்பர். கேரள முஸ்லிம்களில் 'மாப்பிள்ளை' கள் உண்டு. மரக்காயர், ராவுத்தர், மாப்பிள்ளை என்பன அனைத்தும் தமிழ்ச் சொற்களே. இச்சொற்களைத் தம் பெயருடன் இணைத்துக் கொள்கின்ற பழக்கம்கேரள-தமிழக முஸ்லிம்களிடம் மட்டுமே உண்டு. வடபுல முஸ்லிம்கட்கு இப்பட்ட பெயர்கள் இல்லை.

தமிழகத்திற்கு முஸ்லிம்கள் வருகை, வடபுலத்தினும் ஐந்நூறு ஆண்டுகட்கு முந்தியதெனலாம். ஆம், தமிழகத்திற்கு இஸ்லாமியர் வந்தது, நாடு பிடித்தாளுகின்ற ஆசையாலன்று; வணிகம் புரிந்து வாழவேயாம். இன்னொன்றையும் இங்கே நாம் நினைவில் கொள்வது அவசியம். அதாவது, வடபுலம் போந்து நாடாண்ட முஸ்லிம் அனைவரும் அரபியினமல்லாதாரே! தமிழகம் வந்த முஸ்லிம்களில் அரபியினமல்லாதாரே ஒருவர் கூட இல்லை.

தமிழக முஸ்லிம்களும் வட புல முஸ்லிம்களும் தாங்கள் ஏற்றுள்ள சமயத்தால் ஒன்றுபட்டோரேயாவர். ஆனால் இனம் வேறும். அதாவது, இங்குள்ளோர் அனைவரும் அரபியரும், அவர் தம் வழித்தமிழின முஸ்லிம்களும் இஸ்லாத்தை ஏற்ற அசல் தமிழரும் ஆவர். வடக்கில் வாழுகின்ற முஸ்லிம்கள் பட்டாணிய— மங்கோலிய— துருக்கிய இன முஸ்லிம்களும், இவர் தம் வழி வந்தோரும், மதம் மாறிய வடபுல மக்களுமாவர். இந்த வேற்றுமையை விளக்கிக் கொள்வது வரலாற்றறிவிற்கு மிகவும்

தேவையான ஒன்ருகும். இவற்ருேடு, இஸ்லாம் என்ருல் என்ன? என்பதைச் சுருக்கித் தெரிந்து கொள்வதும் அவசியம். அம்பொழுதுதான் வள்ளல் சீதக்காதியின் வரலாற்றில் பொதிந்துள்ள அற வாழ்வுத் தன்மைகளைத் தெள்ளிதில் உணர வியலும்.

# இஸ்லாம் என்ருல் என்ன?

உலக மக்கள் அனைவரும் ஒன்றே. இவர்கள்தம் உள்ளத்துறைகின்ற இறைவனும் ஒருவனே என உறுதி கொள்வது இஸ்லாமியர்களின் முதலும் முடிவுமான கொள்கை.

இக்கொள்கையை உலகெங்கிலுமுள்ள விவேகிகளும் விஞ்ஞானிகளும் அறிவுக் கண்கொண்டு ஆய்ந்து ஒப்பியுள்ளனர். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதே தமிழ் நிலத்தின் தொன்மையான கொள்கை என்பது யாவரும் அறிந்ததே!

இறைநெறியை மட்டுமின்றி, மனிதர் யாவரும் ஒன்றுபட்டு ஒழுக்கத்துடன் நன்னெறி அனைத்தையும் கடைப்பிடித்து நடக்க வழிகாட்டியாக குருவாக வந்தவர் நபிகள் நாயகம் முகம்மது நபி (சல்) அவர்கள் என்பதையும் இஸ்லாமியர் அனைவரும் ஒரு சிறிதும் மாற்றமின்றி ஏற்று வாழுகின்றனர்.

இறைவனுக்கு உருவமில்லை என்பதும் இஸ்லாமியர்களின் உறுதியான அசைவற்ற கொள்கை. இறைவன் பிறந்தவனும் அல்லன்; யாரையும் பெற்றவனும் அல்லன்; அவனுக்கெனத்தேவையானது எது ஒன்றுமில்லை என்பதும் இஸ்லாமியர் ஏற்றுள்ள நெறி.

இவ்வரிய நெறிகளில் சிறு வழுவும் ஏற்படாமல் தாம் வாழுகின்ற நாட்டு மக்களின் கலை, கலாசாரம், பண்பாடு



"பத்தன்" என்று இப்னு பதூத்தா குறிப்பிடும் கீழக்கரையில் அவர் பார்த்த பள்ளிவாசல் இது. (பழைய குத்பாப் பள்ளி)

நாகரிகம், மொழி ஆகியவற்றுடன் ஒன்றி இணைந்து வாழு வதை இஸ்லாம் தடுக்கவில்லை, வற்புறுத்துகிறது.

ஆண்டவனையும் அறிவையும் ஒவ்வொரு மனிதனும் நம்பவேண்டும். ஆண்டவனை நம்பி அறிவு வழியில் நேர் மையுடன் நடக்க வேண்டும் என்பது நபிகள் நாயகம் அவர்களின் வாக்கு. எனவே, இக் கண்ணோட்டமிட்டுத் தள்ள வேண்டியனவற்றைத் தள்ளி, கொள்ள வேண்டி யனவற்றைக் கொண்டு தமிழக முஸ்லிம்கள் சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் இந்த நாட்டின் கட்டிடக்கலையில் புதுமுறை யைத் தோற்றுவித்து, அக்கலையை மேன்மையுறச் செய் வதில் பங்கு கொண்டுள்ளனர்.

இயற்கைக் காட்சிகளைச் சித்திரந் தீட்டுகின்ற முறை யும் இஸ்லாமியர் வகுத்தவகையே எனலாம்.

இசைத்துறையில் சவுக்ககால முறை மட்டுமென்றி ருந்த போக்கு மாறி, துரித காலச் சஞ்சாரப் பயிற்சிக்கு வித்திட்டதும், அரபி முறை இசை விருந்தை ஊட்டியதும் இஸ்லாம் தந்தவை எனலாம்.

மருத்துவத்தில் கசப்பும் கடும் பத்தியமும் என்றிருந்த தை (சித்த மருத்துவம்) இனிப்பும் எளிய பத்தியமும் ஆக ஆக்கிய, (யூனானி) முறை தோன்றியது இஸ்லாமியம் தந்த இனிய மருத்துவம்.

கணித சோதிடமும், வான்கோள் தெளிவாய்வும் அரபியரின் வருகையில் கிட்டிய பேறெனலாம்.

சுவை பட உணடிகொள் முறையில் தமிழகம் ஏற்றம் கண்டது இஸ்லாம் வந்த பின்னரேயாம். (பிரியாணி- பிரிஞ்சி- புலவு உணவுகள்)

இலக்கியத்தில், படைப்போர் முறையும், நொண்டி நாடகப் பாங்கும், நெடுங்கதை போன்றவையும் தோன் றக் காரணமாயுள்ளதும் இஸ்லாமேயாம்.

தமிழகத்தின் பழைய வள்ளல்தன்மை வற்றி வரண்டு போகா வகை கண்டதிலும் இஸ்லாமியர் பங்கு இளைத்திருக்க வில்லை.

ஆன்மிகத் துறையில் சித்தர் முறை தோன்றியதும் இஸ்லாம் தோன்றிய பின்னரேயாம்.

துவைதத்தை விட அத்வைதம் (கடவுள் இரண்டல்ல என்ற நெறி) மேலோங்கியதும் இஸ்லாமியத் தோற்றம் வந்த பின்னரேயாம்.

சாதி ஒழிப்பில், 'உடையவர்' எனப்படும் ராமானுஜாசாரியார் அவர்களை ஈடுபடத் தூண்டியது சாதி மதமற்ற இஸ்லாமியர்களின் வாழ்க்கை முறையாகும்.

தமிழில் பெருங்காப்பியம் தோன்றும் நிலை அற்றிருந்ததை மாற்றி, பெருங்காப்பியங்கள் மலர வழி காட்டியது இஸ்லாமியர்களின் தமிழ்ப் பணியில் தலையாய பணியாம்.

பழந்தமிழ்ச் சொற்களை இன்றளவும் பேச்சில் துலங்க வைத்து, அச் சொற்கட்கு உயிரூட்டி வருபவர்கள் இஸ்லாமியர்களே எனக் கூறுவது உண்மையேயாம்.

சாதியின்றி, சமத்துவ நெறியில் வாழுவதும், இறைவனை வழிபடுவதும், முயன்றால் யாவருக்கும் இயன்ற ஒன்றே என எண்பித்திருப்பது இஸ்லாமேயாகும்.

ஆக இந்த நாட்டின் கலை, கலாசாரம், பண்பாடு. நாகரிகம், உடல்நலப் பராமரிப்பு, அறிவு வளர்ச்சி, மொழி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி ஆகிய அனைத்திலும் மக்களோடு மக்களாகக் கலந்து அவற்றின் மேம்பாட்டில் தம் பங்கைத் தம் நெறிகட்கு மாறுபடாத்தன்மையில் ஈந்து இணைந்து வாழ்ந்து வந்துள்ளனர், வாழ்ந்தும் வருகின்றனர் தமிழக இஸ்லாமியர். இஸ்லாம் இங்கு வந்த காலை, கேரளமும் தமிழ் மொழி பேசுகின்ற நாடாக இருந்த காரணத்தால் மேலே கூறிய அனைத்திலும் பங்கு பெற்று நிற்பவராகக் கேரள முஸ்லிம்களையும் குறிக்கலாம்.

தமிழக முஸ்லிம்களை 'மரக்காயர்' 'ராவுத்தர்' என்பது போன்றே, கேரள முஸ்லிம்களை 'மரக்காயர்' என்றும்

'மாப்பிள்ளை' என்றுமே சுட்டுவர். இவ்விரு சொற்களும் தமிழ்ச் சொற்களேயாகும். எனவே, தமிழக இஸ்லாமியம் என்பது கேரளத்தையும் உள்ளடக்கியதே எனக் கொள்வது பொருந்தும்.

இத்தகு தன்மை — இயல்பினை உடைய இஸ்லாமியர் தமிழகத்திற்கு வந்தது நாடு பிடித்தாள அன்று என்பதை முன்னரே கண்டுள்ளோம். அதனை விரிவாக, ஆய்ந்து காண்பது பயனுடைய ஒன்றாகும்.

இஸ்லாம் கிறித்துவத்தைப் போன்று திட்டமிட்டு இங்கே பரப்பப்பட்டதன்று என்பதையும் விளக்கத்துடன் காண்பது உண்மையை உணர வகைசெய்கின்ற, மற்றொன்றும்.

இவற்றையும் இவை போன்றவற்றையும் விளக்க விளங்கிக்கொள்ள வரலாற்றுச் சான்றுகள் வேண்டும்.

# தமிழகமும் வரலாறும்

தமிழகத்தைப் பொறுத்தவரை வரலாறு என்பது முழுமையான எழுத்து வடிவமுடையதல்லாத ஒன்றாம். கிடைத்துள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள், அன்னிய நாட்டினர்தம் குறிப்புகள், பயணிகள் பகர்ந்துள்ள செய்திகள், இலக்கியச்சான்றுகள் ஆகியவைதாம் ஆதாரத்திற்குரியனவாம்.

வரலாறு தொகுத்து வைக்கின்ற பழக்கம் முற்காலத் தமிழர்கள் கைக்கொள்ளா நெறி எனத் தெரிகின்றது. இலக்கியங்களைத் துணைக்கொள்ளலாம் எனில் முற்கால இடைக்கால சங்க இலக்கியங்கள் கடற்கோள்களால் அழிவுற்றதாகச் சொல்லப்படுகின்றது. கல்வெட்டு செபபேடுகளைக் காண, கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரை இருண்டகாலமாதலால் அக்காலச் செய்திகளைத் தருகின்ற கல்வெட்டுகள் அதிகம் இல்லை. மற்றும் ஆய்வுகளில் முழுமை

காண இயலாமைக்கு, அன்னியர் கவர்ந்து சென்ற செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், ஆலய இடிபாடுகள் ஆகியவை தடையாக உள்ளன. எனவே இருப்பன வற்றைக்கொண்டும் வெளி நாட்டினர் குறிப்புகளைக் கொண்டுமே ஆய்ந்தறிய முடியும்.

வெளிநாட்டுப் பயணிகளில் இபுனுபதூதாவும் மார்க்கோபோலோவுமே சில பயனுடைய செய்திகளைத் தருவோராவர். இவர்கள் இங்கே வருகைபுரிந்த காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முடிவு அல்லது பதினான் காம் நூற்றாணடின் ஆரம்பம் எனக் காணப்படுகின்றது. இவர்கள் காலத் தமிழகத்தில் இஸ்லாமியர்கள் வாழ்ந் திருந்த நிலைபற்றி இவர்கள் தம் குறிப்புகளில் வெகு வாகக் காண முடிகிறது. இவர்கள் வந்த காலம் கிறிஸ்து தோன்றிப் பதின்மூன்று நூற்றாண்டுகட்குப் பின்னிட்டதாக இருந்தும். இவர்கள் சென்று மீண்ட இலங்கை போன்ற கீழ்த்திசை நாடுகளிலோ, இந்தியா விலோ தமிழகத்திலோ கிறிஸ்துவ சமயமோ, அச்சமய வழி மாந்தரோ, குருமார்களோ ஆல்யங்களோ இருந்ததுபற்றி விரிவான குறிப்பில்லை. மாறாக, இஸ்லாமியர்களையும் அச்சமய அரசர்களையும், ஞானி களையும், கல்விக்கூடங்களையும், பள்ளிவாசல்களையும் கண்டதாகவே குறித்துள்ளனர். எனவே மூத்த சமய மான கிறிஸ்து மார்க்கத்திலும் முந்தி வந்த சமயம் இஸ்லாம் எனத்தெரிகிறது. ஆகவே, மேலைநாட்டினரின் வரவு அரபியரின் வரவைவிடப் பிந்தியதென்பது உறுதியாகின்றது. இபுனுபதூதாவின் குறிப்புகளில் காணப்படுகின்ற பத்தன், காயல், காயல்துறை, ஆத்காடு போன்ற சொற்கள் சரித்திர ஆய்வாளர் களைக் குழப்பிவிட்டிருக்கக் காண்கிறோம்.

மதுரை மாநகருக்கும் இவர்கள் குறிப்பில் காணப் படுகின்ற ஆத்காட்டிற்கும், அறுபதுகல் தொலைவு இடை வெளி எனக் குறித்திருந்தும், முனைவர் கிருஷ்ணசாமி ஐயங்கார் போன்றோர், வடஆற்காடு மாவட்டத்தில்

பாலாற்றங்கரையிலுள்ள நவாபுவின் தலைநகரமான ஆற்காடுதான் இபுனுபதூதா குறிப்பிடுகின்ற ஆத்காடெனக் கணித்துரைத்துள்ளார். பதினைன்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆற்காடு, நவாபின் தலைநகர் தானா? என்பதையும் சிந்திக்க வேண்டும்.

இதேபோன்று, பத்தன் என்பதை, திருநெல்வேலி மாவட்டத்தின்கண் உள்ள காயல்பட்டணமே என்கின்றார் சிலர். காயல்கரை என்பதும், மேலே சொன்ன காயல்பட்டணமே என்று அவர்கள் ஆய்ந்து (!) அறிவித்துள்ளனர். காயல்பட்டணத்திற்கும் மதுரைக்கும் உள்ள இடைவெளித் தொலைவைக் கண்ணுருதது போன்றே, பாலாற்றங்கரை ஆற்காட்டிற்கும், மதுரைக்கும் இடையிலுள்ள தொலைவு ஏறக்குறைய முந்நூறு கல்லாயிற்றே என்றும் இவர்கள் எண்ணிப் பார்த்திருக்கவில்லை. நல்லவேளை, மதுரை என்பதை வடநாட்டில் டில்லிப் பட்டணத்திற்கண்மையில் உள்ள மதுராதான் என்று சொல்லாதுவிட்டவரை தமிழர் மகிழலாம். ஆகவே, இதுபற்றிய ஆய்வை முதலில் கொண்டால் பதின்மூன்றும் அல்லது பதினான்காம் நூற்றாண்டில் தென் தமிழகத்தில், குறிப்பாகப் பாண்டிய நாட்டில்- எந்த எந்த ஊர்களில் இஸ்லாமியர்களின் கலை, கலாசார நாகரிக மேம்பாட்டுவாழ்வினை இவர்கள் கண்டு விண்டனர் எனத் தெளியவியலும். இவற்றின் அடிப்படை ஆய்விற்குத் தமிழகத் துறைமுகங்கள் பற்றி ஆய்ந்து காண்டல் அவசியம். அதிலும், நமது இலக்கியங்களிலும், பயணிகர் தம் எழுத்துக்களிலும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்ற தமிழகத்தின் கடல் பெருந்துறை எனப் பேசப் படுகின்ற கொற்கைத் துறை, எது எனக் கண்டு, அதற்கு மேலும் ஆய்ந்து காணின், இபுனுபதூதா, மார்க்கோபோலோ போன்றோர் குறிக்கின்ற பத்தன், காயல், ஆத்காட் ஆகிய இடங்கள் யாவை என்பன துலங்கும். இவற்றைக் கொண்டும் இலக்கியம் தருகின்ற சில சான்றுகளைக் கொண்டும்

கிடைத்துள்ள கல்வெட்டுகளில் காண்கின்ற செயல்களை யும் படித்துப் பதித்துக் கொண்டால் தமிழகத்தில் இஸ்லாம் முதலில் கால் ஊன்றிய இடம், ஊர் எது எனக் காண இயலும். அதன் பின்னர் இஸ்லாம் எப்படி எந்தத் துணையைக் கொண்டு தமிழகம் முழுவதிலும் பரவிற்று? இதன் ஆரம்பம் யாரால், எப்பொழுது, எவ்வாறு என்பனவற்றைக் கண்டுகொள்ளலாம். இவற்றிற்கிடையே ஒன்றை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். தமிழகத்தில் இஸ்லாம் தோன்றிய விதமும், முறையும் வேறு; வடக்கில் தோன்றிய தன்மை வேறு என்பதை நாம் மறந்து விடலாகாது. ஆக, இப்பொழுது நாம் கொற்கைக் கடல் பெருந்துறை காணப்புறப்படு கின்றோம்.

## எது கொற்கை?

முதற் சங்க காலப் பாண்டியரின் தலைநகரம் தென் மதுரை என்பர். இத் தென் மதுரை குமரியாறு கடலில் கலந்த விடத்தே இருந்த தெனவும் புகல்வர். பெருங் கடல் கோளொன்றில் இந்த நகரமும் இதனைச் சார்ந்த பகுதிகளும் கடலால் விழுங்கப்பட்டு விட்டன எனவும் இயம்புவர்.

இடைச்சங்க காலப் பாண்டியரின் தலைநகரம் கபாடபுரமாகும். கபாடபுரம் தாமிரபரணியாற்றுக்கும் குமரியாறு கடலில் கலந்த இடத்திற்கும் இடைப்பட்ட இடமொன்றில் கடற்கரைப் பட்டினமாகத் திகழ்ந்ததென வரலாறு பகர்கின்றது. இக் கபாடபுரம் அக்காலக் கடல் பெருமுன் துறையாகும்.

இரண்டாவது கடல்கோளில் கபாடபுரமும் அதன் சுற்றுபுறங்களும கடலால் விழுங்கப்பட்டுப் போயின. எனவே பாண்டியர்களின் ஆட்சித் தலைநகராக இன்றைய மதுரை மாநகரை அமைத்தாக்கினர். ஆக, கடைச்சங்க காலப்பாண்டியரின் தலைநகரம் இன்றைய மதுரை மாநகரமாயிற்று.

மதுரை மாநகரைத் தலைநகராக்கி ஆட்சியைத் துவக்கிய முதல் பாண்டியமன்னன் முடத்திருமாறன் ஆவான்(பார்க்க: சதாசிவப்பண்டாரத்தின் பாண்டியர் வரலாறு, பக்கம்-67)

கபாடபுரம் அழிவுற்ற பின்னர் கொற்கைத் துறை முகம் தோன்றுங்காலம வரை பாண்டிய நாட்டில் கடல் பெரும் முன்துறை ஒன்றிருந்ததாகத் தெரியவில்லை. சோழப்பேரரசின் ,தலைநகரான புகார்ப்பட்டினமே தமிழகம் முழுமைக்குமான கடல் பெருந்துறையாக விளங்கிற்றெனத் தெரியவருகின்றது. இதற்காதாரம் நமது இலக்கியங்கள் தாம். புகார்ப் பெருந்துறை பற்றி நமது இலக்கியங்களில் குறிக்கப்படுகின்ற காலத்தே வேறு துறைமுகப் பட்டினம் பற்றி இலக்கியச்சுவடிகளில் சான்றில்லை; புலவர் தம் பாடல்களும் இல்லை.

கடைச் சங்ககால நூல்களுள் ஒன்ருகப் பட்டினப் பாலை பேசப்படுகின்றது. இப்பட்டினப்பாலை புகார்ப் பட்டினம் பற்றிய நூல் ஆகும். இந்நூலில் காணப்படு கின்ற குறிப்பின்படி அக்காலத்தே பாண்டிய நாட்டிலோ சோழ நாட்டிலோ வேறு ஒரு கடல் பெரும் முன்துறை இருந்ததாகத் தெரியவில்லை.

கடைச் சங்க காலத்தின் வேறு ஒரு நூல் பெரும் பாணுற்றுப் படை என்னும் நூல். இந்நூலுள், வடக்கிலி ருந்து நாவாய்களில் குதிரைகள் வந்து இறங்கிய துறை முகம் ஒன்று, புகார்ப்பட்டினத்திற்கு வடக்கில இருந்த தாகக் குறிக்கப்படுகின்றது. அத்துறைமுகம், இன்றைய மகாபலிபுரமாக இருக்கலாம் என்று குறிக்கின்ருர், டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர். ஆனுல் இக்கூற்றை அவர் அறுதியிட்டு உறுதிப்படுத்திக் கூறவில்லை. மேலும் குதிரைகளைத் தவிர்த்து, வேறு பண்டங்கள் வந்து இறங்கியதாகவோ, அத்துறையிலிருந்து ஏதேனும் பண்டங்களை ஏற்றிச் சென்றதாகவோ குறிப்பில்லை. எனவே பெரும்பாணுற்றுப் படையில் குறிக்கப்படுகின்ற துறைமுகம், தமிழகத்தின் மீன் பிடித் துறைமுகங்களிலே

ஒன்ருக இருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு இவற்றைக்கொண்டு நோக்கின், பிற்காலப் பயணிகளான மார்க்கோபோலோ, இபுனுபதூதா போன்ருேர் குறிக்கின்ற மாபார்க் கடல் கரையில், அதாவது, மேற்குக் கடற்கரையிலிருந்து சோழக் கடல் கரைவரை, புகார்ப்பட்டினம் தவிர்த்து வேருேர் கடல் பெரும் முன் துறை இருந்ததாகச் சான்றில்லை.

புகார்ப்பட்டினத்தின் கடல் முன்துறையைப் புகழ்ந்துரைக்கின்ற பட்டினப் பாலையில் அதன் ஆசிரியரானகடியலூர் உருத்திரங்கண்ணனுர்,

''பாண்டிய நாட்டு முத்தும், சேரர் நாட்டின் மிளகும் அகிலும், இமயமலை மணிகளும், கங்கைப் பொருட்களும், காவேரிப்பண்டங்களும், இலங்கையின் விளைச்சல்களும், சீனத்துப்பட்டும், இன்னும் இதரக் கீழ்த் திசை நாட்டின் அரிய பொருட்களும் புகார் நகரில் வந்து குவிந்து விற்பனையாகிக்கொண்டிருந்தன'' என்பார். சிலப்பதிகாரக் காவியம் தந்த இளங்கோ அடிகளும் இதனையே வலியுறுத்தியுள்ளார்.

ஆக, புகார்ப்பட்டினக் கடல் முன் துறை அழிந்து பட்டு, கொற்கைப் பெருந்துறை ஏற்படுங்காலம்வரை, சேர, சோழப் பாண்டியரென்ற மூன்று மன்னரின் கீழிருந்த முழுத் தமிழகத்திற்கும் உள்ள ஒரே கடல் பெருந்துறைப் பட்டினம் புகார்த்துறையேயாகும்.

இப் பூப்புகார்ப்பட்டினம். உறங்காப் பெருநகர் எனப்பேசப்படும். இந்நகரில் 'நாள் அங்காடி'' அல் அங்காடி எனப் பகல் கடைத்தெருவும் இரவுக் கடைத் தெருவுமான இரு பெரும் பிரிவுக் கடைத் தெருக்கள் அமைந்திருந்ததாகச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. கடல்நீர் கண்களில் படாவகையிலே நீண்டநெடுந் தொலைவிற்குக் கடல் மண்டலத்தைக் கப்பல்கள் மறைத்து நிற்கின்ற அரிய காட்சியை நல்கு கின்ற நகரம் புகார்ப்பட்டினம் என்றும் பேசப்படும்.

சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்ற கோவலன்–கண்ணகியின் வாழ்வு முடிவுற்றதின் பின்னர் எழுந்த கடல் கோள் ஒன்றால், மிக அழகிய புகார்த் துறை நகரம் கடலால் விழுங்கப்பட்டு விட்டது. இதன் பின்னர், கடல்பெரும் முன்துறை ஒன்று தமிழகத்திற்குத் தேவைப் பட்டது. இத் தேவையைப் பூர்த்தி செய்ய எழுந்ததே கொற்கைத் துறைமுகம். வரலாற்றை நாம் சரியாக நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, முதற்சங்க காலத்தில் கூறப்படுகின்ற தென்மதுரை உள்ளவரை, அதுவே தமிழகத்தின் கடல் பெரும் முன்துறை.

தென்மதுரைப் பட்டினத்தைக் கடல் உண்ட பிறகு எழுந்த கபாடபுரப்பட்டினம் அழிவுறும்வரை அதுவே தமிழகத்தின் கடல் முன்துறை.

கபாடபுரத்தைக் கடல் விழுங்கிய பின்னர்த் தோன்றியதே பூம்புகார்ப்பட்டினப் பெருந்துறை.

பூம்புகார்ப்பட்டினத்தையும் கடல் விழுங்கி அழித்ததின் பின்பே கொற்கைத்துறை தோன்றிற்று.

கொற்கைத்துறை பூம்புகாருக்குப் பின்பு தோன்றிய தென்பதற்கு ஆதாரமாக உள்ளது பூம்புகார் பற்றிப் பேசப்படுங்காலத்தே வேறு பெருந்துறைமுகப் பட்டினம் பேசப் படாததேயாகும். மற்றும், கண்ணகியின் வாழ்வு அவலமடையக் காரணமாக இருந்த கோவலனைக் கொலைக்குட்படுத்திய பாண்டியன் நெடுஞ்செழியன் மறைவிற்குப் பின்னரே கொற்கைப் பாண்டியனைக் காண்கின்றோம். இந்தக் கொற்கைப் பாண்டியனுடன் இணைந்தே கொற்கை அறிமுகமாகின்றது.

கொற்கைப் பாண்டியனின் இயற்பெயர் வெற்றி வேல் செழியன் என அறிகின்றோம். இவன் நெடுஞ் செழியனுக்குப் பின் அரசுக்கட்டில் ஏறியவன். நெடுஞ் செழியன் ஆட்சிக்காலத்தே இவன் கொற்கையம் பதியில் பட்டத்து இளவரசன் என்ற தகுதியுடன் வாழ்ந்திருத்தல் வேண்டும். ஆளும் திறம் பெறுவதற்

கெனக் கொற்கை மண்டலத்தை அல்லது நாட்டை (அக்காலத்தே மண்டலம் என்பதை நாடு என அழைப்பர் என்பது வரலாறு) இளவரசுத் தகுதியுடன் நிர்வகித்து வந்திருத்தல் வேண்டும்.

கோவலன் கொலைபடக் காரணமாயிருந்த பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்நீத்தவுடன் கொற்கைப்பாண்டியனை வெற்றிவேல் செழியன் பாண்டியநாட்டின் ஆட்சிக்கு வந்துவிடவில்லை. கண்ணகிக்குச் சிலை நாட்டுவதற்காகக் கல்கொணர வட பெருங்கல்லாகிய இமயப்பெருங்குன்றை நோக்கிச் சேரன் செங்குட்டுவன் சென்றிருந்தகாலை மதுரை யம்பதி போந்து இவன் முடிசூடி மகிழ்ந்தனன் என்பது வரலாறு. பாண்டிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் மன்னனாக இவன் அமர்ந்த பின்னர் இவனைப்பற்றிக் காணப்படுகின்ற பெயர் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்பதாம்.

வெற்றிவேல் செழியனும், சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனுமாகிய கொற்கைப் பாண்டியனுக்குப் பின்னர், பாண்டிய நாட்டின் ஆட்சிப் பீடமேறியவன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனாவான்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனைப் புகழ்ந்து 'மதுரைக் காஞ்சி' என்ற ஒரு நூலை, மாங்குடி மருதனார் யாத்தளித்துள்ளார். இந்த மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் செருவென்ற பாண்டியனைக் கொற்கைப் பாண்டியன் எனக் குறித்திருக்கக் காணுகின்றோம் எனவே இவ்விருவரின் பெயருடன் இணைந்தே கொற்கை அறிமுகம் ஆகின்றது. இதிலிருந்து யூகித்தறியத்தக்கது என்னவென்றால், பூம்புகார்த்துறை மறைவதற்கு முன்னரும் கொற்கை இருந்திருக்க முடியும். ஆனால், அது மீன்பிடிததுறை என்பது போன்றோ, அல்லது பாண்டிய நாட்டிற்கான அளவில்மட்டும் உள்ள சிறிய துறைமுகப்பட்டினமாகவோ

இருந்திருக்கக்கூடும் என்பதுதாம். பூம்புகார்த்துறை கடலுள் ஆழ்ந்து பட்ட பின்னர் அத்துறைமுகம்போன்று உலகத் தொடர்புடைய பெருந்துறையாகக் கொற்கைத் துறை ஆயிற்று அல்லது ஆக்கப்பட்டதெனலாம்.

கொற்கைத்துறை அறிமுகம் ஆகின்ற காலத்தைக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டெனக் கொள்ள இயலும். சிலப்பதிகாரக்காலம இதுவே யாதலின், கொற்கைத் துறைக் காலமும் இதுவாகவே அமையும்.

இக் காலத்தே சேரநாடு இன்றுபோல் தனிமொழி படைத்த கேரளநாடாக இருநதிருக்கவில்லை. சேரநாடு என்ற பெயரில் தமிழக முப்மன்னர்களில் ஒரு மன்னனல் ஆளப்பட்ட தமிழ்மொழிநாடாகும். சிலப்பதிகாரக்காலச் சேர மன்னன் சேரன் செங்குட்டுவன் ஆவான். இவன் காலத்தே மேற்குக் கடற்கரையில் இருந்த பெரிய கடல் முன் துறை எது எனத் தெரியவில்லை. அக்காலை மேலைக் கடல் பகுதியில் கடல் பெருந்துறை இருந்திருக்க நியாய மில்லை. காரணம், கீழ்த்திசை நாட்டினருக்குத் தமிழக மேற்குக்கடல் பகுதி நெடுந்தொலைவில் உள்ளதாகும். காற்றடிக்கும் திசையைநோக்கியே அக்கால மரக்கலங் கள் செலுத்தப்பட்டு வந்துள்ளன. மேற்குக் கடற்கரைப் பகுதியின் பருவநிலை வங்கக்கடலின் பருவநிலையிலிருந்து மாறுபட்டதாகும். எனவே கீழ்த்திசை நாட்டிலிருந்து வருகின்ற மரக்கலங்கள் மேற்கடல் பகுதிக்குச் செல்வதா யின, காற்றுவாட்டத்தை எதிர்பார்த்து நாட்கணக்கி லின்றி, மாதக்கணக்கிலும் கூடக் காத்திருக்க வேண்டும் மற்றும் பாரத நாட்டின் வடபகுதி, குறிப்பாக வங்கம் அதையொட்டிய மாநிலங்களின் பண்டங்கள் மேலக்கடல் பகுதிக்குச் சென்று விற்பதென்றல், நாட்களையும் செலவையும் அதிகம் ஏற்க நேரிடும். சோழ பாண்டிய நாட்டுப் பண்டங்களையும் மேற்குக் கடற்கரைக்குக் கொண்டு சென்று விற்பதைவிட தம் பகுதியிலேயே விற்பதுதான் ஆதாயம் உடையதாக அமையும். யவனர்களையொத்த வணிகருக்கும் கூட சீன- ஜாவா

நாட்டுப் பண்டங்களையும் இலங்கைப் பொருட்களையும் கொள்முதல் செய்ய வங்கக்கடல் பகுதிக்கு வருகை புரிவதே பயனுடையதாக ஆகும். இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டே அக்காலத் தமிழக மும்மன்னரும் பூம்புகாரை ஒப்பியுள்ளனர். பூம்புகாரைக் கடல் விழுங்கிய பின்னர் அதையொத்த கடல் பெருந்துறையொன்றை அமைக்க அவர்கள் ஆர்வம் கொண்டிருப்பின் வியப்பில்லை. தென்மதுரையும் கபாடபுரமும் புகார்த்துறையும் கடலினுள் அழுந்தும் நிலைக்கிலக்காகி விட்டதால் அப்பகுதிகளில் மீண்டும் கடல் பெருந்துறையை அமைப்பது அழிவிற்கு வித்திடுவதாகவே அமையும். ஆகவே இவை கடந்த ஓர் இடத்தைத் தேர்ந்தெடுப்பதிலே ஒன்றுபட்டுத் தமிழக முப்பெரும் மன்னரும் ஆர்வம் கொண்டிருக்க முடியும். இதன் விளைவாக இவர்கள் மூவருக்கு மட்டுமின்றி, கீழ்த்திசை நாடுகட்கும் இலங்கைக்கும் ஏற்படும் நன்மையை— வசதியைக் கருதிப் புதிய துறைமுகம் அமைப்பதிலே கவனம் செலுத்துவது இயல்பு. இக்கணிப்பின்படி இவர்கள்கூடி கண்டமைத்ததே கொற்கைத் துறைமுகம் எனலாம். இந்த வசதிகளுடன் இயற்கைத் துறைமுகமாகவும் கொற்கை எனும் இடம் இருந்ததானது இவர்கட்கு இரட்டை மகிழ்வை அளித்திருக்கும். ஆம்! கொற்கை க்ற்கரையினையுடைய அணுவட்டவடிவமுள்ள இயற்கைத்துறைமுகம்.

பூம்புகார் இயற்கைத்துறைமுகமன்று. ஏன், சோழக் கடல கரைப்பரப்பில் எந்த ஒரு இடத்திலும் இயற்கைத் துறைமுகம் அமையவில்லை. காரணம், அக்கடல்கரை கல்கரையாயின்றி, மணல் கரையாக இருப்பதேயாம். பழைய தென்மதுரை இருந்த பகுதியும், கபாடபுரம் இருந்த பகுதியும் கடல் உண்டு அதனல் மேடிட்டுப் போன இடங்களாகும். மேலும் தமிழகத்தை விட்டு ஒதுங்கி, தென்மேற்கு மூலையில் விலகி நிற்கும் பகுதி

யாகும். சோழர்கட்கு மட்டுமின்றி; பாண்டியர்கட்கும் கூட அவர்கள் தம் புதிய தலைநகரிலிருந்து நெடுந் தொலைவில் உள்ளதாகும். வங்கம் போன்ற வடமாநிலங் கட்கு இன்னும் அதிக தொலைவாகும். இவர்களே யன்றி, சீனம், ஜாவா போன்ற கீழ்த்திசை நாட்டி னருக்கும் தென் மதுரை-கபாடபுரம் பகுதி தொலைவில் உள்ளதே. இலங்கையருக்கும் இதேதன்மைதான். மேலும் தென்மதுரை-கபாடபுரப்பகுதி முன்னம் இரு முறை கடல்கோளிற்கு ஆளான இடமாதலின் மீண்டும் அங்கே துறைமுகம் அமைப்பது அபாயத்திற்கிட மானதே எனத் தமிழக மன்னர்கள் கருத இடமுண்டு. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அனைவரின் வசதியையும் முன்னிட்டு, கொற்கைத் துறையைத் தேர்ந்தெடுத்தனர் எனலாம்.

கொற்கைத்துறை பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரைக்கு அண்மையில் அறுபது மைல் (100 கி.மீ.) தொலைவில் உள்ளது. வங்கக்கடலின் தென்முனையில் பாக் ஜலசந்திப்பகுதியில் உள்ளது; சீன, ஜாவாக் சப்பல் கள் பூம்புகார்த்துறைக்குச் செல்வதினும் எளிதாக வரக் கூடிய இடத்திலே உள்ளது. மதுரையிலிருந்து வைகை ஆற்றங்கரை வழியே வந்தால் சுலபமாகக் கொற்கைத்துறைக்கு வந்துவிடலாம். இதனாலேயே மதுரை ஆட்சித் தலைநகருக்கு ஒரு துணை நகராகப் பாண்டிய மன்னர்கள் இந்தக் கொற்கைப் பகுதியைத் தேர்ந்தெடுத்து, பட்டத்து இளவரசரை அங்கே தங்கவைத்து ஆட்சிப் பயிற்சி பெறும் வாய்ப்பையும் ஏற்படுத்தியிருந்தனர் என்பதை, கொற்கைப் பாண்டியர் என்னும் பெயர்கள் மெய்ப்பிக்கின்றன.

இன்னொன்றையும் இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பிற்காலத்திலே ராமேசுவரம் செல்கின்ற யாத் திரிகர்க்கு இன்னல்கள் நேராவகையில் பாதுகாப்பளிக்கும் பொறுப்பை மதுரை நாயக்கப் பேரரசு இராமநாதபுரம்

சேதுபதி அரசப்பரம்பரைக்கு அளித்ததாக வரலாறு செப்புகின்றது. பாண்டியராட்சி நடைபெற்றவரை இப்படியொரு தனிப் பொறுப்பு யாருக்கும் அளித்திருந்ததாக வரலாறில்லை. அப்படி அளிக்காமைக்குக் காரணம் இரண்டு. ஒன்று, கொற்கைப் பாண்டியர்களின் துணைத் தலைநகராகப் பட்டத்திளவரசர்களின் பொறுப்பிலிருந்ததால் அவர்களே அதற்குப் பாதுகாப்பளித்திருப்பர் என்பது. மற்றொன்று, வங்கத்திலிருந்து கடல் மார்க்க வழி கொற்கைக்கிருந்ததால் பாதுகாப்புடன் அவ்வழியாக யாத்திரிகர் ராமேசுவரம் வந்து சென்றிருக்க முடியும் என்பது. மூன்றாவதாகவும் ஒன்றைக் கூறலாம் கொற்கைக்கும் மதுரைக்கும் நேரடித் தொடர்பும் ராஜபாட்டையும் அப்பாட்டை வழியாகப் பெரும் அளவில்போக்குவரத்தும் நடைபெற்று வந்ததால், யாத்திரிகர் மதுரைக்கு வந்து அங்கிருந்து கொற்கைத்துறைக்குச் சென்று ராமேசுவரம் போந்தனர் என்றும் கொள்ள இயலும்.

# பெயர்க் காரணம்

கொறுக்கை என்பது நாணல் புல்லைக் குறிக்கின்ற சொல்லாகும். நாணல்புதர்கள் சூழ்ந்த இடமாக முன்னர் அப்பகுதி திகழ்ந்திருத்தல் வேண்டும். எனவே, கொற்கை என்பது நாணலின் காரணமாக ஊருக்கு ஏற்பட்ட காரணப் பெயர் என்று கொள்க. (கொறுக்கை என்பது, கொற்கை எனப் பேச்சு வழக்காக ஆகி இருக்கலாம்.)

நாணல் காரணமாக எழுந்த ஊராக இன்றும் திகழ்வது திருப்புல்லணை என்கின்ற ஊராகும். அவ்வூரை வடமொழியினர் தர்ப்பசயனம் என்பர். இராமர் இலங்கை செல்ல அணைகட்டிய காலத்தே நாணல் புல்லினைப் படுக்கையாக அமைத்து அதில்படுத்து உறங்கிய இடமே தர்ப்பசயனம் என்கின்ற திருப்புல்லணையாகும். இந்த இடம் இன்று ஓர் ஊராகவே உள்ளது. திருப்புல்லணை என்பது சிறிது மருவுதலாகி திருப்புல்லாணி என ஆகியுள்ளது. இவ்

ஊர் சேதுபதி மன்னர்களின் தலைநகரான ராமநாதபுரத்திற்குத் தென்கீழ்ப்பால் மிக அண்மையில் உள்ளது. இந்தத் திருப்புல்லணையை அடுத்து நான்கு கல் தொலைவிற்குள் உள்ளதே கொற்கை.

ஒரு காலத்தே கொற்கையும் திருப்புல்லணையும் ஒன்றாக இணைந்த ஒரே ஊராக இருந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு. இவ்விரு ஊர்கட்கு அண்மையிலே வாலி நோக்கம் என்ற ஊர் உளது, பழைய சேது அணையும் உளது.

முதன்முதலில் ராமர் இவ்விடத்தே தான் இலங்கைக்குச் செல்ல அணைகட்டினார் என்பர். இத்தகு சிறப்புகளைத் தாங்கித்திகழ்வதே கொற்கைப் பெருந்துறை.

பூம்புகார்ப் பெருந்துறைக்குப் பின்னர்த் தமிழகத்தில் தோன்றிய மிகப்பெரிய கடல் முன்துறை கொற்கை மட்டுமின்றி மிகப் பெரிய கடல் முன்துறை நகரமும் கொற்கையேயாகும். இந்த நகரம் ஒரு காலத்தே ராமேசுவரத்திற்கு அண்மையிலுள்ள மண்டபம் என்னும் ஊரைக் கீழ் எல்லையாகக் கொண்ட மிக நீண்ட பெரிய பட்டினமாக இருந்திருத்தல் வேண்டும் என இபுனுபதூதா போன்ற பயண நூலாசிரியர்களின் குறிப்பிலிருந்து தெரியவருகின்றது.

இங்கே பதின்மூன்றும் நூற்றாண்டுவரையில் பாண்டிய மன்னர்கள் தங்கி ஆட்சி புரிந்து வந்ததாகத் தெரிகின்றது. பாண்டியர்களின் குலதெய்வமான மீனாட்சி-சொக்கேசர் ஆலயம் ஒன்று இன்றும் இங்கே திகழ்கின்றது ஒரு காலத்தே இந்த மீனாட்சி- சொக்கேசர் உள்ள பகுதியை ஒட்டியதாக வைகை ஆறு ஓடிக் கடலில் கலந்திருத்தல் வேண்டும். காரணம், இந்த மீனாட்சி-சொக்கேசர் ஆலயத்தை ஒட்டிக் கீழக்கரை மேலக்கரை என்ற பகுப்புப் பெயர்களைக் கொண்டதாகக் கொற்கை திகழ்ந்துள்ளது. இயற்கையின் சீற்றத்தால் எழுந்த வெள்ளத்தால், வைகை ஆறு சற்றே விலகி, கீழ்பால் சென்றிருக்கக்காண்கின்றோம்.

மேலக்கரை, கீழக்கரை, கேணிக்கரை என்ற மூன்று பிரிவுகளாகப் பிற்காலத்தே ஆகிவிட்ட ஊரே முற்காலக் கொற்கைத் துறையின் மையப்பகுதி என்று தெரிகின்றது.

இந்த ஊருக்குப் பவுத்திரமாணிக்கப்பட்டினம், நினைத்தது முடித்தான் பட்டினம, வச்சிரநாடு, செம்பிநாடு, அனுத்தொகை மங்கலம் என்றெல்லாம் பெயர்களுண்டு,

நாடு என்பதே பிற்காலத்தில் மண்டலமாயிற்றென்பர். மண்டலங்கள் என்பதே மதுரை நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பாளையங்களாக ஆகியுள்ளன.

மதுரை நாயக்கர் ஆட்சிக் காலத்தே அமைக்கப்பட்ட பாளையங்களில், வச்சிரநாடு என்கின்ற செம்பிநாடு சேர்க்கப்பட்டிருக்க வில்லை. எனவே செம்பிநாடு என்பது, அறந்தாங்கிக் கோட்டை, சாக்கோட்டை, கீழநிலக்கோட்டை, தேவகோட்டை, சத்துரு சங்காரக்கோட்டை, சிவகங்கைச் சீமை, ராமநாதபுரம் ஆகிய அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிக் கொண்டதாக இருந்திருத்தல் வேண்டும். இப்படி யூகிக்கக் காரணம், இப்பகுதிகளில் எது ஒன்றிலுமே மதுரை நாயக்கப் பேரரசு பாளையம் அமைந்திருக்க வில்லை. பதினேழாம் நூற்றுண்டு வரை இப்பகுதிகள் அனைத்தும் ராமநாதபுரம் சேதுபதிஅரசபரம்பரையினரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தமை தெரிகின்றது.

ஆக, செம்பிநாடானது ஆதிநாளில் கொற்கையைத் தலைநகராகக் கொண்டு, மதுரைப் பாண்டியப் பேரரசின் கீழ், பட்டத்து இளவரசராக வருவோரின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருந்திருத்தல் வேண்டும். பிற்காலத்தே வைகை ஆறு விலகிச் சென்று விட்டதை போன்றே, பாண்டியரின் ஆட்சியும் செம்பி நாட்டை விட்டு அகன்று விட்டது. அதன் பின்னர் கொற்கை என்கின்ற பெயரும மறைந்து, வைகையம்பதி, வகுதைமாநகர், காயல், தென் காயல் என்றெல்லாம் மாறி இறுதியாகக் கீழக்கரை என்று ஆகியுள்ளது. இது நாம் கூறுவதன்று. இன்றைய கீழக்கரைதான் முன்னளில் கொற்கை எனத் திகழ்ந்த மாபெரும் கடல்துறை என்பது நமது இந்தியப் பேரரசு வெளியிட்டுள்ள (ராமநாதபுரம், திருநெல்வேலி) 'கெஜட்டியர்' (gazeteer) நூல்களில் காணப்படுகின்ற தகவல் ஆகும்.



கீழக்கரையில் சீதக்காதியின் தர்பார் மண்டபம்
(இப்போது சிதிலமடைந்த நிலையிலுள்ளது)

# கெஜெட்டியர் செய்திகள்

H. R. Pate. I. C S. என்னும் அதிகாரி 1917 - ஆம் ஆண்டில் பழைய சென்னை ராஜதானி Madras Presidency யின்) திருநெலவேலி ஜில்லா பற்றிய "The Madras District Gazeteers Tinnevelly என்னும் குறிப்பில், பக்கம் 30 - இல் இப்படி வரைந்துள்ளார்; "ஆக்ஸ்ஃபோர்டுபல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத போதகப் பேராசிரியராக விளங்கிய டாக்டர் வில்ஸன் என்பவர் சென்ற (19-ஆவது) நூற்றுண்டின் முப்பதாம் ஆண்டு வாக்கில் (அதாவது, 1830-1839) கிரேக்கர்கள் தங்களது பழைய நூல்களில் குறிப்பிட்டிருக்கும் கொல் கோய் (KolKhoi) என்னும் ஊரும், தமிழ் நூலாசிரியர்கள் வழங்கும் கொற்கை என்பதும் ஒரே இடம்தான் என்று அடையாளம் கண்டுபிடித்தார். தற்கால ராமநாதபுரம் ஜில்லாவின் ஒரு துறைமுகப்பட்டினமாக இலங்கிவரும் கீழக்கரையே அது. 1837-ஆம் ஆண்டில் வில்லியம் டெய்லர் என்னும் பாதிரியார்(Rev. william Taylor) டாக்டர் வில்ஸனின் முற்கூறிய கூற்றை மொழிவளர்ச்சிக்கலை இலக்கணப்படி வெளியிட்டு, கொற்கை என்று புராணங்களில் குறிப்பிடப்படும் ஊர் நேப்பாளத்தைச் சேர்ந்த கூர்க்காவாக இருக்கக்கூடும் என்று ஒரு யூகத்தைத் துணிச்சலாகச் சொல்லியிருக்கிறுர்."* (கூர்க்கா-கூசரம்-கடல்துறை அன்று என்பதை இவர் அறியார் போலும்!)

---

* Dr. Wilson, Boden Professor Sanskrit at Oxford. had, in the thirties of the last Century identified the Korkai of Tamil writers with the Kolkhoi of the Greeks and concluded that the place to which both sets of writers referred was Kilakkarai, a seaport in the Present Ramnad District. The conjecture was even hazadred, in 1837, by the Rev. William Taylor, who disagreed on philological grounds with Dr. Wilson's conclusion, that the Korkai of

தமிழ்நாடு ராமநாதபுரம் மாவட்டம் பற்றிய Gazetteer of India, அத்தியாயம் V, தொழில் வளங்கள் என்னும் தலைப்பில், 315ஆவது பக்கத்தில் 'பழங்காலத் தொழில்கள்' என்னும் தலைப்பில், இப்படி வரையப்பட்டிருக்கிறது. "ராமநாதபுரம் கடற்கரையிலுள்ள கீழக்கரை முத்துக்கள் விற்கும் ஒரு முக்கியமான விற்பனைக்கூட நிலையமாக விளங்கிற்று," இச்செய்திக்கு ஓர் அடிக்குறிப்பு இப்படிக் காணப்படுகிறது. "டாலமி சுட்டிக்காட்டியுள்ள கொல்கோய் (Kolkhoi) என்பது, லாஸ்ஸன் என்பவர் குறிப்பிடும் ராமநாதபுரத்தைச் சார்ந்த கீழக்கரை என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்கிறார், S. அருணாசலம், 'தமிழகக் கடற்கரைகளில் முத்துக்குளியல் பற்றிய வரலாறு, என்னும் நூல், பக் 15.''ஃ

கொற்கை என்பது இன்றைய கீழக்கரைதான் என்பதை இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள கெசட்டியர் ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் பற்றிய இரண்டு நூற்களுமே வலியுறுத்துவதால் வேறு கொற்கை இருந்ததாகக் கொள்ள நியாயமில்லை.

தனியார் ஆய்வும்ஆராய்ச்சியும் குறையுள்ளதாயிருக்க இயலும். அரசாங்க ஆராய்ச்சி அத்தகையதன்று. காலத்தையும், சிரமத்தையும், செலவுகளையும் பொருட்படுத்தாமல் நடுநிலையோடு ஆய்ந்து வெளியிடுகின்ற பொறுப்பு

---

the puranas might have some connection with the Gurkhas of Nepaul. (The Madras District Gazeteers—Tinnevelly, by H. R. Pat, I, C. S., p. *430*)

ஃ Kilakkarai on the Ramanathapuram Coast was an important emporium for pearls (Kol khai referred to by Ptolemy is identified with Kilakkarai of the Ramanathapuram District by Lesson, S. Arunachalam. The History of the pearl Fishery of the Tamil const, Page *15]* (The Gazetteer of India-Tamil Nadu, Ramanathapuram District. Ch. V. Industries-Old Time Industries. Page *329*)

ஆட்சிக்கு உண்டு. அந்த வகையிலே ஆய்ந்து கண்டு இன்றைய கீழக்கரைதான் பழைய கொற்கை என்று கெசட்டியர் நூல் கூறுகின்றது. ராமநாதபுர மாவட்ட ஆய்வால் கண்ட முடிவல்ல இது. திருநெல்வேலி மாவட்டத்தையும் தமிழக வரலாற்றையும் தமிழகத்துடன் முற்காலத்தே தொடர்பு கொண்டிருந்த வேறறு நாட்டினரின் எழுத்துக்களையுங் கொண்டு கூறப்பட்டுள்ள முடிவென்றே கெசட்டியர் தருகின்ற செய்தியைக் கொள்ள வேண்டும். ஆக மீண்டும் நினைவில் கொள்வோம். இந்திய அரசு வெளியிட்டுள்ள ராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்கள் பற்றிய கெசட்டியர் குறிப்புகளுமே இன்றைய கீழக்கரைதான் கொற்கைப் பெருந்துறை எனக் கூறியிருப்பதோடன்றி, தூத்துக்குடியுடனும் தனுஸ்கோடியுடனும் ரயில் வண்டித் தொடர்பு ஏற்படுங் காலம்வரை தென் தமிழகத்தின் துறைமுகம் கீழக்கரையாகவே திகழ்ந்தது என்றுகூறவும் காண்கிறோம். மற்றும் ஐரோப்பிய வர்த்தகத் தாபனமாகிய கிழக்கு இந்திய வர்த்தகக் கும்பினியார், பெரியதம்பி மரக்காயர்ஆகிய சீதக்காதி மரக்காயருக்கு வரைந்துள்ள கடிதங்கள் தருகின்ற செய்திகளும சான்றுகின்றன. அக்கடிதங்களில் கண்டுள்ள வாசகங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1686 டிசம்பர் 2ம் நாள், அதே மாதம் 9ம் நாள், 1687 ஜனவரி 1ம் நாள், அதே மாதம் 30ம் நாள் ஆகிய நாட்களில் கும்பினிஅதிபர் தலைமையில் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற ஆலோசனைக் குழுவின் கூட்டங்களில் கீழக்கரை பெரியதம்பி மரக்காயர் என்னும் சீதக்காதி மரக்காயர் பற்றிய குறிப்புக்கள் அமைந்துள்ளன.

முதலாவதாக, 1686 டிசம்பர் 2ம் நாள் நடந்த கூட்டத்தில் தூத்துக்குடிக்குப் பக்கத்தில் உள்ள கீழக்கரையிலிருந்து பெரியதம்பி மரக்காயர் கும்பினித் தலைவருக்கு மிளகு விலைக்கு அளிப்பது பற்றி எழுதியிருந்த கடிதம் பரிசீலிக்கப்பட்டுள்ளது,

மேற்படி டிசம்பர் 9ம் நாள் கூட்டத்தில் கீழக்கரையில் உள்ள கப்பல் பழுது பார்க்கும் இடத்திற்கு ஜேம்ஸ் எனும் போர்க்கப்பலைப் பழுது பார்க்க அனுப்பி வைபபது பற்றி யும் சென்னைக் கோட்டைக்குத் தேவையான அரிசியை வாங்குவதற்குப் பெரியதம்பி மரக்காயருக்கு ஆர்டர் அனுப்புவது பற்றியும் முடிவு செய்யப்பட்டதுடன், மிளகு வாங்குவதற்கான விவரமும் பேசி முடிவு செய்யப்பட்டுள்ளது.

*1687* ஜனவரி *13*ம் நாளைய கூட்டத்தில் பெரியதம்பி மரக்காயரிடம் மிளகுவாங்குவது பற்றித் தொடர்புகொள் வதற்கு, காப்டன் வில்லியம் கவ்லி என்பாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மாதம் 30ம் நாள் நடந்த கூட்டத்தில் சேது பதி நாட்டில் கும்பினியார் வணிகம் புரிய அனுமதிவாங்கி வழங்குமாறும், இலங்கையிலுள்ள கண்டி அரசால் சிறை செய்யப்பட்டுள்ள ஆங்கிலேயரை விடுவித்துத் தருமாறும், அதற்குப் பகரமாகச் சுங்க வரியின்றி பெரியதம்பி மரக் காயர் வணிகம் புரிந்து கொள்வதற்கான அனுமதி வழங் குவது பற்றியும் குறிக்கப்பட்டுள்ளன. (Record of Fort St. George and Diary Consultation Book)

ரெகார்டு ஆப் போர்ட் செயின்ட் ஜார்ஜ் டயரிஅண்ட் கன்ஸல்டேசன் புக்கிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. இத் தகவல் மூலம் இன்றைய கீழக்கரையில், அக்கப்பலகளைப் பழுது பார்க்கத்தக்க தொழிற்கூடம் இருந்ததென்பதை அறிகிறோம். இவையின்றி வள்ளல் சீதக்காதியிடம் கும் பினியார் கொண்டிருந்த வணிக உறவும் கோரிய உதவி களின் விவரமும் தெளிவாகின்றன. கீழக்கரையைத் தாண்டிக் கிழக்கிலோ மேற்கிலோ செல்லக்கூடிய கப்பல் கள், தேவையான தண்ணீரை நிரப்பிக் கொள்வது கீழக் கரையில்தான் என்பதையும் கும்பினியார்களின் வேறு சில குறிபபுகளின் மூலம் அறிகின்றோம். கப்பல்கட்குத் தண் ணீர் வழங்கும் கிணறு உள்ள பகுதி கிணற்றுக்கரை என்ற பெயரில் அங்கு இன்றும் இருந்துவரக் காண்கிறோம். மற்

றும், கப்பல் கரையில் வந்து அணையக்கூடிய தன்மையில் ஆன இயற்கைத் துறையாகக் கீழக்கரை இன்றும் இலங்கு வதைக் காண்கிறோம். இந்தவித அமைப்பில் இயற்கைத் துறைமுகம் கொச்சிக்கு இப்பால் கீழக்கரையைத்தவிர்த்து எங்குமே இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இன்னொன்றையும் இங்கே நினைவு படுத்திக்கொள்வது அவசியமாகும். அதாவது, கொச்சித்துறை மேலக்கரையில் இருப்பதினால் கொற்கைத் துறையைக் கீழக்கரை எனக் கூறுகின்ற வழக்கம் தோன்றிற்றென்றும் கொள்ளலா மன்றோ?

ஆம், இபுனுபதூதாவும், மார்க்கோபோலோவும்வந்த காலத்தே அவர்கள் வந்திறங்கி, கண்டுரைத்துள்ள துறை முகம் இந்தக் கீழக்கரைதான். அவர்கள்தம் கூற்றில் காணப்படுகின்ற பத்தன், ஆத்கட் என்பதெல்லாம் இன் றைய கீழக்கரைக்கு அருகில் உள்ள ஊர்களேயாம். இபுனு பதூதா தமது பயணநூலை அவருடைய தாய்மொழியான அரபி மொழியிலேயே எழுதியுள்ளார்அரபி எழுத்துக்களில்

என்றே எழுதியுள்ளார். குறியீடுகளற்ற

அரபி எழுதது வாசகத்தை ஆங்கிலப்படுத்தி 'கிப்' (Gibb) என்பான் KAYL KARI என்று ஆக்கியுள்ளான். குறியீடற்ற அரபி மொழியில் உள்ளது கீல்கரை என்பதாம். இது கீழக் கரையைத்தான் குறிக்கின்றது என்பதை நிச்சயிப்பது இவ் வூரிலிருந்து மதுரை (இருபது பர்லாங்) அறுபது மைல் களில் இருக்கின்றது என்று குறித்துள்ள விவரமாகும்.

பத்தன் என்பது பட்டணம் என்பதின் குறுக்கமாகும். அரபியில் 'ட' என்று உச்சரிப்பதற்கான எழுத்தின்மை யால்,பட்டன் என்பதை, 'பத்தன்' என்றாக்கியுள்ளார் இபுனுபதூதா. ஆங்கிலத்தில் 'த' இல்லாமையினால் தூத்துக்குடியை டூட்டுக்கொரின் என்றாக்கினாற் போன்று, அரபியில் 'ட' வுக்குப் பதில் 'த' வந்துளது காண்க. கீழக்கரைக்கு, நினைத்தது முடித்தான் பட்டினம், பவுத்திர மாணிக்கப் பட்டினம் என்றெல்லாம் பெயர் உண்டாத லின், கடைசியில் பட்டினம் என்ற சொல்லைப் பட்டணம்

என்று கொண்டு பத்தன் ஆக்கினர் எனவும் கண்டு தெளிக. 'ஆத்கட்' என்பது ஆத்துக்காடு என்பதின் திரிபாம். கீழக் கரைக்கு அண்மையில் ஆபத்துக்காடு என்ற ஊர் 3மைல் தொலேவில் உளது. இந்த ஆத்துக்காடுதான் ஆர்காட்டாக் கப்பட்டுள்ள தென்பதை அறியாதாரே வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆற்காட்டு நவாப்பின் தலைநகரான ஆற்காடு என்கின்ற நகரினையே இபுனுபதூதாவும் மார்க் கோபோலோவும் தம்தம் நூற்களில் குறித்துள்ளனர் எனக் கொண்டுள்ளனர்.

தமிழ் நாட்டின் தென்பகுதியில், இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரத்திற்குத் தென்கீழ்பால் 12 மைல் தொலைவில் 9-10-80-78-50-10 எனும் அச்சரேகை யில் கொற்கை எனும் கீழக்கரை அமைந்துள்ளது. இதுஒரு பழமையான இயற்கைத் துறைமுகம். வரலாற்று சிறப்பு மிக்கது. பாம்பனுக்கு அண்மையில் மன்னார் வளைகுடாப் பகுதியில் உள்ளது.

கி. பி. 1311ல் வடநாட்டிலிருந்து தென்னகத்தின் மீது படை நடத்தி வந்த மாலிக்காபூர் அரபு நாட்டினர் பலர் இப்பகுதியில் குடியேறி வாழ்ந்து வருவதைத் தான் கண்ட தாகக் கூறியுள்ளான் என இராமநாதபுரம் கெஜட்டியர் கூறுகின்றது.

திரு. லேசன் என்பார் எழுதியுள்ள Indlsehe Alter Thoms Kunde Vohchvishan Lassen நூலில் கீழக்கரைதான் கொற்கை எனக் குறித்துள்ளதோடு, விளக்க வரைபடமும் இடம் பெறச் செய்துள்ளார்.

1886ல் லண்டன் மாநகரிலிருந்து ஆங்கிலேயர் வெளி யிட்டுள்ள இம்பீரியல் கெஜட்டீயர் ஆப் இந்தியா (இரண் டாம் பதிப்பு) தொகுதி 8, பக்கம் 216ல் கீழக்கரை பற்றிய குறிப்புளது. அச்சரேகைகளுடன் கீழக்கரையின் அமைப் பைத் தெளிவாகக் காட்டி, இதுவே தாலமி கூறுகின்ற கொற்கை எனவும் விளக்கி அறிவிக்கப்பட்டுள்ளது.மேலும் இந்த (கொற்கை) நகர் சேர, சோழ, பாண்டிய மன்னர் களின் ஏகோபித்த விருப்பின்படி அமைந்த நகர் என்ற

செய்தியையும் தருகின்றது அந்த இம்பீரியல் கெஜட்டீயர். இவற்றை நமது அரசாங்கம் வெளியிட்டுள்ள இராமநாத புரம் கெஜட்டீயரில் காணலாம்.




கீழக்கரை—வரை படம்

கொற்கை என்ற பெயரில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கிராமம் உள்ளது போன்றே தஞ்சை மாவட்டத்திலும் மூன்று கிராமங்கள் உள்ளன. இதர மாவட்டங்களிலும் இருக்கலாம். ஆனால் மூவேந்தர்களும் ஒப்பிய கடல் பெரும் முன்துறையாகிய கொற்கை எது என்ற கேள்விக்கு ஆய்வாளர்கள் கண்டுரைத்துள்ளது இன்றைய கீழக்கரை தான் கொற்கைப்பெருங்கடல் முன்துறை என்பதாம் என அறிக!

வரலாற்றாசிரியர் என்போர் பொறுப்பு மிக்கோர் ஆவர். அவர்கள் தம் அரைகுறைக் கூற்றுக்கள் வரலாற்றினைக் குளறுபடியாக்கிவிடும் என்பதனை அவர்கள் உணர வேண்டும். இபுனுபதூதா தாம் கப்பலினின்றும் கரை சேர்ந்த ஊருக்கும், மதுரை மாநகருக்கும் இடையுள்ள தொலைவு அறுபது மைல் என்கிறார். மதுரைக்கு அறுபது மைல் தொலைவில் உள்ள ஆர்கட், பத்தன், கீல்கரை அல்லது காயல்கரை எதுவாக இருக்க முடியும் என ஆய்ந்து தேர்ந்து தெளிந்து உரைத்தல் வேண்டும். வேலூர் ஆற்காட்டிற்கும் மதுரையம்பதிக்கும் இடைப்பட்ட தூரம் அறுபது மைல்கள் தானா? கிட்டத்தட்ட முந்நூறு மைல்கட்கு அப்பால் உள்ள ஊரையா அறுபது மைல்கள் எனக் குறிப்பார்கள்? மேலும், வேலூர் ஆற்காடு துறைமுகப் பட்டினமா? காயல்கரை என்று தமிழகத்தில் ஊர் உண்டுமா? இவைபற்றியெல்லாம் நமது நாட்டில் தோன்றிய வரலாற்று ஆசிரியர்கள் கவலைப்பட்டிருப்பதாகவே தெரியவில்லை. 'நினைத்தோம், எழுதினோம்!' என்று கதை எழுதுவது போன்று எழுதி வைத்துள்ளனர். இதன் விளைவாக வரலாறே குழம்பிக்கிடக்கின்றது.

தமிழகத்தில் எந்தக் கடற்கரையிலும் 'காயல்' என்றோ 'காயல்துறை' என்றோ ஒரு துறைமுகம் எந்த நாளிலும் இருந்ததேயில்லை. கொச்சித்துறைக்கு இப்பால் உள்ள ஒரே துறைமுகம் கொற்கை தான். கொச்சி மேலக்கரையாதலின், கொற்கை கீழக்கரையாதல் இயல்பே. அவ்வியல் பின்படியே கொற்கை கீழக்கரையாயிற்று. கீழக்கரையை

அரபியில் கீல்கரை என்று இபுனுபதூதா குறித்துள்ளார். அதனை ஆங்கிலமாக்கியோன் காயல்கரையாக்கி விட்டான். காயல்கரை என ஓர் ஊரே இல்லாதபோது இபுனுபதூதா கூறியிருப்பது கீழக்கரையைத்தான் எனக்கண்டுகொள்வது எளிதானதே! மேலும் நினைத்தது முடித்தான்பட்டினம், பவுத்திரமாணிக்கப் பட்டினம் என்றெல்லாம் கீழக்கரைக்குப் பெயர்கள் உண்டு மாதலின் பத்தன் என்பதும் கீழக்கரை தான் எனக் கண்டுகொள்ள இயலும். ஆத்துக்காடு என்றோர் ஊர் கீழக்கரையின் அருகிலேயே உள்ளதாகையினால், ஆர்கட்டு (Ahar Katu) என்றிருப்பதும் ஆத்துக்காடு என்ற ஊர் தான் எனவும் காண முடியும். மட்டுமின்றி, பாண்டியர்களின் தலைநகரான மதுரைக்கும் கீல்கரைக்கும் அறுபது மைல்கள் என்றிருப்பதால், நிச்சயமாக அது ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழக்கரையைத்தான் குறிக்கின்றதெனக்கொள்ள எளிதில் இயலும். ஏனெனில் கீழ்கரைக்கும் மதுரைக்கும் இடையிலுள்ள தொலைவு அறுபது மைல்களே! ஆக, எந்தவித ஆதாரமுமின்றி, நினைத்தோம் எழுதினோம் என்ற தன்மையில் எழுத்துப் பணி புரிந்துள்ள வரலாற்றாசிரியர்களின் தவறுகளினால், பின்போந்தோர், காயல்துறை என்றும், காயல்கரைத்துறை என்றும் பழங்காலத்தில் துறைமுகப்பட்டினங்கள் இருந்தன என்று தம் போக்கில் கற்பனை செய்துள்ளனர். இவ்வகைக் கூற்றனைத்தும் தவறுபட்டனவே! மீண்டும் நினைவில் கொள்வோம்; போர்ச்சுகீஸிய, டச்சு, பிரஞ்சு, ஆங்கில வெள்ளையர் வருகைக்கு முன்புவரை கொச்சித்துறைக்குக் கீழ்பால் உள்ள ஒரு இயற்கைக் கடல் பெருந்துறை கீழக்கரையேதான். அக்காலை கொச்சிக்கும் கீழக்கரைக்கும் இடையில் ஏதேனும் கடல்துறை இருந்திருக்குமாயின் அது வெறும் மீன்பிடித் துறையாகவே இருந்திருக்க முடியும். கொற்கை என்பது கீழக்கரை தான். இதில் ஐயத்திற்கு இடமேயில்லை. இந்தக் கீழக்கரையில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை பாண்டியர் அல்லது அவர் தம் வழித்தோன்றல்கள் தங்கி ஆட்சி புரிந்துள்ளனர் என்பது வரலாறாகும்.

வெள்ளையர் வந்த பின்னரும், ரயில்வழிப்பாதை ஏற்பட்டு அப்பாதை தூத்துக்குடியுடனும் தனுஸ்கோடியுடனும் தொடர்பு கொள்ளும்வரையிலும் தென்கடலில்உள்ள ஒரே இயற்கைத் துறைமுகம் கீழக்கரைதான் என்பதிலும் ஐயமில்லை. கெஜட்டியர் நூல்களும் இதனை வலியுறுத்தும். கீழக்கரையைத் தாண்டி கிழக்கிலும் மேற்கிலும் செல்கின்ற கப்பல்கள் பழுது பார்ப்பதற்கென்றாலும் தண்ணீருக்கென்றாலும் கீழக்கரை பெருந்துறை வந்தடைவதைத் தவிர்த்து வேறு வழியில்லை என்பதிலும் மாற்றம் கூற வழியே இல்லை. இந்தக் கீழக்கரை கடைச்சங்க காலத் துறைமுகம் (கொற்கை) ஆதலின் யவனராகிய அரபியர்கள் ஆதியிலும், அதே அரபியர்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் ஆகிவிட்டதினால் முஸ்லிம்களும் இந்தியாவில்-குறிப்பாக தமிழகத்தில் முதன்முதலில் வந்து தங்கி நிலைத்துவிட்ட இடம் கீழக்கரை எனக்கூறுவது வரலாற்றின்படி பொருந்தக் கூடியதே! இங்கிருந்தே நெல்லூர்வரை நீண்டுள்ள தமிழகக் கடற்கரை ஊர்களெல்லாம் மரக்காயர் என்கின்ற முஸ்லிம்கள் சென்று குடியேறி நிலைபெற்றிருக்கலாம். இது கி. பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டிலேயே நிகழ்ந்திருக்கக்கூடும்!

# தமிழகத்தில் முஸ்லிம் வருகை

கீழக்கரையில்தான் முதன்முதலில் அரேபியாவிலிருந்து முஸ்லிம்கள் வந்து தங்கினர். பின்னர் அவர்கள் அங்கேயே நிலையாகத் தங்கலாயினர். அதன்பின்பு பல ஊர்களில் பிரிந்து பரந்து சென்று வாழ்ந்தனர் எனக் கொள்வதே சரியான கணிப்பாகும். ஆனால் இதைச் சிலர் ஒப்ப மறுக்கலாம். மறுப்பவர்கள் ஆதாரத்துடன் கூடிய வேறு தகவல்களைத் தருவது பயனுடையதாக அமையும். வரலாற்றாய்வாளர்கள் மற்றவர் தருகின்ற கருத்துக்களை ஏற்று, தம் அறிவில் தேக்கிச் சிந்தித்து முடிவு காண வேண்டும். தவிர, கோபதாபங்கட்கு ஆளாகுதல் தீது. தீது என்பது

தனக்கு மட்டுமன்று, வரலாற்றுக்கு மட்டுமன்று, நாட்டிற்கும் தான். எனவே இதை மனத்தில் கொண்டு தமிழகத்திற்கு முஸ்லிம்களின் வருகை பற்றி ஆய்வோம்.

சங்க இலக்கியங்களில் 'யவனர்' என்ற சொல் ஒன்றினைக் காண்கின்றோம். இச்சொல் கிரேக்கரைக் குறிப்பதாக ஒரு சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் பெரும்பாலானோர் யவனர் என்பது அரபியர்களையே குறிக்கும் என்று குறித்துள்ளனர்.

யவனர்களை கிரேக்கர் எனக் கூறுவது பொருந்தாக் கூற்றேயாகும். காரணம் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரை மேலை நாட்டினருக்கு இந்தியா வருவதற்கான கடல் வழி தெரிந்திருக்கவில்லை. இந்தியாவிற்குக் கடல் வழித் தடம் காணப்புறப்பட்ட கொலம்பஸ், வழி தெரியாத் தன்மையால் அமெரிக்கா சென்று சேர்ந்தான் என்பதை நாம் அறிவோம். பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுகல்காரன் பல மாதங்கள் கடல்களில் அலைந்து திரிந்தபின் கிழக்கு ஆபிரிகாவை அடைந்தான் என்றும் அங்குள்ள கடல்வழி தெரிந்த முஸ்லிம் ஒருவனின் துணை கொண்டு கொச்சித் துறையை வந்தடைந்தான் என்றும் வரலாறு கூறுகின்றது. வாஸ்கோடகாமா வழி கண்டு உரைக்கும் வரை ரோமரும் கிரேக்கரும் இந்தியாவுடன் தொடர்பு கொண்டது ஆப்கானிஸ்தான் கைபர் கணவாய் வழியாகத்தான் என்பதை ('தி ஹண்ட்ரட்ஸ்') **நூற்றுவர்** என்னும் ஆங்கில நூலாசிரியரான மைக்கேல் H ஹார்ட் என்ற அமெரிக்க எழுத்தாளர் குறித்திருக்கக் காண்கிறோம். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர், இந்தியாவின் மீது படை நடத்திப் போர் புரிய வந்த மகா அலக்சாண்டர் என்னும் மாமன்னன் சிந்துவரை வந்ததும் கைபர்கணவாய் வழியாகத் தான் என்பது வரலாறு. சிந்து வரை வந்து திரும்புவதே ரோமருக்கும், கிரேக்கருக்கும் கடினமாயிருந்திருக்குமாதலின் அவர்களில் யாரும் தமிழகம் வந்திருக்க நியாயமில்லை. அப்படியே வந்திருந்தாலும், அது கைபர் கணவாய் வழி

யாக வந்து போனதாக இருக்க இயலுமே தவிர கடல்வழி உறவாக அமைந்ததெனக் கொள்ள இயலாது. ஆகவே அப்படி யாரோ சில வணிகர் எப்பொழுதோ வந்து போனதை வைத்து இலக்கியங்களில் பெருமளவில் சுட்டக் காரணமிருக்காது. ஆகவே, யவனம் என்ற சொல்லினை கிரேக்கரைக் குறிக்கின்ற சொல்லாகக் கருத இடமில்லை. மற்றும் நமது நாட்டுப் புராண இலக்கியக் கதைகளில் ஐம்பத்தாறு தேசங்கள் பேசப்படுகின்றன. இந்த ஐம்பத்தாறு தேசங்களில் யவனம் மிசுரம் ஆகிய நாடுகளும் சேர்த்து எண்ணப் பட்டுள்ளன. மிசுரம் என்பது எகிப்து நாட்டைக் குறிக்கும். இதனால்தான் சரியான கண்ணோட்டம் உடைய வரலாற்று ,ஆசிரியர்களும், சொல் ஆய்வாளர்களும் யவனர் என்பது, அரபியரைக் குறிக்கின்ற சொல்லாகும் எனக் கொண்டுரைத்துள்ளனர். இதுவே சரியான கணிப்பாகும், ஆம். ஐம்பத்தாறு தேசம் என்பது ஒருமனப்பட்ட நேசக் கூட்டுறவு நாடாகும் இந்தக் கூட்டுறவில், எவ்வகையிலும் பாரதத்துடன் தொடர்பில்லாத கிரேக்கமும் ரோமாபுரியும் இணைந்திருக்க முடியாது. பாரதம் பாதிப்புக்குள்ளானால் அது தங்கள் நாட்டின் நலத்தையும் பாதிக்குமே என்ற தன்மையுடைய நாடுகள் தாம் (இன்று போல் போக்குவரத்து வசதி அதிகம் இல்லா அந்த நாளில்) தொகுப்பு நாடுகள் என்ற பட்டியலில் இடம் பெற்றிருக்க இயலும். இந்த அடிப்படையில் தான் ஐம்பத்தாறு நாடுகள் என்ற பட்டியலில் சீனு, சுமத்திரா, காம்போசம் போன்ற நாடுகளெல்லாம் இடம் பெற்றுத் திகழ காண்கின்றோம். ஆகவே, யவனம் என்பது அரபியர்களைக் குறிக்கின்ற சொல்லாதல் வேண்டும். இதனால் தான் திருவாளர் அ கி. பரந்தாமனார் எம் ஏ. அவர்கள் யவனர்களை அரபியர் எனக் குறிக்கின்றார். இவர் தமிழில் வரலாற்றிலக்கியம் படைக்கின்ற பெரும் ஆய்வாளர் என்பதைத் தமிழுலகம் நன்கறியும். இவர் எழுதியுள்ள மதுரை நாயக்கர் வரலாறு என்னும் நூலின் 469 ஆம் பக்கத்தில் யவனர்களை அரபியர் எனக் குறித்துள்ளமை காண்க.

"பெரும் பாணாற்றுப் படையில் வரும் யவனர் என்ற சொல்லிற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதும் பொழுது சோனகர் என்று குறிப்பிடுகிறார்.

அடியார்க்கு நல்லார் தாம் எழுதிய சிலப்பதிகார உரையில், யவனர் என்ற சொல்லுக்குத் துருக்கர் என்று பொருள் விரிக்கிறார்.

திவாகர நிகண்டில் சோனகர் என்போர், யவனர் என்றும், சூளாமணி நிகண்டில் யவனர் என்போர் சோனகர் என்றும் விளக்கம் பகரப்பட்டுள்ளன.

தமிழ் லெக்ஸிகனில் யவனம் என்றால் ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்று என்றும் கிரீஸ்,அரேபியா போன்ற மேலை நாடுகளில் ஒன்றாகும் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

—இஸ்லாமியக் கலைக் களஞ்சியம், பாகம்-3
பக்கம்- 788-89.

இவர்கள் தம் கூற்றுகள் அனைத்தும் (கிரீஸ் நீங்கலாக) முற்றும் சரியே! அதாவது யவனர்களைப் பிற்கால இலக்கியங்கள் சோனகர் என்றே குறிப்பிடுகின்றன. சோனகர் என்பது முஸ்லிம்களைச் சுட்டுகின்ற சொல்லாக இன்றும் நமது தமிழகத்திலும் இலங்கையிலும் வழக்கிலிருக்கக் காண்கிறோம். அதிலும் கடலோரப் பகுதியில் வாழுகின்ற முஸ்லிம்களைக் குறிக்கின்ற சொல்லாகவே சோனகர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதிலிருந்து ஆதி நாளில் இங்கே வருகை புரிந்த அரபியர்களை யவனர் என்றும் அவர்களே இஸ்லாமியர்களாக மாறி முஸ்லிம்களாக இங்கே வருகை புரிந்தபோது அவர்களைச் 'சோனகர்' என்றும், தமிழக மக்கள் பாகுபாடு காட்டி அழைத்தனர் எனக் கொள்ள முடியும். ஆம், அரபி நாட்டில் நபிகள் நாயகம் அவர்கள் தோன்றி அங்கே இஸ்லாம் மார்க்கத்தைப் பரப்பிய கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகம் போந்த அரபியர்களில் முஸ்லிம்களும் அல்லாதாரும் இருந்

திருக்க இயலுமன்றோ? எனவே, முஸ்லிம் அல்லாத அரபியர்களை முன்னர் சுட்டியது போன்றே யவனர் என்றும், இனத்தால் அரபியராகவும் சமய அடிப்படையில் முஸ்லிமாகவும் உள்ளோரைப் பிரித்துரைக்க, சோனகர் என்றும் அழைத்தனர் எனக் கொள்வதே சரியாகும்! பின்னாளில் அரபியர் அனைவரும் முஸ்லிம்களாக ஆகிவிட்டதால் யவனர் என்ற சொல் வழக்கற்றும், சோனகர் என்ற சொல் அரபு நாட்டு முஸ்லிம்களைச் சுட்டும் ஒரே சொல்லாக அமைந்தும் விட்டதாகக் கொள்வதே பொருந்தும்.

இதே போன்றே எகிப்தியரைக் குறிக்கப் பயன்பட்ட மிசுா நாட்டினர் என்பது, எகிப்து முஸ்லிம் நாடான நாளிலிருந்து நீக்கப்பட்டுப போயிற்றென்பதோடு அவர்களையும் தமிழ் நாட்டினர் சோனகராகக் கொண்டுரைக்கலாயினர் என்று கொள்க.

அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் யவனர்களைத் துருக்கர் என்று குறித்தாலும் அதுவும் வெளிநாட்டு முஸ்லிம்களைக் குறிக்கின்ற சொல்லேயாம். இவை தவிர யவனர்களை கிரீஸ் நாட்டினர் என்பது எவ்வகையிலும் பொருந்தாது. கிரேக்கத்தை யொட்டிய ஐரோப்பியர்களைத் தமிழக மக்கள் பரங்கியர் என்றே அழைத்துள்ளனர். சங்க காலத்தில் இவர்கள் வருகை நேர்ந்திருந்தால் கூட அவர்களைத் தமிழக மக்கள்பரங்கியர் என்று சுட்டத் தவறியிருக்க மாட்டார்கள். காரணம், ஐரோப்பாக் கண்டத்தினரின் உடலம் மேற் பார்வையில் பரங்கி நோய்க்காரரின் உடம்பு போன்று தோன்றுவதேயாம்.

எது எவ்வாறுயினும் யவனர் என்பது அரபியர்களைக் குறிக்கினற சங்க காலச் சொல் என்பதில் ஐயமில்லை. இதனை உவனர் என்றும் குறிப்பர். உவனர் என்பது, 'ய' மொழி முன் வராதாதலின் உவனர் ஆயிற்றென்க. அரபியர்-தமிழர் உறவு தலைச்சங்ககாலத்திலிருந்தே வணிகவகை வகையில் தொன்மையான தென்பதை எந்த வரலாற்றுசிரியரும் மறுத்தாரில்லை. ஐரோப்பாக் கண்டத்தினர்

உறவு தமிழகத்திற்கேற்பட்டது. கி.பி. பதினாறும் நூற்றாண்டிற்கு முந்தியது எனக் கூறுவதற்கு ஆதாரமில்லை.

"கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையே நடந்த வணிகத்தின் ஆதிக்கம் அரபியர்கள் கையிலே இருந்தது.

—அகதர்சிடாஸ், [காலம் கி. மு. 113]

இந்த அகதர்சிடாஸ் தரும் தகவலை மெய்ப்பிப்பதாகவே உளது தற்போது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிற அமெரிக்க எழுத்தாளர் திரு.மைக்கேல் ஹெர்ஹார்ட் என்பவர்தம் எழுத்தும். இவர் கூறுகிறார் ஐரோப்பாநாட்டினர் பதினாறும் நூற்றாண்டு வரை இந்தியாவிற்கு வரக் கடல் வழி அறியாதிருந்தனர் என்பதாக. காண்க இவர் எழுதிய The 100 என்னும் ஆங்கில நூல் பக்கம் 435-442.

இவ்விருவர் தந்துள்ள தகவலைக் கொண்டு நோக்கின் சங்ககால இலக்கியங்களில் கூறப்படுகின்ற யவனர் என்ற சொல் நிச்சயமாக அரபியர்களையின்றி கிரீஸ் போன்ற ஐரோப்பியர்களைக் குறிப்பதன்று என அறுதியிட்டுக் கூறலாம். மிளகிற்கு யவனப்பிரியம் என்றோர் பெயர் உண்டு. யவனராகிய அரபிவணிகர் மிளகை உவந்து கொள்முதல் செய்தார் ஆதலின், இப்பெயர் வந்ததென்க. கடைச்சங்க காலத்தை அண்மித்த கால நூலாகக் கூறப்படுவது சிலப்பதிகாரம். இந்த நூல், புகார் நகரத்தின் கடற்கரையோர வீதி முற்றும் வானுயர்ந்த மாளிகைகளைக் கொண்ட யவனர்கள் மட்டுமே உறைகின்ற வீதியாகும் எனக்கூறுகின்றது. மட்டுமின்றி, இந்த யவனர்களால் தமிழ்நிலம் அடைகின்ற பயன் இடையறா நிலையில் இயங்குவதாகும் எனவும் குறித்திருக்கக் காண்கிறோம். பயன் என்பது வணிகவழி ஆதாயத்தையே குறிப்பதெனலாம். இதனை—

"...யவாய் மருங்கில் காண்போர் தடுக்கும்
பயனறவறியா யவன ரிருக்கை..."

சிலப்பதிகாரம், இந்திரவிழா ஊர் எடுத்த காதை, வரி- 9,10. என்ற வரிகள் மெய்ப்பிக்கும். மற்றும் கடைச் சங்க நூற்களான பட்டினப்பாலை, பெருமபாணுற்றுப் படை போன்ற வேறு பல நூல்களிலும் யவனர் என்ற சொல்லினைக் காணலாம்.

சிலப்பதிகாரக் காலத்தே யவனர் என்கின்ற அரபியர் கள் புகார் நகரின்கண் வந்து, கயவாய் மருங்கு ஆகிய கடற்கரை வீதியில் காண்போரின் பார்வை கட்டிடங் களைத் தாண்டி அப்பால் செல்லவொண்ணு உயரமும் அழ கும் உடையவைகளாக அமைத்து, அவற்றிலே தங்கி வாழ்ந்து புகார் நகருக்கு விற்பனைக்கு வருகின்ற சேர, சோழ, பாண்டிய நாட்டுப் பண்டங்களையும், வடபுலப் பொருள்களையும், சீனத்துப் பட்டு, ஜாவா, சுமத்திரா போன்ற கீழ்த்திசை நாடுகளின் சரக்குகளையும் இலங்கை யின் இயற்கை வளம் தருகின்ற இனிய கனிப் பொருள், கணிமப்பொருள்களையும் கொள்முதல் செய்து தம் தேயம் கொண்டேகி, அவற்றை கிரீஸ், ரோமாபுரி போன்ற ஐரோப்பிய வணிகரிடம் சிரியா நகரில் வைத்து விற்று நல்ல ஆதாயம் ஈட்டி வாழ்ந்து வந்தனர் என்பது வரலாறு.

யவனர் என்னும் இவ்வரபியர், புகார் நகரக் கடல் பெருந்துறை அழிந்துபட்டதின் பின்னர், புதிதாகத் தோன்றிய கொற்கைத் துறையைத் தமது வணிகக் கேந்தி ரமாகக் கொண்டனர். கி.பி ஏழாம் நூற்ருண்டில் அரபி யர் அனைவரும் நபிகள் நாயகம் அவர்களால் முஸ்லிம்க ளாக ஆக்கப்பட்டு விட்டதால் கொற்கையிலும் கொச்சி யிலும் வணிகம் புரிந்த அரபியரை முன்போலன்றி, புதிய சமயம் சார்ந்தவர்களாக அங்குள்ள மக்கள் கண்டனர். எனவே யவனர் எனச் சுட்டுவதை விடுத்து, சோனகர் என அழைக்கத் தலைப்பட்டனர் எனலாம். ஏழாம் நூற்ருண் டிற்குப் பின்னர் தோன்றியுள்ள இலக்கியங்களில் யவனர் என்பதற்குப் பதிலாக சோனகர் என்ற பதம் இடம் பெற் றிருக்கக் காண்கிருேம். ஆக, சொல் தோன்றி, இலக்கியத் தில் அச்சொல் இடம் பெற்றுள்ள காலத்



கீழக்கரையில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட
(குளங்கரை) பள்ளிவாசல்

தைக் கொண்டு ஆய்ந்தறியும் மரபு ஒன்று எல்லா நாட்டிலும், இலக்கிய வளம் படைத்த எல்லா மொழிக்குமே பொதுவாக உண்டு. இவ்வடிப் படையில் யவனம் மறைந்த பின்னர், சமயம் கருதி அந்த யவனர்கட்குச் சோனகர் என்ற சொல் தோன்றியிருக்கக் காண்கிறோம.

சோனகர் என்ற சொல் இன்றும் வழக்கில் உளது.அது கடற்கரையோர நகரில் வாழுகின்ற மக்களுக்கு அறிமுக மான சொல்லாக இருக்கக் காண்கிறோம். இலங்கையிலும் சோனக முஸ்லிம்கள் உண்டு. தமிழகத்தில் தொண்டியில் சோனகர் தெரு என்று ஒரு தெருவே உளது. தென்னுற் காடு மாவட்டத்திலுள்ள துறைமுக நகரமாகிய கடலூரி லும், பரங்கிப்பேட்டையிலும் சோனகர் தெரு இருக்கக் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில் பூம்புகார்க் கடற்கரை வீதியில் காண்போர் கண்களைத் தடுக்கும் அளவில் யவனர் வாழும் இல்லங்கள் இருந்தன என்று இளங்கோ அடிகள் கூறியுள்ளதை நினைவுபடுத்துவதாக உள்ளது தொண்டி, கடலூர், பரங்கிப்பேட்டைப் போன்ற ஊர்களில் சோன கர் வீதிகள் தனியாக இருப்பது. ஆகவேதான், திவாகர நிகண்டார் சோனகர் என்போர் யவனரே எனக்கூறியுள் ளார். கேரளப் பகுதியிலும்,சோனக முஸ்லிம்கள்உண்டு. இவர்களை வெளிநாட்டினர் என்ற கணிப்பிலேயே அங்கே வாழுகின்ற மாப்பிள்ளை, மரக்காயர், ராவுத்தர் போன்று ராலும் கூடச் சோனகர்கள் என்றே சுட்டக் காண்கிறோம். சோனகர் என்பது இங்கு வந்த வெள்ளையர்களைக் குறிக்கின்ற சொல்லாக எவரும் சுட்டாத ஒன்றே, சோன கரின் முன்னோர்களே யவனர் என்பதை மெய்ப்பிக்கும்.

மீண்டும் நினைவு படுத்திக் கொள்வோம். கி.மு. ஆண்டுகளிலேயே அரபியர்கள் தமிழகம் போந்து வணிகம் புரிந்து வந்தனர். இவர்கள் வணிகம் புரிந்த கடல்துறைப் பட்டினம் முதற்சங்க காலத்தில் தென் மதுரையாயிருந் தது. இடைச்சங்க காலத்தில் கபாடபுரமாயிற்று. கடைச்சங்க காலத்தே பூம்புகாராயிருந்தது. அந்த ஆரவாரமிக்க அழகிய நகரம் கடலால் விழுங் கப்பட்ட பின்னர்க் கொற்கை தோன்றலாயிற்று. கி.பி. ஆரும் நூற்ருண்டு வரை கொற்கையில்

வணிகம் புரிந்த அரபியர்கள் யவனர் என அழைக்கப்பட்டனர். ஏழாம் நூற்றுண்டில் அரபியர் முஸ்லிம்களாகி விட்ட பின்னரும் தமிழகத்துடன் வணிக உறவு நீடித்தது. ஆனல் யவனர் என்பது மாறி, சோனகர் என்றுயிற்று. இந்தச் சோனக முஸ்லிம்கள் கொற்கையைத் தலைமைக்கேந்திரமாகக் கொண்டு, அதாவது இன்றைய கீழக்கரை நகரை வணிகத் தலைமை நிலையமாக வைத்து தமிழகத்தின் மற்றச் சிறிய துறைமுகப்பட்டினங்களிலெல்லாம் கிளைத்தொழிலகங்களை நிறுவி, அங்கெல்லாம் சென்று தங்கி, உறைந்து, குடியும் குடித்தனமும் ஆக வாழ்ந்து கப்பல் வணிகத்தில் ஈடுபடலாயினர். இந்தச் சோனக முஸ்லிம்களும் இவர்கள் வழித்தோன்றல்களுமே பழங்கால கடற்கரை நகரமுஸ்லிம்கள் ஆவர். கி. பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்து எட்டாம் நூற்றுண்டு வரை பாண்டிய நாட்டின் வரலாறு, ஏன் தமிழகத்தின் வரலாறே இருண்ட நிலையில் உள்ளதால் இக்கால முஸ்லிம்கள் வரவு பற்றிய விவரங்களை முழு அளவில் அறிய முடியவில்லை. எனினும், தமிழகத்திற்குக் கி. பி. எட்டாம் நூற்றுண்டில் அரபுநாட்டு முஸ்லிம்கள் வருகை அதிக அளவில் இருந்ததாக வரலாற்றுசிரியர் திரு கே. ஏ. நீலகண்டசாஸ்திரியார் கூறுகின்றுர்.

> "எட்டாம் நூற்றூண்டில் நாம் அடி எடுத்து வைத்ததும், புகழ்பெற்ற அரபு பயணிகள், வரலாற்றுசிரியர்கள், நிலவியல் வல்லுநர்கள் ஆகியோரின் வரவு பெருமளவில் தொடங்குவதைக் காணலாம்." இப்படிக் கூறுகின்றுர் திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார். மேலும் அவர் கூறுவது,

> "...மிகப்பழங்காலத்திலிருந்தே இந்துமா கடலின் ஆதிக்கம் அரபிவணிகர் வசமே இருந்து வந்ததால் இஸ்லாம் தோன்றிய பின்னர் அரபிமுஸ்லிம்களின் வருகையும்வணிகமும்விரிவடையலாயிற்று. ஆரம்பத்தில் முகம்மதுநபி வணிகராயிருந்தமையால் அரபிமுஸ்லிம்கள் வணிகத்தில் அதிக ஊக்கம் காட்டினார் என்பது பொருந்தும்..."

திரு, கே. ஏ. நீலகண்டசாஸ்திரியார் அவர்களின் இக்கூற்றினல் எட்டாம் நூற்றுண்டில் அரபு முஸ்லிம்கள் தமிழகத்திற்கு, குறிப்பாக இந்துமா கடற்பகுதிசகு வருகை புரிந்தனர் என்பது தெரிகின்றது. இவர் தம் கூற்றை மெய்ப்பிப்பது போன்றுளது திருச்சிராப்பள்ளி மெயின்கார்ட்

கேட்டருகிலே இன்று சீலமடைந்து காணப்படுகின்றபள்ளி வாசல். இப்பள்ளிவாசல்,கி.பி.738-ல் கட்டப்பட்டதாகும். அன்றைய சேர நாடான இன்றைய கேரளத்திலகொடுங்க ளூரில் உள்ள ஒரு பள்ளிவாசல் கி. பி. 642-825ல கட்டப் பட்டதாகும். இபுனுபதூதா வந்த காலை, கீழக்கரையில் கடற்கரைப் பகுதியில் மிகப்பழைய பளளிவாசல் ஒன்றிருந் ததாகக்குறிப்பிட்டுள்ளார். அப்பள்ளி வாசல அதேகடற் கரைபபகுதியில இன்றும் உள்து. கீழக்கரையிலுள்ள மற் றொருபள்ளிவாசலான பழையகுத்பாப் பள்ளியும் இஸ்லாம் தமிழகத்தில் பரவிய ஆதிநாளிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆய்வாளரின் கருத்து.

நாகர்கோவில்மாவட்டம் தேங்காய்ப்பட்னத்திலுள்ள ஆற்றங்கரைப் பள்ளியும் மிகமிகத் தொன்மையானதே! ஆகவே, திரு.கே.ஏ நீலகண்டசாஸ்திரியாரின் கூற்று முற்றி லும் உண்மையானதே! அதாவது இஸ்லாம் அதன் அடி நாளிலேயே, கி. பி. ஏழு, எட்டாம் நூற்றுண்டுகளிலேயே தமிழகத்தில் கால் ஊன்றிவிட்டதென்பது உண்மையே!

நபிகள் நாயகம் அவர்களின் காலம் ஏழாம்நூற்ருண் டாகும். அவர்கள் காலத்திலும் சரி, அதற்கு முன்னரும் சரி, அரபியர்கள் தமிழகத்துடன் வணிக உறவில் வந்து தங்கி வாழ்ந்து வந்துள்ளனர் என்பது மெய்யேயாம்.

மாணிக்கவாசகஅடிகளார் காலம்ஒன்பதாம்நூற்ருண் டென்பர்.இவர் வாதவூரார் என்ற திருநாமத்துடன் பாண் டியமன்னனின் அமைச்சராக இருந்தபோது, குதிரைவாங்க சென்று, திருப்பெருந்துறையில் சிவாலயம் கட்டினூர் என்பர்.

இவர் குதிரை வாங்கச் சென்றது அரபிவணிகரிடையே தான். இவர் காலம் ஒன்பதாம் நூற்ருண்டென்பதால், அக்கால அரபியர் முஸ்லிம்களே. இவர்தம் திருவாசகத் தில்,அன்னைப்பத்து எனும் பகுதியில், ''வெள்ளைக் கலிங்கத் தார் வெண் திரு முண்டத்தார், பள்ளிக்குப்பாயத்தார்'' என்றிருப்பது முஸ்லிம்களைக் குறிப்பதாகும்.

திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியாரின் வரலாற்றுக் குறிப்பும் மாணிக்கவாசக அடிகளாரின் வரலாறும், பாட லும், எட்டு-ஒன்பதாம் நூற்ருண்டிலேயே தென் தமிழகத் தில், இஸ்லாம் நுழைந்ததை இயம்புகின்றன. என்ருலும்,

முதலில் நுழைந்த ஊர் எது எனச் சொல்லவில்லை. இங்கே ஒன்றை நாம் யூகத்தால் காணவேண்டும். அதாவது:-

வெளிநாட்டிலிருந்து வணிக நோக்கில் வருவோர் முதலில் தங்குவது துறைமுக நகரிலேயாம். இதனைச் சிலப் பதிகாரம் போன்ற நூல்களின்வாயிலாகவும்அறிகின்றோம். மவள்ளையர் வரவும் இதனை உணர்த்தும். எனவே, ஆரம்ப நாளில அரபியமுஸ்லிமகள் முதன் முதலில் வந்திறங்கி, தங்கி, வணிகம் புரிந்துள்ள துறைமுகம் கொற்கை எனும் கீழக்கரை எனக்கண்டு தெளியலாம். இதனை மெய்ப்பிக் கின்ற இலக்கியமாகத் திகழ்வது 'பல்சந்த மாலை' எனும் பனுவல.

# வள்ளல் சீதக்காதியின் முன்னோர்

'பல்சந்த மாலை' எனும் நூல் முழுமையாகக்கிட்டுவதா யில்லை. கிடைத்திருப்பது எட்டுப் பாடல்களே! இப்பாடல் கள், முஸ்லிம கொடை வள்ளலொருவரின் புகழ்ப்பா பாடுவ தாயிருக்கக் காண்கின்றோம். அவ்வள்ளலை 'மன்னன்' என் றும் இந்நூலாசிரியர் குறிக்கின்றார். அவரை வச்சிர நாடான் என்கின்றார். அந்நாட்டில் 'வகுதாபுரியை' ஆள் வோன் என்கின்றார், இந்த வச்சிர நாடும், வகுதையம் பதியும் இன்றையக் கீழக்கரையின் பழைய பெயர்களாகும். இந்த மன்னனை முஸ்லிம் என்றுரைப்பதால், கீழக்கரையில், பலசந்தமாலை தோன்றிய காலத்தில் முஸ்லிம் பெரும் வள் ளல், மன்னன் என்ற தகுதியுடன் இருந்ததாகத் தெரிகின் றது. இந்தப் பல்சந்தமாலை நூலின் காலம் எது?

பல்சந்த மாலை நூற்காலம், பதினைன்காம் நூற்றாண் டென்கின்றார் தாம் எழுதியுள்ள இலக்கிய வரலாற்று நூலில் திரு. மு. அருணாசலனார். பதின்மூன்றாம் நூற்றாண் டின் பிற்பகுதியிலிருந்து பதினான்காம் நூற்றாண்டின் முற் பகுதி என்பதே சரியான கணிப்பாகும்.

இவர் கூறுகின்றார்; "இந்த நூல் வட நாட்டிலிருந்து படை நடத்தி வந்த ஒரு முஸ்லிம கொடுங்கோன்மையாள னைக் கண்டு அச்சமுற்ற ஒரு புலவன் பாடிய புகழ்ப்பா நூல்" என்று. இக்கூற்று' பெரும் ஆய்வாளரான உயர்திரு

மு. அருணாசலனாரின் கற்பனையேயன்றி, உண்மையன்று. காரணம், படையெடுத்து வந்து திரும்பிச் செல்கின்ற கொடியோனை வள்ளலென்றும், மாவீரனென்றும், மன்னாதி மன்னனென்றும் புகழ்ப்பாப் பாடுமளவிற்குத் தாழ்ந்து விட்ட பழங்காலப் புலவனைத் தமிழ்மண் பெற்றுச் சுமந்ததாக வரலாறில்லை. யார்மீதோ கொண்ட காழ்ப்பில், தமிழ்ப் புலவனையே பழித்தெழுதியுள்ளமை பற்றி, மதிப்பு மிகு திரு மு. அருணாசலனா அவர்கள் சிந்திப்பார்களாக

பதினான்காம் நூற்றாண்டில் வடநாட்டிலிருந்து படை நடத்தி வந்த முஸ்லிம் (பட்டான்) தளபதிகள், தமிழகத்தில், குறிப்பாகக் கீழக்கரை ராமேசுவரம் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களின் வணிக வாழ்வையும், செல்வாக்கையும் சிறப்புகளையும் அழிக்கத் தவறவில்லை என்கின்ற வரலாற்றை, மதிப்புமிகு திரு. மு. அருணாசலனார் அவர்கள் படிக்கவில்லை எனத் தெரிகிறது. பார்க்க [MABAR-VENKATA RAMIAH VOL XXII PAGE-94). இன்னொன்று. வசாப்இபுனுபதூதா, மார்க்கோபோலோ போன்ற பயணிகளின் எழுத்துக்களைக் கூடவா திரு. மு. அ. அவர்கள் படிக்கவில்லை? படித்திருப்பின், பாண்டிய நாட்டில், பாண்டியனுடன் பாண்டியனாக, மன்னர் என்ற தகுதியுடன், ஒரு முஸ்லிம பெருமகன் வாழ்ந்த விவரத்தையும், கீழக்கரையிலும அதன் சுற்றுப் புறத்திலும் பெருமளவில் நீண்ட நெடுங்காலமாக முஸ்லிம் வாழ்ந்திருந்தார்கள் என்பதையும் அறிந்திருக்க முடியும். 13, 14 நூற்றாண்டுகளில் கீழக்கரையில் 'மன்னன்' என்ற தகுதியுடன் ஒரு முஸ்லீம் வள்ளல் இருந்ததாக வரலாறு உரைக்கின்றது.

இன்றைய ஈரானில் உள்ளது "கீஷ்" என்னும் தீவு. இந்தத் தீவின் சிற்றரசராக, மலிக்குல் இஸ்லாம் சுல்தான் சையிது ஜமாலுதீன் விளங்கினார். இவரின் இளவல் ஒருவர். பெயர், மலிக்குல் அஃலம் சுல்தான் (மன்னன்) தகீயுத்தீன் என்பதாகும்.

சுல்தான் சையிது ஜமாலுதீன் சிற்றரசர் மட்டுமின்றி, சிறந்த வணிகருமாவார்.

இவர் பாண்டிய மன்னருடன் வணிக உறவு பூண்டிருந்தார். பாண்டிய மன்னர்கட்குத் தேவையான குதிரைகள் இவர் மூலமாக வாங்கப்பட்டன.

குதிரைகளை விற்று அதன்மூலம் கிட்டுகின்ற திரவியங் கட்குத் தமிழகத்தின் பண்டங்களை வாங்கி, தமது வங்கத் தில் நிரப்பிச் சென்று, மேலே நாட்டினரிடம் விற்று, ஆதா யம் பெற்ருர் சுல்தான் சையிது ஜமாலுதீன்.

இவர்களின் வணிகத் தலம் கீழக்கரையில் அமைந் திருந்தது. சுல்தான் சையிது ஜமாலுதீன் கீஷ் தீவினின்றும் கீழக்கரைக்கு வருவதும் போவதுமாய், கி. பி. 1303 வரை வாழ்ந்தார். சுல்தான் தகீயுத்தீன் கீழக்கரையிலேயே நிலையாக வாழ்ந்து வந்தவர்.

இவர் சிறந்த போர்வீரர், ராஜதந்திரி, விவேகி, இனிய உரையாளர். எனவே, இவர் பாண்டிய மன்னன் அவை யிலே அமைச்சராகவும, கடல்துறைக் காவலராகவும், படைத்தளபதியாகவும் பதவி வகித்துள்ளார். மட்டு மின்றி, பாண்டிய மன்னனின் உறவினராகும் வகையில், அக்குலக்கொடியொருத்தியை இவர் மணம் புரிந்திருந் தார் எனவும் தெரிகின்றது.

இவை நடந்தது முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் காலத்தே என்றுரைப்பர்.

முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் காலம் கி. பி. 1268 முதல் 1310 ஆண்டுவரை என்பார் திரு. சதாசிவப் பண்டாரத்தார்.

இப் பாண்டியன் காலத்தில், இவனையன்றி, இன்னும் நான்கு பாண்டியர்கள் பாண்டிய நாட்டைப் பங்கிட்டு ஆண்டு வந்ததாக பாண்டியர் வரலாறு கூறுகிறது. இந்த ஐந்து பாண்டியர்களுடன் ஆருவது பாண்டியனுக வைத்து எண்ணப்பட்டார் சுல்தான தகீயுத்தீன்என்றும்தெரிகிறது.

"...மைவருக்கும் சூழ்சோலை மாமதுரைப் பாண்டியர்கள் ஐவருக்கும் மாருக ஆரும்பேர் கொண்டபிரான்..."

"சீதக்காதி திருமண வாழ்த்து" எனும் நூலிலே காணப்படும் இவ்வரிகள், சீதக்காதியின் முன்னோர்களின் புகழ் கூறும் முகத்தான், சுல்தான் தகீயுததீன் இப்படிப் புகழப் படுகின்ருர்.

"...நிலமளும் சயமகளும் நிற்ப வழுதி செல்வக்
குலமகளைக் கைப்பிடித்துக் கொண்ட மணவாளன்..."

சுல்தான் தகீயுத்தீன் பாண்டியன் குலக்கொடி ஒருத் தியை மணந்து கொண்ட செய்தியை இவ்விரு வரிகள் மெய்ப்பிக்கின்றன.

முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் தன்னுடன் முரணிய ஈழத்தரசன் மீது படைநடத்தி, அவனை வென்று, ஆரியச் சக்ரவர்த்தி என்பானை அரியணை ஏற்றி வைத்தான் என்று அவன் தன் வரலாறு செப்புகின்றது. இப் படையெடுப்பின்போது தானைத்தலைவனாகச் சென்றவர் ஒரு முஸ்லிம் என்று குறிக்கின்றார் வரலாற்றாய்வாளர் திரு வி. கே. சுப்பிரமணிய ஐயர் தாம் எழுதியுள்ள "பழங் காலத் தக்காணம்"—Ancien Dehkan—என்னும் நூலில்.

ஈழத்தின் மீது பாண்டியன் போர் தொடுத்து வென்ற வரலாற்றை, இலங்கையின் பழைய வரலாற்று நூலான சூளவம்சமும் உறுதிப்படுத்துகிறது.

இப்படையெடுப்பின் தளபதி, சுல்தான் தகீயுத்தீன் என்பதைச் "சீதக்காதி திருமணவாழ்த்து" நூல் தெளிவு படுத்துகின்றது.

"...வாரி யதனி லேறியந்த வங்கவிட் டிலங்கைபிடித்
தாரியனை மிக்கா யரியா சனத்தில் வைத்தோன்..."

வாரி என்பது-கடல். வங்கம்-கப்பல்.

முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியனைப் பகைத்த இலங்கை வேந்தனை வீழ்த்தி அந்த நாட்டின் அரியாசனத்தில் ஆரியச்சக்கரவர்த்தி என்பானை அமர்த்தி மீண்ட தளபதி, சுல்தான் தகீயுத்தீன் என்பதை இப் பாடல் பகர்கின்றது.

தமது இலங்கைப் பயணத்தின்போது, இவ்வாரிய மன்னனைத் தாம் சந்தித்ததாக மார்க்கோபோலோ கூறுகின்றார்.

**தமது அரச அவையின் அமைச்சராக மட்டுமின்றி, கடல் காவலராகவும் தமது படைத் தளபதியாகவும் உறவினராகவும் சுல்தான் தகீயுத்தீனைப் பாண்டிய மன்னன் ஆக்கிக் கொண்டது அக்காலை தமிழகத்தில் சமயப் பூசல் அற்ற ஒருமைப்பாடு நிலவிய தன்மையைக் காட்டுகின்றது.**

சுல்தான் தகீயுத்தீனைத் தம்முடன் சேர்ந்த ஆறும் பாண்டியனாக ஏற்று, கீழக்கரையிலிருந்து, அப்பகுதியை

ஆளுமாறு பணித்தது, பாண்டியன் முதலாம் மாறவர்மன் குலசேகரனுக்கிருந்த பரந்த மனப்பான்மையைக் காட்டுகின்றது. இந்த சுல்தான் தகீயுத்தீனைப் பற்றி அக் காலப் பயணியான வசாப் கூறுவதைப் பார்ப்போம்.

''...நாம் மேலே சொன்ன தேவர் என்னும் [பாண்டியநாட்டின்] மன்னன் ஹிஜிரி 692ல் இறந்து போனான். அவன் விட்டுச் சென்றசெல்வம் ஏராளம். அவனுக்குப் பின் அரியணை ஏறிய அவன் தம்பிக்குக் கிடைத்த பொன்னும் மணிகளும் வெள்ளியும் 700 பொதி மாடுகள் சுமக்கும் அளவுடையனவாகும். மாலிக் ஆஜம் சுல்தான் தகீயுத்தீன் தொடர்ந்து [பாண்டிய நாட்டின்] அமைச்சராகப் பதவி வகித்தார். அவரே அந்த நாட்டின் அரசன் என்று கருதும் வகையில் செல்வாக்குப் பெற்றிருந்தார். முந்திய அரசன் காலத்திலிருந்ததைவிட அவருடைய பெயரும் புகழும் [நாடெங்கினும்] பரவின.

வணிகத்தில் அவருக்கு வந்த வருவாய் மிகப் பெரியது. எனவே அவரிடம்ஏராளமான செல்வம் குவிந்து கிடந்தது. சீனாவிலிருந்தும், இந்தியாவின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வருகின்ற சரக்குகளை சுல்தான் தகீயுத்தீனுடைய தரகர்கள் தேர்ந்தெடுத்து வாங்கிய பின்னரே மற்ற வியாபாரிகள் வாங்குவதென்ற நியதி கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. வாங்குகின்ற சரக்குகளை, கீஷ் தீவிற்கு சுல்தான் தகீயுத்தீனுடைய கப்பல்கள் சுமந்து சென்றன. தமது கப்பல்கள் போதாதபோது வேறு வாடகைக் கப்பல்களிலும் ஏற்றி அனுப்பப்பட்டன. கீஷ் தீவிலும் இதே முறையைப் பின்பற்ற இவர்தம் தரகர்கள் உரிமை பெற்றிருந்தனர்.

மாலிக் ஆஜம் தகீயுத்தீனும் அவருடைய மூப்பர் மாலிக்குல் இஸ்லாம் ஜமாலுதீனும் மாபாரில் பெற்ற புகழ் மிகப் பெரியது. ஆனால் அவர்கள் அதைக் காட்டிலும் பெரும் புகழை இந்தியா முழுவதிலும் சீனாவிலும் கூடப் பெற்றிருந்தார்கள்.

மிகத் தொலைவிலுள்ள அரசர்களெல்லாம் இவர்களுடன் நட்புக் கொள்வதைப் பெருமையாகக் கருதினார்கள். எனவே அவர்கள் அடிக்கடி இவர் தம் நலம் கேட்ட வண்ணமாயிருந்தனர்.

— [எலியட் அண்ட் தாசன்-III பக்கம் 34, 35.]

பயணிகர் வசாபின் குறிப்பிலிருந்து சுல்தான் தகீயுத்தீன் பாண்டியர் நாட்டில் மட்டுமின்றி அக்கால இந்தியாவின் நாலு பக்கங்களிலும் புகழடைந்திருந்தார் எனத் தெரிகின்றது. இஸ்லாமிய நியதி, ஈட்டுவதும் ஈவதுமேயாகும். எனவே சுல்தான் தகீயுத்தீன் வணிகத்தின் மூலம் தாம் ஈட்டிய ஆதாயத்தை ஈந்து வாழ்பவராக வாழ்ந்திருந்ததில் ஆச்சரியமில்லை. இவர் காலம் பதிமூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதி — பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பம். ஆறாவது பாண்டியனுக்குக் கீழக்கரையில் அரசோச்சியிருந்த இவரையே **பல்சந்தமாலை** எனும் நூலின் ஆசிரியர் பாடி, தமது பாடல்கட்கும் தமிழிற்கும் பெருமை தேடியிருக்க முடியும். பல்சந்தமாலையில் கிட்டியுள்ள எட்டுப் பாடல்களிலும் சுல்தான் தகீயுத்தீனை அப்புலவர் பாடி புகழ்ந்திருக்கக் காணலாம்.

பல்சந்தமாலைப் பாடல்கள்:-

### 1. உயிரென வியத்தல்

கலைமதி வாய்மைக் கலுபா வழிவருங் கற்பமைந்த
தலைமைய ரேழ்பெருந் தரங்கமும் பெற்ற நந்தகைசால்
மலையென மாமதில் வச்சிர நாடன் வாணுதல் தன்
முலையெனத் தோய்ந்த தெல்லாம் களவே என்று
மூன்னுவனே

### 2. கண்புதைத் தாளுக்குத் தலைமகள் கூறுவது

நாட்டம் புதைக்கின்ற தென்நீ மடந்தை நவகண்டமேல்
ஈட்டம் புகழ்வின்னன் மேவார் என இங்ஙன்யான்வருந்த
வாட்டம் பயின்றுங் கதிலின் குழம்பணிந் தாகமெங்கும்
வெட்டந் தெரிகின்ற கொங்கைகள் ஏனை மிகை
செய்தனவே

### 3. தழைகொண்டு இரந்து நிற்றல்.

நகுதா மரைமலர் சூழ்வாவிசூழ் வச்ர நாடர்தங்கள்
வகுதா புரியன்ன வாணுதலீர் மற்ற வார்தழையும்
மிகுநாண் மலர்களும் கொண்மின்கள் கொள்ளாவிடின் மதுவல்
தொகுகாமன் ஐங்கணை யாலெம தாவி துணுக்குறுமே.

### 4. வேழம் வினுதல்

செம்முக மானதர் செங்குங்குமப் புயர்சீர் சிறந்த
மைம்மலி வாசப் பொழில்வாய் மதியன்ன வாணுதலீர்
மும்மத மாரிபொழியப் பொழில் முகில் போல் முழங்கிக்
கைம்மலை தான்வரக் கண்டதுண்டோநும் கடிபுனத்தே

### 5 தினைமுதிர் வுரைத்தல்

இயவனராசன் கலுபதி தாமுதல் என்னவந்தோர்
அயன்மிகு தானையர் அஞ்சுவண்ணத்தவர் அஞ்சவென்னுக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினைப்புனக் காய்கொய்து போம்
பயன்விளை வாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே!

### 6. ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி

பிறைடார் நறுநுதற் பேதை தன் காரணத்தால் பெரும
மறைநா ளிரவில் வருவது நீயொழி வச்சிரநாட்
டிற்றையாகிய கலுபா முதலானவர் யானைகணின்
றறைவாழும் விஞ்சத் தடவிகள் சூழுமணிவரையே

### 7. இயற்பழித்தல்-புள்ளொடு புலம்பல்

வானது நாணக் கொடையாலுலகை வளர்த்தருளும்
சோனகர் வாழும் செழும்பொழில் சூழ் அந்து பார் அனையார்
தானணி வாணுதல் கண்டும் பகலே தனித்தனியே
மானமி லாதிரை தேரும் பறவைக டாமழிந்தே.

### 8.பதியளா வுரைத்தல்

வில்லார் நுதலியும் நீயுமின் றேசென்று மேவுதிர்சூது
எல்லாம் உணர்ந்தவர் ஏழ்பெருந் தரங்கத் தியவனர்கள்
அல்லா வெனவந்து சாற்றியும் நாதரைக் கைதொழுஞ்சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே.

இவ்வரிய எட்டுப் பாக்களாலும் அறியவருவது பல.

1. யவனர், சோனகர் என்ற சொற்கள். இவ்விரு சொற்களும் அல்லாவென்று சொல்வோரைக் குறிப்பதாக இயம்பப்பட்டிருப்பது. இதிலிருந்து இவ்விரு சொற்களும் அதாவது யவனர், சோனகர் என்கின்ற இரு சொற்களுமே முஸ்லிம்களைக் குறிக்கின்ற சொற்களாகக் கையாளப் பட்டிருப்பதால் யவனர் என்பது இங்கே கிரேக்கரையோ ரோமாபுரியினரையோ குறிப்பதாகக் கொள்ள இடமில்லை என்பதாம்.

2. இப்பாடல்களில் கையாளப்பட்டுள்ள கலுபா என்பது, கலிபா என்பதின் திரிபாம். கலிபா என்ற அரபிச் சொல்லிற்குப் 'பிரதிநிதி' என்று பொருள். நபிகள் நாயகம் அவர் கட்குப் பின்னர் ஆட்சிபீடம் ஏறிய நால்வருக்கும் இச்சொல் சிறப்பாக அமைந்ததாகும். அந்த கலிபாக்களின் வழிவந்தவனே வின்னன் என்று பாடல்கள் தெளிவாகக் கூறுவதால், இந்த வின்னன் வடாநாட்டிலிருந்து பதினான்காம் நூற்றாண்டில் படை கொண்டு தமிழகம் போந்த டில்லி முஸ்லிம் அரசின் பிரதிநிதியாதல் இயலா ஒன்றும். காரணம், கலிபாக்கள் நால்வரும் குரைஷிக் குலத்தவர் ஆவர். டில்லியில் குரைஷிக்குல முஸ்லிம்களில் யாரும் ஆட்சி செய்யவில்லை. அவ்வாட்சியின் கீழ்ப் பணிபுரியவுமில்லை என்பது வரலாறு. உண்மை இவ்வாறிருக்க வடநாட்டிலிருந்து படை நடத்தி வந்த முஸ்லிம் தளகர்த்தனையே பல்சந்தமாலை நூலாசிரியர் அச்சம் காரணமாகப் பாடினர் என இலக்கியச் செம்மல், அறிவின்மேதை, மதிப்புமிகு திரு. மு. அருணாசலனார் புனைந்திருப்பது ஆராய்ச்சியின்பால் பட்டதன்று.

3. பாடல்களில் வின்னன் என்ற வள்ளலை, வச்சிர நாடன், வகுதாபுரியன், அந்துபார்க் கதிபதி என்றெல்லாம் சுட்டப்பட்டிருக்கக் காண்கின்றோம். டில்லியிலிருந்து படை நடத்தி வந்த முஸ்லிம் படைத்தளபதியை

வச்சிரநாடன் என்பது பொருந்துமா? வகுதையம்பதி' யானென்னல் சரியாகுமா? அந்துபார்க்கதிபதி என்பது ஏற்புடைத் தாகுமா? இம்மூன்றும் கீழக்கரையைக் குறிக்கின்ற பெயர்களே என்பதைத் தெரிந்து கொள்ள, சீதக்காதி நொண்டிநாடகம், சேகுனுப்புலவரின் தனிப்பாடல் திரட்டுப் போன்ற நூற்களைக் காண்பது அவசியமாகும்.

4. 'ஏழு பெருந் தரங்கத்திற்குரியவர்' என வருவது, வின்னன் கடலாதிக்கம் கொண்டவன் என்பதைக் குறிப்பதாகும்.

ஆக, கி. பி. 1319ல் 'மாபார்' படையெடுப்பில் மழை காரணமாக இராமேசுவரம் பகுதியில் ஒன்றரை மாதக் காலம் ஓய்வு கொண்ட 'குஸ்ருகான்' கீழக்கரை அதிபதியாகிய வின்னன் என்ற முஸ்லிம் மன்னரின் சொத்துக்களைக் கொள்ளையிட்ட தோடன்றி, அவர்தம் குடும்பத்தையும் குலைத்தான் என்பதை வெங்கடராமையாவின் மாபார் என்கின்ற நூலின்குறிப்பு அறிவிக்கின்றது. மட்டுமின்றி, பதின்மூன்றும் நூற்றுண்டோடின்றி, அதற்கு முன்னரே கீழக்கரையில் முஸ்லிம்கள் வாழ்ந்திருந்தனர் என்பதைத் திருப்புல்லாணிக் கோயிலிலுள்ள கல்வெட்டும் இயம்பிக் கொண்டிருக்கின்றது. அக்கல் வெட்டின் சான்றினை இங்குத் தருவது அவசியமாகின்றது.

**திருப்புல்லாணிக் கோயில்**

**கல்வெட்டுக் கூறும் சான்றினை,**

**அடுத்த பக்கத்தில் காண்க.**

## No. 402. Tiruppalani.

### (*A.R. No.* 116 *of* 1903).

ON A SLAB BUILT INTO THE FLOOR AT THE ENTRANCE OF THE FIRST GOPURA IN THE SAME TEMPLE.

1 ஸ்வஸ்திஸ்ரீ [||*] பூமலற் திருவும் பொருள்பட . .
2 . . ம் தாமரைக் குவி[மு]லைச் செயப்புயத் திருப்-
3 [பெ]வதநாவில் வெ[ள்ளி]யதன் தாமரை [க]ாதல்-
4 மாது கவின்பெறத் தளைப்ப வெண்டிரை உ-
5 டுத்த மண்[டி]ணிகிடக்கை திருநிலமடந்தை . .
6 . . ரமையில் களிப்பச் சமையந்தியும் தருமமு[ந்]
7 தழைப்ப இமையவர் விழாக்கொடி இடங்கெ-
8 தாறும் எடுப்ப கருங்கலி கனல்கெட கடவுள்
9 வெதியர் அருங்தொழில் வெ[ம்]வி செங்கொல
10 [வ]ளர சுருதியும் தமிழும் தொல்வளங் குலவ வெ-
11 [பா]ருதிறல்லாழி பூதலஞ் சூழ ஒருகை இருசெவி
12 மும்மத நாட்கொட்ட(அ)யிரா[வ]த முதல் செய்தர
13 கொற்ற[த்*]தெண்டிசை ஆனை எருத்து மெறி கண்-
14 டநா டெமதென கயல் களிகூர கொசளந் து-
15 னுவம் குச்சரம் பொசள மகதம் பொப்பளம் புண்-
16 டாம் ஈழங் கடாரம் கெவுடம் தெலிங்கம்ச் [ெ*]சா-
17 னகம் சினா முதலாய் விதிமுறை [தழை] வெவ்வெ-
18 று வகுத்த முதுநிலக் கிழமையில் முடிபுனை [ெ]-
19 வந்தர்[க்*] கொருதனிநாயக[ன்] கின்று உலகெத்த [தி]-
20 ருமுடி சூடி செங்கொல் ஓச்சி கொற்றத்தரள குளி-
21 [ர்]வெண்குடை கிழ் கற்றைகவரி காவலர் விச வி-
22 டைகதிர் நவமணி விரஸிங்ஹாசனத்து உடன்-
23 முடிசூடி உயர்குலத் திருப்ப மங்கைய[ர்*] மலர்கரங்-
24 [குவி]த்து பார்த்துஇவர் மங்கையர் இரண்டு வ-
25 ணங்கும் சென்னி சுடர் இளமவுலி சுடர் மணிமுடி

26 [கு]டச் சி[வந்த] வினை சிறடிகமல மதுகம் கமல[ம்*]என அ-
27 ணுகும் உலகமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளி
28 மாமுதல் மதிக்குலம் விளக்கிய கோமாற (கோமாற)பன்ம-
29 ரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதேவற்க்கு
30 யாண்டு எட்டாவது நாள் தொளாயிரத்து தொண்ணூற்-
31 [று]நாலினால் மதுரோதையவளநாட்டு மாடக்கு[ள]க்கீழ் மது-
32 ரைக்கோ[யி]ல் பள்ளியறைக்[கூ]டத்துப் பள்ளிப்பீடம் மழவ-
33 [ரா]யனில் எழுந்தருளியிருக்க திட்டசெம்பிநாட்டுப் பவித்தி[ர]-
34 மாணிக்க[பட்டின]த்தும்பால் சோனகச்சாமந்தபள்ளி-
35 யான பிழார்ப்பள்ளி . . ம்வார்க்கும் இவர் செய்ய[தி]-
36 ருவாய் மொழிந்தருளினபடிக்கு . . . முன்னிட்டு வெ-
37 ண்டுவனவுக்கு பவித்திரமாணி[க்க]பட்டன் எந்தல்தெம்-
38 ம்பக்கசோ[க்கந்] காராண்மை காணியாகவந்த . . . .
39 . . . படஇகான்கெல்லைக்குட்பட்ட நீர்[நிலமும்] நன்-
40 செய் புன்செய் . . . . . . . .
41 ப்பு உட்பட்ட நத்த . . . . . . .
42 திக்கி திக்கிஉள்ள . . . . . . . யோகமும் . .
43 வதான அச்சம் [கோயில்] . . . . . ன்னிட்ட
44 ழிவி சந்திவிக்கிரகப்பெறு மற்று மெப்பேர்பட்டனவு[ம்]
45 உட்பட எட்டாவதி னெதிரா மாண்டின் எதிராமாண்டுமு-
46 தல் சோனகப்பள்ளிச் ச[ந்தி] இறையிலி ஆக இறுப்பதாக
47 இடப்பெறவேணு மென்று ஐயன் மழவராயர் கம-
48 க்கு சொன்னமையில் இங்கன் திருப்பணி உள்ளிட்டு வெண்-
49 டுவனவுக்கு பக . . செக்குக்கும் நா[ம்] காராண்மை
50 குடுத்த ஆம்புத்தூர் நான்கெல்லைக் குட்பட்ட நிலம் காணியாட்சி
51 நஞ்செய் புன்செய்யும் நத்தமும் தோட்டமும் குளமும் [குளப்]-
52 பரப்பும் உட்பட்ட நில[த்தில்] பழந்தேவதானம் பள்ளி[ச்]-
53 சந்தம் திக்கி திககிஉள்ள நிலம் அந்தராயம் வினிஓகம் தரு-
54 வுதான அச்சம் கா[ரியஆராட்சி] வெட்டிபாட்டம் பஞ்சபி-
55 லி சந்துவிக்கிரகப்பெறும் தறிஇறை செக்கிறை தட்டாரபா-
56 ட்டம் மற்றும் எப்பேர்பட்டனவும் இவ்வாண்டுமுதல் சோ-
57 னகப்பளளிச்சந்தி இறையிலியாக இறுப்பதாக இ[ட்]-

58 டு வரிலிலார் எழுத்திட்ட உள்(ள்)வரியும் கம ஒலையும நா[ச்*]-
59 சொன்னோம் கைகொண்டு இப்படி சந்திராதித்தவற்
60 செல்வதாக கல்லிலும் செம்பிலும வெட்டிவித்து[க்*]கொ-
61 ள்க வென்று திருவாய்மொழிந்தருளி[னா]ர்[|*] இவை [திரு]-
62 மல்விகாட்டு . . . . . . . . . டையான உயய[ின்]-
63 [ரா]டுவான் வீரசோழதேவனை குருகுலத[த]ரையனெ-
64 ழுத்த[|*] இவை செவ்விருக்கைநாட்டுச்சககரபாணிகலதுர-
65 ரையன் வீரதமுடித்தானான பல்லவராயன் எழுதது[|*]
66 [திரிபுவ]னசசக்கரவ[த்திகள்] கோனேரின்மைகொண்டான்
67 [திட்]செம்பிநாட்டுப் பவித்திரமாணிக்கபட்டினத்து தி[ம்]-
68 பால் சோனக . . . . . . . . .

69 லம் வுரத்துக்கும் பொத்தங்க.........
70 வெண்டுவனவுக்கு இப்பவித்திரமாணிக்கப்பட்டினத்து
71 இருக்கும் மக்க...
72 மாக குடுத்தப (டி) மருதூர் நாங்கெல்லைக்குட்பட்ட
73 நிலமும் கருஞ்செய் புன்செய்யும் நத்த(மும்) (தொட்ட)
74 குளமும் குளப்பருப்பும் உட்பட்ட நிலத்திலு
75 (ள்ள) தெவதானம் பள்ளிச்சந்தம் நிக்கி நிக்கி உள்ள
76 ...அந்தராயமும் 'வினியொகமும் தருவத (ான அச்)-
77 (சும் காரிய) ஆராட்சி வெட்டி பாட்டமும் பஞ்சபிலி சந்
78 திவிக்கிரகப்பெறும் தறியிறை செக்கிறை தட்ட(ார்)ப்பார்-
79 ட்டம் மற்றும் எப்பெயர்பட்டனவும் உட்படஎட்-
80 டாவதின் எதிராமாண்டின் எதிராமாண்டு முதல்சொ-
81 ணகப்பள்ளிசந் (தி) இறையிலியாயிறுப்பதாகப்பெ
82 றவெணு மென்று ஐயன் மழவராயர் நமக்கு
83 சொன்னமையில் (த)ங்களுக்கு சிவனம் உள்ள
84 வெண்டுவனவுக்கு இப்ப...கைக்கு (நாங்கள்)
85 நாட்டிற் காணியாக குடுத்த (இம்மருதூர் நான்கெ)-
86 லைக் குட்பட்ட நிர்நிலமும் கருஞ்செய் புன்செய்-
87 யும் நத்தமும் தொட்டமும் குளமும் குளப்ப (ரு)ப்பு
88 ம் உட்பட்ட நிலத்தில் பழந்தெவாதானம் பள்ளிசந்த-
89 ம் நிக்கி நிக்கி உள்ள நிலம் அந்தராயமும் (வினியெ)
90 ாகமும் தருவதான அச்சும் காரியவராட்சியும் (வெட்)-
91 டிபாட்டமும் பஞ்சு...
92 பள்ளிச்சந்த இறையிலியா யிறுப்பதாக...
93 லார் எழித்திட்ட உள்வரியும் நம் ஒலை...
94 ன்னெம் கைக்கொண்டு இப்படி (டி சந்திராதித்த)-
95 ர்வரைக் கல்லிலும் செம்பிலும்...
96 க்கொள்க (*)இவை அரும்பொ...
97 ...குளத்து ஆழ்வான் ஆண்ட—
98 யபாண்டிய விழுப்பரைய நெழுத்து(*) (இ)-
99 ...ண்டநாட்டு பெருமணலூர் அரையன் அ-

100 ...ரும்பெருமாளான விக்கிரமபாண்டிய தெவ-
101 ...(ந்) எழுத்து (*) இவை செவவிருக்கை நாட்டு...
102 நல்லூர் அரையன விரதமுடித்தானுன...
103 ...ன் எழுத்து உ
104 ...த்தால் வரட்டரிக்கடமை (யி)லெ செல்ல

—கல்வெட்டு எண் 402 A. R. No. 116 of 1903

Archecological Survey India. New Imperial Series Vol: LIV.

—South Indian Inscriptions (Texts) Vol: VIII. Ed, by: K. V. Subramanya Aiyer, B.A. 1937

இக் கல்வெட்டின் கூற்று கீழக்கரையிலுள்ள சேரனக சாமந்தபள்ளிக்கு இறையிலியாகப் பாண்டியமன்னன் மானியம் வழங்கிய வரலாற்றை உரைப்பதாயுள்ளது. இக் கல்வெட்டில் கூறப்படுகின்ற பாண்டியனின் காலம் பதின் மூன்றும் நூற்றுண்டின் முற்பகுதி என அறிகின்ேறும். சோனகசாமந்த பள்ளி என்றிருப்பதற்குக் காரணம், சோனகர் (முஸ்லிம்) அல்லாத சமணர், பவுத்தர் போன்ருரும் பள்ளி என்ற சொல்லினைப் பயன்படுத்தினர் என்பதால் என்க. பவித்திர மாணிக்கப்பட்டினம் என்பது கீழக் கரையின் பெயர்களில் ஒன்ரும்.

சாமந்தர் என்ற சொல்லிற்குத் தளபதி, அமைச்சன் என்கின்ற பொருள்களுண்டு. சாமந்தம் என்பதை வெளி நாடென்றும் கொள்ளவியலும். வெளிநாட்டினர் பள்ளி என்ற கருத்திலோ, அல்லது அமைச்சரும் தளபதியுமாக சுல்தான் தகீயுத்தீன் இருந்ததால் அப்பதவிகளைசேர்த்துச் சுட்டுகின்ற பொருளிலோ சாமந்தப்பள்ளி எனக் குறித் தனர் எனக் கொள்க.

எது எவ்வாருயினும், கீழக்கரை முஸ்லிம்களின் பள்ளி பதின்மூன்றும் நூற்றுண்டின் ஆரம்பத்திலேயே இருந்த தென இக்கல்வெட்டு உறுதிப்படுத்தகின்றது. அவ்வாரு யின் அதற்கு முன்பிருந்தே கீழக்கரையில் முஸ்லிம்கள் சீரும்சிறப்புமாக வாழ்ந்துவந்துள்ளனர் என்ருகின்றதல் லவா? எனவே இவர்களைச் சார்ந்தமன்னனும் வள்ளலுமே வின்னன் எனக் கொள்ள வியலுமன்ேறு? ஆக பதின் மூன்ரும் நூற்றுண்டின் பிற்பகுதி அல்லது பதினுன்காம் நூ ற் று ண் டி ன் மு ற் ப கு தி யி ன



வள்ளல் சீதக்காதியின் மூத்த தம்பி மாமு நெய்னு என்ற பட்டத்து முகம்மது
அப்துல் காதர் மரைக்காயரின் அடக்கத் தலத்திற்கு மேலுள்ள வில் மச்சு.
வலது புறம் காணப்படுவது வள்ளல் சீதக்காதியின் மேற்கூறையில்லாத அடக்கத்தலம்.

ராகப் பல்சந்தமாலை பாடிய புலவர் அமைவதினால், அவர் பாடியது சுல்தான் தகீயுத்தீன் அவர்களையே எனக் கொள்வது பொருத்தம். அவ்வாருயின், பெயர் ஏன் வின்னன் என்றிருக்க வேண்டும்? என்ற கேள்வி எழுமாயின், சுல்தான் தகீயுத்தீன், அப்துற்றஹ்மான் என்பவரின் மகனுவார். இதைச்சுட்டும் வகையில், இபுனு அப்துற்றஹ்மான் என்று அரபி முறைப்படி தகீயுத்தீன் அழைக்கப்பட்டிருக்கின்ருர். இபுனு என்பதை, பின் என்றும் உரைப்பதுண்டு. இதைத் தமிழ் இலக்கணப்படி வின், எனல் வேண்டும், வின் என்பது, பொருளற்றிருத்தலால், வின்னன் என்று அன் விகுதியிட்டு அப்புலவர் பாடி இருக்கலாம். மற்ருென்று, பல்சந்தமாலைப் பாடல்கள், ஒரு துறைக் காதல் விளக்கப்பாடல்களாகும். தன்னைத் தலைவனுகக் கொண்டு, காதல்நூல் பாடுவதை சுல்தான் தகீயுத்தீன் விரும்பியிருக்க வியலாது. காரணம், அத்தகு பாடல்களை இஸ்லாம் ஏற்பதில்லை. ஆகவே, தம்மிடம் பரிசு பெற நாடி நூல் செய்து வந்த புலவரை— அவர் பாடல்களை, ஏற்காது அனுப்புவது தகுசெயலன்று என்ற நினைப்பில், தம்பெயரை நீக்கி, ஒரு புனைந்துரைப் பெயரைப் பெய்தில் செய்யப் பணித்து, நூலினை ஏற்று, சுல்தான் தகீயுத்தீன் பரிசுவழங்கி அனுப்பி வைத்தலும் இயல்பானதே! ஆகவே, வின்னன் என்ற பெயர் இந்நூலில் அமைந்துளது எனக் கொள்ள முடியும்.

இவையேயின்றி, வின்னன் என்ற பெயர் தோன்ற, வேறு ஒரு காரணத்தையும் கூறலாம். அதாவது,

சங்ககாலத்திலே நன்னன் என ஒரு மன்னன் இருந்தான். அவனைப் புலவர்கள் பாடமறுத்தனர். சுல்தான் தகீயுத்தீன் என்பவரோ, தம்மீது (காதல் துறைப்பாடல்) பாட வேண்டாம் என இயம்புவதை அப்புலவர் கண்டு, வியந்து, நன்னனுக்கு மாற்ருகவுள்ளவரை, வின்னன் எனப்புகழ்ப் பெயரிட்டுப் பாடியுமிருக்கலாம். எவ்வாருயினும், வின்னன் என்பது, வடபுல முஸ்லிம் ஒருவரைக் குறிப்பது அன்று. தமிழகத்தில், கீழக்கரை எனும் ஊரில்,

வணிக வேந்தராகவும், வள்ளலாகவும், முதலாம் மாறவர் மன் குலசேகரப்பாண்டியனின் அமைச்சராகவும், கட லாதிக்கக் காவலராகவும், தளபதியாகவும், உறவினராக வும் கூட ஆகிவிட்டிருந்த சுல்தான் தகீயுத்தீன் என்பவ ரைக் குறிப்பதேயாம். அவர் மீது பாடப்பட்டதே பல் சந்தமாலை என்க.

குஸ்ருகான் படை எடுப்பாலும், 1335-லிருந்து பாண் டியர் ஆட்சி வீழ்ந்து, மதுரையில் ஒரு நாற்பதாண்டுக் காலம், தமிழறியா வடநிலச் சுல்தான்களின் ஆட்சி நடை பெற நேர்ந்ததாலும், சுல்தான் தகீயுத்தீன் குடும்பத்தினர், அவருக்குப்பின், அரச வாழ்வை இழந்து, அல்லது மறுத்து வெறும் வணிக வாழ்வினராக ஆகிவிட்டனர் எனத் தெரி கின்றது. ஆனால், அவர்கள் தம் வழித் தோன்றல்கள், தங் களின் பெயர்கட்கு முன்னம் அரசர் என்று குறிக்கின்ற 'மலிக்' என்ற அரபிச் சொல்லை இணைத்தே பெயரிட்டுக் கொண்டுள்ளனர். இது, பிற்காலத்தில் தமிழாக்கப்பட்டு பட்டத்திற்குரியவர் என்ற பொருள் தொக்க, 'பட்டத்து தம்பி' என்ற சொல்லினைத் தம்பெயருடன் இணைத் துக்கொள்கின்ற மரபினை உண்டாக்கியுள்ளதைக் காண் கின்றோம். இவ்வடிப் படையில்தான் வள்ளல் சீதக் காதியை 'பட்டத்துப் பெரியதம்பி' என அழைத்துள்ள னர் மக்கள். ஆம், வள்ளல் சீதக்காதி என்கின்ற செய்ஹப் துல் காதிர் மரக்காயர் அவர்கள், மலிக்குல் அஃலம் சுல் தான் தகீயுத்தீன் [அரசர்] வழித் தோன்றலேயாவார்.

சுல்தான் தகீயுத்தீன் மகன் பெயர் சிராஜுத்தீன்,

இந்த சிராஜுத்தீன் என்பவரே வடபுலமிருந்து படை நடத்தி வந்த குஸ்ருகான் என்பானிடம் சிக்கி இடர்பல உற்றார் என வரலாறு கூறும். குஸ்ருகான் படை நடத்தி வந்தது கி. பி, 1319ஆம் ஆண்டாகும்.

குஸ்ருகான் சிராஜுத்தீன் மீது ஆத்திரமடைந்து, இடர் செய்யக் காரணம் உண்டு.

1. சிராஜுத்தீன், அவர் தந்தை காலத்தில் நாட்டப் பெற்ற பெருமபுகழை இழக்காமல் மேலும் வலுப்படுத்துவோராயிருந்தார்.

2. பாண்டிய மன்னர்களின் நட்பிற்குரியவராகவும், அவர்கள் தம் ஆட்சி தமிழகத்தில், குறிப்பாக பாண்டிய நாட்டில் நன்கு நடைபெறவும் பாடுபடுகின்ற பரம்பரையினராயிருந்தார்.

3. பாண்டியனின் பிரதிநிதியாகச் சீனநாடு சென்று வந்துள்ளார்.

4. பெரும் செல்வந்தராக வாழ்ந்தார்.

5. அரபியராகவும், நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தோன்றிய குறைஷிக் குலத்தவராகவுமிருந்தார். டில்லி முஸ்லிம் அரசர்கள் அரபியரல்லர். குறிப்பாக குஸ்ரு கான் 'பட்டான்' இனத்தவன். மேலும்.

6. டில்லிப் பேரரசு பாண்டிய நாட்டில் காலூன்றுவதை எதிர்ப்பவராகவும், இத்தன்மையைப் பரம்பரையாகப் பெற்றவராகவும் சிராஜுத்தீன் விளங்கினார்.

எனவே, பாண்டியர்கள் மீது கொண்ட கோபத்திலும் அதிகக்கோபம் கொண்டான் சிராஜுத்தீன் மீது குஸரு கான். அவரை, அவர்தம் குடும்பத்தைக் கோத்திரத்தைத் துன்புறுத்தினான். சொத்துக்களை கொள்ளையிட்டான்...

இவரைப் போன்றே இவர்தம் மைந்தரான நிஜாமுத்தீன் என்பாரும் கொடுமைகட்கு ஆளானதாகக் கூறப்படுகின்றது.

நிஜாமுத்தீனுக்கு ஒரு அழகிய மகளிருந்ததாகவும் அவ்வழகியைத் தனக்கு மணம் முடித்துத் தருமாறு குஸ்ரு கான் கேட்டதாகவும், மறுத்துரைக்கவே, நிஜாமுத்தீனைக் குஸ்ருகான் கொன்று விட்டதாகவும் சில வரலாற்றாசிரியர்

கள் குறித்துள்ளனர். குறிப்பாக, கிருஷ்ணசாமி ஐயங்கார் எழுதியுள்ள South India and Her Muhammadan Invaders என்ற நூலிற காணலாம்.

நிஜாமுத்தீனுடைய மகள், குஸ்ருகானை விரும்பாமல் தற்கொலை புரிந்து கொண்டதாகத் தெரிய வருகின்றது. கீழக்கரைக்கு அண்மையிலுள்ள பெரிய பட்டணம் என்கின்ற ஊரில், உள்ள பள்ளிவாசல் தூண் ஒன்றில், இந்த நிகழ்ச்சியை நினைவு படுத்துகின்ற வாசகம் ஒன்று— ''உலகில் தோன்றிய அனைத்தும் அழியக் கூடியதே'' எனபதாக உள்ளது. நிஜாமுத்தீனுடைய மகளின் மரணத்தை ஒட்டியே இவ்வாசகம் வரையப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர். அங்குள்ள மீசான் (நடு) கல் ஒன்றில்—''சிறந்த தியாகம் செய்த பெண்ணின் கல்லறை இது'' எனக் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்லறை, அப்பெண்ணின் கல்லறை என்று நம்பப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சியின் காரணமாகவோ என்னவோ, இதன் பிறகு நிஜாமுத்தீன் பரம்பரையினரில் மூன்று அல்லது நான்கு தலை முறையினர் பற்றி ஒரு நூற்றாண்டு கால வரலாற்றினைச் சரியாக அறிய இயலவில்லை. கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு வள்ளல் சீதக்காதியின் பரம்பரையைக் கீழ்க்கண்ட வகையில் தொகுத்துரைக்கலாம்.

1. சுல்தான் தகியுத்தீன்
2. ,, சிராஜுத்தீன்
3. ,, நிஜாமுத்தீன்
4. மலிக் சுங்கங் கட்டளை செய்யது மரக்காயர்
5. ,, முளம்மர் மரக்காயர்
6. ,, மஹ்மூது நயினார் மரக்காயர்
7. ,, பெரிய தம்பி மரக்காயர் என்கின்ற—சுல்தான் அப்துல் காதிர் மரக்காயர்.
8. சீதக்காதி என்கின்ற ஷேஹ்அப்துல்காதிர் மரக்காயர்.

சுல்தான்—மலிக் என்பவை, மன்னன் என்கின்ற பொருளுடைய அரபிச் சொற்கள்.

# வள்ளல் சீதக்காதி

சீதக்காதி மரக்காயரை, அவர் தம் வள்ளல் தன்மையால் நாடறியும். அவருடைய நிர்வாகத் திறமையை டில்லிப்பேரரசு அறிந்திருந்தது. வளமிக்க வணிகச் சிறப்பை சென்னையைத் தலைமை நிலையமாகக் கொண்டு இயங்கிவந்த ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தக சபை நன்கு தெரிந்திருந்தது.

இவை மட்டுமின்றி, ராமநாதபுரம் சேதுபதி மன்னர் தம் வீட்டுச் செல்லப் பிள்ளையாக, அவர்களில் ஒருவராக, அவர்களின் அமைச்சராக, உறவு முறையில் பட்டத்துப் பெரிய தம்பியாக வாழ்ந்தவர் வள்ளல் சீதக்காதிமரக்காயர். இவருக்கு, ரவிகுல ரகுநாத முத்துவிஜய பெரியதம்பி பட்டத்துமரக்காயர் என்கிற விருதுப்பெயர், இராமநாதபுரம் அரசர், கிழவன் சேதுபதி அவர்களால் வழங்கப்பட்டதென்பர். இவர் காலம் 1674—1710. இராமநாதபுரம் மானுவல் பக்கம், 106. இவ்விருதுப் பெயரின் சுருக்கமே பட்டத்துப் பெரியதம்பி மரக்காயர் என்பது. கடந்த இரண்டு தலைமுறைக்கு முன்புவரை, வள்ளல் சீதக்காதி மரக்காயர் தம் குடும்பத்தினர், பட்டத்துப் பெரிய தம்பி என்கின்ற விருதுப்பெயரை குடும்பத்தில் மூத்தவருக்கு இட்டு வந்துள்ளனர் என்பதற்கு அக்கால கிரயப் பத்திரங்கள் சான்றாக உள்ளன. பட்டத்துப் பெரிய தம்பி என்பதில் உள்ள 'ப' என்ற முதலெழுத்தைத் தமது பெயரின் முதல் எழுத்தாக அப் பரம்பரையினர் இன்றும் கையாள்வதாகத் தெரிகின்றது.

வள்ளல் சீதக்காதி மரக்காயருடன் பிறந்த சகோதரிகள் இல்லை எனத் தெரிகின்றது. இரண்டு சகோதரர் இருந்ததாக அறிகின்றோம். இருவரும் வயதால் வள்ளலினும் இளையோரேயாவர்.

மாமுநயினு(ர்) என்ற பட்டத்து முகம்மது அப்துல் காதிர் என்றும், ஷேஹ்கு இபுருஹீம் என்றும் இவர்களைக் குறிப்பர்.

மாமுநயினு மரக்காயர் என்கின்ற தம்பி, வாழ்க்கையில் மட்டுமின்றி, கல்லறையிலும் வள்ளலை அடுத்து இடம் பிடித்துக்கொண்டுள்ளார். ஆம், அவ்விருவர் கல்லறைகளும் கீழக்கரை புதிய குத்பாபள்ளி முகப்பில் இலங்குவதைக் காணலாம்.

இவ்விருவரின் இளவலான ஷேஹ்குஇபுருஹீம் அவர்களின் அடக்கத்தலம், கீழக்கரைக்கு அண்மையில் உள்ள வேதாளை என்னும் ஊரில் இருக்கின்றது. அச்சமாதியின் தலைமாட்டிலுள்ள மீசான் (நடு) கல்லில் காணப்படுபவை தான், சுங்கங்கட்டளை செய்யது மரக்காயரிலிருந்து தொடங்கி, சீதக்காதி என்கின்ற ஷேஹ்அப்துல்காதிர் மரக்காயர் முடிய உள்ள (சில்சிலா) தலைமுறை விளக்கம்.

வள்ளல் சீதக்காதியின் முன்னோரே தகீயுத்தீன் என்பதற்கு ஆதாரம், ''சீதக்காதி திருமண வாழ்த்து நூலில்'' உள்ளது. சிராஜுத்தீன் என்பவர், தகீயுத்தினுடைய மகன் என்பதற்கும், இவரின் மைந்தர்தான் நிஜாமுத்தீன் என்பதற்கும் வரலாற்றுதாரம் உண்டு. சுங்கங்கட்டளை செய்யது மரக்காயர் சீதக்காதி மரக்காயருக்கு, நான்கு தலைமுறைக்கு முந்தியவர் என்பதற்கு நடுகல் ஆதாரம் உள்ளதால், அவரை நிஜாமுத்தீன் வழிவந்தோர் எனக்கொள்ள வியல்கின்றது. முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன், சுல்தான் தகீயுத்தீனைக் கடல் காவலராகவும், அதர்வது சுங்கப் பொறுப்பாளராகவும் கொண்டிருந்தார் என்பது வரலாறு. செய்யது மரக்காயர் பெயருக்கு முன்பாக 'சுங்கங்கட்டளை' என்று குறிச்கப்பட்டிருப்பதால், இந்த செய்யது மரக்காயர் சுல்தான் தகீயுத்தீன் வழியினராவார் என உறுதிப்படுகின்றது. எனவே வள்ளல் சீதக்காதி மரக்காயரின் பரம்பரையினர் கீஷ்தீவிலிருந்து இன்றைக்கு ஏழு நூறு ஆண்டுகட்கு முன்பு கீழக்கரையில் வந்துறைய வாரம்பித்த அரபியர், அரச குடும்பத்தினர் என அறிய முடிகின்

றது. மட்டுமின்றி, கீழக்கரைக்கு வந்துற்ற பின்னரும், ஐந்து பாண்டியருடன் ஆறும் பாண்டியனுக அமர்ந்து, பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை,செம்பி நாடென்கின்ற கீழக்கரைப் பகுதியை ஆண்டிருந்தனர் என்றும்[வரலாறு] அறிவிக்கின்றது. இவற்றேடின்றி, வள்ளல் சீதக்காதிமரக்காயரின் தந்தை வழியினர் மட்டுமின்றி, தாய் வழியினரும் புகழிற்குரிய, சிறப்பு வாய்ந்த குடும்பத்தினர் என்பதையும், கீழக்கரையைத் தமது தாயக ஊராகக் கொண்டு வாழ்ந்தவர்கள் என்றும் அறியச் செய்கின்றது. ஆம்,வள்ளல் சீதக்காதி மரக்காயரின் தாயாருடைய தந்தை பெயர் வாவாலி மரக்காயர் என்பதாம். இவருடைய அடக்கத் தலம், கீழக்கரையின் பழைய குத்பாப் பள்ளிச் சுற்றுச் சுவர்கட்கு உட்பட்ட இடததில் காணப்படுகின்றது. அங்குள்ள [நடுகல்லாகிய] மீசானில் வாவாலி மரக்காயர் இறப்பெய்திய நாள் கி.பி. 1614-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25-ம் நாள் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

# வள்ளல் சீதக்காதியின் வழித் தோன்றல்கள்

வள்ளல் சீதக்காதி மரக்காயர் அவர்கட்கு, ஆண் சந்ததி இல்லை என்கின்றனர். பெண் வழியில் வந்தோர், விரிவு படப் பெருகி, நிறைந்த அளவில் இன்றும் கீழக்கரையில் வாழ்ந்து வருகின்றுர்கள் என அறிய முடிகின்றது.

சுமார் ஐம்பதாண்டுகட்கு முன்னர், ''ஆசாரக் கோவை'' எனும் தலைப்பில், அறிவுரைச் சிற்றிலக்கியக் காப்பியம் இயற்றியுள்ள அப்துல் மஜீத் புலவர், வள்ளல் சீதக்காதி மரக்காயரின் மகள் வழி வந்த மகாகவி என்று தெரிகின்றது.

வள்ளல் சீதக்காதி மரக்காயர் ஈட்டிய பொருளேவிடப் புகழே மிகுதி. அறிவும் அறமும் அவர் தம் உடன் பிறப் பெனலாம்.

இறைவன் மனிதனுக்குச் செல்வத்தை நல்குவது ஏன் என்பதைச் சரியாக அறிந்தவர் வள்ளல் சீதக்காதிமரக் காயர் ஆவார். ஆம், இன்றும், இனி என்றென்றும், இந்த நியதியை அறிந்து கொள்கின்ற அறிவு படைத்தோரை யெல்லாமே வள்ளல் சீதக்காதி என்றே பெருமையுடன் சுட் டலாம். அத்தகு சிறப்புடைய அறவாழ்வு வாழ்ந்துள் ளார் வள்ளல் சீதக்காதி மரக்காயர்.

''திருவேறு தெள்ளியராதலும் வேறு'' என்பான் வள் ளுவன். இதை உலகத்தின் இரு வேறு இயற்கை என்றும் இயம்புவான். ஆனல், வள்ளல் சீதக்காதி மரக்காயரைப் பொறுத்தவரை இதனே மாற்றி உரைக்க வேண்டும். ஆம்;

'திரு' என்கின்ற செல்வமும், தெள்ளியரென்கின்ற அறிவும் படைத்திருந்ததன்றி, வழங்கி வாழுகின்ற வள்ளி யோராகவும், மக்களே நேசிக்கின்ற உயிரின ஒருமைப் பாட் டினே உவப்பராகவும், கற்ருேரின் உற்ற தோழராகவும், அரசறிந்த வாழ்வினராகவும் வாழ்ந்து சிறப்புற்றிருக்கின் ருர் வள்ளல் சீதக்காதி.

நொண்டி நாடகம் இயற்றுகின்ற மரபு இவரிலிருந்தே துவக்கமாவதைக் காண்கிருேம்.

வள்ளித் திருமணம், சீதாக்கல்யாணம், மீனுட்சி திரு மணம், ருக்மணி கல்யாணம் என்று, பெண்பால் தெய்வங் களின் பெயராலேயே திருமண வாழ்த்துரைக்கின்ற மர புள்ள தமிழ் நாட்டில், ஆண்மகன் பெயரில் உள்ள ஒரே ஒரு திருமண நூலாக வள்ளல் 'சீதக்காதி திருமண வாழ்த்து' நூலினேக் காண்கின்ருேம். ஆம், தெய்வத் திரு மணத்தைப் பாட இந்து சமயப் புலவர்கட்கு அனுமதி யிருக்கின்றது. இஸ்லாம், இறைவனுக்கு மனேவி மக்கள் உண்டென்று கற்பிப்பதில்லே. இறைவன் இணே துணே

யற்ற ஏகன், உருவிலி என்பது இஸ்லாமியநெறி. ஆகவே, இங்கே இறைவியின் திருமணத்தைப் பாட இடமில்லை. எனவேமனிதத்திருமணத்தைப்பாடுகின்ற மரபைஇஸ்லாம் ஈந்துள்ளது. "சீதக்காதி திருமண வாழ்த்து நூல், புதிய மரபை தமிழிற்குத் தந்துள்ளது. இலக்கியத்தில் மறு மலர்ச்சி கண்ட வாழ்வு சீதக்காதி வாழ்வு. சீதக்காதியைப் பாடாப்புலவன் சிறப்பற்ற புலவனே" என நாட்டுமக்கள் கூறுகின்ற அளவிற்கு, அவர்கால புலவர் அனைவராலும் புகழ்பட வாழ்ந்துள்ளார் வள்ளல் சீதக்காதி மரக்காயர்.

ராமேசுவரம் ஆலயத்திற்கு இவர் செய்த சிறப்பான அறக் கட்டளையை இவருடைய திருமண வாழ்த்து நூல் பகர்கின்றது.

ஏற்றமிகு இஸ்லாம் இவருடைய இதயம் ஏற்றுள்ள இனிய சமயம். ஆனால், ஈவதில், இணக்கமுடன் பழகுவதில் இவர் சமய வேற்றுமை காட்டுபவ ராயில்லை.

பசித்த வர்க்கத்தைப் பணம் படைத்த வர்க்கம் காப்பாற்றக் கடமைப் பட்டதென்பது இவர் கைக்கொண்ட சமத்துவ நெறி.

"ஏழைகளின் பணமே சீமான்களிடமுள்ள செல்வம் அனைத்தும்" என்கின்ற அண்ணல் நபி அவர்கள் தம் அரும் வாக்கியத்தை உணர்ந்து, அதனைச் செயலாக்கம் செய்த சீமான் வள்ளல் சீதக்காதி மரக்காயர்.

வணிகத்திலும் அறநெறியைக் கடைப் பிடித்த அரிய வாழ்வினர் வள்ளல் சீதக்காதி மரக்காயர்.

வள்ளல் சீதக்காதி மரக்காயர் மட்டிமின்றி, அவர்தம் முன்னோர்களும் பிறந்தது, வாழ்ந்தது, மறைந்தது எல்லாமே கீழக்கரையில்தான் என்பதை வரலாறு மெய்ப்பிக்கின்றது.

வள்ளல் சீதக்காதி மரக்காயர் வாழ்ந்த வீடு, கட்டிய பள்ளிவாசல், அவர்தம் வசந்த மாளிகை, தோப்புகள், தோட்டங்கள் எல்லாமே கீழக்கரையில் மட்டுமேஉள்ளன.

புலவர்கள் பாடியுள்ள வள்ளல் சீதக்காதி மரக்காயரின் ஊராகிய, காயல், தென்காயல், வகுதை, வகுதாபுரி என்பனவெல்லாம் கீழக்கரையை மட்டுமே சுட்டுகின்ற பெயர்களாக உள்ளன.

செம்பிநாடென்பதும், பவித்திரமாணிக்கப் பட்டணம் என்பதும் கீழக்கரையேயாகும். இவையேயின்றி, இன்னும் பல பெயர்களும் கீழக்கரைக்கு உண்டு.

இவற்றையெல்லாம் நன்கு ஆய்ந்து கண்டதினாலேயே அரபி, உருது, பார்ஸி, ஆங்கிலம் ஆகிய பன்மொழி அறிந்த பண்டிதராகிய டாக்டர் S. முகம்மது ஹுசைன் நயினார் M.A., LL.B., Ph.D., அவர்கள், தாம் எழுதி வெளியிட்டுள்ள 'சீதக்காதி வள்ளல்' என்ற அரிய தமிழ் நூலில், வள்ளல் சீதக்காதி மரக்காயர் பிறந்ததும், வாழ்ந்ததும், இறந்ததும், அவர்தம் முன்னோர்கள் வாழ்ந்ததும் கீர்த்திமிகு கீழக்கரையே எனச் சுட்டியுள்ளார்.

கடை ஏழு வள்ளல்கட்குப் பின்னர் வள்ளலில்லை என்கின்ற குறை தீர்க்கத் தோன்றியவர் வள்ளல் சீதக்காதி மரக்காயர். இவருக்குப் பின்னர் இவரை யொத்த வள்ளல் ஒருவரைத் தமிழ் நிலம் இன்று வரை பெற்றிருக்கவில்லை.

ஒழுக்கத்திற்காக ஒரு சுவர்க்கத்தையும், நடத்தைக்காக ஒரு சுவர்க்கத்தையும், நற்பண்பிற்காக ஒரு சுவர்க்கத்தையும், பழகும் முறைக்காக ஒரு சுவர்க்கத்தையும், தான் ஏற்றொழுகிய சமய ஆசார மேம்பாட்டிற்காக ஒரு சுவர்க்கத்தையும், ஈந்த அறத்திற்காக ஒரு சுவர்க்கத்தையும், கற்ற கல்விக்காக ஒரு சுவர்க்கத்தையும், கல்விமான்களை நேசித்ததற்காக ஒரு சுவர்க்கத்தையும் இறைவன் ஈவானென்றால், அத்தனை சுவர்க்கங்களையும் அடைகின்ற தகுதி படைத்தவர் வள்ளல் சீதக்காதி மரக்காயராவார்.

இவரைப் பெற்றதால் கீழக்கரை புகழிற்குரிய, கீர்த்திமிகு கீழக்கரையாயிற்று.

இவருக்கு முன்னரும் பின்னரும், கீழக்கரை மாநகரில் வாழ்ந்த ஞானவான்கள், கல்விவான்கள், புலவர்கள், புர

வலர்கள் பலருண்டு. கீழக்கரையில் இருந்து எழுந்த அரபி 'கஸீதாக்கள்' அரபுத் தமிழ் ஞானநூல்கள், தமிழ்க் காவியங்கள், ஞானப்பாடல்களைக் கொண்ட நன்நூல்கள், இறை துதிப்பாமாலைகள், பாசுரங்கள் ஏராளம் ஏராளம்!

இவை போன்றே இங்கெழுந்துள்ள அரபி ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், அரபிக் கல்லூரிகளும் பலவாம்.

தொழுகின்ற பள்ளிகள், பெண்கள் தொழுவதற்கென்றே தனியாக உள்ள பள்ளிகள், ஞானவான்களின் அடக்கத்தலங்களாகிய தர்க்காக்கள் ஆகியவை இங்கே எண்ணிலாதன உண்டு.

இவற்றைத் தொகுத்துக் காணுதல் பயனுடையதாம்.

# வள்ளல் சீதக்காதியின் முதல் தம்பி மாமுநயினா மரக்காயர்

மாமுநயினா மரக்காயரின் முழுப்பெயர். முஹம்மது அப்துல் காதிர் மரக்காயர் என்பதாகும். வள்ளல் சீதக்காதி மரக்காயரின் மறைவிற்குப் பின்னர் இவரே பட்டத்திற்குரியவரானார் என்பதால், இவர் பெயருக்கு முன்னால் பட்டத்தார் என்பதையும் சேர்த்துக் குறித்திருக்கக் காண்கின்றோம். அதாவது, பட்டத்து முஹம்மது அப்துல் காதிர் மரக்காயர் என இவரைக் குறித்துள்ளனர். இவருக்குப் பின்பு, இவருடைய சந்ததியாரில் தலைமுறை தலைமுறையாகக் குடும்பத்தில் உள்ள மூத்தவருக்குப் 'பட்டத்தார்' என்கின்ற விருதுப் பெயர் சேர்க்கப்பட்டு வந்துளது. இன்றுள்ளோர் அதன் நினைவாக 'ப' என்கின்ற எழுத்தை இணைத்துக் கொள்கின்றனர். மாமுநயினா மரக்காயரை நொண்டி நாடகத்தில், அதன் ஆசிரியர், செஞ்சியில்

வைத்து அறிமுகப்படுத்துகின்ருர். வெறும் அறிமுக மன்று. களவு புரிந்தோனுக்கும் அருள் பாலித்து உதவுப வராக அறிமுகம் செய்கிருர். வள்ளல் சீதக்காதி மரக் காயரின் தம்பியல்லவா? நல்ல அறிமுகம்.

அழியாத் தன்மையில் நூலில் இடம பெற்றுள்ள இந்த மாமுநயினு மரக்காயர் என்கின்ற பட்டத்து முஹம் மது அப்துல்காதிர் மரக்காயரின் ஓரே மகன் பட்டத்து அபூபக்கர் மரக்காயர்.

# பட்டத்து அபூபக்கர் மரக்காயர்

இஸ்லாமிய உலகம் நன்கறிந்த ஞானவள்ளல் சதகத் துல்லா அப்பா அவர்களின் மகளாரான சாரா உம்பாவை மணந்துகொண்டுவாழ்ந்த, புகழிற்குரியார் ஆவார் இவர். இதற்கான சான்றினே, கீழக்கரை பனி அஹ்மது மரக் காயர் அவர்கள் யாத்தளித்துள்ள சின்னச்சீரு என்னும் செழுங்காப்பியத்தின் பாயிரத்தில் காணலாம்.

இந்தப் பட்டத்து அபூபக்கர் மரக்காயருக்கு மூன்று ஆண் மக்கள் இருந்ததாகத் தெரிய வருகின்றது.

மூத்தவர் பெயர் பட்டத்து லெப்பை நயினு மரக் காயர். இரண்டாவது மகனின் பெயர் அப்துல்காதிர் மரக்காயர் என்பது. இப்பெயர் வழக்கு முறையில் 'அவ் வாகாரு' என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

மூன்ருவது மகனின் பெயர் செய்யது முகம்மது மரக்காயர்.

பட்டத்து லெப்பை நய்னு மரக்காயரின் மகன் பெயர் அப்துல் காதிர் மரக்காயர் ஆகும். இவரே அடைக்கல மாலே பாடிய அப்துல் காதிர் மரக்காயர்.

பட்டத்து லெப்பை நெய்னு மரக்காயர், ஐதுரூஸ் என்னும் பெயரில், மிகப்பெரிய புதிய கப்பல் ஒன்றைக் கட்டி, முதல் பயணமாக அக்கப்பலைப் புனித ஹஜ் யாத்திரைக்கு ஓட்டினுர். அக்கப்பலில் இவர் தம் சொந்தச் செலவில் நூற்றுக்கும் அதிகமானவர்களை அழைத்தேகினுர். இவ்வாறு அழைத்தேகப்பட்டவர்கள் ஆலிம்களாகவும், முப்தி, காரிகளாகவும், கவிஞர், புலவராகவும், ஞான வழி (சூபி) நாட்டத்தினருமாவர். இவர்கட்கான முழுச் செலவுமே பட்டத்து லெப்பை நெய்னு மரக்காயர் அவர்களைச் சார்ந்ததாயிருந்துள்ளது. இதற்கான சான்றினை ஞானவொலி நாயகமான கல்வது நாயகம் அவர்களால் இயற்றப்பட்டுள்ள ஞான உலகின் மாமேதை சதக்கத்துல்லா அப்பா அவர்களின் வரலாற்று நூலில் காணலாம். சின்னச்சீறுவிற்கும், ''திருமணக்காட்சி'' எனும் நூலிற்கும் கொடை நாயகர் இவரே!

அடைக்கலமாலை பாடிய அப்துல் காதிர் மரக்காயரின் மகனுரின் பெயர் பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரக்காயர் என்பதாம். இவரும் இவர் தம் முன்னேர்களைப் போன்றே ஈயும் தன்மையை இயல்பாகக் கொண்ட வள்ளலாவார், நல்ல கல்விமான்; சிறந்த ஞானி. இராமநாதபுரம் சேதுபதியுடன் நெருக்கமான நட்புப்பூண்டவர். இவர்களின் நட்பு, உறவுமுறை செப்பி அழைத்துக்கொள்ளுமளவிற்கு ஒன்றியதாக, உயர்ந்ததாக இருந்ததென்பர்.

# பட்டத்து செய்யது முஹம்மது ஆலிம் மரக்காயர்

பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரக்காயருக்கு இரண்டு ஆண்மக்கள். மூத்தவர் பெயர், பட்டத்து செய்யது முஹம்மது ஆலிம் மரக்காயர் என்பது. இரண்டாம்

மகன் பெயர் லெப்பை சாஹிப் மரக்காயர் என்பதாம். இவ்விருவரைப் பற்றியும் புலவர் நாயகம் என்கின்ற விருதுப் பெயரினையுடைய சேகுனாப் புலவர் பாடியுள்ள நிருபச் செய்யுள் [சீட்டுக்கவி] சான்று பகர்கின்றது.

லெப்பை சாஹிப் மரக்காயரின் மக்களில் மூத்தவர் பெயர் லெப்பை நெய்னா மரக்காயர் என்பது. அத்தாவுல்லா ஹாஜி மரக்காயர் என்பவர் இரண்டாம் மகன்.

## ப. அத்தாவுல்லா ஹாஜி மரக்காயர்

அத்தாவுல்லா ஹாஜி மரக்காயருக்கு இரண்டு மக்கள் - முதல் மகன் பெயர் முஹம்மது இத்தீரீஸ் மரக்காயர் ஆகும். இரண்டாம் மகனின் பெயர் அப்துல் குத்தூஸ் மரக்காயர் என்பதாம்.

இவ்விருவரும் செழிப்போடும், நலத்தோடும் இவர்கள் தம் முன்னோரைப் போன்றே இரத்தின வணிகராக வாழ்ந்து வருகின்றார்கள். இவ்விருவருக்கும் குழந்தைச் செலவங்கள் உண்டு.

வள்ளல் சீதக்காதி மரக்காயரின் முதல் தம்பியாகிய பட்டத்து மாமு நெய்னா மரக்காயர் என்பவரின் சந்ததி விளக்கம் மேலே தரப்பட்டுள்ளது. இவர்களே இன்று வள்ளல் சீதக்காதியின் வாரிசுகளாக விளங்கி வருகின்றார்கள்.

வள்ளல் சீதக்காதி மரக்காயரின் கடைசித் தம்பியாகிய ஷேஹ்குஇபுருஹீம் என்பவரின் வழித்தோன்றல்களும் கீழக்கரையில் வாழ்ந்து வருகின்றனர். இவர் தியாக வாழ்வினர் என்பது, இவர் தம் சமாதியிலுள்ள மீசான் (நடு) கல்லில் காணப்படுகின்ற குறிப்பின் மூலம் அறிய முடிகின்றது. இவருடைய அடக்கத்தலம் (சமாதி) வேதாளை என்னும் ஊரில் உளது. இதில் உள்ள மீசான்

(நடு) கல், வள்ளல் சீதக்காதி மரக்காயருடைய முன்னோர் களை நான்கு தலைமுறை [நான்கு தலைமுறை வரை செப்பு வது இஸ்லாமிய மரபு] யினர் வரை அறிய முடிகின்றது. இவற்றை அறியாத பாமர மக்களே, வள்ளல் சீதக்காதி மரக்காயர், ஏழைக் குடும்பத்தில் பிறந்தாரென சொல்லிப் பழகிவிட்டனர். உண்மையில் வள்ளல் சீதக்காதி பரம்பரை, செல்வத்தில் திளைத்த வணிக வள முடையதென்பது மட்டுமின்றி, அறவாழ்வுடைய அரச பரம்பரையாகும்.

## பள்ளிகள் கட்டியவர்

மாமுநெய்னு என்கின்ற பட்டத்து அப்துல் காதிர் மரக்காயரின் மகனாகிய பட்டத்து அபூபக்கர் மரக்காய ருடைய இரண்டாவது மகனாகிய அவ்வாகாரு என்கின்ற அப்துல் காதிர் மரக்காயர் தான் இன்று கீழக்கரையி லுள்ள பெரிய குத்பாபள்ளியைக் கட்டி முடித்தவர். இப் பள்ளியைக்கட்டுவதற்கு அடித்தளம் அமைத்தவர் வள்ளல் சீதக்காதி மரக்காயர் ஆவார். பள்ளியைக் கட்டி முடித்த அவ்வாகாரு மரக்காயர் என்கின்ற அப்துல்காதிர் மரக்கா யருடைய அடக்கத்தலம் (சமாதி) பெரிய குத்பாபள்ளியின் முகப்பிலேயே இன்றும் உளது. இப்பள்ளியைத் தவிர்த்து கீழக்கரைப் புதுப்பள்ளியையும், காயல் பட்டணத்தில் உள்ள புதுப்பள்ளியையும் கட்டியவரும் இவரே என்பர்.

## ஹபீ பரசர்

இந்த 'அவ்வாகாரு' மரக்காயரின் மகள் பெயர் முகம் மது இபுருஹீம் அம்மாள் என்பது. (ஆண்சந்ததி இல்லை) இந்த அம்மாளின் கணவன் பெயர் முகம்மது இஸ்மாயில் லெப்பை மரக்காயர். இவ்விருவருக்கும் பிறந்தவரே இரண் டாவது சீதக்காதி என்று சொல்லுமளவிற்குச்சிறந்தவள்ள

லாக வாழ்ந்த ஹபீபரசர் என்கின்ற சிறப்புப் பெயர் பெற்றுத் திகழ்ந்த ஹபீபுமுகம்மது மரக்காயர். இவருடைய அறவாழ்வு தனியாகத் தரப்படும்.

## கிளையினர்

மாமுநெய்னு என்ற பட்டத்து அப்துல்காதிர்மரக்காயருடைய மகன் பட்டத்து அபூபக்கர் மரக்காயரின் கடைசி மைந்தனுகிய செய்யதுமுகம்மது மரக்காயரின்கிளையினரும் கீழக்கரையில் செல்வச் சிறப்புடன் இன்றும் வாழ்கின்றனர்.

## வள்ளல் சீதக்காதி வாழ்ந்த காலம்

வள்ளல் சீதக்காதி மரக்காயரின் முன்னோர்களைப்பற்றியும் அவர் தம் பின்னோர், அவர்களின் தோன்றல்கள் ஆகியோரைப் பற்றியும் அறிந்தோம். இனி வள்ளல் சீதக்காதி மரக்காயர் காலம் எது எனக் காண்போம்.

வள்ளல் சீதக்காதி மரக்காயர் வாழ்ந்தகாலே, தமிழகத்தில் மதுரையில்நாயக்கப்பேரரசு நடைபெற்றுக்கொண்டிருந்திருக்கின்றது. இதுபோலவே தஞ்சையில் ஒரு நாயக்கப் பேரரசு நடைபெற்றிருக்கின்றது. செஞ்சியில் நாயக்கர் ஆட்சி நடந்து, அதை வீழ்த்த மராத்தியப் படையெடுப்பும், இதனூடே கோல்கொண்டாப்படைஎடுப்பும், கோல்கொண்டாவை வீழ்த்த டில்லிப் பேரரசின் படையெடுப்புமெனப் பல படை எடுப்புகளால் செஞ்சி திருவண்ணமலேப் பகுதிகள் இன்னல்கட்காளாக்கப் பட்டிருந்தன



கீழ்க்கரை ஜும்ஆப் பள்ளிவாசல் முகப்பில் அடக்கமாகி யிருக்கும் அவ்வாக்கார் மரைக்காயர் என்ற அப்துல் காதிர் மரைக்காயரின் கப்று. புகழ்பெற்ற இப்பள்ளியைக் கட்டி முடித்தவர் இவர்களே.

தெற்கே வடவெள்ளாற்றினுக்கு தென்பாலுள்ள வாலி கொண்டாபுரம்-ரஞ்சன் குடிக்கோட்டையில், கோல் கொண்டாவின் பிரதிநிதி ஆட்சி இருந்தது. அதன் காரணமாக வாலி கொண்டாபுரம், கண்ணனூர்ப் பகுதிகள் படை முகாம்களாக விளங்கின. ஆர்க்காட்டில் நவாப் ஆட்சி இருந்தது. கடலூரின் கடற்கரை அருகே உள்ள தேவனும் பட்டணத்தில் இருந்த வெள்ளேயர் வர்த்தகக் கம்பெனி சென்னேக்கு மாற்றப்பட்டு,இன்றுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தலைமைத் தலம் அமைந்திருந்தது.

மதுரை நாயக்கப் பேரரசு அமைத்த பாளேயப்பட்டுகளின் ஆதிக்கம் திருச்சி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் வலுவற்றிருந்தது.

ராமநாதபுரத்தில் மட்டுமே சேதுபதி என்ற தமிழ் மன்னராட்சி இருந்தது. புதுக்கோட்டையில் தமிழ் மன்னராட்சி துவக்கமாகியிருந்தது. திருமெய்யம், கீழ நிலக் கோட்டைகளில் பொன்னுச்சாமித்தேவரின் முன்னோர்கள் கோட்டை கட்டி ஆட்சி புரிந்து வந்தனர். வடஆர்க்காடு, தென்னுர்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் பல நகரங்களில் கில்லேதார் (கலேக்டர்)களின் ஆட்சி நடந்தன.இவற்றில் பல ஆர்க்காட்டரசைச் சார்ந்தனவாகவும், சில கோல்கொண்டா வுடையனவாகவும், சில டில்லியின் கீழ்ப்பட்டனவாகவும் துவங்கி, தன்னுட்சிக்கு விரிவுபட்டு சுயேச்சைத் தன்மையில் நடைபெற்றனவெனலாம்.

போர்த்துக்கீசியர்-டச்சுக்காரர் சண்டைகள், பிரஞ்சுக்காரர், பிரிட்டிஷ்காரர் சண்டைகள் என வெள்ளேநிறத்தார்களிடையே நடைபெற்ற சண்டைகள் முடிந்து, முன்னிருவர்கள் விரட்டப்பட்டு, பின்னிருவர்களிடையே சண்டைகள் குறைந்து, புதுச்சேரியில் பிரஞ்சுக்காரர்களும், சென்னேயில் ஆங்கிலேயரும் அலுவலகங்களே வலுவாக அமைத்துக்கொண்டு வணிகம் புரியத் தொடங்கியுள்ள காலம் வள்ளல் சீதக்காதி மரக்காயர் காலம். மட்டுமின்றி கடல் வணிகத்தில் ஆதிக்கம் கொண்டிருந்த தமிழக முஸ்லிம் மரக்காயர்களின் வணிகச் செல்வாக்கை அழித்து

முடிப்பதில், பிரஞ்சு வணிகத் தாபனமும், பிரிட்டிஷ் வணிகத்தாபனமும் முனைந்து முன்னேறிக் கொண்டிருந்த காலம் வள்ளல் சீதக்காதி மரக்காயர் காலம் எனலாம்.

இன்னொரு வகையில் சொல்வதென்றால், ஈட்டிய செல்வத்தை நாட்டு மக்களுக்கு ஈவதே கடன் எனக்கொண்டு செயல்பட்டு வந்த முஸ்லிம் வணிகர்களின் மரபு அற்று விட ஆரம்பமாகியுள்ள காலம் என்றுகூட வள்ளல் சீதக்காதி காலத்தைக் குறிக்கலாம்.

ஆம், வள்ளல் சீதக்காதி மரக்காயர் காலம் வரை, எத்தகு கொடிய பஞ்சத்திலும், தமிழர்கள், நிலம்பெயர்ந்து கப்பல் பிரயாணம் செய்து, அந்நிய நாடு சென்று, அங்கே கூலிகளாக வாழ்ந்த வரலாறில்லை. வள்ளல் சீதக்காதிமரக்காயர் காலத்தைப் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்றும், பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதிஎன்றும் கணிக்க முடிகின்றது, இக்காலத்தே தமிழக மக்கள் நெட்டாலுக்கோ, பிஜி தீவிற்கோ, மலேயாவிற்கோ, பர்மாவிற்கோ, ஆபிரிகாவிற்கோ, இலங்கைக்கோ கூலிகளாகச் சென்றதாக வரலாறில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியப் பகுதிக்கு இப்பால்தான் இக்கொடுமைகள் நடைபெற்றுள்ளன. இதை ஊன்றி நோக்கின்,

வெள்ளையர் வரவுக்கு முன்பாக இங்கே வணிகம் புரிந்திருந்த தமிழக முஸ்லிம்கள், தாங்கள் அந்நிய நாடுகளுடன் நடத்திய ஏற்றுமதி (கடல்) வாணிகத்தின்மூலம், தமிழக மக்களின் தொழில் வளர உதவிக்கொண்டிருந்தார்கள். விவசாயத்தில் மக்களை ஆர்வம் கொள்ள ஊக்கி வந்தார்கள். கைத்தொழில்கள் வளர வகை செய்து வந்தார்கள். நித்தியக் கூலித் தொழிலாளர்கட்குத் தடையின்றி வேலை கிடைத்துவர உதவி வந்தார்கள். மக்களிடையே பசி, பட்டினி, பஞ்சம் போன்றவைகள் ஏற்படுமானால், தயங்காது வாரி வழங்கி உதவி, நிவாரணம் செய்திருக்கிறார்கள். இந்த வழியை—மரபை, வள்ளல் சீதக்காதி மரக்காயரும் பின்பற்றி, பிரதிபலித்துள்ளார் என்

பதை அவர்தம் வரலாறு மெய்ப்பிக்கின்றது இவர்தம் முன்னோர்களும், இவரைப் போன்றே வாரி வழங்கி, ஈந்து சிவந்த கரத்தினராகவே வாழ்ந்து வந்துள்ளனர் என்பதைப் 'பல்சந்த மாலை'ப் பாடல்கள் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன. முஸ்லிம்கட்குப் பின்னர், வணிகத்தின் பெயரில் இங்கே வந்த வெள்ளையர்களில், அவர்கள் எந்தப் பிரிவினராயினும் சரி, இந்நாட்டிற்கோ, இங்குள்ள மக்களுக்கோ, இந்த நாட்டின் தொழில் வளர்ச்சிக்கோ, எந்தவித உதவியும் செய்யவில்லை. நாட்டை அடிமைப் படுத்தி, தொழில்களை அழித்து, மக்களை அன்னிய நாடுகட்குக் கூலிகளாக ஏகும்படி செய்ததுதான் அவர்கள் செய்த 'அரும்பணி!' மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வோம்; தமிழகத்திலிருந்த முஸ்லிம் வணிகர்கள் வள்ளல்களாக வாழ்ந்தார்கள், தொழில் செழிக்க உதவினார்கள். நாட்டிற்கு உதவினார்கள். இவர்களின் இறுதி வள்ளலே சீதக்காதி மரக்காயர். இவருக்குப் பின்னர் ஏற்றுமதி வணிகம் பிரஞ்சுக்காரர்கட்கும், ஆங்கிலேயருக்கும ஏகபோகமாகி விட்டது. தமிழகத்தின் மக்கள் வறுமைக்குள்ளானார்கள். இத் துவக்கமே சென்னை செயின்ட் சார்ஜ் கோட்டை. இதன் தோற்றுவாய் 1639 என்பது வரலாறு. இக்காலத்துக் கடல்வழி வணிகத்தின் ஆதிக்கம் தமிழக முஸ்லிம்கள் வசமிருந்து கைநழுவிற்றென்றாலும், பிரெஞ்சுக்காரரும ஆங்கிலேயரும் நாட்டிற்குப் புதியவர்களானதினாலும், மொழித் தொல்லைகளாலும், மக்களிடையே நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பில்லை. எனவே, உள்நாட்டு வணிகர்களிடமே பண்டங்களைக் கொள்முதல் செய்ய வேண்டியோராயிருந்தனர். இந்த அடிப்படையில், சென்னையில் செயின்ட் சார்ஜ் கோட்டையில்இயங்கவாரம்பித்த ஆங்கிலேய வணிகக் கழகமான கிழக்கிந்திய வர்த்தக சங்கம், கீழக்கரையிலிருந்த பெரும் வணிகரான வள்ளல் சீதக்காதி மரக்காயரின் வணிகநிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாயிற்று.

இத்தொடர்பின் ஆரம்பம், முதலில் எவ்வாண்டில் ஏற்பட்டதெனத் தெரியவில்லை. ஆனால், கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினர், வள்ளல் சீதக்காதி மரக்காயருடன்

நடத்திய கடிதப்போக்குவரத்தின் விவரங்கள், சென்னை யில் எழுமூர் ரயில் நிலையத்திற்கெதிரிலுள்ள தமிழக அர சின் ஆவணக்களரியில் (Archives) பாதுகாக்கபபட்டுள் ளன. ரெக்கார்ட்ஸ் ஆப் போர்ட் செயின்ட்ஜார்ஜ்-டயரி அண்ட் கன்சல்டேஷன் புக் என்னும் அரசாங்கப் பதிவேட் டில் காணலாம். 1686ம் ஆண்டு டிசம்பர் திங்கள் இரண் டாம் நாளில் கடிதம் ஆரம்பமாகின்றது. பின்னர் இது 1687ம் ஆண்டிலும் தொடர்கின்றது. இக் கடிதங்களை வைத்து நோக்கின், சீதக்காதி மரக்காயர், இக் காலத்தே சிறப்பான வாழ்வுடையோராகக் காணப்படுகின்றார். அதாவது, இலங்கையில் சிறைப்பட்டுள்ள ஆங்கிலேயர் களை மீட்டளிக்கத்தக்க செல்வாக்கு இவருக்கு இருந்துள்ள தாகக் காணப்படுகின்றது. இராமநாதபுரத்தரசரான மன்னன் சேதுபதியாரிடம் உறவு பூண ஆங்கில வர்த்தக சபை, வள்ளல் சீதக்காதியின் உதவியைக் கோரியிருக்கக் காணுகின்றோம். இத்தகு உயரிய செல்வாக்கைப் பெறுவ தற்கான வயது குறைந்த பட்சம் முப்பதாவது இருந்தாக வேண்டும் என்பதை எவரும் ஏற்பர். 1687ல் முப்பது என்றால், அவர்தம் பிறப்பாண்டு, 1657 என்றே ஆகும்.

கடிகை முத்துப் புலவர் காலம் கி. பி. 1665 என்று கொள்ளப்பட்டுள்ளது.

கடிகை முத்துப் புலவர், உமறுப் புலவரின் ஆசான் ஆவார். உமறுப் புலவர் வள்ளல் சீதக்காதி மரக்காய ரால் மதிக்கப்பட்ட புலவர்.

வள்ளல் சீதக்காதியின் ஞானகுருவாகிய ஞானமேதை சதக்துல்லா அப்பா காலமும் இக்காலமே.

வள்ளல் சீதக்காதி மரக்காயருக்கு வங்க நாட்டின் கவர்னர் பதவி வழங்கிய ஆலம்கீர்அவுரங்கஜேப் பாதுஷா வாழ்ந்த காலமும் இதே காலம்தான். எனவே, பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமே வள்ளல் சீதக்காதியின் காலம் என ஆகும்.

ஆக, இவை அனைத்தையும் கொண்டு நோக்கின் கி.பி 1657ஆம் ஆண்டினை யொட்டிப் பிறந்து, 1720ஆம் ஆண்டை யொட்டிய காலத்தில் வள்ளல் சீதக்காதி மரக் காயர் பொன்னுலகடைந்தார் எனக் கொள்ள வியலும்.

எனவே, இதுவே இவர் தம் காலமாகும்.

# டில்லி பாதுஷா அவுரங்கஜேப் தொடர்பு

சீதக்காதி நொண்டி நாடகத்தில் வருகின்ற நொண்டி செஞ்சியில் துல்பர்கான் பாசறைக்குள் நுழைந்து, குதிரையைத் திருட முனைந்து, அகப்பட்டு, கால்கள் துண்டிக்கப் பட்டபோது, அங்கிருந்த மாமுநெய்னு மரக்காயர், தனக்கு உதவி, உயிர் பிழைக்கச் செய்து, பொருள் தந்து ஊருக்கு அனுப்பினார், ஊர் சேர்ந்ததும் கீழக்கரையில் வந்து தம்மைச் சந்திக்குமாறும் சொன்னார் என நொண்டி நாடகத்தில் நொண்டி கூறியதாகக் காணப்படுகின்றது. இந்த மாமு நெய்னுமரக்காயர்,சென்னையிலிருந்துசெஞ்சிப் பாசறையில் வந்து தங்கி இருந்ததாகவும் பாட்டு:-

அந்தநல் சமயத்திலே வகுதை யில்வாழ்
அப்துல் காதிறுப் பிள்ளை புத்திரனானோன்
மந்தரத் திண்பு யத்தான் கனகதுரை
மாமு நாயினுப் பிள்ளை மகிபாலன்
வெம்பிய மதகரியான் காயலில்
விசய ரகுநாதப் பெரிய தம்பி
தம்பித் துணையென வாழ் குங்குமத்
தாமமி லங்குபுய மாமுநயினுன்
சென்னப்பட் டணமிருந்து செஞ்சியில்
செருக்குடனே வந்து இருக்கையிலே...

இப்படி நொண்டி பாடிக் கொண்டே செல்கிறான். இந்தப் பாடலின் மூலம் அறியவருவது-.

வள்ளல் சீதக்காதி மரக்காயர், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்த வெள்ளைக்காரக் கும்பெனியாரிடத்தே இக்காலே செல்வாக்குடன் வணிக உறவு கொண்டிருந்தார். எனவேதான் வள்ளல் சீதக்காதி மரக்காயரின் சகோதரரான மாமுநெயினுமரக்காயர், கிழக்கிந்தியக் கும்பனியாரைச் சந்திக்க சென்னை சென்று திரும்பியுள்ளார் என்பதாம். ஆனால், அவர் சென்னையிலிருந்து போர் நடந்துகொண்டிக்கின்ற, அல்லது துல்பர்கானால் முற்றுகையிடப் பட்டிருக்கின்ற செஞ்சிக்கு வருவானேன்?

சென்னையிலிருந்து கீழக்கரைக்கு அந்த நாளில் வழி நடைப் பயணம் மிகக் கடினமானது. மேலும், பல நாட்களைப் பயணத்திலேயே செலவிட வேண்டும். கள்ளர் பயமும் உண்டு. வெட்ப தட்பங்கட்கும் ஆட்பட வேண்டி வரும். கடல்வழிப் பயணமோ மிகவும் எளிதானது. சொந்தக் கப்பல்கள் உடைய குடும்பம் வள்ளல் சீதக்காதி மரக்காயர் குடும்பம். இவ்வாறெல்லாம் இருக்க, தொல்லைகளையும் பொருட்படுத்தாமல், ஏன் இவர் வழிநடைப் பயணத்தை மேற்கொள்கின்றார்? அதிலும், போர் முற்றுகைக்குட்பட்டுள்ள செஞ்சிக்கு ஏன் செல்கின்றார்? சென்றவர் துல்பர்கான் பாசறையில் சிறப்புடன் எப்படித் தங்க முடிந்தது?

இவற்றிற்குக் கிட்டுகின்ற பதில், ஒன்று, துல்பர்கானின் தூதுவராகக் கும்பெனியாரிடம் மாமு நெய்னு மரக்காயர் சென்றிருக்க வேண்டும். அல்லது, தங்களுக்கு வணிக வழியில் கும்பெனியாரிடமிருந்து வர வேண்டிய பணத்தில் பெருந்தொகையைப் பெற்று, வள்ளல் சீதக்காதி மரக்காயரின் ஆணைப்படி துல்பர்கானிடம் சேர்ப்பதற்காகச் சென்றிருக்க வேண்டும். இந்த இரண்டில் எதை ஏற்றாலும், துல்பர்கானின் செஞ்சிப் படையெடுப்பிற்கு முன்னரே அவுரங்கஜேப் பாதுஷாவிற்கு அறிமுகமான வாழ்வினராக வள்ளல் சீதக்காதி வாழ்ந்து வந்துள்ளார் என்றே ஆகும்.

இக்கூற்றை ஏற்க முடிந்தால், இது போன்ற அரிய உதவி கட்காகப் பின்னர் ஆளுநர் பதவியை நல்கினுர் என்றுகும். அல்லது முன்னரே ஆளுநர் பதவியில் இருந்ததின் மூலம் ஏற்பட்ட உறவின் காரணமாக அவுரங்கஜேப் பாதுஷாவின் ஆணையை ஏற்றே வள்ளல் சீதக்காதி மரக்காயர் துல்பர்கானுக்கு உதவ முன் வந்தார், அதன் பொருட்டே செஞ்சிக்குச் செல்லுமாறு தமது சகோதரருக்கு வள்ளல் சீதக்காதி கட்டளையிட்டிருந்தார். ஆகவே தான் மாமுநெய்னு மரக்காயர் செஞ்சிக்குச் சென்று, துல்பர்கானுடைய பாசறையில் சிறப்புடன், விருந்தாளி என்ற கௌரவத்துடன் தங்கி இருந்தார் எனக் கருத முடிகின்றது.

இந்த அடிப்படையில் நோக்கினுல், மிக இளம்பிராயத்திலேயே வள்ளல் சீதக்காதி, சுல்தான் தகீயுத்தீனைப் போன்றே, வடநிலமும் தன்னை அறிந்திருக்கும் விதத்தில் பேரரசின் நட்பிற்குரியவராகி, கும்பனியாரிடமும் செல்வாக்குப் பெற்று, சேதுபதியின் உற்ற தண்பராக, உயிர்த் தோழராக, அறிவுசால் அமைச்சராகவும் ஆகியிருந்தார் எனத் தெரிகின்றது. மட்டுமின்றி, இலங்கை ஆட்சியாளரிடமும் செல்வாக்குடையவராகத் திகழ்ந்துள்ளார் எனவும் கொள்ள முடிகின்றது. இவையல்லாமல், புலவர்களெல்லாம் புகழ்ப் பா பாடுமளவிற்குப் பெரும் வள்ளலாகவும் திகழ்ந்துள்ளார் எனவும் அறிகின்ருேம். இவை அனைத்தும் எப்படிச் சாத்தியமாயிற்று?...

அரசறிந்த வாழ்வினராகவும், அரசர்களே கூடத் தமது உதவியை நாடி வருமாறு வாழ்பவராகவும், உலகெங்கும் தமது பெயர் விளம்பரமாகக் கூடிய தன்மைக்கும் ஒருவரை ஆக்கும் வல்லமை வ்ணிகத்திற்கு உண்டு.

செல்வச் செருக்கில், வணிகருடன் மன்னர்களால் போட்டியிட முடியாதென்பதை மெய்ப்பிக்கப் பல சான்றுகளுண்டு. உலகில் எந்த நாட்டிலும் அரசறிந்த வாழ்வினராக வாழ்ந்துள்ளோரில் பெரும்பாலாஞேர் வணிகர்களே!

பாண்டியமன்னன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மனைவியின் சிலம்பை விட, பூம்புகார் வணிகன் மகள், வணிகனுன கோவலன் மனைவியின் கால் சிலம்பு, பல மடங்கு விலை உயர்ந்ததாயிருந்த தென்பதைச் சிலப்பதிகாரம் இயம்புகின்றது.

அரசனுடன் சரியாசனத்தே அமர்ந்து உரையாடுகின்ற தகுதியை வணிகர்கள் மிகத் தொன்மையான காலந்தொட்டே பெற்று வந்துள்ளனர். அதனுல் தான் சாதிப் பகுப்பில், அரசர்கட்கு அடுத்த இடம் வணிகர்கட்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆக, வள்ளல் சீதக்காதி மரக்காயர், அவர் காலத்தில், தமிழ் நாட்டில், ஏன் இந்தியாவிலேயே அவரை நிகர்த்த வணிகரில்லை என்ற நிலையில் மிகப் பெரிய கடல் வணிகராக வாழ்ந்து வந்துள்ளார். இந்த வாழ்வு, அவருடைய முன்னேரின் வழியாக வந்ததினுலேயே மிகவும் இளம் வயதிலேயே உயர்ந்த பதவியைப் பெறத்தக்க வாய்ப்பு அவருக்குக் கிட்டியிருக்கின்றது. மன்னர்களேயன்றி, மகான்களும் மதிக்கத்தக்க தகுதியும் பண்பும் அடக்கமும் அறிவும் ஆன்ற கல்வியும் ஈகை மனமும் வள்ளல் சீதக்காதி மரக்காயருக்குத் தனியாக வந்ததல்ல, அவை அவர் தம் மூதாதையர் அவருக்குத் தேடி அளித்த செல்வமாகும்.

> தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்—என்பான் வள்ளுவன்.

# பொன்னும் நெல்லும்

> "ஓர் தட்டிலே பொன்னும், ஓர் தட்டிலே நெல்லும்
> ஒக்க விற்கும்
> கார் தட்டிய பஞ்ச காலத்திலே........"

என்று தொடங்கும் பாட்டொன்று வள்ளல் சீதக்காதி மரக்காயர், அஞ்சாது, கொடும் பஞ்ச காலத்திலும் அன்ன தானம் அனைவருக்கும் அளித்தவர் எனக் குறிக்கின்றது.

இந்த பஞ்சகாலம் சேதுபதி நாட்டில் கி.பி. 1687 ஆம் ஆண்டு தொடங்கி, ஏழு அல்லது எட்டாண்டுக் காலம் நீடித்ததாக, திரு. கே. எஸ். சாண்லர் என்பார் தாம் எழுதியுள்ள, ''பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளின் ஜெசியூட் சங்க வரலாறு'' என்னும் நூலில் குறித்துள்ளார்.

இன்னொரு பஞ்சம், கி. பி. 1709ல் பெரும் புயலால் ஏற்பட்டதாகும்.

முதற் பஞ்ச காலம் மிக நீண்ட காலமானதால், அக்காலப் பஞ்சத்தையே நெல்லும் பொன்னும் சம விலையான காலம் எனப் புலவர் பாடியதாகக் கொள்ளலாம்.

இப்பஞ்சம் சேதுபதி நாட்டினை மட்டுமின்றித் தமிழ் நாட்டையே ஆட்டிப் படைத்த பெரும் பஞ்சம் எனக் கொள்ளவும் இடமுண்டு.

இக்காலை, சென்னையிலிருந்த வெள்ளைக்காரர்களின் வணிக நிறுவனம், கீழக்கரையில் பெரும் வணிகராக வாழ்ந்த வள்ளல் சீதக்காதி மரக்காயருடன் அரிசி கொள் முதல் செய்ய எழுதிய கடித நகல், சென்னை ஆவணக்களரியில் உள்ளது. எனவே, இப் பஞ்ச காலத்தில்தான், மார் தட்டி அன்னதானம் செய்திருந்தார் வள்ளல் சீதக்காதி என்று கொள்ள இயலும்.

1709-ல் நேர்ந்த, எழுந்த புயலின் கோர விளைவின் போதும் வள்ளல் சீதக்காதி, அன்னதானம் நடத்தி இருக்க வாய்ப்புண்டு. இவ்விரண்டு பஞ்சத்திலும் வள்ளல் சீதக்காதி பெரும் அளவில், வந்தோருக்கெல்லாம் இல்லை எனாது அன்னதானம் அளித்திருக்கலாம். எனவே தான், ''ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும் பஞ்ச காலத்திலே, மார்தட்டியே அன்னதானம் செய்த வள்ளல் சீதக்காதி எனப் புலவர் வியந்து பாடினார் எனத் தெரிகின்றது.

கி.பி. பத்தாம் நூற்றுண்டிற்கிப்பால் தமிழகத்தில் வாழ்ந்த வள்ளல்களில், மக்களைச் சமயவழி, சாதி வழி பிரித்துப் பார்க்காமல், அறிவுடைய புலவனென்று ஆதரித்தும், அறிவற்ற பாமரர்களென ஒதுக்காமலும், அனைவருக்கும் அள்ளி வழங்கிய வள்ளலாக வள்ளல் சீதக்காதி ஒருவரே தென்படுகின்றுர். இத்தகு அறத்திற்கு அடிப்படை, இஸ்லாமிய நெறியேயாகும். ஆம், கேட்போனை நோக்காமல், கேடற அறம் புரியுமாறு வலியுறுத்துகின்ற மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம். 'ஏழை வரியை (ஜக்காத்தை) கட்டாயமாக்கியுள்ள மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம்.

இம் மார்க்க அடிப்படையில் தான் வள்ளல் சீதக்காதி மரக்காயரின் முன்னோர்களும் வழங்கும் வள்ளல்களாக வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் வகுத்த வழியில் நின்று வழுவாமல் வள்ளல் சீதக்காதியும் ஈந்து சிவந்த கரமுடையவராகத் திகழ்ந்துள்ளார். அவர் தம் வழித் தோன்றல்களில் சிலரும் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

# தமிழ்த் தொண்டு

வள்ளல் சீதக்காதி மரக்காயரின் காலத்தில் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கின்ற புரவலர்கள் குன்றி விட்டனர் எனலாம். எனவே, அவ்வகையில் அக்கால வாழ்ந்தவர் வுள்ளல் சீதக்காதி ஒருவராக மட்டுமே கொள்ள முடிகின்றது.

புலவர்களை ஆதரிப்பதில், வள்ளல் சீதக்காதி மரக்காயருக்கு அடுத்தபடியாகத் திகழ்வது சேதுபதி மன்னர் எனக் காண்கின்றோம். தமிழகத்தின் தென் கோடியில் (கீழக்கரையில்,) தமிழக மக்கள் மட்டுமின்றி, மன்னர்களும், மதிக்கும்படி வாழ்ந்தவர் வள்ளல் சீதக்காதி என்றறிகின்றோம். வட நாடு வரை புகழ் எட்ட வாழ்ந்தவரா

கவும் விளங்குகின்றார் வள்ளல் சீதக்காதி. மட்டுமின்றி, அரபு நாடுகளும், ஐரோப்பாவும் கூட அவரை நன்கு தெரிந்திருந்த தெனவும் காண்கின்றோம். வள்ளல் சீதக்காதிக்கு முன்பு வரை, இத்தகுதி பெற்ற தமிழ் நிலத்தினர் மன்னர்களாகவே திகழ்ந்துள்ளனர். சாதாரண மக்களில் இச் சிறப்புடையவராக வாழ்ந்தவர் சீதக்காதியைத் தவிர்த்து வேறில்லை. இத்தகு சிறப்பினை ஒருவர் பெறுவதாயின், அவருக்கு வழங்கு மனமும், வளமானசெல்வமும், நிறைந்த கல்வியும், நேர்மையான நடத்தையும், அடக்கமும், இரக்கமும், எளிமையும், ஞானமும், பொறையும், நயத்தகு உரையும் அமைந்திருத்தல் வேண்டும். வள்ளல் சீதக்காதி மரக்காயரிடம் இவை செம்மையுற நிறைந்து திகழ்ந்தன என்று அவர் தம் வரலாறு மெய்ப்பிக்கின்றது. இத்தகு சிறப்புடைய வள்ளல் சீதக்காதி மரக்காயர் காலம் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற் பகுதியுமாம் என்பதைத் தெரிந்து கொண்டுள்ளோம். இவற்றினோடு வள்ளல் சீதக்காதி மரக்காயர் வாழ்ந்த காலத்தமிழகம், சமயப்பகை, ஜாதிப்பகை அற்ற காலமாகத் திகழ்ந்துள்ளதையும் காண்கின்றோம். தாய்மொழி உணர்வு குன்றவாரம்பமான காலமாகவும் கணிக்க முடிகின்றது. ஆம், ஆட்சியிலே தெலுங்கும் மராத்தியும், உருதும் கொலுவீற்றிருக்கவும், சமயத்துறையை வடமொழி பற்றி நிற்கவும், ஆங்கிலம்,பிரஞ்சு, போர்ச்சுக்கல், டச்சு மொழிகள் படையெடுத்துத் தமிழ் நிலத்தை ஆக்ரமிக்கவும் ஆன காலமாகவும் வள்ளல் சீதக்காதி மரக்காயர் வாழ்ந்த காலம் காணப்படுகின்றது. எனவே தான் அவர் தமிழை வளர்ப்பதில், வளமாக்குவதில், கவனம் செலுத்தினார், புலவர்களை ஆதரித்தார் எனக் காண முடிகின்றது.

வள்ளல் சீதக்காதி மரக்காயர், டில்லிப் பேரரசுடன் நட்புப்பூண்டு வடபுலம் போந்து ஆளுநராயிருந்தமையால் உருது, பார்ஸி மொழிகள் தெரிந்தவர் எனக்கொள்ள இடமுண்டு.

இஸ்லாமிய ஆசார வாழ்வினராதலாலும், ஞான மேதை சதக்கத்துல்லா அப்பா அவர்களின் நெருங்கிய நண்பராதலாலும், வள்ளல் சீதக்காதி மரக்காயர் அரபு மொழி கற்றிருக்கக் கூடும்.

ஆங்கிலேயருடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்த தால் ஆங்கிலமும் தெரிந்திருக்கலாம்.

டச்சுக்காரர்கள் கீழக்கரையிலும் வணிக நிலையம் அமைத்துத் தங்கி வாழ்ந்தனர் என்பதினாலும், தென் தமிழகக் கடற்கரை நகரங்களிலும், பின்னர் இலங்கையைப் பிடித்து அங்கும், ஆட்சியும் வணிகமும் நடத்தினர் என்பதினாலும், அவர்களுடன் நேச உறவு அழுத்தமாக வள்ளல் சீதக்காதி மராக்காயருக்கு இருந்ததென்பதை கிழக்கிந்திய கும்பினியாரின் கடிதம் மெய்ப்பிப்பதாலும் டச்சுமொழியும் தெரிந்திருக்கலாம். அக்காலப் புலவர்களில் வடமொழி தெரிந்தவர்க்கே மதிப்பிருந்ததென்று தெரியவருவதால், புலவர்களுடன் உறவுகொள்ள உரையாடி மகிழ விழைந்த வள்ளல் சீதக்காதி மரக்காயருக்கு வடமொழியும் ஓரளவிற்கேனும் தெரிந்தே இருந்திருக்கும் எனலாம். ஆயினும், அவர் நேசித்ததும், போற்றியதும், வளர்த்ததும், வளம்பெறவைத்ததும் தமிழ்மொழியைத்தான் என அறியும்போது, அவருக்கிருந்த தமிழ்ப் பற்றும், எதிர் காலம் பற்றிய கணிப்பும் வியத்தற்பாலதாம். அதனால் தான் வள்ளல் சீதக்காதி மரக்காயர், தமிழர் மனத்தில் நீங்கா இடம் பெற்றவராக, அவர்கள் தம்நினைவை விட்டு அகலாதவராக விளங்கி வந்துள்ளார், விளங்குகின்றார், என்றும் விளங்குவார் என்பது திண்ணம்.

## வள்ளலை மணந்த மனைவி

வள்ளல் சீதக்காதி மரக்காயரின் வாழ்வில், நாம் புரிந்து கொள்ள முடியாதிருப்பது, அவருடைய மனைவி

யார்? பெயர் என்ன? ஊர் எது? என்பவையாம். வள்ள லின் மனைவியாரின் அடக்கத் தலமும் எங்குளதெனத் தெரியவில்லை.

வள்ளல் சீதக்காதிக்குத் திருமணம் நடந்ததை அவருடைய திருமண வாழ்த்து நூல் இயம்புகின்றது. அவருக்கு ஆண் சந்ததியில்லை, பெண் சந்ததி உண்டு எனவும் அறிய முடிகின்றது. ஆனால், மனைவியின் பெயர் தெரியவில்லை. நூல்களிலும் குறிக்கப்படவில்லை. மனைவி வழியினரைப் பற்றியும் அறிந்து கொள்ள இயலவில்லை. பாடலின் துணை கொண்டு, மதுரையில் சீதக்காதி பெண் கொண்டார் என்று யூகிக்கலாம். அல்லது கீழக்கரையினர், காயல் பட்டணம் தோன்றிய நாளிலிருந்து, அவ்வூரில் பெண் கொள்ளுகின்ற வழக்கத்தைக் கொண்டிருப்பதால் சீதக்காதி காயல் பட்டணத்திலும் திருமணம் புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால், எந்த ஊரில் பெண் கொண்டார் என்பதற்கு ஆதாரமில்லை. முற்காலத்தில் திருமணத்தில் பெண் பெயரைக் குறிப்பிடுவது முஸ்லிம்களின் பழக்கத்தில் இருந்திருக்கவில்லை என்பதால், பெயர் விடுபட்டிருக்கலாம். ஆனால், பெண்ணின் தாய், தந்தையர், உறவு முறையினர் குறிக்கப்பட்டிருக்க வேண்டுமே! இல்லாதது வியப்பளிக்கின்றது.

# தொழில் வளம்

வள்ளல் சீதக்காதி மரக்காயர் அவர்கட்குக் கொழும்பு நகரில் சொந்தக் கட்டடமும் பண்டக சாலையும் இருந்தன என்று தெரிகின்றது. அண்மைக் காலம் வரை அவர் தம் வாரிசுகட்குக் கொழும்பில் பண்டக சாலையும், அது சார்ந்த கட்டிடங்களும் உரிமையுடையனவாயிருந்தன என்று அறிய முடிகின்றது.

நாகூரில் பண்டகசாலையும் வணிகமும்செழிப்பாயிருந்த தைக் கடிதங்கள் மெய்ப்பிக்கின்றன. அக்காலே நாகப்பட்டினக் கப்பல் துறை டச்சுக்காரரிடம் இருந்ததாகத் தெரிகின்றது. எனவே ஏனையோர் நாகூரைத் துறைமுகமாகக் கொண்டனர் போலும்.

இவை தவிர, பரங்கிப்பேட்டை, கடலூர், சென்னை போன்ற கடல் துறை நகரங்களிலும், கல்கத்தாவிலும், பண்டகசாலைகள் கட்டி, கப்பல் வணிகம் புரிந்துள்ளார் வள்ளல் சீதக்காதியென்றும், அவர் தம் பரம்பரையில் வந்தோர் வசம் அப்பண்டக சாலைகள் அண்மைக் காலம் வரை இருந்து வந்தனவென்றும் கேள்விப் பட முடிகின்றது.

புலவர் நாயகம் என்கின்ற விருதுப் பெயரையுடைய காயல்பட்டினம் செய்கப்துல்காதிர் நெயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள், வள்ளல் சீதக்காதியின் பரம்பரையில் உதித்தோரின் பண்டகசாலையில் தங்கி இருந்தார் என்னும் குறிப்பு, நாகூரில் வள்ளல் சீதக்காதி மரக்காயருக்குப் பின்னரும் அவர்கட்குப் பண்டகசாலை இருந்ததை மெய்ப்பிக்கின்றது. எனவே, பெரிய வணிகராக, சிறந்த வள்ளலாக, உயரிய தமிழ்ப் புலவராக , பன்மொழி புரிந்தவராக, பண்புடைய ஏழைகளின் தோழராக, எல்லோருக்கும் உதவும் மனிதராக வாழ்வாங்கு வாழ்ந்தவர் வள்ளல் சீதக்காதி மரக்காயர் ஆவார்.

# நெஞ்சில் நிறுத்துக

சீதக்காதியின் முன்னோர் கீஷ் தீவினின்றும் தமிழகம் போந்த மன்னர் குலத் தோன்றல்களான குறைஷிக்குல அரபியர் ஆவர்.

அவர்களும், அவர்கள் சந்ததியினரும், பாண்டிய மன்னர்களிடையே அமைச்சர்களாகவும், தளபதிகளாகவும், கடற் காவலராகவும் குறுநில மன்னர்களாகவும் திகழ்ந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தலைமுறை தலைமுறையாகக் கீழக்கரை நகரை தங்களின் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர்.

வள்ளல் சீதக்காதி மரக்காயர், இவருடன் பிறந்த மாமூநயினா மரக்காயர் என்கின்ற பட்டத்துப்பெரியதம்பி மரக்காயர், இவர்களின் தந்தை, தாய், தாயாரை ஈன்ற தந்தை ஆகியோரின் அடக்கத் தலங்கள் கீழக்கரையில் உள்ளதை இன்றும் காணலாம்.

வள்ளல் சீதக்காதி'வாழ்ந்த'அரண்மனை இடிபாடுற்ற நிலையில், சுவர்கள் மட்டும் எஞ்சிய தன்மையில் கீழக்கரையில் இருக்கக் காண்கின்றோம்.

இவருடைய வசந்த மாளிகை (கடற்கரை பங்களா) இந்திய அரசின் சுங்கச் சாவடியாகக் கீழக்கரையில் இருக்கின்றது.

இவை போன்ற இன்னும் பல தோட்டம் துரவுகளும் வள்ளல் சீதக்காதி மரக்காயரின் நினைவைத் தந்து கொண்டு கீழக்கரையில் திகழக் காண்கிறோம்.

இவர் அடித்தளமிட்ட பள்ளிவாசல் கீழக்கரையில் இருக்கின்றது. கிழவன் சேதுபதி மன்னனிடம் ராமநாத புரத்தில் திவானாக வள்ளல் சீதக்காதி பதவி வகித்த செய்தியும் இண்டு.

இவை அனைத்தும், வள்ளல் சீதக்காதி மரக்காயர் என்பவர் யார் என்பதை விளக்கிக் காட்டுகின்றன.

இனி வள்ளல் சீதக்காதி ஆற்றிய பணிகள், செய்த அறக்கொடைகள், அவருடன் உறவு பூண்ட — அவரைப் பாடிய புலவர்கள் பற்றி ஆய்ந்து காணலாம்.

## வள்ளல் பற்றிய நூல்கள்

வள்ளல் சீதக்காதி மரக்காயர்பற்றி — அவர் பெயரைத் தலைப்பின் தலைப்பாகக் கொண்டு திகழுகின்ற நூல்கள்

இரண்டு. ஒன்று, "செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து." மற்ருென்று, "செய்தக்காதி நொண்டி நாடகம்."

முதல் நூல், வள்ளல் சீதக்காதி மரக்காயரின் முன்ஞேர், அவர் தம் திறம், அவர் ஆற்றிய தொண்டு, அவர் தம் மறம்— அறம் போன்றவற்றை உரைப்பதுடன், சீதக்காதியின் ஆற்றல், அறிவு, அழகு, பண்பு, கல்வி, கொடை, உறவு, நேசம், தொழில், அவரால் ஆதரிக்கப் பட்டோர் போன்ற பல சிறப்புறும் செய்திகளைத் தருவதாயுள்ளது.

இந்நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் ஒரே சீராக- 'செந்தொடை' என்கின்ற யாப்பு முறையில்,எளிய பாங்கில், இனிதாக அமைந்திருக்கக் காணுகின்ருேம்.

இந்நூல், அக்காலத் தமிழகப்பெண்கள் அணிந்து மகிழ்கின்ற ஆடை அணிகள் பற்றி விரிக்கின்றது. அவர்கள் 'பூசி' மகிழ்கின்ற மணப்பொருள்கள் பற்றிக் கூறுகின்றது. அக்காலத்தே நிலவிய மென் கலைகளை உரைக்கின்றது. இசை, இசைக்கும் கருவிகள் பற்றிய பெயர்களைத் தருகின்றது. திருமண ஊர்வலம், ஊர்வலத்தே எடுத்தேகப்படுகின்ற ஒளி தரு விளக்குகள், இவை நடந்த— இருந்த பாங்குகளைப் பகருகின்றன.

பந்தல் அமைப்பு, அதன் அலங்காரங்கள், மணமகன் பவனி, அப்பவனியைக் காணுகின்ற—கண்டு வியந்துரைக்கின்ற ஆரணங்குகள்,கொளுத்தப்பட்ட மத்தாப்புவாணங்கள் பற்றியெல்லாம் இயம்புகின்றது.

மணமகனை மைத்துனர்கள் 'கேலி' பேசுவதைக் கூறுகின்றது. அக்கேலி உரை, வெற்றுரையாயில்லாமல், வீரம் விரிக்கின்ற-ஊட்டுகின்ற உரையாக அமைந்துள்ளது. இக்காலம் போன்று, மைத்துனிகளின் சேலி உரை, 'புகழ் நிந்தனை' பேசுகின்ற முறை காணப்படாதது தனிச்சிறப்பெனலாம்.

மணமகள் வீட்டார் வழங்குகின்ற 'சீதனப்பொருள்'கள் பற்றிய நீண்ட பட்டியல் உளது. மணமகள் சார்பில்



கீழக்கரை பழைய குத்பாப் பள்ளி திண்ணைக்குறட்டிலுள்ள சீதக்காதியின் தாயைப் பெற்ற பாட்டனார் வாவாலி மரைக்காயரின் கப்று (கல்வெட்டின் விவரம் இப்படத்தின் பின் புறம் காண்க). அக்குடும்பத்தினரின் மற்ற கப்றுகளும் பக்கத்தில் உள்ளன.

## கல் வெட்டிலுள்ள விவரம்

கொல்லம் 790-ஆம் ஆண்டு ஆனந்த வருடம் கார்த்திகை மாதம் 26-ந் தேதி (25—11—1614 கி. பி.)

வெள்ளிக்கிழமையன்று (ஹிஜ்ரி 1023 துல்கஅதா மாதம் பிறை 3-ல்) வாவாலி மரைக்காயர் இறந்ததாக குறிப்பு தெரிவிக்கிறது.

வீடு தரப்பட்டதாகக்கூறியிருக்கக் காண்கிறோம். இப்பழக்கம் மரக்காயர் குடும்பங்களில் இன்றும் உள்ளது. கப்பல் கட்கும், தோணிகட்கும், படகுகட்கும் உள்ள வேறு பெயர்களும் குறிக்கப் படுகின்றன.

அநேகம் வழக்குச் சொற்களைத் தந்து தமிழறிஞர்களை அவை பற்றி ஆயும் ஆவலைத் தூண்டுகின்றது.

உதாரணமாக,

மணமகளுக்கென அனுப்புகின்ற பணி ஆட்களைப் பற்றிய குறிப்பில்,

"தாளடியில் நின்று தனைப்பணிந்து வேலை செய்ய
ஆளடியா ராயிரமும் ஆணடியா ராயிரமும்..."

என்றிருப்பதில், பெண்பணியாளரை, 'ஆளடியார்' எனக் குறித்திருப்பது காண்க. அதவது, 'ஆள்' எனும் சொல்லைப் பெண்பால் சொல்லாகக்கவிஞர் குறித்துள்ளார். இப்பழக்கம், இன்றும் தஞ்சை மாவட்டத்தில் திகழக் காண்கின்றோம். அதாவது, நடவு செய்கின்ற பெண்ணை 'நடவாள்' என்றே தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறிப்பர்.

இந் நூலில் உள்ள பாடல்களைக் கொண்டு, வள்ளல் என்ன என்ன வியாபாரம் செய்தார்? எந்த எந்த நாடுகளுடன் வணிக உறவு பூண்டிருந்தார்? என்றெல்லாம் காண முடிகின்றது. வணிகத்தில் அவர் எவ்வளவு வல்லவராயிருந்தார் எனத் தெரிந்துகொள்ள வியல்கின்றது. தமிழை வள்ளல் சீதக்காதி நேசித்த மேன்மை புலப்படுகிறது. வள்ளல் சீதக்காதியின் தமிழ்ப் பற்றை வைத்துக் கீழக்கரையை, 'தமிழ்க்காயல்' என்று உரைத்துள்ளார் இந் நூலின் ஆசிரியர்.

நன்மை வியசரகு நாதப் பெரிய தம்பி
தன்ம பரிபாலன் தமிழ்க்காய லாதிபதி—என்பது பாட்டு.

பாடல்-17

தமிழைத் தன்னுடைய பெயருடன் இணைத்துக் கொண்டுள்ள ஊர் தமிழகத்தில், தமிழ்க் காயலென்கின்ற கீழக்கரையாகத்தான் இலங்குகின்றது இன்று வரை. இலக்

கிய வழக்காகவும் கூட வேறு ஊர் இருந்ததாகத் தெரிய வில்லை.

தமிழைத் தென் தமிழ் என்று, தமிழின் மென்மை—இனிமை கருதிக் கூறுவதுண்டு. இந்த அடிப்படையில் தான் மற்றைய புலவர்கள் தென்காயல் என்று கிழக்கரையைப் பாடியுள்ளனர். இந்நூலாசிரியரோ அச் சொல்லில் நிறைவு பெருமல் தமிழ்க் காயல் என்று பாடிமகிழக் காண் கிருேம். சீதக்காதியின் ஆற்றல் பற்றிக் கூறும்போது;—

"கோரப் பறங்கிக் குலங்களெல்லாம் வேரறுத்துச்
சூரத் தனமிகுந்த சுத்தரண கேசரிகாண்"

பாடல் 95

என்றுரைக்கின்ருர். இவ்வரிகள் நமக்கு நினைவூட்டுவது, பிரஞ்சுக்காரரும். ஆங்கிலேயரும் கால் ஊன்று முன்னம், தமிழகத்தின் தென் கடற்கரைப் பகுதியின் மீது ஆக்ரமிப்பு நடத்திய போர்த்துக்கீசிய—டச்சு வெள்ளை நிறத்தவரை, அவர் தம் ஆதிக்கத்தை வள்ளல் சீதக்காதி எதிர்த்த வீரத் தையே இப்பாடல் கூறுகின்றது என்பதேயாம். வேதாளை யில் அடங்கியுள்ள சீதக்காதியின் தம்பியாகிய ஷேஹ்கு இபுருஹீம் என்பாரின் சமாதியிலுள்ள (மீசான்) நடுக்கல் லில் காணப்படுகின்ற வாசகங்கள், போர்த்துக்கீசியரை முழுமையாக எதிர்த்த குடும்பம் வள்ளல் சீதக்காதியின் குடும்பம் எனக் கருதவைக்கின்றது. பதினாறு, பதினேழாம் நூற்ருண்டின் தமிழகம்பற்றித் தக்க ஆராய்ச்சி நடக்கு மாயின் இந்நூலாசிரியரின் இக்குறிப்பு அதாவது:—

"கோரப் பறங்கிக் குலங்களெல்லாம் வேரறுத்து, சூரத்தனம் மிகுந்த சுத்தரண கேசரிகாண்" என்னும் பாடல், தமிழின மக்களுக்குக் கிட்டிய மிகப் பெருங் கருவூலமாகலாம்.

அரபிச் சொல்லுடன் தமிழ்ச்சொல்லை இணைத்து, தமிழிற்குப் புதிய சொல் படைப்பதில் இந்நூலாசிரியர் வல்லு நராகத் தென்படுகின்ருர். உதாரணமாக, 'அசருப்பூ' என் கின்ற சொல்லினைக் கூறலாம். இச்சொல்லின் முதற்சொல்

அசரு என்பது. இச் சொல் அரபிச்சொல்லாகும். பிற்பகல் கடந்த மாலைக்கு முந்திய நேரத்தை அசரு என்ற சொல் குறிக்கும். இதனுடன் இணைந்துள்ள 'பூ' என்ற சொல் மலரினைக் குறிக்கின்ற தமிழ்ச் சொல் என்பதை அறிவோம். அசருடன் 'பூ' வை இணைத்து அசருப்பூ என இப்புலவர் கூறுவது அந்தி மந்தாரை, அல்லது சாமந்திப் பூக்களையே எனத் தெரிகின்றது. இவ்வினமலர் மாலையில் சூரியன் மறைவிற்கு முன்பு பூப்பதாகும். இந்த நேரத்தை முஸ்லிம் கள் அசரு என்பதால், சாமந்தியை அசருப்பூ என்றுரைத் துப் புதுச் சொல் தந்துள்ளார். இச்சொல் இன்றும் கூடப் பல ஊர்களில் முஸ்லிம்களிடையே வழக்கில் இருக் கக் காணலாம் அசருப்பூ, அசருமல்லி என்றெல்லாம் முஸ்லிம் மூதாட்டியர் உரைப்பர். அசருமல்லி என்பது அந்திமல்லி.

அசருப்பூ என்றால் புரிந்துகொள்ள இயலாதாருக்காக, அப்பூ பொன்னிறமுடையதென்றும் சுட்டுகின்றார். பொன் மஞ்சள் நிறமுடையதல்லவா?

''துலங்கி அசருப்பூத் தொடையல் கட்டிப் பொன் போல்...''

தமிழிற்காகவும், வரலாற்றிற்காகவும், அக்கால மக் களின் பழக்க வழக்கங்கட்காகவும், அந்நாளைய தமிழகத் தின் தொழில் மேன்பாட்டிற்காகவும், செழிபபிற்காகவும், இவைகளைப்பற்றி ஆய்ந்து நிறைவு காண்பதற்காகவும் செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து நூலினைத் தமிழ் இன-மொழி-நாட்டுப் பற்றாளர்கள் பலமுறை படித் துப் பயன் துய்க்க வேண்டும்.

# செய்தக்காதி நொண்டி நாடகம்

நொண்டி நாடக நூல்களில் இந்நூலே முதல் நூலென் பர். இந்த நூலில் காணப்படுகின்ற துல்பர்கானின் செஞ்சி முற்றுகை 1689ஆம் ஆண்டிலிருந்து 1697ஆம் ஆண்டு முடிய எட்டாண்டுகட் குட்பட்டதாகும். எனவே இக்காலத் தமிழக அரசியல் சூழலை இந்நூலில் சிறிது காண முடிகின்றது.

பாடல்கள் அனைத்தும் "நொண்டிச்சிந்து"ப் பாக்களாகும்

ஒரே நடிகனைக் கொண்டு, காட்சி, உடை, சீன்கள் மாற்றமின்றி, ஓரிரு வாக்கியங்களின் துணையுடன் உரையாடலின்றி, பாடலாகவே நடத்தப்படுகின்ற நடித்துக் காட்டப்படுகின்ற நாடகம் நொண்டி நாடகம். தமிழ் நாடகத்தில் இம்முறையைக் கண்ட காலம் இந்நூலின் காலமாகின்றது.

இந்த நாடகத்தில் காணப்படுகின்ற சம்பவங்கள் நடந்த நாளில் சென்னைப் பட்டினத்தில் வெள்ளையரின் வர்த்தகத் தாபனமாகிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனி தலை தூக்கி இருந்தது தெரிகின்றது.

சீதக்காதியின் வணிக விரிவுசென்னையிலும் காலூன்றி இருந்தது தெரிகின்றது.

சீதக்காதி செழிப்புடன் வணிக அரசராகக் கீழக்கரையில் இருந்தது தெற்றெனப் புலப்படுகின்றது. அவர் வள்ளல், வழங்கும் மனம் படைத்தவர் என்பதை உறுதிப் படுத்துகின்றது

செஞ்சியிலிருந்து கண்ணனூர் என்கின்ற சமயபுரம் வரை போர் முனையாக இருந்த வரலாறு தெரிகின்றது, இவற்றினூடே கீழக்கரை வரையிலும் நொண்டி நடந்து வந்த வழித்தடம், இடைப்பட்ட ஊர்கள் பற்றியெல்லாம் கூறபபடுகின்றன. அவ்வூர்கள் இன்றும் இருக்கக் காணுகின்றோம்.

கீழக்கரைக்கு உள்ள பெயர்கள், சீதக்காதியின் தந்தையின் பெயர், சீதக்காதியின் இலக்கிய நண்பர்களான புலவர்களின் பெயர்கள், சீதக்காதியின் நெருங்கிய உறவினர்களின் பெயர்களையெல்லாம் தெரிந்து கொள்ள இந்நூல் பெரிதும் துணை புரிகின்றது. அக்கால மணிப்பிரவாள நடையில் அரபி, உருது, பார்ஸி சொற்களும் விரவிய 222 எளிய சிந்து நடைத் தமிழ்க் கவிதைகளைக் கொண்ட நாடக நூல் இந்நூல். தமிழ் நாடகக் கலை நடந்து வந்த வழித்தடம் காணுவதற்குத் துணைபுரிகின்ற நூலாக இந்நூலைக் கொள்ள இயலும்.

# வள்ளலைப் பாடிய புலவர்கள்

வள்ளல் சீதக்காதியை, அக்காலத்தில் வாழ்ந்த புலவர்களில் பலர் பாடித் தமது பாடல்கட்குப் பெருமை தேடிக் கொண்டுள்ளனர். அவர்களில் படிக்காசு புலவரென்பவரைத் தலையாய புலவரெனக் கொள்ளலாம். மற்றும் நமச்சிவாயப் புலவர், கந்தசாமிப் புலவர், புலமை நிறைந்த ஒரு தாசிப்பெண், இவர்களையொத்த இன்னும் பலரும் பாடியுள்ளனர். படிப்பறிவில்லாப் பாமரன் ஒருவனும் கண்ணு பின்னு... என்றாரம்பித்துப் பாடி, வள்ளல் சீதக்காதியிடம் சன்மானம் பெற்றான் எனக் கூறப்படுகின்றது.

வள்ளல் சீதக்காதி, புலவர்களை மிக அதிக அளவில் நேசித்தார் என்பதற்குச் சான்று பகர்கின்றது செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து நூல் என்றால், பொதுவாக எல்லாக்கலைகளையுமே நேசித்தார், ஆதரித்தார் அக்கலைகளை வளர்க்கின்ற கலைஞர்கட்குப் பரிசுகள் வழங்கினார் சீதக்காதி என்பதைச் செய்தக்காதிறு நொண்டி நாடகமும் அந்நூலில் வருகின்ற கதாநாயகனான நொண்டியின் வரலாறும் சான்று பகர்கின்றன. ஆலயங்கட்கு அடுத்தபடியாக அந்நாளில், மென் கலைகளையும், தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்த தமிழ் மாமன்னனாகச் சீதக்காதி தென்படுகின்றார். குறுநில மன்னர்களான பாளையப் பட்டினரெல்லாமே தமிழரல்லாதவராக இருந்ததே இந்நிலைக்குக் காரணம் போலும்! ஆம், மன்னர்களெல்லாம் பிறமொழியினராகிவிடவே, கலைகளும் தமிழும் ஆலயங்களில் அடைக்கலம் புகலாயின. சேதுபதி ஒருவரே மன்னர்களில் தமிழர். அதனால், அவர்தம் அரண்மனையைப் புலவர்கள் அடைக்கலமாகக் கொண்டனர். மன்னர் அல்லாதாரில் வள்ளல் சீதக்காதி மட்டுமே புலவர்களின்—கலைஞர்களின் காவலராக விளங்கியுள்ளார்.

வள்ளல் சீதக்காதியின் நேசத்திற்காட்பட்ட தலையாய கலைஞராகப் படிக்காசுப் புலவர் தென்படுகின்றார். வள்ளல் சீதக்காதி மறைந்தபோது இவர் பாடிய இரங்கற்பா இருவருக்கும் உள்ள நட்பினை விளக்குவதாயுள்ளது.

இந்தப் படிக்காசுப் புலவர், இன்றைய செங்கற்பட்டு மாவட்டத்தில், செங்கற்பட்டிற் கண்மையிலுள்ள பொன் விளைந்த களத்தூரார் என்பர். தொண்டை மண்டல சதகம் பாடியவர்இவரே. இன்னும் பல நூல்களும்இயற்றி யுள்ளார்.

கந்தசாமிப் புலவர் எனும் பெயரில் பல புலவர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்களில் திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் என்பவர் ஒருவர். தலபுராணம் பாடுவதில் இவர் வல்லவர் இவரே வள்ளல் சீதக்காதியின் நண்பர் எனக் கொள்வது சாலும். வள்ளல் சீதக்காதியின் அத்தாணி மண்டபத்தை அலங்கரிக்கின்ற புலவர்களில் ஒருவராக இவர் திகழ்ந்துள்ளார்.

நமச்சிவாயப் புலவர் என்ற பெயரில் ஒன்றிற்கு மேற் பட்ட புலவர்கள் தென்படுகின்றனர். வள்ளல் சீதக்காதி மரக்காயரின் அவைப் புலவராகத் திகழ்ந்த நமச்சிவாயப் புலவர் நெல்லை மாவட்டத்தினராக இருக்கலாம். ஏனெ னில் நெல்லை மாவட்ட நமச்சிவாயப்புலவர் திருச்செந்தூர் முருகன் பெயரில் நொண்டி நாடகம்ஒன்று பாடியுள்ளார். சீதக்காதி நொண்டி நாடகம் பாடியவரின் பெயர்யாதென அறியக்கூடவில்லை. திருச்செந்தூர் முருகன் மீது நொண்டி நாடகம் பாடியவரே வள்ளல் சீதக்காதியின் பெயரிலும் நொண்டி நாடகம் இயற்றியிருக்கலாம் எனக் கருது வோரும் உண்டு. எனவே இந்த நமச்சிவாயப் புலவரே வள்ளல் சீதக்காதி மரக்காயரின் அவைப்புலவர் எனக் கொள்வது பொருந்தும்.

## உமறுப் புலவர்

சீறுப்புராணம் பாடிய உமறுப்புலவர் வேறு. செய்தக் காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து நூல் பாடிய உமறு கத்தாப் புலவர் வேறு என்று கொண்டால், வள்ளல் சீதக் காதி மரக்காயர் காலத்திலேயே இரண்டு உமறுப்புலவர் கள் இருந்தார்கள் என்றாகும், இரு நூற்களின் நடை, பா

நயம் ஆகியவற்றைக் கொண்டு நோக்கின், இருவரும் வெவ்வேறு புலவர்கள் என்று சுட்டவே தோன்றும், தோன்றுகின்றது.

சீறுப்புராணம் பாடிய உமறுப்புலவரின் ஊர் கீழக் கரை எனத் தெரிகின்றது. பரம்பரை ஆலிம் குடும்பத்தில் உதித்தவர் என்றும் கொள்வதற்கான ஆதாரங்கள் உண்டு.

நொண்டி நாடகக் கதாநாயகனுன நொண்டி, செஞ்சி யிலிருந்து கீழக்கரைக்கு வந்தபோது வள்ளல் சீதக்காதி மரக்காயரின் அத்தாணி மண்டபத்தில், வள்ளலுடன் இருந்த புலவர்களாக உமறுப்புலவர், கந்தசாமிப்புலவர், நமச்சிவாயப் புலவர் ஆகிய மூவர் பெயரும் நொண்டி நாடக நூலில் காணப்படுகின்றது இரு உமறுப்புலவர் இருந்தனர் எனக் கொண்டால் இவர் எந்த உமறுப்புலவர் எனத் தெரியவில்லை.

சீறுப்புராணம் பாடிய உமறுப்புலவரால் வள்ளல்சீதக் காதி மரக்காயர் நபிகள் நாயகம் (சல்) அவர்களைக் கன வில் காணும் பேறு பெற்றுர் என்கின்ற செவிவழிச் செய்தி யொன்று நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றது.

உமறுப் புலவர் சீறுப்புராணம் பாடத்தக்க புலமை யுடையவர் எனக் கண்ட வள்ளல் சீதக்காதி மரக்காயர், அவரை ஞான மாமேதையாகிய சதக்கத்துல்லா அப்பா விடம் அழைத்துச் சென்று, தனதுகருத்தை நவின்றுர். உம றுப்புலவரின் தோற்றம் அவரை இஸ்லாமிய ஆசாரமுடை யவராகக் காட்டவில்லை. எனவே, இவரா நாயகத் திரு மேனி (சல்) அவர்களின் வரலாறு பாடும் புலவர்? கூடாது எனக் கூறி அனுப்பி வைத்தார்கள் சதக்கத்துல்லா அப்பா அவர்கள். ஞானியாரிடம் தகுதிச் சான்று பெறவியலாத தால் மனம் நொந்துபோன புலவர் உமறு, பள்ளி வாசல் ஒன்றில் சென்றமர்ந்து, நாயகத் திருமேனி அவர்களைக் காண வேண்டும் என்ற விருப்பில், தமது கருத்தை ஈற்றடி யாகக் கொண்டு, ஒருநூறு பாக்கள் பாடி முடித்த பின் அப்பள்ளியிலேயே படுத்துறங்கிவிட்டார். அப்பாடல்கள் 'முதுமொழிமாலை' என்ற பெயரில் நூலாக்கப் பெற்றுள் ளன. அவர் தம் கனவில் நாயகத் திருமேனி அவர்கள்

தோன்றி, மீண்டும் சென்று ஞானவள்ளல் சதக்கத்துல்லா அப்பாவைச் சந்திக்குமாறு கூறினார்கள். விழித்தெழுந்த புலவர் உமறு, சதக்கத்துல்லா அப்பா அவர்கள் உறைகின்ற இடம் நோக்கி விரையலானார். அதேபோது, சதக்கத்துல்லா அப்பா கனவிலும், வள்ளல் சீதக்காதி மரக்காயர் கனவிலும் நாயகத் திருமேனி அவர்கள் தோன்றி, தனது வரலாற்றை உமறுப்புலவர் தமிழில் காவியமாகப் பாடத் தகுதி உடையவர் என்பதைக் கூறினார்கள். எனவே, அவ்விருவரும் புலவர் உமறை நாடி விரைந்தோடி வந்தனர். மூவரும் சந்தித்தனர் "வாரும், நபிகள் நாயகம் அவர்களின் பரிந்துரை பெற்ற புலவரே!" என்று ஆரத் தழுவினார் ஞான வள்ளல் புலமை வள்ளலை! இதன் பின்னரே, உமறுப்புலவர் சீறாப் சீறாப்புராணம் ஆர்த்தார் என்பது நீண்ட நெடுங்காலச் செவி வழிச் செய்தி.

இச் செய்தியைக் கொண்டு நோக்கினால், புலவர் உமறுவின் காரணமாகவே நாயகத் திருமேனி (சல்) அவர்களைக் கனவில் காணுகின்ற பேறு பெற்றார் வள்ளல் சீதக்காதி மரக்காயர் என்றாகும். மட்டுமின்றி—:

**தமிழிற்காகத் தூது நடந்தார்கள் நபிகள் எம்பெருமான் அவர்கள் என்றுமாகும்.**

எனவே, இத்தகு சிறப்புடைய புலவர் உமறுவைத் தம்முடன், தமது அவையின் கண் என்றும் நீங்காமல் திகழச் செய்து கொண்டார் வள்ளல் சீதக்காதி என்றும் கொள்ளலாம்.

நொண்டி நாடகக் காலம் 1689-ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டதாதலால் சீறாப்புராணம் இதற்கு முன்னரே எழுதி முற்றுப் பெற்றிருக்கவியலும். எனவே, அதன் அரங்கேற்றமும் அக்காலத்துக்குட்தான் நடந்திருக்க வேண்டும. இக் கருத்து ஏற்புடைத்தாயின், சீறாப் புராணத்தின் அரங்கேற்றம் கீழக்கரையிலேயே தான் நடைபெற்றிருக்கும. அவ்வாறாயின், சீறாப்புராணத்தின் கொடை நாயகர் யார்? சீறாப்புராணத்தில் கூறப்படுகின்ற அபுல் காசிம் மரக்காயர் யார்? அவர் தானா சீறாப்புராணக் கொடை நாயகர்? இந்த அபுல்காசிம் மரக்காயர் எந்த ஊர்க் காரர்? என்கிற வினாக்கள் எழும்.

திருவாளர் கா. சு. பிள்ளை அவர்கள் எழுதியுள்ள 'இலக்கிய வரலாறு' இரண்டாம் பாகம் நூலில், உமறுப் புலவர், தாம் யாத்த சீறாப்புராணத்தைக் கி. பி. 1665-ஆம் ஆண்டில் வள்ளல் சீதக்காதியின் அமைச்சரான அபுல் காசிம் முன்னிலையில் பாடி அரங்கேற்றினார் எனக் குறித்துள்ளார். (பார்க்க கா.சு பிள்ளை எழுதிய 'இலக்கிய வரலாறு' இரண்டாம் பாகம், பக்கம் 124)

டாக்டர் மு. கோவிந்தசாமி M. A., M Litt., Ph.D., அவர்கள் எழுதிப் பாரி நிலையத்தாரால வெளியிடப்பட்டுள்ள தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலில்—:

சீதக்காதியின் பொருளால் அபுல்காசீம் தலைமையில் சீறாப்புராணம் அரங்கேற்றப்பட்டது எனக் குறிக்கப்பட்டுள்ளது. (பக்கம் 93)

செய்தக்காதி நொண்டி நாடகக் காலம் கி. பி. 1689 ஆம் ஆண்டிற்குப்பிற்பட்டதாகலின், அக்கால வள்ளலான சீதக்காதி மரக்காயரின் அவையில், வள்ளலுடன் புலவர் உமறும் இருந்தார் என நொண்டி பாடுவதால்; கா. சு. பிள்ளை குறிப்பின்படி 1665ஆம் ஆண்டிலில்லாவிட்டாலும் 1689ஐ ஒட்டிய ஆண்டிலாகினும் சீறாப்புராணம் அரங்கேற்றமாகி இருக்க இயலும். இக்கருத்து ஏற்புடைத்தாயின் சீறா அரங்கேற்றம் கீழக்கரையில் வள்ளல் சீதக்காதியின் முயற்சியால் ஆயிற்றென்ற கூற்று ஏற்புடைத்தாகும்.

வள்ளல் சீதக்காதியைப் பாடிய இதர புலவர்கள் அவ்வப்போது பாடிப் பரிசு பெறும் நோக்கில் வள்ளலைப் பாடியோராதலின், அவர்கள் பற்றிக் குறிக்கத்தக்கதெதுவும் இல்லை.

தாசிப்பெண் பாடியதாக உள்ளது, யாரோ ஒரு புலவர் பாடிய கற்பனையாக இருக்கலாம். இது போன்றே தாய் சோதிடரை நிந்தித்துரைத்தல், பாலகனைப்பழித்தல் ஆகிய பாடல்களும் பெண்களோ, பெண்பாற் புலவர்களோ பாடியவை அன்று, புலவர்களின் கற்பனைப் பாக்களெனக்கொள்க.

'செத்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி' என்பதும் செவிவழிச் செய்தியே. இந்நிகழ்ச்சிக்குரிய புலவர் யார் எனத் தெரியவில்லை. தெரிந்தாலும் இது சாத்தியமன்று.

''கன்ஞபின்ஞ காட்டே மோட்டே காதிறு மரைக் காரே'' என்று பாமரன் பாடியதாகச் சொல்லும் நிகழ்ச்சி போன்று கம்பன் வீற்றிருந்த சோழமன்னன் அவையில் நடந்ததாகவும் கூறப்படுவது உண்டு இவையொத்த செய்திகள் வள்ளல்களைப் பெருமைப்படுத்தும நோக்கில்எழுந்த கற்பனைச் சொற்கோவை எனக்கொண்டு மகிழத் தக்கவை யாம்.

# சீதக்காதியின் பெயரால் சொல்லப்படும் கதைகள்

வள்ளல் சீதக்காதியின் பெயரால் வழங்கப்படுகின்ற ஆதாரமற்ற-செவிவழிச் செய்திகளாக மட்டுமே நிலவி வருகின்ற கதைகள் கணக்கில் அடங்கா. அவற்றுள் சில வற்றினைக் காண்போம்.

1. வள்ளல் சீதக்காதி ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்.
2. கப்பலில் கூலி வேலை செய்தவர்.
3. மரகதம், மாணிக்கம் போன்ற கற்களைச் செய்பக் கற்றுக் கொண்டு அதன் மூலம் செல்வந்தரானவர்.
4. ஒருநாள் அவர் கூலி வேலை செய்த கப்பல் புயலில் சிக்கித் திசை தப்பிச் சென்று ஒரு தீவில் ஒதுங்கிற்று. அங்கே அவர் ஒரு வகைக் கற்குவியலைக் கண்டார். அவற்றை மூட்டை கட்டிக் கொணர்ந்து விற்றுச் செல்வந்தரானார்.
5. வறுமையின் வயப்பட்ட, தனது தாயினிடம் சிறுவன் சீதக்காதி முட்டைபொரித்துக் கேட்டான். முட்டையின் சுவையை அறிந்தால் தினமும் கேட்பானே, என்ன செய்வதென்றெண்ணிய அத்தாய், முட்டையை வேப்ப எண்ணெய் விட்டுப் பொரித்தளித்தாள். அன்றுமுதல் வள்ளல் சீதக்காதி முட்டைகசக்கும் என்றெண்ணிச் சாப்பிடுவதில்லை.
6. வள்ளல் சீதக்காதி எழுந்து வெளியில் செல்லுங்கால், வேலிகளில் உள்ள ஆமணக்கு இலைகள் கை போன்று தோன்றுவதால், இலைகள் தோறும் தங்க நாணயங்களை வைத்துக் கொண்டே செல்வார்.

7. எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்குப்போது பிச்சைக்காரன் வாசலில் நின்று பிச்சை கேட்பதைக் கண்டு, அவனிடம் எண்ணெய் இருந்த தங்கக் கிண்ணத்தைக் கொடுத்தார். அவன் தினமும் வந்தான். தினம் அவனுக்கு ஒரு தங்கக் கிண்ணத்தை வழங்கலானார் சீதக்காதி.

8. தன் மகள் (சிறு குழந்தை) பிச்சைக்காரனிடம் தான் அணிந்திருந்த தங்கக் கடயங்களில், ஒரு கையில் உள்ளதை மட்டும் கழற்றிக் கொடுத்து வந்ததை அறிந்த சீதக்காதி, ஏன் இன்னொரு கையில் அணிந்துள்ளவற்றையும் கழற்றிக் கொடுக்கவில்லை எனக் கோபித்துக் கொண்டார்.

இவ்வாருகவெல்லாம் சீதக்காதியின் பெயரில் மக்கள் இட்டுக் கட்டிச் சொன்ன, சொல்லி வருகின்ற கதைகள் ஏராளம் ஏராளம்!...

இக்கதைகளையெல்லாம் உண்மை என்று அறிவுடைய மக்கள் ஏற்பதில்லை. வள்ளலின் பால் மக்கள் எவ்வளவு நம்பிக்கை, பற்று, பாசம் கொண்டிருந்தால் இவையொத்த கதைகளைச் சொல்லுவார்கள்? என எண்ணவே செய்வர். உண்மையும் அதுதான். தமிழகமக்கள், வள்ளல் சீதக்காதியின் பால் அதிகப் பற்று, பாசம், மரியாதை, அனபு வைத்திருந்தனர். அதன்விளைவாகஇவ்வாறெல்லாம் கதை கட்டி — சொல்லி, மனநிறைவு கொண்டுள்ளனர் என்பதே இக்கதைகள் முளைத்த, கிளைத்த, வளர்ந்த வகைக்குக் காரணமெனலாம்.

# வள்ளல் சீதக்காதியின் தன்மை

வள்ளல் சீதக்காதி ஒரு பிறவி வள்ளல். இந்திய வள்ளல்களைச் சான்று காட்டுவதாயின் யயாதி, பீஷ்மன், கர்ணனை யொத்த தன்னலமற்ற தியாக வள்ளல் ஆவார் வள்ளல் சீதக்காதி.

தமிழக வள்ளல்களைச் சான்ருகக் கொள்வதாயின், பாரி, பேகன், குமணன், சிபி, இளையான்குடிப்பதி மாறநாயஞர் போன்ருரையொத்த மாபெரும் தியாகவள்ளல்களை நிகர்த்த வள்ளலாவார் சீதக்காதி.

அரபு நாட்டைச் சொல்வதாயின், ஹாத்திம்தாயீ, உதுமான்ரலியல்லாஹ், உமறுகத்தாப்ரலியல்லாஹ், அபூ பக்கர் சித்திக்ரலியல்லாஹ் வழியை ஒட்டி அறம்நோற்று வாழ்ந்த அண்ணல் வள்ளல் சீதக்காதி.

ஆம், பதவியை வெறுப்பதில் அவர் ஹஜ்ரத் உமறு கத்தாப் ரலியல்லாஹ் வழியைப் பின்பற்றியுள்ளார்.

சாந்தநிலை வாழ்க்கையில் ஹஜ்ரத் சித்திக் ரலியல் லாஹ் அவர்களின் மரபைப பேணியுள்ளார்.

ஈவதில் ஹஜ்ரத் உதுமான் ரலியல்லாஹ் கடைப் பிடித்த வழியை உணர்ந்து அவ்வழி நடந்துள்ளார்.

புலவர்கள் எவ்வாறு பாடியிருந்தாலும் சரி, எழுதி யிருந்தாலும் சரி, வள்ளல் சீதக்காதி ஒரு நல்ல, நேரிய முஸ்லிமாக வாழ்ந்துள்ளார் என்பதே உண்மை.

வள்ளல் சீதக்காதி, தனக்கென வாழாத்தகையாளர் என்பதற்குச் சான்று பகர்ந்து நிற்கின்றது, கீழக்கரைப் பெரிய குத்பாப்பள்ளியின் முன்பு மேற்கூரையும் அற்ற தன்மையில், மிக எளிய தோற்றத்தில் உள்ள அவர்தம் சமாதி!

தனது சமாதி எத்தன்மையுடையதாக இருக்க வேண் டும் என அவர் விரும்பினரோ — கட்டளையிட்டாரோ, அவ்வாறுகவே அதுஅமைக்கப்பட்டுப்பேணிக்காக்கப்பட்டு வருகின்றது என்பதை அறியும் போது, பெரும் செல்வம் படைத்திருந்தும், எதையும் தனக்கென விரும்பாத துறவி யாக, அதனினும் மேம்பட்ட வாழ்வினராக வாழ்ந் துள்ளார் சீதக்காதி வள்ளல் என்பதை நோக்கின் அவர் நெறிபிறழா இஸ்லாமிய வாழ்வினர் எனக் கொள்ளவிய லும்.

செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்துப் பாடி யுள்ள உமறுகத்தாப் புலவர், திருமணத்திற்குமுன்னம், சீதக்காதி இளைஞராக இருந்த நாளிலே அவர் கடைப்பிடித் தொழுகிய இஸ்லாமிய நெறிகளை அழகிய சொற்களில் இனிய பாடல்களாக ஆக்கித் தந்துள்ளார்.

ஆதியொரு பொருளை அஞ்சுவக்தும் தப்பாமல்
நீதியுடன் வணங்கும் நியமம்மறவாத பிரான்
செப்பரிய ஹஜ்ஜூ வண்மை செய்கின்ற சக்காத்து
முப்பது நோன்பும் முடிக்குந் தபோதனன் காண்
ஐய்யா நபில் நோன்பும் ஆசுரு நன் நோன்பும்
நையாமல் ஆசார நன் நோன்பும் நோற்பவன் காண்
வேதியர்க்கும் கற்றேர்க்கும் மிக்கோர்க்கும்பக்கீர்க்கும்
சாதியெவர்க்கும் அன்ன சத்ரம் வளர்ப்பவன் காண்
புவி நாலு திக்கும் புகழோங்கக் கொண்டாடும்
கவிநாவலர் கலிக் கங்குலுக் கோர் சூரியன் காண்...

இளமையிலேயே இவ்வகைப் பண்பாடுடைய வள்ளல் சீதக்காதியை ஆடம்பரமோ, தன்னலமோ எவ்வாறு பற்றிக் கவர இயலும்? தீமைத் தீ அணுக முடியாச் செந்தண் புனல் வள்ளல் சீதக்காதி! எவருக்கும் இதயம் புரிகின்ற இனிய தென்றல் சீதக்காதி! எதையும் தனக்கென ஏற்காத ஈகின்ற மேருமலை சீதக்காதி. செல்வத்தை மட்டுமின்றி, வள்ளல் தன்மையையும் பாரம்பரியமாகப் பெற்றவர் சீதக்காதி. மாநபி வழி நின்ற அவருக்கு ஆண்டவன் ஆண்மகவை அளிக்கவில்லை. இது நுணுகி நோக்கற்பாலதாம்.

# வள்ளல் சீதக்காதி வகித்த பதவிகள்

வள்ளல் சீதக்காதி, டில்லிப் பேரரசர் அவ்ரங்கஜேப் பாதுஷாவின் ஆளுகையின் கீழ்ப்பட்டிருந்த வங்க நாட்டின் ஆளுநராகப் பதவி வகித்துள்ளனர்.

அந்நாளில் [இந்நாளிலேயே தென் நாட்டினரை வடமாநிலத்தார் மதிப்பதில்லையே] தமிழகத்தைச் சார்ந்த ஒருவர் இத்தகு பதவி வகித்தல் நடவா ஒன்றாகும். ஆனால்,

சீதக்காதிக்கு இப் பதவி வலிய வந்தடைந்ததெனக் கருதலாம். ஞான வள்ளல் சதக்கத்துல்லா அப்பா அவர்களின் பரிந்துரையின் பேரில் இப் பதவி நல்கப்பட்டதென்பர். இக் கூற்று ஒரு வகையில் சரியாக இருக்கலாம். ஏனெனில், வள்ளல் சீதக்காதி மரக்காயர் தாமாக இப் பதவியை விரும்பி ஏற்றிருப்பின் எளிதில் விட்டு திரும்ப மனம் வராதன்றோ?

தமிழையும், தமிழக மக்களையும், தமிழ்ப் புலவர்களின் கூட்டுறவையும், தனது வள்ளல் தன்மை முழு அளவில் பயன் படாதிருக்கும் நிலையிலும், பெரும் வணிகத்தைத் தானே நேரில் கவனிக்க இயலா வகையிலும் நீண்ட நாட்கள் வங்க நாட்டில் அவரால் இருந்திருக்க இயலாது தான். எனவே அப் பதவியைத் துறந்து கீழக்கரைக்கே வந்து விட்டார் வள்ளல் சீதக்காதி.

இராமநாதபுர அரசரான மன்னன் கிழவன் சேதுபதியின் ஆட்சியில் வள்ளல் சீதக்காதி அமைச்சராகப் பணி ஏற்றிருந்தார் எனச் சொல்லப் படுகின்றது. இதற்கு எழுத்தாதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அதிகாரப் பிடிப்பின்றி, அன்புப்பிடிப்பில் கிழவன் சேதுபதி அவர்களின் நண்பர் என்ற முறையில் அவ்வப்போது ஆலோசனைகள் கூறி வந்ததை வைத்து மக்கள் சேதுபதியின் அமைச்சரெனக் கொண்டு கூறியிருக்கலாம். இது இயல்பே,

இவ்விரு பதவிகளைத் தவிர்த்து, வேறு எப் பதவியும் இவர் வகித்ததாகத் தெரியவில்லை. இந்தியா முழுமைக்கும் மட்டுமின்றி, சீனு உள்ளிட்ட கீழ்த்திசை நாடுகள் அனைத்திற்குமான மொத்த வணிகமும் இவர்மூலமாகவே நடந்ததாகத் தெரிய வருவதால், தக்க தகுதி இருந்தாலும், வணிகத்தை ஒதுக்கி விட்டு இவர் பதவி வகித்தல் என்பது எளிதானதன்று தானே?

# அன்பளிப்புகள்

வள்ளல் சீதக்காதி தனக்கென யாரிடமும் அன்பளிப்பாகவும் கூட எதையும் பெற்றுக் கொண்டார் எனத் தெரியவில்லை. ஆனால், ஒரு முறை மாமன்னர் அவுரங்கஜேப் பாதுஷா அவர்கள் நல்ல எழுதுகோல் ஒன்றும், எழுதுவதற்கான 'மை' அடைத்த குடுக்கைகளும், எழுது தாள்களும் அனுப்பி வைத்திருந்தார் எனத் தெரிகின்றது. இக்காலக் கணிப்பில் இது பெரிய பரிசளிப்பாகத் தோன்றுவிடினும், காலத்தை வைத்து நோக்கின் அக் காலத்தில் இவை கிடைத்தற்கரிய உயரிய பொருட்கள்தாம். இவற்றை விட வேறு பொருட்கள் வள்ளல் சீதக்காதி அவர்கட்குத் தேவைப்பட்டிருக்கவும் முடியாது. எனவே அன்பளிப்பை ஏற்போரின் தகுதியைக் கருதி தக்க பொருளையே பாதுஷா அன்பளிப்புச் செய்துள்ளார், அதனை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட வள்ளல் சீதக்காதியும் பதிலுக்குத் தென்கடல் முத்துக்களில் பரு முத்துக்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, ஒரு நூறு முத்துக்களைக் கொண்ட கோவை தயாரித்து, பாதுஷா அவர்கட்கு 'தஸ்பீஹ்' மாலை [ஜெபமணி மாலை] யாக அனுப்பினார் என அறிய முடிகின்றது. பாதுஷாவுக்கும் இது பெறத் தக்க பொருத்தமுடைய அன்பளிப்பேயாம்.

இவையன்றி, தம்முடைய நண்பர்களான அரசர்கட்கு வள்ளல் சீதக்காதி மிக அதிக அளவில் அன்பளிப்புக்கள் செய்திருக்கலாம். செய்திருக்கின்றார்.

ஏழை எளியவர்கட்கு, அவர்கட்கு ஏற்ற அன்னதான அன்பளிப்பைத் தமது வாழ்நாள் முழுவதிலும் நித்தமும் தவறாமல் குறைவின்றிச் செய்துள்ளார்.

கவிஞர்கள், கலைஞர்கள், இன்னிசைவல்லுநர்கள் ஆகியோர்கட்கு வள்ளல்சீதக்காதி வற்றாது வழங்கினார் என்பதை அவர் பெயரால் ஆக்கப்பட்டுள்ள நூல்களும், தனிப் பாடல்களும், செவி வழிச் செய்திகளும் சான்று பகர்கின்றன.

தமிழிற்கு அவர் செய்த தொண்டு பலவெனினும் சீறாப்புராணம் என்கின்ற முந்து தமிழ்க் காவியம் உருவாக, அவர் எடுத்துக் கொண்ட முயற்சி தமிழ் உள்ளவரை நிலையாக நின்று புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சீறாப்புராணம் தோன்றிய காலத்தை, 'செந்தமிழில் காப்பியம் தோன்றாக் காலம்' என்பர். ஆம், கி. பி.பதின் மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னர், பதினேழாம் நூற்றாண்டு தோன்றுங்காலம வரை, தமிழில் பெருங்காப்பியம் எது ஒன்றும் தோன்றவில்லை எனத் திருவாளர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களும், டாக்டர் மு.வ அவர்களும் செப்பியுள்ளனர். இத்தேக்க நிலையைத் தட்டித் தகர்த்து வெளிவந்த நூல் சீறாப்புராணம். எனவே, இந் நூல் வருவதில் அக்கறை காட்டி தக்க புலவரைத் தேர்ந் தெடுத்து, அவருக்கு ஆன எல்லா உதவிகளையும் குறைவின் றிச் செய்து கொடுத்து நூல் ஆக்கம் கண்டுள்ள தன்மை, தமிழ் வளர்ச்சியில் சீதக்காதி மரக்காயருக்கிருந்த ஆர்வம தமிழ் உள்ளவரை அழியாமல் நிலைநிற்கின்ற பேரற மாகும். தனி மனிதனுசகுச் செய்கிற உதவி, காலத்தை வென்று நிற்கின்றதாக ஆகாது. தமிழிற்குச் செய்கின்ற எதுவும-காலத்தால் சாகாத-காலம் காலமாக நின்று நிலைத்துத் தனக்கும் தமிழிற்கும் செய்து கொண்ட அறஞ் சார்ந்த சான்றாக அமையும.

தமிழிற்கு உதவினார் வள்ளல் சீதக்காதி. எனவே அவ ரைப் புலவர்கள் தமிழால் வாழ்த்தி,கவிதைகளில் வைத்து உயர்த்திப் புகழ்ந்துள்ளார்கள்.

வள்ளல் சீதக்காதி மரக்காயருக்கு, தமிழ்ப்புலவர்கள் சூடிய காவிய ஆரங்களில் செய்தக்காதிறு மரக்காயர் திரு மணவாழ்த்து நூல் சீதக்காதிக்கு மட்டுமின்றி, தமிழிற் கும் சூடிய இலககிய முத்தாரமாகும்.

சீதக்காதி மரக்காயரின் முயற்சியால், பொருள் உதவி யால் தமிழ்ற்குக் கிட்டிய செல்வம் சீறாப்புராணம் என் கின்ற செழுமாமணி ஆரமாகும்.

இவ்விரு ஆரங்களால்-தமிழைச் செழுமையாக்கிய தன் மையால், தமிழ் வளர்த்த வள்ளலாகின்றார் சீதக்காதி! இத்தன்மையால் அவரிடம உதவி பெற்ற புலவர்களே யன்றி, உதவி பெற வாய்ப்பில்லாத புலவர்களும் வள்ளல் சீதக்காதியின் மீது பாட்டிசைப்பது தமிழிற்காற்றும் தொண்டெனக் கருதிச் செய்துள்ளனர். அவர்கள் தம் அரிய பாடற் செல்வங்களை அடுத்துக் காண்போம்.



கீழக்கரையில் கடலோரத்தில் கட்டப்பட்டுள்ள சீதக்காதியின்
"வசந்த மாளிகை"

# சீதக்காதி பேரில் தனிப்பாடல்கள்

## படிக்காசுப் புலவர் பாடியவை

1. நேசித்து வந்த கவிராசர்
தங்கட்கு நித்தநித்தம்
பூசிக்கு நின்கைப் பொருளொன்று
மேமற்றைப் புல்லர்பொருள்
வேசிக்குஞ் சந்து நடப்பார்க்கும்
வேசிக்கு வேலைசெய்யுந்
தாசிக்கு மாகுங்கண் டாய்சீதக்
காதி தயாநிதியே.

2. ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி
லேநெல்லு மொக்கவிற்குங்
கார்தட் டியபஞ்ச காலத்தி
லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம
லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக்
காதி வரோதயனே.

3. ஈயாத புல்ல ரிருந்தென்ன
போயென்ன எட்டிமரங்
காயா திருந்தென்ன காய்த்துப்
பலனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச்
செம்பொன் பிடிபிடியாய்
ஓயாம லீபவன் வேள்சீதக்
காதி யொருவனுமே.

4. காய்ந்து சிவந்தது சூரிய
காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார்
நெடுங்கண்க டொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர்
நெஞ்ச மனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக்
காதி யிருகரமே.

5. என்னனைக் கன்று முத்தனை குனிக்கு
மிறையனை யளைக்குமே யன்று
மன்னனைக் கன்றிப் பின்னனைக் குதவா
வன்புளால் வருந்திவா டுவனே
முன்னனைக் கொன்று பின்னனைப் புரந்த
முதுபகை யவன்பிதா வுருமந்
கன்னனைக் கொன்று விசயனைப் புரந்த
கவுத்துவா காயலா திபனே.

**(சீதக்காதி இறந்தபோது படிக்காசுப் புலவர் பாடிய கையறம்)**

6. மறந்தா கிலுமரைக் காசுங்
கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன இருந்தாவ
தென்ன இறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங் கர்யற் றுறைசீதக்
காதி திரும்பிவந்து
பிறந்தா லொழியப் புலவோர்
தமக்குப் பிழைப்பில்லையே.

7. விண்ணுக்கு மண்ணுக்கும் பேராய்
விளங்குவதே வேந்தனெனுங்
கண்ணுக் கினிய துரைசீதக்
காதி கமலநிகர்

தண்ணுக் கிசைந்த வதனசந்த்
ரோதய சாமியிந்த
மண்ணுக்கு ளேயொளித் தான்புல
வோர் முகம் வாடியதே

8. தேட்டாளன் காயற் றுரைசீதக்
காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத்
தான்றமிழ் நாவலரை
ஒட்டாண்டி யாக்கி யவர்கடம்
வாயி லொருபிடிமண்
போட்டான் அவனு மொளித்தான்
சமாதிக் குழிபுகுந்தே

9. *பூமா திருந்தென் புவிமா
திருந்தெனிப் பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந்
தென்ன நன் னுவலர்க்குக்
கோமா னழகமர் மால்சீதக்
காதி கொடைமிகுந்த
சீமா னிறந்திட்ட போதே
புலமையுஞ் செத்ததுவே.

●

(நமச்சிவாயப் புலவர் பாடியவை)

10. மைப்போ தகமும் வளநாடுஞ்
செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போ தகமனை யான்சீதக்
காதியைக் காத்திருந்த
அப்போ தறிந்திலம் இப்பாழும்
பணத்தின் அருமையெல்லாம்
இப்போ தறிந்தனம் ஈயாத
லோப ரிடத்திற்சென்றே.

11. தடக்கும்ப கிம்புரிக் கொம்பா
சலப்பெருந் தந்திபட
நடக்குந் துரங்கத் துரைசீதக்
காதிநன் ருட்டினல
வடக்குங் குமக்கொங்கை மின்னே
யவன்றெரு வாயிலிலே
கிடக்குங் கவியும் பரராச
ரத்ன கிரீடமே.

(தாய், சோதிடரை நிந்தித்துரைத்தல்)

12. மாகத்தத் தும்புக ழான்பகை
வேந்தர் மகுடம்பொடி
யாகத்தத் தும்பரி யான்சீதக்
காதி யணிமலரின்
ஏகத்தத் தும்பி யிசைபாடு
மார்பணி லென்மகட்கோர்
மோகத்தத் துண்டென்று சொன்ன
ரிலேமுன் மொழிந்தவரே.

●

(பாலனைப் பழித்தல்)

13. வேளா மழகன் றுரைசீதக்
காதியென் வீட்டிலொரு
நாளா கிலும்வரக் காண்கில
னையெந்த நாளுமவன
தோளா லணையுஞ் சுகவாலி
பத்தைத் துணிக்கவொரு
வாளாய்ப் பிறந்தனை யேமக
னேயென்ன வாயுனக்கே

●

(தாசி பாடியதாக)

14. தினங்கொடுக்குங் கொடையானே[1]
தென்காயற் பதியானே சீதக் காதி[2]
இனங்கொடுத்த வுடைமையல்ல[3]
[4]தாய் கொடுத்த வுடைமையல்ல
எளியா ளாசை[5]
மனங் கொடுத்து மிதழ்கொடுத்து
மபிமானந் தனைக்கொடுத்தும்[6]
மருவி ரண்டு
[7]தனங்கொடுத்தும் தேடுதனங்
கள்ளர்கையிற் பறிகொடுத்துத்
தவிக்கின் றேனே.

(தலைவன் பொருளீட்டற்குக் கப்பலேறிப் போயினுனாக,
தலைவி அவனை பிரிவாற்ருது வருந்திக்கூறல்)

15. தரைகண்ட மட்டும் படர்ந்தண்ட
கோளமுந் தாவியெங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக்
காதி யுலகினில்வெண்
டிரைகண் டெழுங்கடன் மீதேதன்
வங்கத்தைச் செல்லவிட்டுக்
கரைகண் டவனினங் காணுனென்
ணைசைக் கடற்கரையே.

---

1. கையானே 2. செய்தக்காதி 3. தனமல்ல
4. ஆய்கொடுத்த தனமுமல்ல 5. எளியேனித்தம்
6. வளருங்கும்ப 7. தனங்கொடுத்த உடமை
யெல்லாம் பறிகொடுத்தே இப்படியான்.

16. சுதுங்கிக் கிடக்குமை வேள்சீதக்
காதிக்குக் கற்பங்கட்டா
தொதுங்கிக் கிடக்கும் பரராசர்
போலொளிர் கச்சுவிம்மிப்
பிதுங்கிக் கிடக்கு மலைத்தனத்
தாளுயிர் பிச்சித்தின்னப்
பதுங்கிக் கிடக்குஞ் செழுஞ்சா
ளரத்தென்றற் பாய்புலியே.

17. பத்தாய மீதுங் கடாரங்க
டோறும் பணத்தைவைத்துச்
செத்தா ரவர்நரர் தாமல்ல
வேசெய்தக் காதியென்போன்
உத்தாய மீதுந்தன் கையா
லிறைத்தும் ஒருபணமும்
வைத்தா னிலையென்றும் வைத்தான்றன்
கீர்த்திவைய பாத்திரமே.

18. காவொன்று கைத்தலத் தண்ணல்செல்
லூரன் கனிந்துநம்மை
வாவென் றழைத்திட்ட மோதிர
மேவண்மை யானதமிழ்ப்
பாவொன்றும் சற்றும் அறியாத
புல்லர்தம் பக்கலிற் போய்த்
தாவென்று யாதொன்றும் கேட்காம
லிட்ட தடையிதுவே.

19. பண்ணுக் கினிய தமிழ்ப்புல வோர்க்குப்
பகிர்ந்துபகிர்ந்
தெண்ணுக்கு ளாகிய பொன்னையெல்
லாமள்ளி
யெண்ணியெண்ணிக்
கண்ணுக் கினிய துரைசீதக் காதி
கடைந்தெடுத்த

மண்ணுக்கு த்யாகங் கொடுத்தான்
சரீரத்தை
வைத்திருந்தே.

20. காரார் குமணன் கொடைய ரைக்கால்
கன்னன் கார்க்கொடைகால்
மேரான் கொடையரை யேகொடுத்
தான்வெள்ளை
நூற்சடையன்
சீரான மாவலி முக்கான் முழுக்கொடை
செய்யவென்றே
பேரான ராசேந்த்ரன் மால்சீதக் காதி
பிறந்தனனே.

# செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து

## எட்டையபுரம் உமறுகத்தாப் புலவர் பாடியது

1. கார்கொண்ட ஞாலம் ககனுதி யும்பலவும்
ஏர்கொண் டமைத்த இறையொருவ னைப்பணிவாம்

2. சீர்மேவு செல்வச் சிறப்பாகி எப்பொருட்கும்
பேர்மேவி நின்ற பெரியோனைப் போற்றிசெய்வோம்.

3. முத்தொளியில் வந்த முகம்மது றசூல் நபியை
நித்தமுமே நெஞ்சில் நினைந்து துதிப்பாமே

4. தாயிற் கருணைவைத்த தற்பரனைப் போற்றிசெய்வான்
வாயிற்கல் வைத்தஅபூ பக்கர் பதம்பணிவாம்

5. விண்பார்த்த வெங்கதிரோன் மெய்கறுப்பச் செங்கமலக்
கண்பார்த் தருள்உமறு கத்தாப் சரண்நினைவாம்

6. வேதப் பொருள்தெரிந்து மிக்கபுவி யிற்சிறக்க
ஓதும்உது மானைஎம துள்ளந் தனில்நினைவாம்

7. வாட்டிறத்தால் நேர்ந்த மருவார் குறும்படக்கும்
ஆட்டிறத்தால் மிக்க அலியார் பதம்பணிவாம்

8. ஆதி நபிகளார்க் கன்பா மகவான
நீதி அசன்உசைனே நித்தமுமே போற்றிசெய்வோம்

9. தகையதீன் எல்லாம் தழைக்கப் புவியில்வந்த
முகையதீன் செய்ய முளரிப் பதம்பணிவாம்

10. கருங்கொண்ட லார்சர்க் கரைமழை பெய்யவந்த
பெருங்கொண்டல் வாவா பிரசமலர்த் தாள்பணிவாம்

11. நிதக்கத்துள் ளாக்குபிறர் நெஞ்சம் மிளக்கவரும்
சதக்கத்துல் லாஉபய தாமரைத்தாள் போற்றி
செய்வோம்

12 ஒருவ னருள்பெற் றுலகில்ஒலி யாகவந்த
தருமுதலி யார்லெவ்வை தாமரைத்தாள் போற்றி
செய்வோம்

13. மாகாலம் வந்த மறைப்பொருளைத் தான்விளக்கும்
சேகாலி லெவ்வை செழுங்கமலத் தாள்பணிவாம்

14. நல்லோர் பெரியோர்கள் நாயனருள் பெற்றிருந்த
எல்லோர் தமையும் இதயந் தனில்நினைவாம்

15. மானபரன் செய்ய வகுதா பதிக்கிறைவன்
தான பரன்பெரிய தம்பி வரபாலன்

16. நன்மை விசயரகு நாதப் பெரியதம்பி
தன்மபரி பாலன் தமிழ்க்காய லாதிபதி

17. பூபன் பெரியதம்பி புத்திரன்செய் தக்காதி
சோபன வாழ்த்தும் சுகவாழ்த்தும் வாழ்த்துகிறேன்

18. செங்கமலை மார்பிற் சிறந்தசெய் தக்காதி
மங்கள வாழ்த்தும் மணவாழ்த்தும் வாழ்த்துகிறேன்

## தசாங்கம்

19. தேனைத் தகர்த்திடையே திங்கட்கோட் டாலுழக்கி
வானைத் தடவும் மணிமரக தக்கிரியான்

20. நிரைகொழிக்கும் முத்தும் நிதியும் திரைக்கரத்தால்
கரைகொழிக்கும் செல்வக் கறுப்பாறு காவலவன்

(21—24-ஆம் கண்ணிகள் எழுதிய ஏடுகள் இல்லை.)

25. மெய்ப்பந் தயமுரைக்கும் மேவார் சிரம்பிடுங்கிக்
கைப்பந் தடிக்குங் கரடவெள்ளை யானையினன்

26. மீனக் கொடிப்புலியை வில்லேவென்று மேலவர்கள்
சேனைத் திரள்முறிக்குஞ் சிங்கக் கொடி வேந்தன்

27. தெம்முனைகல் யாணைஞ் சிறந்தகொடை யென்றியம்பும்
மும்முரசு நின்று முழங்குமணி வாயிலினன்

## பாட்டுடைத் தலைவன் வரலாறு

28. மனந்தனிலுஞ் சொல்லுகின்ற வாய்மையிலும் நித்திரைசெய்
அனந்தரிலும் அல்லாவி னுணமற வாதபிரான்

29. முந்துதமிழ்க் கீர்த்தி முடிமேற் றிரண்டதெனச்
சந்த்ரகலை யொன்னுஞ் சறுவந்து மாமுடியான்

30. மெச்சுபுகழ் மாறன் விருந்தளித்துச் சாணகத்தால்
எச்சில்தெளித் தானென் றிதயந் தனில்நினைந்து

31. மீனவற்கு நாமும் விருந்தளிக்க வேணுமென்று
தானைமன்ன ரெல்லாந் தலைவாசல் காத்து நிற்பப்

32. பொன்கூடந் தன்னிற் புருடரா கத்தளத்தில்
தென்கூட லாதிபனைச் சிங்கா சனத்தில் வைத்துச்

33. செங்கனகப் பள்ளயம்பொற் சேனைக்கால் மீதில் வைத்துப்
பங்கயக்கை பூசநறும் பன்னீர் மிகச்சொரிந்து

34. கன்னல்முத்தும் வேயின்முத்தும் கஞ்சமுத்தும் பூகமுத்துஞ்
செந்நெல்முத்துந் தந்திமுத்துந் தெங்கின்முத்தும் சங்கின்முத்தும்

35. விலைமதியா நாகமுத்தும் மீனின்முத்து
மானின் முத்தும்
அலைகடலி லாணிமுத்தும் அன்னமா கச்சொரிந்து

36, மாணிக்கம் பச்சை வயிரம் வயிடூர்யங்
காணிக்கை யான கறியாக வேபரப்பி

(37—40-ஆம் கண்ணிகள் எழுதிய ஏடு இல்லை.)

41. நீயருந்தி மிச்சில்வைத்த நித்திலத்தி னெச்சிலுக்கு
நாய்பிணங்கு தென்றுபுகழ் நாட்டுபிர தாபதுங்கன்

42. கைதவனுங் கேட்டுக் களிகூர்ந்த தென்றதற்பின்
மைதவழுங் கூடமதை வன்னிக் கமுதாக்க

43. ஏதென்றீர் சாணுக மிட்டாற்போ மெங்களெச்சில்
சூதொன்று முங்களெச்சில் சுட்டாற்போ
மென்றதுங்கன்

44. நாணித் தலைகவிழ்ந்த நன்மாறன் பொன்மார்பில்
மாணிக்கங் கொண்டெறிந்த வச்ரா யுதபாணி

45. பாண்டியன்முன் வந்துநின்று பாவடிகை
யாலழுத்தத்
தாண்டுபரி மீதேறுஞ் சங்க்ராம கெம்பீரன்

46. பின்னிற்கு மாரனெனும் பேரரசு மாறனவன்
முன்னிற்கு மாரனென மூவுலகுங் கீர்த்திபெற்றோன்

47. மைவருக்கஞ் சூழ்சோலை மாமதுரைப் பாண்டியர்கள்
ஐவருக்கு மாருக ஆரும்பேர் கொண்டபிரான்

48. நிலமகளுஞ் சயமகளும் நிற்ப வழுதிசெல்வக்
குலமகளைக் கைப்பிடித்துக் கொண்ட மணவாளன்

49. வேணீட்டுஞ் செங்கை விறல்வழுதி தன்கொலுவில்
காணீட்டும் வாசல் கடந்தானை மீதுவந்தோன்

50. மாறடங்கார் போற்றும் வழுதி மனையாட்டி
வீறடங்க வேலைக்கு வேல்கொண்ட தாட்டீகன்

51. விருப்பினு லேங்காதம் மீனவன்பெண் வீடுமட்டுங்
கருப்பினுல் பந்தலிட்டுக் கல்யாணம் செய்தபிரான்

52. தொழலில்(?) மாற்றவர்கள் சுற்றப்படைக்கலத்தால்
மழவன் றனைக்காத்து மாநிலத்தில் வைத்தபிரான்

53. மட்டில்லா நானூறு வாசிக்கு மார்பேற்ற
செட்டிகளை யன்று சிறைமீட்ட புண்ணியவான்

54. செட்டி சிறைமீட்டுத் தென்னிலங்கை
தன்னிலுங்கோ
முட்டி சிறைமீட்டு மூவுலகும் பேர்படைத்தோன்

55. வாரிதனி லேறியந்த வங்கம்விட்டி லங்கைபிடித்
தாரியனை மிக்கா யரியா சனத்தில்வைத்தோன்

56. தந்நிகரி லேந்துவகைச் சாதியெனு மாந்தையில்வாழ்
கம்மியரைத் தன்மகவாய்க் காக்கு மபிமானி

57. பாண்டிக் கரையளித்துப் பட்டினவ ரைப்புரந்து
நீண்டக் கரையாரை நிர்த்தூளி யாகவென்றேன்

58. சேரன் குடையெடுப்பத் தென்னன்கொடி
யேந்திடவார்த்.
தாரன் துகிலெடுப்பச் சங்கப் புகழெடுத்தோன்

59. பாரைமுழு தாளும் பரராசர் கொண்டாட
வீரைநகர் மாவலியைக் காத்த விறல்வேந்தன்

60. அமரரா னோர்க ளடங்கலுங்கொண் டாடவென்று
சமரகோ லாகலனைத் தற்காத்துத் தாபநித்தோன்

61. வெல்வீரர் மேவலரை வீறடக்கி முக்குவர்க்கு
நல்வீர மும்மூக்கும் நாக்கும் படைத்தபிரான்

62. ஆண்ணு கரிகன் 'அடைக்கலங்காத் தோன்' வலங்கைச்
சாணுர் தமைக்காக்குந் தர்ம பரிபாலன்

63. தென்மண் டலமுஞ் செழித்தசெம்பி நன்ஞடும்
பொன்மண் டலமும் புரக்குந் துரைப்பெருமான்

64. எண்டிசையும போற்று மிரதக் கிணறுடனே
தண்டரள வாரிச் சலாபத் துறையுமுள்ளோன்

65. வந்தாடத் தோகை மயிலாடக் கொம்பாடுஞ்
சந்தாட விக்கிறைவன் தாதாடும் பூம்புயத்தான்

66. சொன்ஞடும் பொன்ஞடுஞ் சோணுடும் மேஞடும்
எந்நாடுங் கொண்ட இறைவன்வச்ர நன்ஞடன்

67. பேருக வந்த பெரியதம்பி தன்புகழை
மாரும லேவளர்க்க வந்தசெய்தக் காதிமன்னன்

68. பிந்தாத செல்வப் பெரியதம்பி கண்மணியாய்
மந்தார தாருவென வந்தசெய்தக் காதிமன்னன்

69. தரணி புகழ்பெரிய தம்பிவரத் தாலுதித்த
கருணைமுகி லானசெய்தக் காதி நரபாலன்

70. வங்களம்கர் நாடம் மலையாளம் மும்சீனம்
சிங்களம் மராடம் தெலுங்கு குருநாடம்

71. கலிங்கம் குசலம் கவுதம்த்ரி கூடம்
குலிங்கம் கடாரம் குடகம் துளுநாடம்

72. மாகரைநல் ஈழமச்சை மஞ்சம்பாஞ் சாலம்டில்லி
ஆகரை கபாடம் அயோத்தி கலியாணம்

73. பல்லவம்காம் பீலிமக்கம் பப்பரவம் குச்சரியங்
கொல்லமாச் சீனம்கண்டி கொங்கணம் தாரிசப்ரு

74. கிட்டா மலாக்காயிஸ் கிரீஸு பிராஞ்சுலாந்தா
அட்டாள திக்கிலும்கிள் ளாக்கைச் செலுத்துபிரான்

75. சீனத் திருந்துவந்த சீனுப்ப ரங்குவிக்க
மானத்து முத்துமொலி வாரிமுத்த முந்தெறிப்ப

76. மரகதம் வச்ரம் வயிடுர்யம் நீலம்
அரவின் மணிபுஷ்ப ராகங்கோ மேதகமும்

77. பைகோவை யிற்செம் பதுமரா கம்பவளம்
கைகோவை யாகவிலை காட்டியொரு பாற்குவிக்க

78. ஈழத்திற் கிட்டாலி லேற்றிவந்த கப்பலர்க்கு
வேழத் திரள்களெல்லாம் வீதிதொறுஞ் சேர்த்துநிற்ப

79. அச்சைனும்?மித் தேசத் தரசர் வரவிடுத்த
பச்சைப் பரிகளைப்பல் பந்திபந்தி யாய்நிரைப்ப

80. வங்காள நாவி மலாக்காக்கஸ் தூரியம்பர்
கொங்காருங் காசறையுங் குங்குமப்பூப் பன்னீரும்

81. சத்திரமும் மோகரமுஞ் சம்பூறும் பல்லங்கியும்
வந்ததங்கக் காசும் மலிந்தகுதி ரைக்குளம்பும்

82. வெள்ளித்தகட் டவ்வாசு மிக்கரு பாயிறையால்
அள்ளிப் பலதிசையும் அட்டகிரி போல்குவிக்கத்

83. தெண்டிரையிற் பொன்னும்பல் தேசத்துப்
பொன்னும்வரக்
கண்டுகளி கூருங் கருணை கடாட்சமுகில்

## நிச்சியார்த்தம்

84. தேடும் புகழ்கவிதைச் செந்தமிழோர்க் கீந்துதவும்
நாடும் விசையரகு நாதப் பெரியதம்பி

85. தேசம் புகழ்செய்தக் காதியெனும் பூபதிக்குக்
காசினியி லின்பக் கலியாண மென்றுசொல்ல

86. மண்ணரசர் போற்றுகின்ற மண்ணியகெம்
பிரனுக்கும்
பெண்பேசிக் கொண்ட பெருமை தனைப்புகல்வாம்

87. பிரச மலர்மானைப் பெற்றோர் மனையகத்தில்
வரிசைக் கிளையோரும் மற்றோருஞ் சேர்ந்திருந்து

88. வில்லமையும் வாணுதலார் வேளைனுஞ்செய்
தக்காதி
வல்லமை பேசும் வகையதனைக் கேளுமினி

89. ஆதி யொருபொருளை அஞ்சுவக்தும் தப்பாமல்
நீதி யுடன்வணங்கு நேமமற வாதபிரான்

90. செப்பரிய ஹஜ்ஜுவண்மை செய்கின்ற சக்காத்து
முப்பது நோன்பும் முடிக்குந் தபோதனன்காண்

91. அய்யா நபுல்நோன்பும் ஆசுரா நன்நோன்பும்
நையாமல் ஆசார நன்நோன்பு நோற்பவன்காண்

92. வேதியர்க்குங் கற்றோர்க்கும் மிக்கோர்க்கும்
பக்கீர்க்கும்
சாதி யெவர்க்கும்அன்ன சத்ரம் வளர்ப்பவன்காண்

93. புவிநாலு திக்கும் புகழெலாங் கொண்டாடும்
கவிநா வலவர்கலிக் கங்குலுக்கோர் சூரியன்காண்

94. பாரனைத்தும் போற்றும் பரராசர் கொண்டாட
வீரவிக்ர மாறனென வெற்றிகொண்ட வெம்புலி
காண்

95. கோரப் பறங்கி குலங்களெல்லாம் வேரறுத்துச்
சூரத் தனமிகுத்த சுத்ரண கேசரிகாண்

96. இரணிய கெர்ப்ப இரவிகுல ராசன்
தரணி புகழுந் தனுக்கோடி காத்தமுகில்

97. மகாபதிக்ரீ டாதிபதி ம...........பதி
செகபதிந ராதிபதி செ...........பதி

98. மூவுலகை யாளும் முடிமன்னர் போற்றவந்த
தேவைரகு நாகேந்தரன் சிந்தை களிகூர

99. அட்டகச மன்னமத யானைத் திரள்கோடி
வட்ட மிடுங்கவன வாசித் திரள்கோடி

100. ஆரங்கி யாகஅண்ட கூடத் தகர்ந்திடிக்கும்
பீரங்கி கோடி பிடிகோடி தேர்கோடி

101. பச்சைச் கடகம் பரியகலிக் கத்துருய்
வச்சிரப் பந்தி வயிடூரி யக்கடுக்கன்

102. சீனச் சுருட்டுச் சிவந்தசக லாத்து வெகு
மானச் சுளிகையங்கி வச்ராங்கி பொற்சோடு

103. உச்சிதமாய்க் கட்டி யுரகத் துடன்கொடுக்க
மெச்சியிவன் நிக்காஹ் வேந்தனென வேமகிழ்ந்து

104. தண்டிகைமுன் பின்வெள்ளைச் சாமரைகா
ளாஞ்சிகுஞ்சம்
அண்ட முகடுடைய ஆனைமேற் பேரிகையும்

105. நரகசின்ன மென்.............லை
குரகதாமே நாகசர.........கயும்

106. சொல்லரிய சாமித் துரோககண்ட தண்டயமும்
வல்லமையாய் நல்க வரிசைபெற்ற
மன்னவன்காண்

107. வேலிக் கடல்புடைசூழ் மேதினியோர்
கொண்டாடத்
தாலிக்கு வேலி சத்தசமுத் ராதிபன்காண்

108. முரசு முழங்குமணி முன்றிலான் மன்னர்க்
கரசுநிலை யிட்ட அதிகமரி யாதையன்காண்

106. ஆசானு பாகன் அ............த
தேசாதி பத்தியமுஞ் சிங்கா...........காண்



வள்ளல் சீதக்காதியின் இளைய தம்பியான
ஷெய்கு இப்ராஹீம் மரைக்காயரின் கப்று.
இது வேதாளையில் உள்ளது.

110. செல்வத் துரைமகன்காண் சேவகன்காண்
சீவகன்காண்
பல்லக் கரசர் பணியும் பதாம்புயன்காண்

111. பூமே லிருக்குமொரு பொன்னின்விளக்
கேந்திரண்டு
மாமேரு வென்ன வளர்ந்தெழுந்த திண்புயன்காண்

112. ஆவின் வடிவு மளக......மணிவடிவும்
காவின் கொடைவடிவும் காட்டு........புவன்காண்

113. கடுத்துச் சினந்த.........கதிர்வாள்
எடுத்துக் கொடுவித் திருகை சிவந்தவன்காண்

114. சொல்வழுவப......ராந் துய்யகுமு தம்செனிக்க
நல்வசனத் தென்னமுத நல்குமுக சந்திரன்காண்

115. அருண கிரணவிம்ப வம்புயம்போல் யாவருக்கும்
கருணை குடியிருந்த கண்ணன்காண்
கன்னன்காண்

116. வாளுக்கு வீமன்காண் வாய்மையரிச்
சந்திரன்காண்
ஆளுக்கு மன்மதன்காண் அறிவுக்
ககத்தியன்காண்

117. பொறைக்குத் தருமன்காண் புத்திக்கு மந்திரிகாண்
நிறைக்கும் பெருஞ்செல்வ நித்யசுப
சோபனன்காண்

118. கூறுச் சரக்குவிலை கூறிநிச மாய்மதிக்கும்
மாறுச் சவுபாக்ய வர்த்தக சிரோமணிகாண்

119. இன்னதன்மை யாகவந்த எங்கள்பெரு
மானெனவே
சொன்னவுட னேபொருந்திச் சோபனமென்
றேமகிழ்ந்து

120. தம்மி லிசைந்துவெகு சந்தோட மாச்செனவே
செம்மை யுடன்வலது ம்சங்கை கொடுத்தபின்பு

**பந்தற்கால் முகூர்த்தமும் மணவறை அலங்காரமும்**

121. ஓதும் பெரியோரும் உற்றோரும் பெற்றோரும்
ஏதமில்லா நன்னா ளிதுவே முகிழ்த்தமென்று

122. மேள முழங்க விருதுசின்ன மார்ப்பரிக்கத்
தாள மதிரத் தவில்முரசு தாம்கறங்க

123. ஏத்தரிய நல்லோரு மெல்லோருங் கையேந்திப்
பாத்திகா வோதிப் பரிந்து துவாவோதி

124. நானிலமெல் லாமதிக்க நன்முகிழ்த்த வேளைதனில்
கானுலவு செம்பவளக் காலெடுத்து நாட்டினரே

125. மறுக்கலவாச் செம்பொன் வளைபரப்பி
வெள்ளியினால்
குறுக்கு வளையதன்மேற் கொண்டு பரப்பினரே

126. வச்ர மிழைத்து வரிச்சுக் களைப்பரப்பிப்
பச்சை மரகதத்தால் பல்கணிவா யில்வகுத்துச்

127. செங்கனகக் கம்பியினால் சேர வகுந்திறுக்கித்
தங்கத்தகட் டால்வேய்ந்து சாளரங்கள்
தாம்வகுத்தார்

128. மாணிக்கத் தாலே மணிக்கொடுங்கை
தான்சேர்த்து
ஆணித் தரள மணியணியாய்த் தூக்கினரே

129. நீலமணியும் நிறைந்தகோ மேதகமுங்
கோலவயி டூரியத்தின் கோவையுடன் தூக்கினரே

130. பொங்கொளிசேர் கின்ற புருடராகச்சரமும்
எங்குமொளி வீசு மிலங்குபவ ளச்சரமும்

131. பதுமரா கச்சரமும் பத்திபத்தி யாய்த்தூக்கி
நிதிகுலவு முன்முகப்பு நித்திலத்தில் வேய்ந்தனரே

132. மல்லிகையுஞ் செம்பகமும் வாய்ந்தகுட
மல்லிகையும்
முல்லையொடு பிச்சி முறைமுறையாய்
முன்தூக்கிச்

133. செங்கழுநீர் வெண்டாமரை செந்தாமரை பைங்கமலத்
தாங்குமலர் பாதிரிமந் தார மிருவாச்சி

134. செவ்வந்தி பொற்கொன்றை செவ்வாம்பல்
மாதுளம்பூ
அவ்வந்தி நேர்மலர்ந்த அழகியநீ லோற்பலமும்

135. இந்தமல ரெல்லாம் இசைந்தசர மாய்த்தொடுத்துப்
பந்தரிட மெல்லாம் பரிந்துவிதா னித்தனரே

136. பூங்கமுகின் பாளைதென்னம் பூவிரியுங் காவிரியும்
தேங்கதலித் தாறுநிரை செவ்விளநீர்ப்
பைங்குலையும்

137. மிச்சமென்று கூறுமெலு மிச்சம் பழத்துடனே
இச்சகங்கொண் டாடுங்கொ ளுஞ்சிப்
பழம்பலாக்காய்

138. வாழைப் பழமும் வளர்தமரத் தம்பழமும்
கூழைப் பலாவின் குடக்கனியுந் தூக்கினரே

139. பொற்குடம்போல் வாய்குவிந்த பூமாது
ளங்கனியும்
பற்பலசிங் காரமதாய்ப் பந்தரெங்குந் தூக்கினரே

140. கரும்புடனே பைங்கதலி காய்க்கமுகு
கொண்டாடும்
சுரும்புலவச் செம்பவளத் தூண்கடொறுஞ்
சேர்த்தினரே

141. மேகவண்ணப் பட்டுடனே வீரவா ளிச்சேலை
வாகுபெற ருத்ரவன்னி வாழ்சந்த்ர வன்னியுடன்

142. மாந்தளிர்போற் பூத்தொழிலின் வன்னமிகு
சூர்யபடம்
காந்திபெறும் பொற்சரிகைக் கம்பிக் கரைச்சேலை

143. வண்ணவண்ண மாக வகைவகையே
கொய்துகொய்து
மின்னொளிசேர் காவணத்தை மிக்கா
யலங்கரித்தார்

144. வந்தநவ ரத்ன மணவறையில் வெண்கிரணச்
சந்த்ரகலைச் சிங்கா சனமு மமைத்தனரே

145. தேகங் குளிரச் சிறுகொண்டல் வீசிவரப்
பாகங்க டோறும் பலசா ளரம்வகுத்தார்

146. பக்கமெல்லாங் கோடி பகலோ னுதித்ததென
மிக்கநவ ரத்ன விளக்கெல்லாம் நின்றொளிரத்

147. தூண்டா மணிவிளக்குந் தூக்குவிளக்
குஞ்சிறப்பக்
கூண்டா யிரங்கோடிக் குத்துவிளக் கேற்றினரே

148. தாரா கணங்கூடிச் சந்திரனைச் சூழ்ந்ததுபோல்
சீராச னஞ்சூழ்ந்த சித்ரவிளக் கேற்றினரே

149. வன்ன மணியால் வகுத்த மணவறைமுன்
பொன்னி னிறைகுடத்தின் பூம்பாளை
சாய்த்துவைத்தார்

150. பைங்கேழ்ச்சிங் காசனமும் பாவைதிகழ்
காவணத்தின்
சிங்காரம் பார்க்கவந்த தேன்மொழியா
ரோர்கோடி

151. கொண்டாடு மேனகைபோற் கோகனகை
போலவந்த
வண்டாடுங் கோதை மடந்தையர்க ளோர்கோடி

152. மாகத் தளாவு மணிக்கா வணம்பார்த்துப்
போகக்கா லேறுத பொன்னனையா ரோர்கோடி

153. வெண்குளிர்சந்த் ரோதயம்போல் மேவியசிங்
காசனத்தைக்
கண்குளிரப் பார்க்கவந்த கன்னியர்க ளோர்கோடி

154. கட்டாணி முத்தாற் கனகத்தாற் செய்துவைத்த
வட்டாவை யேந்திநிற்கும் மாஞர் சதகோடி

155. செப்பேந்திப் பூவேந்திச் சித்திரம்போல்
நின்றிலங்கக்
கொப்பேந் திளமடவா ரோரா யிரங்கோடி

156. வஞ்சியிடை தள்ளாட வந்துபசுங் கிள்ளையொடுங்
கொஞ்சிவிளை யாடிநிற்குங் கொம்பனையா
ரோர்கோடி

157. இந்த வகையா யிலங்குமணக் காவணத்தை
விந்தைவிந்தை யாக விதானித் திருந்ததற்பின்

## மணமகன் அலங்காரம்

158. அன்னைபிதா சுற்ற மனைவருமொன் றுய்க்கூடி
மன்னர் திலகம் வகுதைமண்ட லாதிபதி

159. சற்புருஷ னயசெய்தக் காதியெனும் பூபதிக்குங்
கற்புடைய மாதினுக்குங் கல்யாணஞ்
செய்யவென்று

160. சம்பங்கிப பூத்தயிலம் தான்முடியிற்
கேகாதியம்பொற்
கும்ப நிறையுங் குளிர்மஞ்ச னஞ்சொரிந்தார்

161. பூந்துகிலா வீரம் புலரப் புலர்த்தியபின்
வாய்ந்தபசும் பொன்னுடை வர்க்கந்
தெரிந்தெடுத்து

162. வன்னச் சுளிகை வரிசை நிசாரணிந்து
பொன்னினரை ஞாணும்வச்ரப் பூட்டுமுருக்
காணியிட்டுப்

163. பொன்னம்பர் கஸ்தூரி பூம்பன்னீர் சந்தனமும்
தென்னம் புழுகுசவா தெல்லாம் புயததணிந்து

164. தோற்றுமணி வச்ராங்கிச் சோடணிந்து
மேநினியோர்
போற்றி விலைமதியாப் பொன்னினடுக்
கட்டிறுக்கிப்

165. பச்சை மணியுதர பந்தனமுஞ் சேர்ந்திலங்கும்
வச்சிரத்தி னுலிழைத்த வாகுவல யம்புனைந்து

166. வாகுபந்த னம்பூட்டி வயிரத் துருஅணிந்து
நாகரிகக் கைமேலே ரத்னகங்க ணம்புனைந்து

167. சீவரத்னத் தாலிழைத்த செய்யவீர வாளியிட்டுக்
காவையொத்த கைமேல் கரபந்த னந்தரித்துத்

168. தண்டரள மாலிகையுந் தங்கச் சரப்பளியும்
கண்டசர மும்பொற் கனபதக்க முந்தரித்து

169. மாணிக்க மாலையுடன் குங்குமத்தார் மார்பிலணிந்
தாணிக்கு வேளெனக்கண் ணுடி நிழல்பார்த்து

170. விசுசரு வந்துமுடி மீதுபுவ ரத்தினத்தின்
வாசிங்கம் பூட்டி வயிரத் துருநிறுத்திப்

171. பொன்னுர மாலையிட்டுப் பூச்செண்டு கைப்பிடித்து
மின்னூர் குரவையிட வெள்ளானை யேறினனே.

## பவனி வருதல்

172. விடவரவி னுடனெளிய மிகுவடவை கெடஇடறு
தடவிகட கெறுவமதத் தவளவெள்ளை
யானையினன்

173. கொடியவிட வரவுபடக் குவடிடிய வடவைகெடத்
தொடுகடலி னகடுடையத் தோன்றுவெள்ளை
யானையினன்

174. மொகுமொகென அளிகுலவு முதிருமத
சலமொழுகு
விகடரண முககலனை வெள்ளானை யேறினனே

175. திடதிடென...நடவிகட செயவிசய
தடகரட மடையொழுகு தவளவெள்ளை
யானையினன்

176. தடவிகட கரடகடத் தவனமது மொகுமொகெனத்
தடவிகட கரடகடத் தவள வெள்ளை
யானையினன்

(177—184-ஆம் கண்ணிகள் எழுதிய இரண்டேடுகள்
இல்லை)

185. பிரசமுறு வாகைப் பெருந்தொடையல் குடிவெற்றி
அரசர்மக்கள் கோடிவெள்ளை யானைதனைச்
சூழ்ந்துவர

186 ஆணியல்பு காட்டி அலகம்பு சேர்சுரிகை
தூணியும்வில் லும்பிடித்துத் தொட்டியர்பல்
கோடிவரக்

187. கேடகஞ்செங் கோடி கிரணவடி வாளெடுத்துக்
கோடையிடிபோல் கோடிகுதிரைரா வுத்தர்வரக்

188. கட்டியக் காரர் கணவிருது கூறிவரப்
பட்டவித் வாங்கிசர் பல்திசையுங் கொண்டாடச்

189. சந்திரனைச் சூழ்துவருந் தாரா கணம்போல
முந்து கிளைஞர் மொகுமொகெனச் சூழ்ந்துவரத்

1°0. திமிரி தடாரி திடுமன் கனகத்தப்புக்
குமுறும் பதலை குடமுழவு வீராணம்

191. பேரிகை பம்பை பெருமுரசு மல்லாரி
பூரிகை நாகசுரம் பொங்குகடல் போல்முழங்க

192. ஆனையிற் பேரி அதிருமிடி போற்கறங்கக்
கூனல்முது கொட்டையின்மேற் கொண்டடமா
ரம்மதிர

193. ஏற்றுங் குதிரை யிடம்மானந் தான்கலிப்ப
வெற்றிநா கேசமென மேளமிக வார்ப்பரிப்பத்

194. தாரை நமரிகொம்பு சத்தமிடு மெக்காளம்
வீரகரு ஞவாங்கா வெண்சங்க முந்தொனிப்ப

195. முத்துக் குடையு முழுவயிரப் பொற்குடையும்
பத்தியொளி வீசு பவளச் செழுங்குடையும்

196. செம்பொற் குடையுந் திகழும்வெள்ளி
வெண்குடையும்
சம்பத்தில் வந்துபுவி தாங்காச் சமுத்திரமும்

197. சுற்று நிறைத்துவரத் தூயசிங்க கேதனமும்
அற்றமில்லா வீரவெள்ளை யானை நெடுங்கொடியும்

198. பக்கம் பிடிக்கப் பலபேருந் தாம்சூழத்
தக்கவியன் மத்தளங்கைத் தாள முழங்கிவர

199. வாய்ச்சங்கு தித்திசுர மண்டலமுங் கின்னரமும்
வேய்ச்சங் கிதமுமுக வீணைதண்டை வாத்தியமும்

200. வீணை கயிலாச வீணையிசை காமாட்சி
வீணருத்ர வீணை விளங்குகிற பாவுடனே

201. சரமண் டலமுடுக்கை சந்த்ரவளை யங்குளிற
நரமண் டலம்புகழும் நல்லிசையார் தாம்வணங்கத்

202. தாளம் வழுவாமற் சங்கீதந் தான்கறங்க
மேளம் வழுவாமல் வீதிதொறுந் தான்முழங்கக்

203. கண்டாரா சுத்துடனே கல்யாணி காம்போதி
கொண்டல்சொரி மேகக் குறிஞ்சிசங்க ராபரணம்

204. தோடி வராளி சுத்தசன்னி யாசிகௌரி
பாடிசுதி கூடியிசைப் பாடகர்முன் பாடிவரச்

205. சத்த தளத்திலெழு தாளமுழங்கிவர
ஒத்தகுச் சாதி யுயரசக் கனிவுடனே

206. பரத முறைதப் பாது பவுரிக்கேற்பக்
கரதலத்தில் நட்டுவன்மார் கைத்தாள
மொத்திடவே

207. நெருங்குஞ் சிலம்பாட நீள்சதங்கைதா ளுட
மருங்குதுவண் டாட மயிலார் நடமாடத்

208. தங்கத்தீ வட்டி தயங்குவெள்ளித் தீவட்டி
கங்குல் பகலாக்கு மாறுகால் பந்தமுடன்

209. ஏணி விளக்கும் ரதவிளக்குந் தன்னுடனே
பாணி விளக்கும் பகல்விளக்கும் நின்றிலங்கச்

210. சூல விளக்குந் துலங்கைந்து கால்விளக்கும்
ஞாலம் விளக்கும் பகலா மெனவிளங்க

211. பத்தியொளி வீசும் பகல்வத்தி நின்றொளிரத்
தத்துதிரை போலுபய சாமரைக டாமிரட்டப்

212. பாவாடை முன்விரிக்கப் பஞ்சவண்ணத்
தால்விளங்கும்
பாவாடை வீசவியற் பாவாணர் கொண்டாட

213. எங்கும் புகழ்வெள்ளை யானைப் பிடரேற்றி
மங்களஞ்செய் தூரைவல மாகவரு வேளைதனில்

214. வச்ரத் திருநாட்டு மன்னவன்செய் தக்காதி
பச்சைப் பரியான் பவனிவரும் வீதியெல்லாம்

215. தோரணங்கள் நாட்டிடுவார் தூபதீ
பங்கள்வைப்பார்
பூரணகும் பம்பதிப்பார் பூம்பன்னீ
ரால்தெளிப்பார்

216. வான்முகட்டுத் தோயும் மகமேரு நாட்டிடுவார்
தேன்முழக்கும் பூங்குறிஞ்சி தெருக்க
ளலங்கரிப்பார்

217. இருகுரும்பை போலுமுலை யேந்திழையா
ராடுதற்குத்
திருகுகம்பை நாட்டித் தெருவை யலங்கரிப்பார்

218. மெல்லியதன் புட்ப விமானங்கள் தம்முடனே
சொல்லரிய நீண்மகர தோரணங்கள்
நாட்டிடுவார்

219. கைவந்த சித்திரத்தாற் கண்களிக்கச்
செய்துவைத்த
பௌவந்தத் திற்சூத்ரப் பதுமைபிடித்
தாட்டிடுவார்

220. ஆசைகொள்ளு மின்னு ரவரவர்கள் தாங்கூடி
வாசல்தொறும் நெய்விளக்கு வைத்துநிறை
கும்பமவப்பார்

**221.** கன்னல் நடுவார் கமுகு நிரைத்திடுவார்
அன்னமெனை வந்துசெம்பொன் ஞலத்தி
யேந்திடுவார்

**222.** ஏருலவு தென்காய லெங்கள்செய்தக்
காதிமன்னன்
பாருலகில் யானைப் பவனிவர மாதரெல்லாம்

**223.** பாடகங்கள் பூஞ்சிலம்பு பங்கயத்தாள் மீதணிந்து
சூடகஞ்சேர் காந்தளங்கை சுற்று மணியணிந்து

**224.** பட்டுடைமின் ஞர்பவனி பார்க்கில்மதன்
வாளிநெஞ்சில்
பட்டுடையு மென்றுமுலைப் பாரமிசை வ்ாரணிவார்

**225.** நாணைவிட்டு மங்கலப்பொன் ஞணணிந்து
கையரத்தால்
சாணைவைத்த வாள்போல் தடங்கணுக்கு
மையெழுதிப்

**226.** பொற்சரிகை மேலணிந்த பூம்பட்டு முந்திதனில்
பொற்சரிகை தொங்கலிடைப் பொய்யினில்மெய்
யாயணிந்து

**227.** சித்தசன்பைந் தேனுறையுஞ் செம்பவள
மீதிலொரு
முத்த ரும்பினபோல் மூக்குத்தி முத்தணிவார்

**228.** பொன்மலைமேல் வெள்ளிப் புரிகிடந்து
தாழுதல்போல்
வன் முலைமேல் முத்து வடங்கள் கிடந்தாட

**229.** மாலாழி நீந்த வகையறியா மங்கைநல்லார்
காலாழி பூட்டியபின் கையாழி யிட்டனரே

**230.** தங்கச் சவடிகளுந் தானிழைத்த பொற்பணியும்
பொங்குநவ ரத்னவொளிப் பூடணமும்
மேற்புனைந்தார்

231. மச்சு ளிருக்கும் மடவார்கள் கோத்தமுத்துக்
குச்சு ளிருக்கும் குளனு லணியாடச்

232. சொல்லரிய பட்டுச் சுளிகைரவிக் கையணிந்து
எல்லமையுங் கொம்பனையா ரெல்லோருந்
தாம்கூடி

233. கொங்கைமேல் சந்தனக் குழம்பணிந்து
குங்குமத்தைச்
செங்கரத்தால் வாங்கித் திருக்கழுத்தின் மேல்பூசி

234. முல்லையிரு வாச்சி மகிழ்மல் லிகைகொழுந்து
அல்லனைய கூந்தற் கழகா யலங்கரித்துச்

235. சாரும் பவளந் தனைசிவப்பக் காய்ச்சினபோல்
சேரும் படிபாக்குத் தின்றுசிறப் பாகத்

236. திலக மணிந்து திரும்பத் திரும்பியணிந்
திலகுவிரல் சேப்ப இருகண் சிவந்திடுவார்

237. மொய்குழலை நன்ருய் முடித்து முடித்தவிழ்த்துப்
பய்யமணிக் கண்ணுடி பார்த்துச் சினந்தெறிவார்

238. பொற்கடகம் பூட்டிப் புரிவளையா ரெல்லோரும்
கற்கடக மென்னுங் கனராசி வெண்கொடிசேர்

239. கன்னனென வந்தசெய்தக் காதிமக ராசனன்பாய்
வன்னமணி வீதி வரும்பவனி கண்டெதிர்போய்க்

240. கயங்காத செம்பொற் கரத்தா மரைகடுப்ப
முயங்கா தெழுந்த முகத்தா மரைமலர்கள்

241. மேடை மிசையுமொளிர் வெண்புரிசைச்
செச்சையினும்
தேடரிய பொற்சிகரத் தெற்றியினு நின்றேறி

242. உப்பரிகை மீது முயர்மா ளிகைமீதும்
செப்பரிய பொன்மாடத் தின்முகப்புஞ்
சேர்ந்துநின்று

## மகளிர் கூற்று

243. நன்மதிலே யொட்டியதில் நாடிவைத்து நாணிநின்று
தென்மதுரை கோனணங்கு சிங்கமோ வென்று
சொல்வார்

244. சாளரங்க டோறும்வெகு சந்த்ரோத யங்களென்ன
வாளரங்கொள் கண்ணூர் வதனம்வைத்துப்
பார்த்துநிற்பார்

245. மாறன் மகட்கு மணவாள ஞகியின்பப்
பேறுதவுஞ் செங்கை பிடிக்கவந்தா னென்பாரும்

246. இவர்க் காகான் என்பாரும் இந்திரன்கா
ணென்பாரும்
தவருத வாய்மையரிச் சந்திரன்கா ணென்பாரும்

247. செஞ்சந் தனங்களபம் தேனெழுகுங்
கொங்கைநல்லார்
அஞ்சம்பு கொண்டுவரு மடல்மதனன்
காணுமென்பார்

248. மின்னினிடை தள்ளாட வெண்டுகில்போய்
நிற்பாரும்
வன்னவளை போய்க்கை வளைக்கிரங்கி நிற்பாரும்

249. தாளழகைக் கண்டு தலைநாணி நிற்பாரும்
தோளழகைக் கண்டு துடிதுடித்து நிற்பாரும்

250. சீருலவப் பொங்குந் திருவடிவைப் பார்க்கவென்றே
காரிகையார் கண்ணைக் கடன்வாங்கிக்
கொள்வாரும்

251. கர்ணனென்று பேரைவிழி காட்டுமென்று
சொல்வாரும்
வர்ணமணி மார்பில் மதிமயங்கி வீழ்வாரும்

252. கந்தனிவ னென்பாரைக் கையமர்த்தித்
தையல்நல்லார்
செந்தலைச் செல்வர்க்குச் சிங்கவிரு
தென்றுரைப்பார்

253. வானாட் டரசு மகபதியொப் பாமடவீர்
கானநாட்டு வேந்தர்பிரான்; கண்ணுட்ட
மெத்தவென்பார்

254. காமனென்பார் காமனுக்குக் கங்குல்மத
யானையல்லால்
பான்மொழியீர் வெள்ளைப் பருப்பதமே
தென்றுரைப்பார்

255. அன்ன நடையீ ரரிகே சனன்வகுதைக்
கன்னன் பெரியதம்பி கண்ணின்மணி
காணும்என்பார்

256. சேலை கவர்ந்ததெமது சிந்தைகவர்ந் தானெனினும்
மாலை வழங்க மனமிலைகாண் என்பாரும்

257. டொருமானை காத்தினிய பொன்மானை ஓடியெய்து
திருமானை வைத்தபுயன் சீமானைப் பாரும்என்பார்

258. பச்சைப் பரியானைப் பண்ணைப் பிரித்தானை
இச்சைப் படியே இனிப்பாரும் என்பாரும்

259. காலழகை வெள்ளானைக் காது மறைத்ததெனச்
சேலழகாங் கண்ணார் சினந்துருக்கிப் பார்ப்பாரும்

260. நேராந் தொடையை நிசார்மறைத்துக்
கொண்டதுகாண்
பாரா யிதுவும் பகைநமக்கே என்று சொல்வார்

261. இடையழகைப் பொன்னுரைஞா ணீண்டுசுற்றிக்
கொண்டதென்றே
படைவிழியீர் மெய்ந்நாணைப் பார்க்கவிட்டீர்
என்பாரும்

**262.** வரைமார்பைக் குங்குமப்பூ மாலே மறைத்த
தென்ருே
விரைவாகி மாலே வெளியாக்கி விட்டதென்பார்

**263.** தார்ப்புயத்தைச் செஞ்சந் தனம்ஒளித்துக்
கொண்டதென்ருே
வார்திகழும் பூணூர் மனத்தளங்கள் காட்டிநின்றீர்

**264.** கண்டசர மெங்கோன் கழுத்தை மறைத்த
தென்ருே
விண்ட சரமாக மேலாடை நின்றதென்பார்

**265.** துலங்கும் வயிரத் துருமுடியைச் சூழ்ந்ததென்ருே
இலங்கும் பெருங்காத லென்னமுடி யாதுநின்றீர்

**266.** மாலேக் குழல்சரிய வச்சிரப்பொற் கோப்பசைய
ஓலேக் குழையாடி ஓடிவந்து பார்ப்பாரும்

**267.** செல்லுலவு செந்தூள் திரளால் தெரியாமல்
மெல்ல விழிமேல் விரலடுக்கிப் பார்ப்பாரும்

**268.** தரிக்குஞ் சவாதுமணம் தான்வீச வந்ததெல்லாம்
பரிக்குமிதழ்ச் செங்கமலப் பாவைமணம்
வேண்டிஎன்பார்

**269.** கஸ்தூரி வாசமெழு காதமட்டும் வீசநம்மை
முத்தாரப் பூண்முலேயார் முகமட்டும்
என்றுரைப்பார்

270. ஓங்குசனங் காணநம்மை ஓடாதிப் போதானே
தூங்கலென நின்று துரிதநடை பாரும்என்பார்

**271.** வெற்றிப் பகலோனே மேக மறைத்ததெனக்
கொற்றக் குடைமறைத்துக் கொள்ளுமோ
என்றயர்வார்

**272.** வந்தானே மூர்க்க மதயானே முன்னடக்க
முந்தானே விட்டு முலேயானே காட்டிநிற்பார்

273. வாய்மழலைப் பிள்ளை மதிபோலும் பேதையர்கள்
தாயர்தமைக் குங்குமப்பூத் தார்வாங்கித்
தாரும்என்பார்

274. உண்டில்லை யென்னுமிடை யொன்றியுமொன்
றுய்ச்சோர
வெண்டரளஞ் சேர்பெதும்பை மின்னார்கள்
சூழுந்துவர

275. வண்டணுகாச் செவ்வாய் மலரவிழுந்
தாமரைபோல்
கண்டமட மங்கையர்கள் கண்குளிரப்
பார்த்துநிற்பார்

276. கரிக்கொம்பு போலுமுலைக் கண்மடந்தை மார்கூடி
நரிக்கொம்பு முள்ள நயக்கார னென்பாரும்

277. அங்கசன்போ ராடு மரிவைமார் கும்பமுலை
எங்கும் பசுந்தேன் இனங்கறுக்க வந்துநிற்பார்

278. திக்கில்மதன் செங்கோல் செலுத்தத்
தெரிவைநல்லார்
கைக்களிறே நாங்கள் பிடிகாணு நில்லுமென்பார்

279. விரவி அமுதெடுத்த வெண்பாற் கடல்நிகர்ப்பப்
பெருகுசுகங் கண்டுவந்த பேரிளம்பெண்
ணார்சூழ

280. இவ்வாறு மின்னா ரியம்பவகு தைக்கதிபன்
அவ்வீதி விட்டங் கடுத்ததொரு வீதிவந்தான்

281. ஓங்குபீ ரங்கி உருமேறு போல்முழங்கத்
தாங்கியதுண் டுக்குழலுஞ் சத்தவெடி யும்மதிரக்

282 கும்பவெடி செந்தீக் குடுக்கைக் கலசவெடி
அம்புவெடி பூமி யதிரு மிரட்டைவெடி

283. கைக்குழலும் பட்டைக் கனகுழலாந்
தாய்க்குழலும்
ஒக்கமருந் திட்டோ ரொருமுகமா கத்தீர

284. பூச்சக்ர வாணமெல்லாம் பொற்பூச் சிதறுநல்போல்
மாச்சக்ர வாணநெடு வானி லொளிபரப்ப

85. மோகார மண்ட முகடுடைத்துச் சிந்துதல்போல்
ஆகாச வாணத் தடங்குகண்டங் கொப்புளிப்பக்

286. கொம்படைப்புச் சக்கரமும் கூட்டு மிடுக்குடனே
அம்பரத்தில் கெம்பி யடர்ந்தேறுஞ் சக்கரமும்

287. கொல்லும் படைவாணம் குமாரவா ணத்துடனே
செல்லும் எலிவாணஞ் சீறுமபாம் பின்வாணம்

288. பூதவா ணங்கள் பொரும்பரிசை வாணமுடன்
வீதிநிறை யச்சொரியும் வெண்சா மரைவாணம்

289. மைபூத்த விண்ணில் மணிநீலம் வீழ்வனபோல்
கையிற் பிடித்தநிலாக் காயாம்பூச் சிந்தினவே

290. கப்பல்வா ணங்கள் கனகுதிரை வாணமுடன்
குப்பல்குப்ப லாய்ச்சொரியும் கூடைப்
பெருவாணம்

291. ஆடுமயில் வாண மதிருநிலாச் சக்கரமும்
தேடுகும்ப வாணஞ் சிரட்டைவா ணத்துடனே

292. மண்டு விசிறிகளும் வாய்த்த நிலாவெடியும்
குண்டணி வாணங் குறித்தகம்பத் தூடுசெல்ல

293. ஒருகோடி சூரியர்க ளோடித் திரிவனபோல்
திருநாடிக் கம்பத் திரியெல்லாம் நின்றெரிர

294. நிரைத்த படைக்கு நிலாவெறியு மேழ்கடல்போல்
இரைத்து டபீரென் றிடியேறு போல்முழங்கக்

295. கம்பவா ணக்காட்சி கண்டு களிகூர்ந்து
செம்பொன்முடி பூலோகத் தேவேந்த்ரன்
வந்தனனே

296. கல்விக் கருணைக் கடல்பெரிய தம்பிபெற்ற
செல்வன்வந்தா னென்றுவெற்றிச் சின்னம்
பணிமாற

297-304-ஆம் கண்ணிகள் எழுதிய இரண்டேடுகள் இல்லை.

305. சந்தா டவிசுரபி சங்கநிதி பத்மநிதி
சிந்தா மணியெனப்பொற் சின்னம் பணிமாறப்

306. பாவடிவைக் கூடற் பதிவடிவே லான்றேட்பூஞ்
சேவடிவைத் தோனெனப்பொற் சின்னம்
பணிமாற

307, உறைவாங்கு வாட்கை யுடன்வாங்கி
யொன்னவரைத்
திறைவாங்கும் போசனெனச் சின்னம் பணிமாற

308. வங்காரக் கொங்கையர்க்கு மணமாலை
நல்குமெனச்
சிங்காரக் காரனெனச் சின்னம் பணிமாற

309. வெங்களிற்று மேலவர்கள் வெம்போர்
கடந்தவெற்றிச்
சிங்கம்வந்தா னென்றுசெம்பொற் சின்னம்
பணிமாறக்

310, குங்குமத்தார் பூண்டு குவலயத்தார் போற்றுநல்ல
சிங்கம்வந்தா னென்றுவெற்றிச் சின்னம்
பணிமாற

311. இன்னபடி சின்ன மியம்பிட்டு வெள்ளானை
தன்னை யிறங்கித் தருகா வனத்தில்வர

### மணமகன் மணவறை சேர்தல்

312. வாய்த்த மணவாளன் வந்தா னெனமகிழ்ந்து
சேத்த மலரடியார் சிற்றடியா ரையேவ

313. மாரன் ரதிமயன்ன மங்கையரிந்ர ராணியென்ன
ஆரமணி கற்பூர மாலத்தி தானெடுத்தார்

314. மங்களவாக் யம்படைத்த மாப்பிள்ளைரா
சேந்த்ரனுக்குப்
பங்கயப்பூந் தாள்நடக்கப் பாவாடை யிட்டனரே

315. இட்டபா வாடையின்மே லேகியரி யாசனத்தே
அட்டமங்க ளம்மார்ப்ப ஆண்மகன் வீற்றிருந்தான்

316. சிங்கா சனத்திருந்த செல்வமண வாளனுக்கு
மங்கா வதிருப மானூர் எதிர்நடந்து

317. பாதாம் புயம் விளக்கிப் பன்னீர் மிகச்சொரிந்து
பீதாம் பரத்தாற் பிரசமலர்த் தாள்துடைத்துச்

318. செய்யு முறைமை செய்துவெற்றிச் சிற்றடியார்
மெய்யில் வெயர்வரும்ப மீள நடந்ததற்பின்

**மணமகள் அலங்காரமும் மணவரை சேர்தலும்**

319. சுந்தரஞ்சேர் பூங்கொடியைத் தோழிமா
ரெல்லோரும்
வந்து மனமகிழ்ந்து மஞ்சனநன் னீராட்டிப்

320. பொன்னுக் கலங்காரம் பொன்னினுல்
செய்ததென்னத்
தன்னிகரில் லாத சரிகைப்பூம் பட்டுடுத்திப்

321. பாணிக்கு மேலழகு பாணித்து வைத்ததென்ன
மாணிக்கப் பொற்கட்டு வச்ரமணிச்
சட்டையிட்டுக்

322 கூந்தல் தனையொழுங்காய்க் கோதி
மலர்முடித்துச்
சேந்த கரத்திற் றிருச்சூளி யந்தரித்துக்

323. கன்னல் மொழிமட வார் கற்புடைக் காரிகைக்குப்
பின்னல் தரித்துப் பிறையுந் திருவும் வைத்துப்

324. புற்பரா கத்துடனே பச்சைவச் சிரநீலக்
சற்பதித்த சுட்டிவட்டங் கட்டி யலங்கரித்து

325. மணியினலுக் குத்து மரகதப்பூக் கொப்புமணி
அணிஞ்சுலுக்கி யாவும் அரசிலைப்பூத்
தொங்கலுடன்

326. ஒன்னப்பூ வச்ர முபயகண் ணுடியொத்த
கன்னத்தில் நின்றிலங்கக் காதுக் கணிந்தனரே

327. இன்னவிலை யென்றுரையா வீத்தங்காச்
செம்பவளப்
பொன்னசர விக்கோவைப் பூட்டுஞ் சரப்பளியும்

328. தும்பிப் பதக்கம் துலுங்குங் கிளிப்பதக்கம்
அப்புவி யெல் லாமதிக்கும் ஆளிமுகத் தாளிவில்லை

329. வன்னிக்குஞ் செங்கனக மாரடிக் கொத்துவடம்
கன்னிக் குமுகனைய கந்தரத்தின் மீதணிந்து

330. பொன்னரிசு தோள்முடி புசபந்த னத்துடனே
தன்னிகரில் லாவளையுந் தரத்துமணி யட்டியலும்

331. முன்கைவளை ரத்னசரி முந்துசந்து காறையுடன்
மின்மருவு பொன்மணியும் மேவுபச்சைப்
பொற்கடையம்

32. திக்கெட்டு மொன்ருகிச் செப்பி விலைமதியாக்
கற்கட்டு வச்ரங் கரமதனி லேயணிந்தார்

(333-336 ஆம் கண்ணிகள் எழுதிய ஏடுகள் இல்லை)

337. தண்டை சிலம்பு சதங்கைதங்கப் பாடகமும்
வெண்டரளந் தாரகைபோல் மேல்முடிச்சுச்
சங்கிலியும்

338. கட்டுசரம் பொற்பீலி காலாழி செம்பொன்னும்
மெட்டு மயிலடி கால் மெல்விரலில் தூக்கினரே

329. காவடர்ந்த மாவிடத்திற் காய்த்துப் பசந்தபிஞ்சு
மாவடுவை வென்ற வரிவிழிக்கு மையெழுதிப்

340, பொன்னுக் கணிகலனும் பொன்னமுதை
மற்றுமின்னர்
கண்ணெச்சில தீண்டாமல் கஸ்தூரி யாற்பூசித்

341 துலங்கிஅச ருப்பூத் தொடையல்கட்டிப்
பொன்போல்
அலங்கரித்துக் குப்பாய மனபாக வேபோற்றி

342 அருந்ததிபோற் கற்புடைய அன்னநடை
மின்னரசைத்
திருந்துமட மாதர் சிறப்பித்து வைத்தபின்னர்ப்

343. பந்தலிலே மிக்கநகர்ப் பார்த்திபரு மாதுலரும்
தந்தையரும் நல்லோருஞ் சாதிப் பெரியோரும்

344. கற்றவ நும் வேதியரும் காசியாரும் வந்திருந்து
குற்றமில் லாத குறித்தமுகிழ்த் தந்தனிலே

345. சொல்வரிதாங் கொத்துவா வோதிப்
பொருளிசைத்து
வல்ல மிசுறு மொகரா எழுதினரே

346. நிக்கா வெழுதி நிறைந்த களரி யெல்லாம்
ஒக்கவே பாத்திகா ஓதிப் புகழ்ந்தபின்பு

347. சீவிவைத்த பாக்குஞ் சிறந்தவெள்ளை வெற்றிலையும்
நாவி சவாது நறும்புனுகு சந்தனமும்

348. வெள்ளியினவட் டாவில் விளங்குதங்க வட்டாவில்
அளளி அள்ளிக் கையால் அவரவர்க்கே
தாமகொடுத்தார்

349. உலமாக்கள் ஆலிம்கள் ஓதுகின்ற வேதியர்க்கும்
அலமாப்புத் தீரப்பொன் னுடை மிகக்கொடுத்து

350. செல்வி முதியோர்க்குத் தீனோர்க்கு மாதுலர்க்கும்
இவ்வரிசை யெல்லாம் இயல்பாகச் செய்ததற்பின்

351. பூப்பிள்ளை நிர்த்தமிடு பொன்மணிச்சிங்
காசனத்தை
மாப்பிள்ளை ரயான் மகிழ்ந்திருக்க மாதரசைப்

352. பொற்சரோ ருகமானுப் போற்றருமை மாதுலனுல்
கற்புடைய மாதைக் கணவன்வல மாகவைத்தார்

353 கன்னிகையும் வந்து கணவன் வலத்திருக்க
மின்னிடையா ரெல்லோரும் விழிகுளிரப்
பார்த்துரைப்பார்

## மணமக்களை வியந்து உரைத்தல்

354. பெண்ணழகைப் பாரும் பெருவிரலைப் பாருமிரு
கண்ணழகைப் பாருமிரு கையழகைப்
பாருமென்பார்

355. பெண்பெற்ற பேறும் பெருமான் றனைக்காணக்
கண்பெற்ற பேறுமின்று கண்டோம் எனமகிழ்வார்

356. திருமானைக் காணவரு சிந்தை களிகூரப்
பெருமானைக் காணநல்ல பேறுபெற்றோ
மென்பாரும்

357. மின்னழகு மின்னை விரும்புந் துரைப்பெருமான்
தன்னழகைப் பாருஞ் சமானஞ் சமானமென்பார்

358. கன்னி யழகுங் கணவனழ குப்பார்க்கப்
பின்னு மிருநாட்டம் பெற்றிலோம் நாமென்பார்

359. வல்லமண வாளன் மதயானை கைப்பிடிக்கும்
செல்வம் படிந்த திருவடிவைப் பாருமென்பார்

360. கூர்த்தடங்கண் மானழகுங் கொற்றவனூர் தம்மழகும்
பார்த்து நமக்கதிக பாக்கியங் காணென்பார்

361. செல்வந் தழைப்பீர் சிறப்பாக வாழ்ந்திருப்பீர்
மல்வளர்ந்த திண்புயத்து மைந்தரனே கம்பெறுவீர்

362. தேனையும் மன்னர் திலகனையும் தாம்போற்றி
மானை நிகர்விழியார் வாழ்த்தித் துவாவோதிக்

363. குணமாக வெல்லோருங் கூடிக் குரவையிட
மணவாளன் றன்கையால் மங்கலியங் கட்டினரே

364. ஆள்வீரன் ரத்னமணி யாசனத்தி னின்றிறங்கி
வாள்போல் விழிநுதலில் வட்டப் பணமழுத்தி

(365 – 368ஆம் கண்ணிகள் எழுதிய ஏடு இல்லை)

**மைத்துனர் நகையாடல்**

369. தாள்பிடிக்கு மொன்னூர் தளத்திலொரு சிங்கமென்றால்
வாள்பிடிக்க கூசுவதேன் வாருமென்பார் மைத்துனர்கள்

370. ஏவாகள் நாயகமா மெங்கள் மணவாளன்
பூவாளைக் கையில் பொருந்தப் பிடியுமென்பார்

371. மைத்துனன்மார் செங்கிரண வாள்பிடியும் என்றுசொல்லச்
சித்தமகி பூச்சரம் செப்பக் களிகூர்ந்து

372. பின்ன மெவரைப் பிளக்கு......மது
முன்னமே வாளின் முனைநோக்கும் என்றுரைத்தார்

373. மையலிலே சிந்தையுறு மாற்றலரை வென்றவரோ
கையிலே வாள்பிடிக்கக் காணும் எனவுரைப்பார்

374. மதிகொண் டடையாரை வென்றமண வாளன்
கதிர்கொண்ட கூரிலைவாள் கையிற் பிடியுமென்பார்

375. மாற்றலரை வெல்லுவது மாத்திரமல்
லாமலெம்முன்
கோற்றொடிகை வாள்பிடிக்கக் கூடுமோ
என்றுரைப்பார்

376. மைத்துனன்மா ரிந்த வழக்குரைக்க மாறாத
சுத்த ரணவீரத் தோழர் மறுத்துரைப்பார்

377. தென்னவனை வென்றரண சிங்கமெங்கோ
னிச்சிறிய
கன்னியர்கள் முன்னே கதிர்வாள் பிடிப்பதென்பார்

378. கோதைவடி வேலெடுத்த கொற்றவனென்
றெண்ணுமல்
பேதையர்கை வாளைப் பிடியு மெனவுரைத்தீர்

379. கடவா ரணந்தகர்த்த கைவாளை வீரனையும்
மடவார்கள் முன்னே வடிவாள் பிடியுமென்றீர்

380. என்ன இவர்க ளியம்ப மனமகிழ்ந்து
மன்னவர்கோன் கீர்த்திவழங்குந் துரைப்பெருமாள்

381. பூவையர்கள் செவ்வாய் புதைத்துக் குரவையிடக்
காவலன் செங்கதிர்வாள் கையிற் பிடித்தனரே

382. மங்கையர்க்குங் காதில் வரிசைபல உள்ளதெல்லாம்
சங்கையுறச் சொல்லித் தடக்கைவாள்
வாங்கினரே

383. வாகைக் கதிர்வடிவாள் வாங்கியபின்
மானையண்ணல்
பாகை திரும்பிப் பகருவார் பாவைநல்லார்

384. நன்மைமண வாளனையும் நங்கையையும்
கண்குளிரப்
பொன்மயி லார்கள் புகழ்ந்து புகலலுற்ருர்

385. பேர்பெறுவீர் வாழ்வு பெறுவீர் மகப்பெறுவீர்
சீர்பெறுவீர் எல்லாச் சிறப்பு மிகப்பெறுவீர்

38 . என்றுமிக வாழ்த்தி யிதயங் குளிர்ந்தமின்ஞர்
மன்றல் மகிழ்நயத்து மன்னனைப்பார்த்
தேதுசொல்வார்

387. சோதிக் கிரணத் துலங்குமணித் தொட்டிலிலே
சாதிக்கு நாயகனுய்த் தான்வளர்த்த
மன்னவன்காண்

388. பொன்னுரு மண்டபத்தில் பூப்பந்தல் நன்னிழலில்
மின்ஞர்கள் பாராட்ட மிக்காய் வளர்ந்தவன்காண்

389. சந்த்ரவத னன்பெரிய தம்பிமரக் காயனவன்
மைந்தனை பெற்று வளர்த்த மறப்புலிகாண்

390. அய்யமற வன்னைசுற்ற மன்பாக முன்னுளில்
செய்ததவ மொன்ருய்த் திரண்ட முழுமணிகாண்

391. பொருதூ டெழுந்தவொன்ஞர்
போர்க்களத்திலேயே
விருதூது வாரவரை விருதுகண்ட மன்னவன்காண்

392. மருவார்கள் கண்டு வணங்கமருக் கூந்தல்
மருவாருங் கொங்கையர்சேர் மார்க்கண்ட
னைவன்காண்

393. ஐயனைக்கண் டிவ்வா றதிசயித்து மங்கைநல்லார்
கையெடுத்து மூக்கில்வைத்துக் கன்னியைப்பார்த்
தென்சொலுவார்

394. செம்பதுமம் விட்டுச் சிறந்தநவ ரத்னமொளிர்
ஐம்பொன்மதில் வீட்டில்வந்த அம்பொருளைப்
பாருமென்பார்

395. காதழகு மூக்கழகுங் கண்ணழகும்
வெண்ணகையும்
சீதமணி வாயழகுஞ் செங்கமலங் காணுமென்பார்

396. சுந்தரமும் தோளழகுங் கையழகு மெய்யழகும்
சுந்தரமும் வேறுவமை சொல்லவரி
தென்றுரைப்பார்

(397-404ஆம் கண்ணிகள் எழுதிய இரண்டு ஏடுகள்இல்லை)

## வரிசை வழங்கல்

405. விருப்பாறு பாய்கடலில் வியாபாரி யாகுமெங்கள்
கறுப்பாறு காவலவன் காணுங் கறுப்பாறும்

406. ஆர்கலியுந் திர்ப்பதாக யாகவீ ரொக்கமொரு
தூர்கலிய மூப் வகுதை யூர்ககபா ணந்திகழும்

407. மோகரங்கள் வாரி முயன்று வரும்படகும்
சாகரங்கு லாவிவச்ரந் தாங்கி வருஞ்சுலுப்பும்

408. மதிச்சோங்கு பச்சை மரகதத்தாள் கொண்டுவரும்
புதுச்சோங்கு செந்நெல் பொருப்பொன்று
தோணிகளும்

409. உண்மையுடன் வெள்ளி உருப்பியா ஏற்றிவரும்
வண்மைபெறு கின்றவளமும் வளமாய்க்
கொடுத்தார்

410. வீடாத செய்பொன் மணிவீடுங் கொடுத்துநிதம்
நாடா துலாநிகழும் நல்லவெள்ளை வாரணமும்

411. கடக்குமலை வீசுகடலை யெடுத்துறிஞ்சும்
நடக்குமலை போலவரும் நல்லவெள்ளை வாரணமும்

412. கவடிகள்மெய் பாயக் கவடிவைத்துத் தாவும்
கவடிவைத் துத்தாவுங் காமர் குரகதமும்

413 முந்து புதுமை குடியிருக்கும் மொய்ம்பனுக்குத்
தந்தச் சிவிகை தனிச்சிவிகை யுங்கொடுததார்

414. நாடோறுங் கீர்த்திகொண்டு நானிலத்தில்
நாவலர்கள்
ஈடேற வந்தவனுக் கேறுகனை தண்டிகையும

415. சருவந்து பூமுடியும் தங்கச் சரப்பளியும்
பருவந்தப் பாதுதவிர் பாங்கான தோள்முடி

416. முன்கை முதாரி முழுவயிரப் பொற்கடகம்
நன்குபெறு செம்பொன் நவரத்ன மாலிகையும்

417. துய்யகதிர் முத்துத் துரும்பதக்கம் கண்டசரம்
செய்யவிர லாழியருஞ் செம்பொன்னால்
தோள்வளையும்

418. மாணிக்கச் சட்டை வரும்பொற் கபாய்கள்மற்றும்
பூணாத தகுவதெல்லாம் பொற்பாக
வேகொடுத்தார்

419. வரிசைபெற வாங்கும் வரும்பெரிய கத்திவட்டப்
பரிசை யுடனே பருவாளுங் கைக்கொடுத்தார்

420. நீளுமுனை காட்டியெழு நேரிசமுங் கைவேலும்
ஆளு முனைச்சுரிகை ஆயுதமுந் தாங்கொடுத்தார்

421. வேளாஞ் சினேகவடி வேந்தர்முடி வேந்தனெனக்
காளாஞ்சி குஞ்சங் கனமிகுவெண் சாமரமும்

422. பொன்னிட் டகப்பை புதுச்சித்ர வெள்ளிமிடா
மன்னுமிரு கால்சேர் மணிவயிரப் பாக்குவெட்டி

423. செம்பொற் கரண்டகமும் சீவிலைத்துத்
தான்முடியும
பைம்பொன்முடி சீருமுதல் பாங்காக
வேகொடுத்தார்

4?4. விற்பூட்டிப் பெட்டகமும் மேவியொளி சேர்கனகப்
பொற் பூட்டுப் பூட்டிப் பொருந்துநிலைப்
பெட்டகமும்

425. வெள்ளியினுல்தீகுத்து விளக்குடன்வெண்
பட்டுமெத்தை
கொள்ளுந தழுவணையும் கூறுசப்ரக்
கொள்கையுடன்

?26. கூறிய பொற்கொட்டுக் கூடைதங்கச் சட்டுலமும்
வீறிய காந்தியெங்கும் வீசுவெள்ளி வெண்குடமும்

427. பொன்னரிக்கஞ் சட்டி புதுச்சித்ர வெள்ளிமிடா
மன்னு சிறுகுடங்கள் வாய்குவிந்த பொற்கலசம்

428, மாந்தளிர்செம் பட்டு வருமேக வர்ணியுடன்
ஏந்து'புள்ளிப் பட்டோடிளமா துளைச்சேலை

429. இச்சைக் கினிதா யிசைந்த மணிக்கிணங்கிப்
பச்சைக் கிளியுமந்தப பஞ்சவர்ணப் பூங்கிளியும்

430. பலமணிக ளிட்டாடும் பல்லாங் குழியுமின்ஞர்
நலமணையி லாடும் நவரத்ன வயமணையும

431. உமிழும் படிக்கம உயர்படிக்க முங்கலமும
கமலப் படிக்கம் காளாஞ்சிச் சேமெய்க்கலம்

432. கட்டிவருஞ் செம்பவளக் கட்டில்தலை
காணிமெத்தை
இட்டமக லாதே யிருக்கவந்த பாங்கியரும

433. தாளடியில் நின்று தலைபணிந்து வேலைசெய்ய
ஆளடியா ராயிரமும ஆணடியா ராயிரமும்

434. செப்புந்தைய லார்நினைந்த சீவரத்னம்
வைக்குமுத்துச்
செப்புந் தாலாவும் செய்யபொன்னின் வட்டாவும்

435. சிந்தைமகிழ் கின்ற தந்தச் சீப்புஞ் சிணுக்கரியும்
வந்தவரைத் தன்னிடத்தில் வைக்கும்நல்ல
ஈர்கொலியும்

436. நாக்குத் திருந்துமொழி நங்கையருங்
கொங்கைகொண்டு
மூக்குத் திருந்த முழுமணிப்பொ ;ற் கெண்டிகளும்

437. பெய்தக்கால் காந்தி பெருகுதங்கப் பள்ளயம்
போற்
செய்தக்கால் நன்மையெனச் சேனைக்கா
லுங்கொடுத்தார்

438. பூங்கா வனமும் புதிய தென்னஞ் சோலைகளும்
நீங்காமல் மங்கையர்கள் நீராடும் வாவிகளும்

439. பாலுக் கெருமை பசுமாடும் ஆடுகளும்
மேலுக்கு மேலுமெண்ணி வீறுபெறத்
தாம்கொடுத்தார்

440. வையம் மகிழ்ந்திட நன் மாம னெழுந்திருந்து
செய்யும் வரிசையெல்லாம் செய்தோம்
எனக்கொடுத்தார்

## வாழ்த்துரை

441. இந்த வரிசைபெற்ற ஏந்திழையு மன்னவரும்
மைந்தர்பதி னாறும் வகையாகப் பெற்றெடுப்பீர்

442. பொன்னு மணியும் பொருந்துதல்போ லேபொருந்தி
எந்நிலமுந் தான்வாழ எப்போதும் வாழ்ந்திருப்பீர்

443. நன்றி பெறுவீர் நயம்பெறுவீர் ஆண்பெறுவீர்
என்றுந் துனியாவில் ஈமான் மிகப்பெறுவீர்

444. குன்றில் விளக்காய்க் குலவிளக்காய் ஓங்கிநிலை
நின்ற பெரும்புவிமேல் நீடூழி வாழ்ந்திருப்பீர்

445. துய்ய ஈசுபு துணையாய் சுலைகாபோல்
வய்யநடு எந்நாளும் அன்பாக வாழ்ந்திருப்பீர்

446 சுலைமா னன்னபியும் தோகைபல் கீசையும்போல்
அலையாத செல்வமொடும் அழகாக வாழ்ந்திருப்பீர்

447 மன்ருட்ட முள்ள மூகம்மது கதீஜாபோல்
நன்று யிருவீரும் நலமாக வாழ்ந்திருப்பீர்

448. விளங்கும்அலி யுல்லாவும் வீவிபாத்து
முத்தையும்போல்
வளங்குலவ மேன்மேலும் வாகுபெற
வாழ்ந்திருப்பீர்

முற்றும்

# செய்தக்காதி

# நொண்டி நாடகம்

## காப்பு

கண்டவர்கள் கொண்டாடும் கன்னன் வகுதையில்வாழ்
மண்டலிகன் பெரியதம்பி மரக்காயன் அருளுதித்தோன்
கொண்டவர்கள் கலிதீர்க்குங் குருசெய்த காதிதன்மேல்
மொண்டிநா டகத்தைப்பாட முதல்வனே காப்புத்தானே.

## சிந்து

1. திருவுலாவிய வகுதைநகர்வரு
கருணைவாரிதி தருமகுணநிதி
செய்தகாதியென் றெய்து காமனையே
கொண்டாடவே
உருவமேயெனி லுருவமேயல
தருவமேயெனி லருவமலதெனு
மொருவனே துணை யொருவனே துணையே
—தந்தன தானனை

2 நகுலனற்குண சுகுணனன்கொடை
முகிலெனுங்கரன் பெரியதம்பி
நராதிபன்செய்த காதிதன்புகழே கொண்டாடவே
முகில்கவிந்திடு கவிகைகொண்டருள்
முகம்மதாம்நபி இருசரண்களை
முழுதுமன்பொடு தொழுதிறைஞ்சுவனே
—தந்தன தானனை

3. காவிப்புதுமலர் வாவிக்கரைகயல்
தாவிக்குலவிய காயற்றுரைசெய்த
காதிக்கினியசொல் லோதித்துதிசெய
லேகொண்டாடவே
பூவிற்றிருமகள் போலத்தருமக
ளாரைத்திருநபி யாருக்குதவும
பூபக்கரை யிசை நாவிற் புகழுவனே
—தந்தன தானனா

4. தருவிஜயரகு நாதப்பெரிய
தம்பியையிய லிசைகளாலே
தருசெழுந்தமி ழதனிலன்பொடு
சான்கொண்டாடவே
அருமைமகனொடு தாதைக்கிளேவனே
முறைமைதவறின தாலேவதைசெயும்
அரசருமறையென் னுவினிற் புகழுவனே
—தந்தன தானனா

5. திக்கிலெழுபா ருக்குளிசைபூ
ரிக்கவளர்கா ரிக்கைநிகர்மலர்
செய்தகாதியென் றெய்துகாமனே
யேகொண்டாடவே
மிக்கமறைநூ லுக்குளுரைதேர்
தக்கவிசலா மிற்றலைமைசெய்
வெற்றியுதுமா னைப்புகழுவனே
—தந்தன தானனா

6. காயல் நகர்கன தானனுலகுப
காரனெமதுச காயனுயர்செய்த
காகிதனதும கா அதிபுகழ் கொண்டாடவே
வாயுவெனுமதி வேகதுலுதுலு
வானபுரவியும் வாளுமுடையவர்
வலிமைகொண்டவர் அலிசரண்டுனேயே
—தந்தன தானனா

7. அதிக குணவரன் மதுரமொழியாக
ளழகுமதனவேள் பெரியதம்பிமேல்
அருமைமிகுதரு தமிழ்சொரிந்தே கொண்டாடவே
மதினநகர்வாழ் புலியெனவியருள்
மதலையெனவரு மசனையுசனை யென்
மனதிலன்பொடு தொழுதிறைஞ்சுவனே
—தந்தனதானனா

8 மருமலர்ப்புயன் றருமசற்குண
வள்ளலாகிய தெள்ளுமாமணி
வகுதையார்செய்த காதிமன்புகழ் கொண்டாடவே
குருவினுத்தம சருவசற்சனக்
கோன்முகியித்தீன் சரண்களைக்
குறியினெடுகண் சிரசில் வைத்துக் கொண்டேனே
—தந்தனதானனா

**நொண்டியின் சபையுலா விருத்தம்**

தன்மமும் பொறையுங் கொண்ட சற்குண னிதிபோல்வந்த
மன்மதன் வச்ர நாடன் வகுதைவாழ் செய்தகாதி
பொன்மக னிகர்த்த மாடப் பூமகள் புகழ்கொண்டாட
நன்மைசேர் கொலுவி னெண்டி நயத்தொடுந்
தோன்றினனே

**சிந்து**

1. இந்நிலம்புகழ்பிர தாபன் —விஜய

**இரகுநாயகப்பெரிய தம்பிமகிபன்**

கன்னவ தாரன் புகழ் பாடி —நொண்டி
களரிக்குளாடக்கங் கணங்கட்டினனே

2. ஆலிக்கும் வீரதண்டை கட்டி —அதற்
கண்டையிற் பலகறை வெண்டயமுங் கட்டிக்
காலுக்குப் பந்தமுங் கட்டி —நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னுனே

3. அந்தமாய்ச் சருபந்து கட்டி —மெய்யி
லகலாத்தும் சகலாத்து டகலர்வுங் கட்டிக்
கந்தைக்குப் பாயமுங் கட்டி —நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னுனே.

4. மெய்யிற்குங் குமவாடை பூசி —நொண்டி
விருதான வழிக்கெல்லாம் மவுத்துவம் பேசி
கையிற்குஞ் சமெடுத்து வீசி —நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னுனே.

5. பரிசையொடு பெரியகத்தி கொண்டு —பாசிப்
பருவமயிர் காட்டிவீசை திருத்திவீசை முறுக்கி
கருதலர் வாயடங்கக் குத்தி —நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னுனே.

6. புதுமலர் குங்குமத்தார் சூடி —காயற்
போசன்செய்த காதி புகழைக்கொண் டாடிக்
கதையோடு காவியங்கள் பாடி —நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி னுனே.

7. கண்ணுடி போற்பரிசை பதித்து —நொண்டி
கால்வீசி வட்டமிட்டு மேன்மீசை திருத்தி
சுண்ணும்புக் கல்லுபபல்லுக் காட்டி —நொண்டி
தொந்தோமென் ருடிக்கொளத்
துசங்கட்டினுனே

8. வல்லாண்மை மந்த்ரவித்தைக் குள்ளன் —எங்கும்
வலைபுகுந்த நரிபோல வந்திருச்கு முள்ளன்

கல்லிலே நாருரிக்குங் கள்ளன் —நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டி ஞனே.

9. ஆனைமா ருட்டஞ்செயுந் தீரன் —இசுலா
மானபேர்க் கெல்லாம ருமைக்கு மாரன்
கானிலங்குங் குங்குமப்பூந் தாரன் —நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டிஞனே

10. எத்தலமு மெச்சுபிர சண்டன் —வீர
தீரர்பட் டாணிகள் ராவுத்தர் கண்டன்
கர்த்தனைத் தொழுவோர்க்குத் தொண்டன்
—நொண்டி
களரிக்கு ளாடக்கங் கணங்கட்டிஞனே

11. வாதாடும் பேர்களைத் தடுப்பேன் —எதிர்
மாற்றலர் மூக்கிற்றும்பைச் சாற்றையும்
விடுப்பேன்
வேதாந்த குருவைக்கை யெடுப்பேன் —கள்ள
விச்சைக்குப் பத்திரட்டி பிச்சையுங் கொடுப்பேன்

12. தேச மெழுகடலுஞ் செல்வேன் —என்றுந்
திண்டுமுண்டு கொண்டவண்ட நொண்டிகளைக்
கொல்வேன்.
பாச முறுஞ்சமயம் வெல்வேன் —செல்வப்
பார்த்திபன் செய்தகாதி கீர்த்தியையுஞ்
சொல்வேன்.

13. குபிரான பேர்களைத் துணிப்பேன் —என்றுங்
கோதற்ற தீனோர்கள் பாதத்தைப் பணிவேன்
அபிராம தீனெறியிற் புகுவேன் —நசு
ருணிகள் மார்பில்முளை யாணிகள் அறைவேன்.

14. கன்னன் செய்தகாதிபுகழ் துதிப்பேன் —அவன்
கால்கும்பிடாரை நொண்டிக் காலால்மிதிப்பேன்.

என்னை வணங்கும்பேரை மதிப்பேன் —விரு
திட்டுச்சண்டை யிடுவார்மு னெட்டிக் குதிப்பேன்

சுயசரிதை

ஒடுங்காப்புலி செஞ்சிநகர் புகுதல்

**விருத்தம்**

உரைப்பருந் தமிழ்ப்பா வாண ருயிரையுங் காத்து நீண்ட
திரைப்பெரும் புவனங் காத்துத் தீனவர் குலமுங் காத்த
வரைப்பெரும் புயத்தான் சாயல்மன்னவன் செய்தகாதி
துரைப்பெருஞ் செல்வம் பாடித் துதித்திடு நொண்டி
நானே

**சிந்து**

15. மாலைக் கறுப்பழகன் —சொக்கர்
மச்சுன னாகிய அச்சுதேவன்
சோலைக் கிரிதனிலே —கள்ளத்
துங்க னெனுஞ்சேமன் வங்கிசத்தில்

16. இல்வாழ்க்கை கொண்டபிரான் —கள்ளர்க்
கெல்லாந் தலைமையாம் வல்லாளன்
கல்லாவிற் பால்கறப்போன் —வணங்
காப்புலி சேயொடுங் காப்புலி தான்

17. நானு விதக்களவும் —மாய
நஞ்சுக ளாகிய வஞ்சனையு
மானு பரன்சேமன் —கற்று
வைத்துப் பதுக்கிய பொத்தகமும்

18. அகலாத வித்தையெல்லாம் —படித்
தாளானே னெல்லாக் கோளாறும்
வகையாய்த் தெரிந்தபின்பு —நம்மை
வாழ்விக்குஞ் சொக்கரைச் சேவிக்கவே

19. வேணு மெனநினைந்தே —தமிழ்
மீனவன் கூடலிற் போனபின்பு
தாணு த்ரியம் பகனே —நீயே
தயபவென் றேன்கொடிக் சம்பமுன்னே

20. முன்னேவனைத் தெண்டனிட்டேன் —அந்த
மூவர் பிரான்கோயிற் றேவடியாள்
பொன்னரும் பூண்முலையாள் —கஞ்சப்
போதகச் சண்பகக் கோதையுடன்

21. கோதை யபிராமி —முத்துக்
குங்குமக் கோதையாள் சங்கு முத்து
சீதை சிவகாமி —பொன்னின்
சின்னச் சவுந்தரி யன்னமுத்து

22. முத்துமாலை மீனாட்சி —சேர
முன்னடந் தாள்நான் பின்தொடர்ந்தேன்
கத்தூரி வாணுதலாள் —என்னைக்
கண்டாள் திருமணி மண்டபத்தில்

23. புத்திசேர் தூணருகே —நின்று
பார்த்தா ணமக்கிவள் வாய்த்தாளென்றே
கொத்துலாம் பூங்குழலாள் —தமிழ்க்
குங்குமக் கோதைம ருங்கிற்சென்றேன்

24. சென்றேனைக் கைப்பிடித்தாள் —எந்தத்
தேச முமக்கென்று பேசிக்கொண்டாள்
நன்றுச்சு ̄தெனமகிழ்ந்தே —என் தன்
நாட்டைச்சொன் னேன்வாரும் வீட்டுக்கென்றாள்

25. என்றாள் அருந்துமென்றாள் —கையி
லாகுந்தந் தாளிலைப் பாகுந்தந்தாள்
மன்றா ரறிந்திடவே —இறு
மாப்புட னேமனை போய்ப்புகுந்தேன்

26. புகுந்தேனை யாதரித்தாள் —தங்கள்
பூறுவ சிநேகிதம்போற் சோறுதந்தாள்
மிகுந்த பரிமளமும் —உடல்
மீதினிற் பூசச்சவ் வாதுந்தந்தாள்

27. தாளந் துணைமுலையாள் —வாயிற்
றம்பலந் தந்தாள்க ரும்பதுபோல்
ஆளே யதேன்னசொல்வேன் —குளி
ராட்டிக்கொண் டேமச்சு வீட்டிற்சென்றேன்

28. வீட்டிற் பரிமளமுங் —கட்டில்
மெத்தையுஞ் சுற்றிய சித்திரமும்
பூட்டுந் திரைத்துகிலுஞ் —சொக்கப்
பொற்கட்டி யாற்சுட்டு மேற்கட்டியும்

29. கட்டு விதானமெல்லாம் —நானே
கண்டிருந் தேன்மனங் கொண்டிருந்தேன்
பட்டு ரவிக்கைக்குள்ளே —வைத்த
பச்சிள நீர்தந்தா ளுச்சிதமாய்

30. உச்சி நகம்பதித்தே —இத
ழுண்டுகொண் டேன்சுகங் கண்டுகொண்டேன்
மெச்சிச்சவ் வாசெனவே —கட்டி
மேவிக்கொண் டாள்குரல் கூவிக்கொண்டாள்

31. கொண்டாடி முத்தமிட்டாள் —மிகக்
கொஞ்சிச் சரசத்தின் மிஞ்சிக் கொண்டாள்
கண்டாசை கொண்டவர்போல் —என்னைக்
கைகலந்த தாளதில் மெய்மறந்தேள்

32. மெய்வேர்வை மாறுமுன்னே —பாக்கு
வெற்றிலை யும்புகைச் சற்றுந்தந்தாள்
கைவேர்வை யும்மருந்தும் —பல
காரத்து டன்கூட்டிச் சேரத்தந்தாள்

33. தந்த மருந்தாலே —மெத்தத்
தள்ளாடித் தள்ளாடி யுள்ளானேன்
சிந்தை தடுமாறி —ஓட்டுச்
சிட்டிப் போல் நானகப் பட்டுக்கொண்டேன்

34. கொண்ட பயல்போல —மெள்ளக்
குங்குமக் கோதையாள் சிக்கிக்கொண்டாள்
உண்ட மருந்தாலே —கையி
லுள்ளதெல் லாங்கள்ளி கொள்ளைகொண்டாள்

35. கொள்ளை கொடுத்தவர்போல் —வந்த
போப்புங்கண் டேனெடுங் காப்புலிநான்
தள்ளத்தள் ளத்திரிந்தேன் —அவள்
தாய்ப்புலிக் குள்ளானேன் ஈப்புலிபோல்

36. புலிபோல வீறிடுவாள் —வாடா
போருக்கென் பாள்போடா ஊருக்கென்பாள்
கலியோ விதிப்படியோ —சொக்கர்
கற்பனை யோமாமி சற்பனையோ

37. சற்பமுங் கீரியும் போல் —மாமி
சன்னமிட் டாளூரிற் கன்னமிட்டேன்
பொற்பூ டணம்புடவை —கண்ட
பொன்னையெல் லாங்கொண்டு முன்னம்
வைத்தேன்

38. வைத்தேன் மனங்குளிர்ந்தாள் —வெறு
வாய்க்கிலை யுங்கெட்ட தாய்க்கிழவி
அத்தை வகைக்காரி —பின்னும்
ஆதரித் தாளதி லேதரித்தேன்

39. தரித்தே னொருமாதம் —அங்கே
சஞ்சரித் தாள்வல்லி பஞ்சரித்தாள்
சிரித்தே முகம்பார்த்தாள் —ஒரு
சின்னச் சிறைவேணு மென்னச்சொன்னாள்

40. சொன்ன வசனமெல்லாம் —அவள்
தோத்திர மாய்ச்சொன்ன மாத்திரத்தே
பொன்னே மடமயிலே —இதோ
போறேன் சிறைகொடு வாறேனென்றேன்

41. கொண்டுவாறே னென்றெழுந்தேன் —குயில்
கூச்செறியப்பெரு மூச்செறிந்தாள்
பெண்டுபோற்க ணீர்சொரிந்தாள் —மனம்
பேதலித் தாளென்மேற் காதலித்தாள்

42. காதல்கொண் டாரெனவே —என்னைக்
கட்டிச் சிணுங்கிக்கும் பிட்டுக்கொண்டாள்
பேதை முகம்வாடி —ஒரு
பேச்சும்விட்டாள்பெரு மூச்சும் விட்டாள்

43. தொழுது கடன்கழித்தாள் —அவள்
தோத்திர மாய்நின்ற மாத்திரத்தே
பொழுது விடியுமுன்னே —நீரும்
போய்வாரு மென்றவள் தாயுஞ்சொன்னாள்

44. சொன்ன படிதுணிந்தேன் —ஈச
சொக்கரை யுந்தொழு தக்கணமே
பின்னலு கருங்குழலாள் —ஆசை
பின்னிழுக்க விதி முன்னிழுக்க

45. இழுக்கொன்றும் பாராமல் —காசு
மேவின துங்குயில் கூவினதும்
ஒழுக்கமென் றேநினைத்தே —சென்றங்
கொல்லையி லேதிண்டுக் கல்லில்வந்தேன்

46. வந்தேன் கடைத்தெருவே —அங்கே
வங்கண மாக்கண்டேன் சிங்கணனைச்
சந்தோஷ மாச்சுதென்றே —சோறு
தண்ணீருந் தந்தவ னுண்ணுமென்றான்

47. உண்டேன் பசிதீர்ந்தேன் —அவ
ளுைத்தாசை யாலங்கே நித்திரையுங்
கொண்டே னெழுந்திருந்தேன் —சோழி
கூப்பிடு மூன்வேளை வாய்ப்பெனவே

48. வேறொன்றும் பேசாமற் —போனேன்
வென்றிச் சிரகிரி கண்டுசென்றேன்
ஏறொன்று வெம்பரியார் —செவ்வந்
தீசரைக் கும்பிட்டுப் பூசைசெய்தேன்

49. செய்யாருங் காவேரி —யாடிச்
சீரங்க மானம காரங்கத்தில்
ஐயர் பதந்தொழுதேன் —தொழு
தஞ்சாறு நாளங்கே சஞ்சரித்தேன்

50. சரித்திரமெல் லாங்கேட்டே —என்னைச்
சந்தித்துப் பேசவே சிந்தித்துக்கொண்
டொருத்தன் திருப்பதியான் —அந்த
ஊரில்வந் தானவன் பேருஞ்சொன்னன்

51. பேரான கள்ளனென்றே —அவன்
பேச்சுக்கொண் டேதுணை வாய்ச்சுதென்றே
நீரா ரெனப்பகர்ந்தேவ —அந்த
நேரத்தில் தன்வழி சாரச்சொன்னன்

52. சொற்கேட் டகமகிழ்ந்தேன் —ஒரு
சோடா விருவருங் கூடிக்கொண்டோம்
பொற்கோ புரவாசல் —தன்னிற்
போய்நின்று சத்தியஞ் செய்துகொண்டோம்

53. கொண்ட திருவரங்கம் —எனுங்
கோவடி மைத்தொழிற் றேவடியாள்
தண்டா மன்றமுகத்தாள் —என்னுஞ்
சந்த்ர கலாவதி சிந்தாமணி

54. சிந்தை களிகூர —ரொக்கஞ்
செங்கையி லேபணை யங்கொடுத்தோம்

அந்திப் பொழுதுதனிற் —சென்றுங்
காளுக்கோர் தேவடியா ளைத்தொட்டோம்

55. தொட்ட கலவியிலே —என்னைத்
தோய்ந்தவள் கண்டூங்கிச் சாய்ந்துவிட்டாள்
நிட்டூர மாய்நினைந்தே —கடு
நித்ரையிற் சொக்குப் பொடிதூவி

56. தூவியன்ன மென்னடையாள் —இட்ட
தோடுஞ் சவளியும் பாடகமுங்
கோவைமுத்து மாலையுடன் —முத்துக்
குச்சுவச்ரக் கொப்புக் கச்சுடனே

57. உடைமையுண் டானதெல்லாம் —சேர
ஒக்கச் சுருட்டியடக்கிக் கொண்டு
திடமா யெழுந்து வந்தேன் —அந்தத்
திருப்பதிக் கள்ள னிருப்பிடத்தே

58. இருபேருங் கைகலந்தே —மனம்
ஏங்கிக் கலங்கிக்கண் தூங்கிவிட்டான்
சரிசாம வேளையிலே —அவன்
றன்னையு முச்சவென் றந்நேரம்

59. மேலான சொக்குப்பொடி —போட்டு
வீட்டுக் கிராணத்திற் பூட்டிவிட்டேன்
நாலா வகைப்பணியும் —அந்த
நள்ளிருட் சாமத்திற் கொள்ளை கொண்டேன்

60. கொள்ளைப் பணிகளெல்லாங் —கட்டிக்
கூட்டியே மாராப்புப் போட்டுக்கொண்டு
மெள்ள வெழுந்து வந்தேன் —அந்த
வீதிவிட் டேசெஞ்சிப் பாதையிற்போய்

61. போனே னிராவழியே —கள்ளப்
போர்கடந் தேன்கண்ண னூர்கடந்தேன்

கூறு மதிதவழுஞ் —செஞ்சிக்
கோட்டைகண் டேன்வாசற் பேட்டைகண்டேன்

62. கண்டேன் பலதெருவும் —கடைக்
காவண மும்வீதி யாவணமும்
கொண்டாடு மாரியம்மன் —கோயிற்
கோசிகன் போல்வந்த பூசகனைக்

63. கனமா யுறவுகொண்டேன் —தோளிற்
கட்டிக் கொடுவந்த பொட்டணமும்
மனமே திடமறிந்து —வைத்து
வைத்தங்குச் சோறும மத்திக்கொண்டேன்

64. மத்யபா னங்கொடுப்பான் —சோறும்
வாய்ப்புட னேதரச் சாப்பிடுவேன்
நித்யகா லமுஞ்சுகித்தேன் —என்னை
ரெற்சித்துப் பிள்ளைபோல் வச்சுக்கொண்டான்
தந்தன தனதானா

[அபரங்குசேகுவின் சேனை செஞ்சியிற் பாளயமிறங்கியது]

## விருத்தம்

வைத்தவ னிருகண் போல வளர்த்தெனைக் காக்குநாளில்
முத்தலம் புகழுஞ் செஞ்சி முதுநக ராமுராஜன்
அத்தல மிழந்த வாறு மபரங்கு சேகுசாய்வு
கைத்தலப் பரிமாக் கொண்டு கலந்ததும விளம்புவேனே

65. கசரத துரகதத்தான் —காயலில்
விசய ரகுநாதப் பெரியதம்பி
புசபல ரணசூரன் —புகழ்வளர்
திசைகளி லுயர்செஞ்சி நகர்தனிலே

66. மாருடத் துரைகளிலே —மதகரி
யேருன சீகோஜி ராயன்மைந்தன்

தேருர்கள் பணிசரணன் —திசையெங்கும்
வீருன மனுநெறி விளங்குபிரான்

67. செகமண்ட லிகர்கண்டன் —செவ்விமதி
முகமண் டலசுகந்த மோகமதன்
மகிபதி சுகலளிதன் —வாதாடும்
இகல்மரு வலர்புலி ராமுராயன்

68. வெங்கோப வாரணத்தான் —விகசித
பங்கே ருமுக பாக்கியவான்
சங்க்ராம செப்பீரன் —தரணியிற்
செங்கோல் மனுமுறை செலுத்துமந்நாள்

69. துரைபுகில் சூலுபுகான் — சிங்கத்
துரை பதியாமக்க யிசுமாலுகான்
நரபதி தாவுதுகான்
நாயக்க ஞதிறுகா னப்பசுகான்

70. தத்துலுகான் சவ்வாசுகான் —லாடபனத்
தாடாள சதிரிசிங் காடவுடன்
சுத்தவீர சுத்தருகான் —சூலுபு
துமுசதி திமிசதி திசமுதுகான்

71. தீசுத ஞெகுதுகான் —பூலேகான்
தீனயி மாமுகா னலிமருகான்
மதியூகி நல்லாசுகான் —கானுகான்
மலுக்கு சந்தருகான் மகம்மதுகான்

72. ஆகரை நகர்புரக்கு —மனுமதி
அபரங்கு சேகுசாய் வருட்படியே
சேகர மாசக்கூடி — ஒசிருகள்
தெக்கண திசைமுற்றுந் திறைக்கொள்ளவே

73. அடல்மத கரியுடனே —அறுபதி
ஞயிரங் குதிரையும் பொந்தலியரும்
வடவரை கிடுகிடென —அடையலர்
மலங்கிட வேகெற்பங் கலங்கிடவே

74. வந்திறங்கி வேலூருடன் —அணிவந்த
வாசியுங் கொண்டாரந்த வாசியினுல்
சந்திரோய் வயிரோயி —கோரப்படைத்
தளத்தைத் தூரத்திரண களத்துடனே

75. குறுகலர் திறையிடவே —நடந்தொரு
கூட்டத் துடனே செஞ்சிக் கோட்டையின்மேல்
கறைபடி வேலரசர் —பேரிகை
கறங்கிடப் பாளைய மிறங்கிடவே

76. தாடாண்மை யுடனேவந்து —செஞ்சி
தலைவரை சுற்றுமட்ட குலவரைபோற்
கூடார மும்மடித்தே —படங்குகள்
கோட்டி நிசான்களு நாட்டினரே

77. கடகரித் திரள்களெல்லா —நிரைநிரை
கருங்கிரி யெனச்சுற்றி நெருங்கிடவே
மிடைதருஞ் செடியறவே —காடுகள்
வெட்டினுர் குதிரையுங் கட்டினுரே

78. ஒட்டகைத் திரளுடனே —சுமையெடுத்
தொருதிர ளாய்வந்த எருதுகளும்
கட்டினு ரணியணியாத் —துரைமக்கள்
காவலும்வைத் தார்களச் சேவலுக்காய்

79. வடுகருங் கன்னடியருஞ் —சோலைதொறு
மடங்க டொறுமிருந்தா ரிடம்பெறவே
தொடுகடல் வளைந்ததுபோற் —பாளையந்
தொகுத்தினி தரசரும் வகுத்தனரே

80. நரபதி தளமல்லவே —யொட்டிரெட்டி
நாலுகொண்ட கோலகொண்ட தளமல்லவே
பெருகிய கடலதுபோல் —வந்ததெல்லாம்
பேச்சறி யாத்தலுக்க ராச்செனவே

81. சூட்சும தாத்துலுக்கர் —இனிப்போய்த்
துடிப்பா ரேசிறை பிடிப்பாரே
யாட்சிமனம் வெறுத்ததென்றே —எதிர்த்தமர்
ஆடினு ரென்றுகூடி யோடினுரே

82. வீட்டையும் பாராமல் —கச்சுக்கட்டில்
மெத்தையுந் தழுவணையுங் குத்துவிளக்கும்
மாட்டையும் பாராமல் —நடந்தோடி
வாராத மக்களையும் பாராமல்

83. காட்டினிற் புகுவாரும் —வாஞ்சித்த
கைக்குழந்தை யொக்கயிடை யிடுக்குவாரும்
தேட்டத்தி லிச்சையுடனே —மனத்தினில்
திடமற்றுப் பதுங்கியே கிடப்பாரும்

84. அருமைக்கு ழந்தைகளையே —தப்பவிட்
டலைவாரு மெண்ணத் தொலையாதே
பொருமிப் பொருமி யழுதே —தமைக்கொண்டு
போவாரும் முகிலரை நோவாரும்

85. அலைந்திடும் பட்சிபோலே —காட்டிற்சென்
றலைவாரும் பசியினு லுலைவாரும்
தலைவிதி யிதுவெனவே —மடங்களில்
தரிப்பாருந் தூங்கமுந்தி விரிப்பாரும்

86. தப்பவகை யில்லாமல் —அகப்பட்டுத்
தவிப்பாருஞ் செங்கை குவிப்பாரும்
இப்படிச் சனங்களெல்லாம் —மனதுநொந்
தேங்கிக் குடிவலசை வாங்கினரே

87. போனவ ரகந்தோறும் —போய்ப்பார்த்தேன்
புலியில்லா மனையதி லெலிபோலே
நானதெல் லாமறிந்தேன் —விடுதிக்குள்
நண்ணினேன் மனத்திலொன் றெண்ணினேனே

88. காலவிப ரீதத்திஞல் —நமக்கினிக்
கைக்கான சிறையொன்றும் சிக்காதென்றே
சூலுபு கான்ராயன் —பாளையத்தில்
துரகத மொன்றுகொண்டு வரநினைத்தேன்

89. கோதடி தாமெனுடுத்தேன் —கஞ்சாக்
குடுக்கை கைக்குட்படு தடுக்குடனே
மாதடி கோடாலி —குண்டரம்
மயிற்பீலி விரிசங்கு சக்ரமுடன்

90. கம்பளிக் கயிறுடனே —இடுப்பினிற்
கந்தையுங் கமர்பந்தும் கட்டிக்கொண்டேன்
வெம்புலி போற்சிவந்தேன் —தவசிகள்
வேஷமாய் வெண்ணீறு பூசிக்கொண்டேன்

91. ஆண்டிகள் வேஷங்கொண்டேன் —எண்ணுமல்
அடர்ந்தேறிப் பாளையத்தில் நடந்தேனே
வேண்டிய வீதிகண்டேன் —அவரவர்
விடுதியெல் லாங்கண்டேன் சடுதியிலே

92. கடைத்தலை வீதியிலே —மணிய
காரியக் காரர்தலை யாரிகளும்
திடத்தொடு இருக்கக்கண்டேன் —துரைகளொரு
சீருக விருக்குங்கூ டாரங்கண்டேன்

93. நலம்புனை சூலுபுன்கா —கூடாரத்
தாசார வாச லதுவுங்கண்டேன்
ஈடற்ற படைநெருங்கும் —வங்கார
எச்சப்ப நாயக்கன் வாசல்கண்டேன்

94. கூடார வாசலிலே —லாடர்கள்
கூட்டமும் பக்கீருக் கூட்டங்களுஞ்
சோடாக விருக்கக்கண்டேன் —மனத்தினிற்
சூழ்ச்சியாய்க் கையெடுத்துத் தாழ்ச்சிசெய்தேன்

95. ஆவுக்காஞ் சாத்தெபெ ருர் — ய்புநான்
ஆபுலக்கா புலத்திலா யோமென்றேன்
காவுரே காணு வென்ருர் —இதுநல்ல
கருமமென் றேசென் றருகிருந்தேன்

9 . கடைபடுங் கஞ்சாத்தண்ணீர் —பாத்திரத்திற்
கட்டளையிட் டார்பிரமன் கட்டளையென்றே
இடையூ ா பேசாமல் —மண்டிபோட்
டிருந்து விசுமிச்சொல்லி யருந்தினனே

97. கறிகளும் ரொட்டிகளும் —அவரவர்
கையார மெய்வழக்கஞ் செய்தார்களே
அறிவுள பெரியவர்போல் —நானுமதை
ஆசாரத் துடன்கொண்டேன் கூசாமலே

98. கலக்கிய வங்கி வெறியால் — கண்சிவப்புங்
கலந்திட நாவும் பல்லு முலர்ந்திடவே
மயக்கமுந் தியக்கமுமாய்க் — காலுங் கையும்
மடக்கி யொருபு றத்தில் முடக்கினனே

99. கிறுகிறென் றேமயங்கிக் —கோதடியிற்
கிடந்தேன் சூரியனு மடைந்தானே
நறுமலர்த் தொடைமார்பன் —எச்சப்ப
நாயக்கன் புண்யச காயத்தினுல்

100. போனகக் காரர்வந்து —வண்டகம்
போஞ்செய வாவென்ருர் வாஞ்சையுடன்
ஈனமிலா தெழுந்திருந்தேன் —பாத்திரம்
எடுத்தேன் பந்தியிற்சென் றடுத்தேனே

101. கூண்டிருந் தசனஞ்செய்தேன் —பசியினிற்
குறைந்த வயிறனேத்தும் நிறைந்திடவே
வேண்டிய சோற்றையுண்டு —வயிறு
வீங்கியே கண்களுந் தூங்கினேனே

102. விடிந்தபின் னெழுந்திருந்தேன் —பாளைய
வீதியு மவரவர் சேதிகளும்
உடந்தையாய்ப் பார்த்தறிந்தேன் —அங்கங்
குறைவுகொண் டவரவர் திறவுங்கண்டேன்

103. கோப்புகள் தனையுங்கண்டேன் —பட்டாணிக்
கூட்டமு நாட்டமுங் குறிப்புங்கண்டேன்
காப்புகள் தனையுங்கண்டேன் —தலையாரி
காவலும் படுக்கையுங் களமுங்கண்டேன்

104. அறிந்திடும் பழையவர்போல் —ஆளோடே
ஆளாகப் பதினைந்து நாளிருந்தேன்
மறந்திகழ் சூலுபுகான் —ஏறிய
வாசியி லுத்தமத் தேசிதனைக்

105. காத்திருந் தேவல்செய்யும் —பயல்கள்வங்
கணமாச் செனக்கது குணமாச்சே
தோத்திர மாக்குதிரைப் —பாஷையுந்
தொழிலையும் பரிசித்தேன் வழிவசமாய்

106. வாசியைக் களவுகொள்ள —இன்றமா
வாசி யிருட்டுவந்து வாய்ச்சுதென்றே
ஈசலைப் போலொதுங்கித் —தனித்தோ
ரிடத்தே சென்றுநான் படுத்தேனே

107. ஒளித்தே படுத்திருந்தேன் —பேசாமல்
ஊமனைப் போலநடுச் சாமத்திலே
விழித்தேன் எழுந்திருந்தேன் —கச்சைகட்டை
மெல்ல விறுக்கிக்கொண்டேன் சல்லடத்தைக்

108. கண்ணுக்குத் தெரியாத —குளிசமுங்
கட்டிக்கொண் டேன்திலக மிட்டுக்
கொண்டேன்
எண்ணிக்கை யில்லாமல் —பாளையத்
திறங்கின பேரெல்லா முறங்கக்கண்டேன்

109. மாயமா யொண்டியொண்டிப்போய் —இதுநல்ல
வாய்ப்பென்று கூடாரம் போய்ப்புகுந்தேன்
தேயத்திற் கிடையாத —உத்தமத்
தேசியைப் பிடிக்கவு பாயமிட்டேன்

110. மரகத மலைதனியே —உருச்செய்து
வைத்துக் கடைந்தெடுத்த சித்திரம்போல்
குரகதத் தருகு சென்றேன் —காலைத்தொட்டுக்
கும்பிட்டேன் மேலைத்தொட்டு முகந்தடவித்

111. திரள்மணிக் கடிவாளம் —வாயினில்
செறித்தேன் வாயினுரை தெறித்திடவே
குரசுக்குள் மேலான —தலைவிட்டுக்
குறிப்பாய்க் கழுத்தினில் தெறிப்பும்விட்டேன்

112. முறுக்கிட்ட பாசாளந் —தனைவிட்டு
முறுக்குப் போட்டுச்சுக சுறுக்குடனே
சறுக்காமல் விழிப்புடனே —கைக்கச்சைத்
தாங்கி வெளியில்மெள்ள வாங்கினனே

113. வெளிக்கொண்ட குதிரையின்மேல் —அடியேன்
மேற்கொள்ள வேண்டுமென் றுக்ரமித்தேன்
கழிக்கம்புச் சோணங்கிநாய் —விழித்தென்னைக்
கலைத்திட வொருசத்தங் குலைத்திடவே

114. சடுதியிற் குலைத்ததென்றே —உறங்கிய
சாணிப் பயல்களும் பட்டா ணிகளும்
திடுதிடென் றோடிவந்தே —குதிரையைத்
தேடினார் சுற்றும்பிற்று மோடினரே

115. தக்காது குதிரையென்றே —விட்டொளிக்கத்
தலமற்று நடக்கப் பலமுமற்றுப்
பக்காழிப் பொதியெடுக்குந் —துருத்திக்குள்
பதுங்கிக்கொண் டொருபுற மொதுங்கினனே

116. பறிபட்டுத் தேடினபேர் —முறுக்கிட்டுப்
பாயும் புரவிநின்ற சாயல்கண்டே
தெறிபட்ட கள்ளனையே —பதனமாத்
தேடும் வழிக்காவல் போடுமென்றார்.

117. பந்தமும் பகல்வத்தியுந் —தீவட்டியும்
பார்த்த திசையெலாங்கண் பூத்திடவே
அந்தவல் லிருட்டை யெல்லாம் —பட்டப்பக
லாக்கினா் திசையெங்கும் நோக்கினரே

118. தெற்றிய குடிசைகளும் —புல்லுக்கட்டும்
திரைகளும் காணக்கொப் பரைகளுடன்
சுற்றிய விடுதிகளும் —இடம்பெறச்
சோதித்தா ரென்றுமனம் பேதித்தேனே

119 துருத்திக்குட் பதுங்கிக்கொண்டு —கிடப்பது
துறையல்ல தப்புவது முறையெனவே
பொருத்தமுற் றெழுந்திருந்தே —ஓடிப்போய்ப்
பொடுபா டெனவிறகு நடுவொளித்தேன்

120. துணிவுட னொளித்திருந்தேன் —சாய்ந்திடுந்
தோட்கட்டி லொருகருந் தேட்கொட்டவே
அணிகெட்டுத் தடுமாறித் —தேள்விடம்
ஆற்றாமல் மதியையுந் தோற்றேனே

121. எரித்திடுங் கடுப்பனல்—படபடென்
றீரல் துடித்திடக்கண் ணீர்சொரிந்தேன்
ஒருத்தனாய் அலைந்திருந்தேன் —பாப்பாத்தி
உப்புக்கண்டம் போக்கடித்த ஒப்புப்போலே

122. மறுமொழி பேசாமல் —கச்சைக்குள்
மருந்திருந் ததும்மெடுத் தருந்தாமல்
குறுகுறென் றேவிழித்தேன்—கள்ளனைத்தேள்
கொட்டின தென்றபேர் மட்டுமாச்சே

123. கறுப்புக்கண்டால்வருவார் —துருக்கர்
கபடரென் றேநினைத் தவிடம்விட்டேன்
சுறுக்குடன் கிடந்துருண்டேன் —நான்செய்த
துர்ச்சனத்துக் கானவர்ம லட்சணம்போல்

124. ஐயையோ நெருஞ்சிமுள்ளும் —முனைக்கல்லும்
அழுத்தி முதுகுநெஞ்சைக் கிழித்திடவே
கைகால்கள் பதறிக்கொண்டே—உருண்டுருண்டு
கலக்கத்தி லேவிழுந்தேன் சலக்கத்திலே

125. தாழ்ந்துருண் டோடிவிழுந்தேன் —ஏதுங்கெட்ட
சதுக்கான குழியிலே சொதுக்கனவே
வீழ்ந்தவன் கள்ளனென்றே —காரியம்
வெற்றிதா னெனவந்து சுற்றினரே

126. சுற்றிலே வளைந்துகொண்டே —துருக்கரும்
தொடுகட லெனவந்த வடுகருடன்
பற்றுவான் தொங்கச்சிக்கின —விடமோக்க
பட்டிவச்சி கட்டிவைச்சி கொட்டுகொட்டென்
பார்

127. சோராயெ பக்டுரேயரே —வெட்டி
சோது மதுநிரை வாதியென்பார்
ஏலாத களவு செய்தான் —கள்ளனிவன்
எந்தநகரத்திருந்து வந்தானென்பார்

128. குச்சுச்சூளை மகனிவன்தான் —குதிரையை
உச்சிக்கொள்ள வந்தானென்று கச்சுப்பிச்
சென்பார்
எச்சுப்போய்க் கிடக்கிறனென்பார் —இனிக்கரை
யேற்றுமென்பார் யார்பொறுப்பார்
நாற்றமென்பார்

129. மூக்கைச் சுளித்துக்கொள்வார் —முகமாறி
மூச்செறிந் திவனுக்கு வாய்ச்சுதென்பார்

காக்கைகளும் பொருந்தா —நாற்றத்தைக்
கண்டா னிவன்பொறுத்துக் கொண்டா
னென்பார்

130. துடக்கென்று பாராமல் —அடியேன்
துலைக்குழிக் கழுதைபோற் சலக்கத்திலே
கிடக்கிற சமயத்திலே —முட்டுக்
கீழ்க்கையிட் டொருபயன் தூக்கினனே

131. முட்டுக் காளவாய்போலே —தீண்டாமல்
முழுகச்சொன் னாருடல் கழுவிக்கொண்டேன்
கட்டிக்கொண் டெனைக்கொடுபோய்—நான்செய்த
காரியம் சொல்லித்துலை யாரிமுன்னே

132. விட்டிவன் பதனமென்றார் —அவனொரு
வீட்டுக்குள்ளேயடைத்துப் போட்டுவைத்தான்
கட்டோடே கிடந்துருண்டேன் —விடிந்திடுங்
காலைக்குள் ளேசிறைச் சாலைக்குள்ளே

133. பெரியோர் பெருந்தலையார் —இல்லாமல்
பேயும் நாயுமயிர் பிடித்திழுத்துத்
தரியா தெனை நடத்திக் —கொண்டுபோய்த்
தாவூது கான்முன் னேவிடுத்தார்

134. பட்டாணி ராவுத்தர்மார் —துரைமக்கள்
பாளையக் காரர்கள் அனைவோரும்
அட்டாள தேசத்துண்டோ —கள்ளனிவன்
அடக்கமும் ஒழுக்கமும் பாருமென்பார்.

135. எல்லோரு மொருமுகமாய்க் —கூடிவந்
திருக்கிற சமயத்தி னெருகத்திலே
நில்லாமல் துரத்துமென்பார் —தவறுசெய்
நெறிகேடன் தன்முகத்தில் அறையுமென்பார்

136. வெட்டவா ளுறைவிடுவார் —கோபித்து
மிதிப்பார் சவுக்கெடுத்து வீசுமென்பார்

கிட்டவா வெனவுதைப்பார் —ஏதென்று
கேட்பார் நல்லபலன் கிடைத்ததென்பார்.

137. ஆரிவன் காணுமென்பார் —நேற்றெல்லாம்
ஆண்டியாய்த் திரிந்தவன் காணுமென்பார்
பாரிவன் துணிவையென்பார் —ஆள்விட்டுப்
பார்க்கப் படாதிவன் மார்க்கமென்பார்

138. உடந்தையாய்த் திரிந்தானென்பார் —அளவிட்டு
மொட்டைக்காட்டில் முழக்கம்பு வெட்டு
வானென்பார்
திடந்தனைப் பாருமென்பார் —மணலையுந்
திரிப்பான் கல்லில்நா ருரிப்பானென்பார்

139. களவுசெய் பாதகனை —துரைமக்கள்
கண்ணூரப் பார்க்கவு மொண்ணுதென்பார்
பிளவுசெய் தெறியுமென்பார் —வாஞ்சித்த
பேரைப் பொறுபோறென்று பூரையிட்டு

140. மரகத மலையதிபன் —தாவுதுகான்
மறுமொழி பேசாமல் முறுவல்செய்தார்
நரபதி சூலுபுகான் —சமுகத்தில்
நடத்தும் இவனையப்பால் கடத்துமென்றார்

141. ... ... ... ...
... ... ... ...
சுந்தர மகராயன் —சூலுபு
துரையுடை சமுகத்துக் கெனை நடத்திக்

142. கொண்டுபோய் முன்னேவிட்டு —நான்செய்த
கோலத்தை யுந்திருட்டுச் சாலத்தையும்
பண்டுபார்த் ததைப்போலப் —படிப்படி
பகர்ந்தா ரவர்முகம் பார்த்தேனே

143. கொதிக்க திக்குலத்தென்றார் —சாய்புநீர்
கோபஞ்செயா தேயும்நான் காபரென்றேன்

எதுக்கோ சிரித்துக்கொண்டார் —இருந்தவர்
எல்லாருமெனைப்பார்த்துச் சவ்வாசென்ருர்

144. சிரித்துத் தலையசைக்கவே —நமக்கினிச்
சீவனுக் கழிவில்லை யெனநினைந்தேன்
தரித்துத் திடமாய்நின்றேன் —காதிமார்
தன்னை யழைத்திவனுக் கென்னவென்ருர்

145. காதிமா ரெல்லாரும் —பொறுக்கானிற்
காணு முறைமை கடக்காமலே
கோதிலா தறிந்துணர்ந்தே —இவன்றனைக்
குறிப்புடன் காலுங்கையும் அறுத்திடென்ருர்

146. சொன்னமொழி தனைக்கேட்டுச் —சூலுபுகான்
துரந்தரன் முத்திரைமோ திரந்தனையே
தலையாரி கையிற்கொடுத்தே —இவன்றனைச்
சாகாமல் காலுங்கையு மறுத்திடென்ருர்

147. சொன்னகட் டளைப்படியே —அடியேனைத்
துடித்திடக் கையைக்கட்டிப் பிடித்துக்
கொண்டு
முன்னும்பின்னு மாகவென்னைச் —சவுக்கடி
மூட்டிக் கடைத்தெருவே கூட்டிச்சென்ருர்

148. காதினி லறையறைந்து —கழுத்துக்கும்
காலுக்கும் எருக்க மாலையிட்டு
வீதி தொறும்நடத்திக் —கண்டவர்கள்
விலக்கவும் கேளாமல் அலக்கழித்தார்

149. கோட்டைக்கப் புறமகற்றி —அவரவர்
குழுவும் கடைத்தெருவில் வெளியும்விட்டுப்
பேட்டைத் தெருவில் விருத்தி —அம்பட்டப்
பிரமனை யழைப்பித்தார் அரமனையார்

150. கருவி பிரமனெடுத்தே —கூர்மைகள்
காட்டக்கற் சாணையில் தீட்டிக்கொண்டே

வரையும் குறிப்பும் குறித்துச் —சுருக்குடன்
வலக்காலும் இடக்கையும வாஙகினனே

151. ஆக்கினைக் களரிக்குள்ளே —அங்ஙனே
அயர்ந்து களைதாங்கி மூச்சொடுங்கி
நாக்கொடு வாய்குழறி —உடலம்
நடுங்கிப் பதைபதைத் தொடுங்கிவிட்டேன்

152. துலங்கிய சோலைமலை —தனிலுள்ள
தோழருடனிருந்து வாழாமல்
இலங்கிய மதுரையிற்போய் —சொக்கரைக்கை
யெடுத்தபின் நமக்குக் கிடைத்ததென்றே

153. அழுதுபுலம் பிப்புலம்பி —விதிப்படி
யாச்சு தெனவேபெரு மூச்செறிந்து
பொழுது புகுமளவும் —வேதனையால்
புரண்டு புழுதிமண்ணி லுருண்டுருண்டு

154. விதியால் மதிமயங்கிக் —கிடக்கிற
வேளை தனிலேயந்தப் பாளையத்தில்
பதியா யிருக்கிறபேர் —வந்துவந்து
பார்ப்பாருமேனென்று கேட்பாருமே

155. ஈனச கள்ளனிவன்தான் —காலுங்கையும்
இருந்தா னிதுதிரு வுளந்தானென்
றதிசயம் பார்க்க வந்து —சுற்றிச்சுற்றி
யலைவாரும் எண்ணத் தொலையாதே

156. அந்தச் சமயத்திலே —வகுதை
அவுதல் காதிபிள்ளை சுதனுனேன்
மந்தரத் திண்புயத்தான் —கனதுரை
மாமுநயி னுப்பிள்ளை மகராசன்

157. வெம்பிய மதகரியான் —காயல்
விசைய ரகுநாதப் பெரியதம்பி

தம்பித் துணையெனவாழ் —குங்குமத்
தாம மிலங்குபுய மாமுநயினுன்

158. சென்னப்பட் டணத்திருந்து —செஞ்சியில்
செருக்குட னேவந் திருக்கையிலே
அந்நகர் தனிலடியேன் —களவுசெய்
தாக்கினைப் பட்டவென்னைப் பார்க்கவந்தார்

159. வந்துநின் றேதெனவே —எனையந்த
மண்ட லாதிபதி கண்டிரங்கி
எந்தவூ ரெந்தத்தேசம் —நீயாரென்
றியம்பினர் மனதினில் நயம்பெறவே

160. வார்த்தையெலாங் கேட்டபோதே —சோலை
மலைக்கள்ள னென்றுநான்
தலத்தைச்சொன்னேன்
பார்த்தபோது சவ்வாசென்றே —எலுமிச்சம்
பழத்துக்கு மெண்ணெய்க்கும்
பணங்கொடுத்தார்

161. ஏதுமற்ற பரதேசி —இவனைக்கை
யேற்றுப் பரிகரித்துப் பார்த்திடென்றே
தீதற்ற பண்டிதர்க்கு —நூறுபொன்னுந்
திட்டமாய்ச் சம்பளமுங் கட்டளையிட்டுக்

162. காயத்தை யாற்றிக்கொண்டு —கீழக்
கரைக்குப் பெரியதம்பி மரக்காயர்
வாயிற் றலத்தில்வந்தால் —உன்னுடைய
வறுமை தொலைந்திடுமென் றுறுதிசொல்லிக்

163. கனதுரை மாமுநயினுப் —பிள்ளையென்மேற்
கருணை புரிந்தெழுந் தருளியபின்
னனைவோருங் கூடியிருந்தே —காய்ச்சியொத்
திட்டா ரதில்மருந்து கட்டியபின்

164. பத்தியந் தவருமல் —சோறும்
பசியறிந்தே கொடுத்தார் ருசிபெறவே

முத்திரைப் பதமாகக் —கெடுவிட்டு
மூன்றுநா ளேக்குள்ளே கடுப்பாற்றிக்

165. காயமு நாளுக்குநாள் —குணமாய்க்
கருந்தழும் பேறவே மருந்துகட்டித்
தாயென உபசரித்து —நோய்தீரத்
தற்காத்து ரட்சித்தார் மிக்காகவே

166. நடுத்தலம் புகழ்மதவேள் —மாமு
நயிஞ மகிபதி கையிஞலே
கொடுத்திடும் பணத்தாலே —நாஞெரு
குதிரையும் வாங்கிக்கொண்டேன் சதிருடனே

167. ஆளொன்று கூட்டிக்கொண்டேன்
—செஞ்சியில்வந்
தலேந்த பாவமெலாந் தொலேந்ததென்றே
நாளொன்றும் கேட்டுக்கொண்டேன்
—சீக்கிரத்தில்
நடந்தேன் தொலேவழி கடந்துசென்றேன்

168. வாலிகொண்ட புரங்கடந்து —அரியலூர்
வழியும் புதுக்கோட்டை வெளியும்விட்டுச்
சோலியொன்றும் பாராமல் —திருமரு
தூருங் கடந்துதொண்டி யூரில்வந்தேன்

169. கோதற்ற தொண்டிகடந்தேன் —நல்லமணக்
குடியுந் திருப்பாலேக் குடியும்விட்டேன்
பாதைக்குள் வாடியும்விட்டேன் —தேவி
பட்டணமும் வந்துகண்டே னிட்டமுடனே

170. திருந்தலர் பணிபாதன் —நரபதி
செகபதி சேதுபதி ரகுநாதன்
பொருந்தமனு முறைசெயயும் —ராமநாத
புரத்தில்வந் தன்றிரவு தரித்திருந்தேன்

171. வர்த்தக மன்னியர்சூழ் —பெரியதம்பி
மரக்காய ராசார வாசல்வந்தேன்
சுத்திவீர ரணசூரன் —செய்தகாதி
துரைமயங்கே யென்றேன்கீழக்
கரையிலென்றார்

172. அத்தலந் தனைக்கடந்தே —கண்மாயும்
பளத்தையுங் கண்டுதிருக் குளத்தில்வந்தேன்
வைத்தபனை மரத்துக்குங் —காலுக்கும்
வாரைக் குளத்தில்மூழ்கிக் கரையேறிக்

173. கணத்தினில் வழிகடந்தேன் —பாலையாறுங்
கடந்தே னொண்டிநொண்டி நடந்தேனே
மணற்சரி வதனைக்கண்டேன் —சாலையும்
வாய்ப்பான சிங்காரத் தோப்புங்கண்டேன்

174. கொடிக்கால் மணலுங்கண்டேன் —செம்பொன்
குடம்வைத்த வேகாந்தர் மடமுங் கண்டேன்
கடைத்தலை வீதிகண்டேன் —லெப்பைமார்
காலிமா ரோதும்பள்ளி வாயில்கண்டேன்

175. விருதுமன் னியர்கண்டேன் —காயல்
விசய ரகுநாதப் பெரியதம்பி
கருதலர் திறையளக்கும் —வாசலைக்
கண்டேன் மனங்களி கொண்டேனே.

176. சந்திக்க வந்திருக்குந் —துரைமக்கள்
தானு பதித்தலைவர் யூகிகளும்
மந்திரிப் பிள்ளைமாரும் —கணக்கரும்
வருக்கரும் மன்னியரும் வன்னியரும்

177. நிரப்பிடு மாசாத்தே —நானுமந்த
நெருக்கத்தி லொருபுற மிருக்கச்செய்தே

திருப்பாற் கடல்போலென்னை —ரட்சித்த
சீமான் அவுதல்காதி மாமுநயினுன்

178. வரக்கண் டெழுந்திருந்தே கும்பிட்டேன்
மார்க்கண்டன் போலிரென்று
வாழ்த்திக்கொண்டேன்
இரக்கஞ்செய் தென்னைநோக்கி —ஏன்பிளாய்
எப்போ என்ருர்நா னிப்போவென்றேன்

179. செங்கைமுகில் மாமுநயினுன் —நல்லதென்று
சேகுக்கண்டு மன்னவன்முன் பாகச்சென்ருர்
தங்களில்லை யிருபேரும் —ரகசியந்
தனைப்பேசி மரக்காயற் சமுகத்திற்போய்

180. சேகுக்கண்டு மரக்காயர் —என்னுடைய
சேதிசெய்த காதிதிருக் காதிலுரைத்தார்
ஆகட்டென்று முடிதுளக்கி —அவனையிங்
கழையுமென் ருளையவ ரனுப்பினுரே

181. ஆனவர்கள் வந்துசொலவே —நமக்கினி
அட்டபோகங் கிடடுமினித் திட்டமெனவே
கானுலா வியதொடையான் —செய்தகாதி
கதிர்ப்பிர பைதங்குஞ் சவுக்கையின்மேல்

182. பிறைநுத லியர்மதவேள் —மீராப்
பிள்ளை மரக்காயர் வள்ளலுடன்
திறமுள அதிசூரர் —பலபல
செய்திகள் யோசனை செய்திடவே

183. வாரிசை செய்துநயினு —னுடைசுதன்
வாலமன் மதனைப் போலிருக்க
மாரதர் தொழுசரணன் —குட்டி
மாப்பிள்ளை யொருபுறம் மகிழ்ந்திருக்க

184. மாதர்கள் மதரூபன் —எனவரு
மாப்பிள்ளை மாமுநயி னுப்பிள்ளையும்

பூதர புயசயினென் —சேருக்கண்டுப்
பூபதி யுடனொரு புறத்திருக்கச்

185. சந்தமுத் தமிழ்தேறுங் —கல்வித்
தலைவர் மகிழ்உமறுப் புலவருடன்
செந்தமிழ்க் கந்தசாமிப் —புலவனுஞ்
சீராட் டெனத்தமிழ் பாராட்டவே

186. துரைமக்க ளருகிருக்க —மறுமன்யர்
சூழ்ந்துகை வாய்புதைத்துத் தாழ்ந்துநிற்கத்
திரைசுற்று மணித்தவிசில் —சருவந்து
சிறந்திடக் கிளைவந்து நிறைநதிருக்க

187. கரணிக்கர் நிறைந்துநின்றே —அருட்டைக்
கண்பார்த்து வாய்புதைத்துக்
காரியஞ்சொல்லச்
சரணியற் சலாமுரைத்தே —தீவாந்தச்
சத்திரரும் வர்த்தகரு முத்திரஞ்சொல்ல

188. குச்சரியர் வச்ரமணியும் —நகைகளும்
கொண்டுவந்து தெண்டனிட்டு
கண்டுவணங்க
எச்சரிக்கை சாமியென்றே —பக்கலில்
இராசதக் காரர்நின்று வாசகஞ்சொல்ல

189. மத்தளமுங் கைத்தாளமுந் —தம்பூரு
வாத்தியங்கள் கொண்டுபலர்
கீர்த்தனஞ்செய்ய
முத்தமிழ் தான்தெரிந்தே —சமுகத்தில்
முதுதமிழ்க் கவிராசர் பதமுரைக்க

190. இலகிய கமலமகள் —சாந்த
இலட்சுமி யும்வீர லட்சுமியுங்
கலைமக ளுருவதன —சுவாமியென்
கர்த்த னெனப்பணிந்து நிர்த்தமிடத்

191 திருப்பாற் கடல்போலும் —சமுகத்தில்
திரைபோ னிரைசா மரையெறியத்
தருப்போற் கொடைகொடுக்கும் —வட்டாவில்
தாம்பூல முந்துகிலுந் தாங்கிநிற்க

192. சங்கநிதி பத்மநிதிபோல் —நிதிவாரிச்
சடையாம விருகையுங் கொடைகொடுக்க
இங்கிதசௌந் தரியமின்னார் —ஆலாத்தி
யேந்தி யிருபுறமுஞ் சேர்ந்துநிற்க

193. நிறைந்தகலை மதிவந்தே —சமுகத்தில்
நின்றதென்ன வெள்ளைவட்ட மொன்று
நிழற்றச்
சிறந்தசிங் காதனத்தில் —செய்தகாதி
சிலைமத னைப்போலக் கொலுவிருந்தான்

194. இருந்தசமு கத்திற்சென்றான் —உடல்பூரித்
திளகி மனநன்றாய்த் தளதளத்துக்
கருந்தடங் கன்னியர்வேள் —செய்தகாதி
கன்னவ தாரனைப் போலிருந்தான்

195. விஞ்சையர்க் கனுகூலன் —காயல்
விசய ரகுநாதப் பெரியதம்பி
கஞ்சமலர்ச் சரணத்தைக் —கண்ணாரக்
கண்டு களிகூர்ந்து தெண்டனிட்டேன்

196. அடைக்கலங் காத்தபெருமான் — மன்னவர்க்
கரசு நிலைநிறுத்துஞ் செய்தகாதி
கடைக்கண்ணா லருட்பார்வையைக் — கண்ணாரக்
கண்டு களிகூர்ந்து தெண்டனிட்டேன்

197. தெண்டனிட்டு வணங்கிநின்றேன் —செய்தகாதி
திருவுள மகிழ்ந்தரு ளகங்குளிர்ந்து
பண்டுபழ கினவர்போல் —அடியேன்
பாட்டைச் செவிதாழ்த்துக் கேட்டனரே

198\. கேட்டு மனதிலிரங்கி —அடியேன்
சிலேசந் தவிரநல்ல வாசகஞ்சொல்லி
நாட்டிற் றிரிந்துபிழைப்பான் . —இவன்றனை
நாமிசு லாமாக்கு வோமெனவே

199\. தாராள மாநினைந்தே —அடியேன்
தன்கையி லாயிரப் பொன்கொடுத்துப்
பேரான சதக்கத்துல்லா —முன்பாகப்
பேதமில் லாக்கலிமா வோதச்சொல்லி

200\. பரிவுசெய் தெனையனுப்பக் —கொத்துவாப்
பள்ளி வா சலில்வந் துள்புகுந்தேன்
எரிகதிர் மணித்தவிசில் —ஆலிம்கு
ளெல்லா ருடன்சதக்கத் துல்லாவைக்

201\. கண்டுதொழு திறைஞ்சிநின்றேன் —இசுலா
... ... ... ... ...
... ... ... ... ...
மாக்குமெனை யென்றொரு வாக்குச்சொன்னேன்

202\. சடுதியில் சதக்கத்துல்லா —கலிமாத்
தானுஞ்சொன் னரதை நானுஞ்சொன்னேன்
அடைவொடு கலிமாவின் —பொருள்கள்
அனைத்தையுஞ் சொன்னாரென்றன்
மனத்திருத்தி

203\. படித்த பறுலு சுன்னத்து —நவிலுடன்
பாத்திகா வோதிச்சின் னாள்திரிந்தேன்
முடித்துக் கதாதொழுதேன் —இவனல்ல
முசிலி மெனச்சொல்லி யிசுலாத்தில்

204\. தொழுகையுஞ் செக்காத்துடனே —நோன்பையும்
தொடுத்த படிபிடித்து முடித்திடுநாள்
பழுதற்ற கச்சுசெய்யவே —போவென்றார்
பக்கத்தி லேயிருந்தோர் மக்கத்திலே

205. சொற்படி யுற்பனமாய்ச் —சதக்கத்
துல்லா வுடன்சலாமுஞ் சொல்லிக்
கொண்டேன்
சற்குண நிதியனையான் —செய்தகாதி
தாமரைத் தாளுக்குச்ச லாமுரைத்தேன்

206. கன்னுவ தாரனையா —செய்தகாதி
காரியக் காரர்கள் வீரியமாய்ப்
பொன்னுலே வாழ்க்கைதனில் —தொழில்செய்யப்
போறபத் தாசினி லேறிக்கொண்டேன்

207. அணிபெறு பத்தாசிலே —ஏறி
ஆட்களுடன் பொன்னுல் வாழ்க்கைசென்றே
திணிசுடர்ப் புரிசைசுற்றுங் —கோழிக்கூட்டிற்
செப்பமுடன் சென்றுமறு கப்பலேறி

208. கடற்றுறை வழிகடந்தே —இறங்கிமக்
காவுங் காபத்துல் லாவுங்கண்டேன்
இடத்தினி லெப்பைமாரும் —எல்லார்க்கு
மீவுகள் கொடுக்குஞ்ச ரீவுகளும்

209. அறபிகள் செய்தகளும் —செயிகு
ளாலின்க ளோதும்பள்ளி மோதீன்களுந்
திறமுட னிருக்கக்கண்டேன் —யாவர்க்கும்
செப்ப முடன்சலாம் செப்பினனே.

210. மக்கமுங் கவாவையும் —கடந்தந்த
வரிசைத் தலங்களெல்லாந் தெரிசித்தபின்
மிக்கபொறுக் கான்படியே —அடியென்
மேலோனைத் தொழுதொரு பாலிருந்தேன்

211. அய்யமில்லா தத்தலத்தில —ஓதி
அருந்தவம் புரிந்தங்கே யிருந்ததற்பின்
மைதவழ் முகிற்குடையார் —அரசுசெய்
மதினு தனக்கிரு பதுநாளில்



வள்ளல் சீதக்காதியின் அடக்கத்தலம், அவரின் கடைசி விருப்பத்திற்கு இணங்க கப்று கட்டப்படாமலும் மேற்கூரை அமைக்கப்படாமலும் இருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

212. போனேன் மதிஞவில் —மதிஞப்
புரிசையெல் லாங்கண்டேன் வரிசையுடன்
தானே யகமகிழ்ந்து —திருவடி
சார்ந்த தலத்தைக்கண்டு சேர்ந்தேனே

213. செல்லேக் குடைதரித்தோர் —மதிஞச்
சேகமெலாம் புகழ்மக மதுநயினர்
சொல்லிற் சுவபதிபோல் —வாஞ்சையாய்த்
துலங்கிய மாளிகை வலஞ்சுற்றினேன்

214. சுற்றிவந் தெதிரே நின்றேன் —அவிடத்தில்
துய்யோன் மறையோதுஞ் செய்துகள்
முன்னே
வெற்றிச் சலாமுரைத்தேன் —அவிடத்தில்
மேலோனேத் தொழுதொரு பாலிருந்தேன்

215. வரிசை நபியிறசூல் —முகம்மது
மந்தார முகிற்குடைக் கொந்தாலத்னத
அருகிலே சென்றுநபியைப் —போற்றி
ஆத்திரந் தீர்ந்திடத் தோத்திரஞ்செய்தேன

216. படியேழ் புகழ்நபியை —அவுதுல்லா
பாலக ராமிற சூழ்நபியை
அடியேன் மனக்குறையும் —போகவென்
ஞத்திரந் தீர்ந்திடத் தோத்திரஞ்செய்தேன்

217. போற்றித் துவாவோதியே —பரவசமாய்ப்
புத்தி மயங்கியொரு நித்திரைசெய்தேன்
ஏற்றுச் கவுலாக்கியே —எனக்குமுன்
னிருந்த காலுங்கையும் வளர்ந்திடவே

218. சுறுக்கா வெழுந்திருந்தேன் —எங்களிற
சூலரு ளாற்கையுங் காலுங்கண்டே

குறிப்பா யதிசயித்தே —ஈமான்
கொண்ட பலன்கைம்மேல் கண்டேனே

219. காயலின் மகராயன் —செய்த
காதியைத் திசைநோக்கிக் கையெடுத்தேன்
தாயென வுபசரித்த —மாமுநயினூர்
தன்னையு நினைந்தே தாழ்ச்சிசெய்தேன்

220. அறபுக் கரையு மக்கமு —மரச
ரவர்வாழி யவர்குல முறைவாழி
குறைசிக் கிளையும்வாழி —செயிதுக்
கூட்டமும் வாழிபுறுக் கான்வாழி

221. ஆழிசூழ் புவிவாழி —செருவில்
அரிய துரைசேது பதிவாழி
கீழக் கரைவாழி —சிங்கக்
கேசச் சதக்கத்துல் லாவாழி

222. தீனவர் குலம்வாழி —செய்தகாதி
செல்வமுங் கல்வியுந் தினம்வாழி
ஆனமதி மூன்றுமழை —பெய்தே
அனைவோரும் வாழிரப்பில் ஆலமீனே!

செய்தக்காதி நொண்டி நாடகம் முற்றிற்று.

# முடிவுரை

இதுகாறும் வள்ளல் சீதக்காதி அவர்களின் வரலாறு பற்றி எனது ஆய்வினைத் தந்துள்ளேன்.

முடிவாக அவர் மீது புலவர்கள் பாடியுள்ள தனிப் பாடல்கள் பலவற்றுடன், அவர் மீது பாடப்பட்டுள்ள—செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து, செய்தக் காதி நொண்டி நாடகம் என்கிற—இரண்டு நூல்களையும் தந்து இந்நூலை நிறைவு செய்துள்ளேன்.

வள்ளல் சீதக்காதி அவர்கள் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்து அங்கேயே சமாதி கொண்டுள்ளார் என்று இந் நூலில் குறிக்கப்பட்டுள்ளது. இக்கூற்றினை இதற்கு முன்னரும் பலர் எடுத்தியம்பியுள்ளனர். அவர்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் அரபி—பார்ஸி—உருதுமொழித் துறைத் தலைவராயிருந்து காலஞ்சென்றடாக்டர் S.முஹம்மது ஹுசைன் நயினார் M.A.,LL.B., Ph.D. ஒருவர். [பார்க்க இவர் எழுதியுள்ள சீதக்காதி வள்ளல் (1953)என்னும் நூல்]

இரண்டாவதாகச் சொல்லத்தக்கவர் காலம் சென்ற மதுரை காதிர் முகையிதீன் மரக்காயர். இவர் தமிழில் பெரும் பலவர். அரபி, பார்ஸி, உருது, ஆங்கிலம் அறிந்த மேதை. நல்ல கவிஞர். பன்னூல் ஆசிரியர். இவர் எழுதியுள்ள "ஆலிம் புலவரின் ஆன்ற ஒழுக்கம்" (1960) என்னும் நூலில் வள்ளல் சீதக்காதி கீழக்கரையில் அவர் தம்

முன்ஞேர்களின் காலத்தேயிருந்து வாழ்ந்தோராவார் என் பதைச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

இன்ெனுரு செய்தி: வள்ளல் சீதக்காதியின் முன்ஞேர் மன்னராக, ஐந்து பாண்டியருடன் ஆரும் பாண்டியஞக இருந்து நாடாண்டுள்ளனர் என அவர் தம் திருமண வாழ்த்து நூல் உரைத்திருப்பதை முன்னர்க் கண்டோம். முன்ஞேர் மட்டுமின்றி, சீதக்காதியும் நாடாண்ட மன்னர் தான் என்பதை இலங்கைத் தகவல் ஒன்று எடுத்தியம்பு கின்றது.

> ("...இலங்கை வாசியான அஹ்மது லெப்பை) அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தவிண்ணப்பம் ஒன் றில் அடங்கியுள்ள முக்கியத்துவம்வாய்ந்தகுறிப்பு களைக்கொண்ட விளக்கம்இங்கேதரப்பட்டுள்ளது. அதில், ஜனுப் அஹமது லெப்பை எந்த வமிசத்தில் தோன்றியுள்ளாரோ, அந்தவமிசபாரம்பரியத்தின் வரலாறு எடுத்தியம்பப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்குமுன்னர்த்தென்னிந்தியாவி லிருந்த ஒரு சுதந்திரமுள்ள தனி ராஜ்யத்தின் மீது ஆட்சி செலுத்தி வந்தமன்னர் சீதக்காதி மரக்கா யர்(King Seyda Kadi Marikar)வரை ஜனுப் லெப்பை தமது மூதாதையர் வமிசத்தைத் துருவி ஆராய்ந்துள்ளார்கள் என்பதை இங்குக் காண லாம்......''

—Twentieth Century Impressions of Ceylon
என்னும் நூல், பக்கம் 824 (1909)

இக்கூற்றை மெய்ப்பிப்பது போன்று இன்ெனுரு செய்தி, டாக்டர் S முஹம்மது ஹுசைன் நயினர் அவர் கள் எழுதி 1953-ல் வெளியிட்டுள்ள 'சீதக்காதி வள்ளல்' என்னும் நூலில் காணப்படுகின்றது. அதாவது 1686-ல்

வள்ளல் சீதக்காதி அவர்கட்கு, சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்த ஆங்கிலேய வணிகக் கம்பெனி எழுதிய கடிதத்தில் (your Government) உங்கள் அரசாங்கம் என்று குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

*(பார்க்க. சீதக்காதி வள்ளல் நூல், பக்கம் -40)*

இவ்விரு கூற்றுக்களும் வள்ளல் சீதக்காதியை மன்னர் எனக் கூறினாலும், இவை மிகைபட்ட கூற்றே எனலாம். அவருடைய வாழ்வு மன்னரையொத்ததாக இருந்திருக்க வேண்டும். அதன் பொருட்டே அப்படி எண்ணியிருக்கக் கூடும் என்பதே சரியாம். ஏனெனில் வள்ளல் சீதக்காதி வழங்குவதில், வணிகத்தில் செல்வாக்கில் மன்னரே தவிர, வாழ்வில் வணிகர் தான் என்பதே நாடறிந்த—ஏற்றுள்ள உண்மை. ஆனால் இவர்களின் முன்னோரில் மன்னர்கள் உண்டு என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அவற்றுள் காயல்பட்டணம் ஆலிஜனுப் ஹாபிஸ் எம். கே. செய்யது அஹமது அவர்கள் எழுதியுள்ள "முஸ்லிம் தமிழ்ப் பாரம் பரியம" என்னும் நூலின் நான்காம் பக்கத்தில் காணப் படுகின்ற சான்றினை இங்குக் காண்போம்.

> "தமிழ் வணிகம் மிக உச்சம் பெற்றிருந்த 13-ம் நூற்றாண்டில், அரபு நாட்டில் உலகப் பாது காவலர் மன்றம் என்ற பெயரில் ஓர் உலக மன்றம் இருந்தது. அம்மன்றத்திலே தமிழகமும் அங்கம் வகித்தது. தென் பாண்டிய நாட்டைஅரசோச்சிய அறபி வேந்தன் ஒருவன் அம்மன்றத்தின் தலைவரா கச் சில காலம் பதவி வகித்துச் சிறப்பித்தான்..."

இந்த அரிய குறிப்பில் காணப்படுகின்ற மன்னன் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியான செம்பி நாடெனும் கீழக்கரையைஆண்டிருந்தஅரபியனான வின்னன் ஆகலாம். இந்த வின்னனே சீதக்காதியின் முன்னோன் என்பதை

இந் நூலின் பல்சந்தமாலே பற்றிய விளக்கப் பகுதியில் காண்க. ஆய்வில்லாக் காலத்தே கர்ணபரம்பரைக் கதைகளே வைத்து மக்கள் எதுஎதையோ நம்பவும் கூறவும் செய்தனர். அதிலொன்றே வள்ளல் சீதக்காதி காயல் பட்டணவாசி என்கின்ற கூற்று. இக்கூற்றுக்காதாரமேயில்லே என்பதை டாக்டர் S. முஹம்மது ஹுசைன் நயினூர் அவர்களும், மதுரைக் காதிர் முகையிதீன் மரக்காயர் அவர்களும் இயம்பியுள்ளதைக் கண்டோம். இன்னும் ஆய்வுகள் தோன்றத் தோன்ற விளக்கங்களும் அதிகம் கிட்டலாம். அதனுல் தான் ''ஆராய்ச்சி என்பது முடிவானதன்று'' என முன்னேர் மொழிந்துள்ளனர் எனக் கூறி, வள்ளல் சீதக்காதி வரலாற்றை முடிக்கின்றேன். பெருகட்டும் ஆராய்ச்சிகள்.

——

## எங்களது புதிய வெளியீடுகள்

**கலைஞர் மு. கருணாநிதி**

| | | |
|---|---|---|
| தென்பாண்டிச் சிங்கம் | 30 | 00 |
| இந்தியாவில் ஒரு தீவு | அச்சில் | |
| கலைஞரின் கடிதங்கள் | ,, | |

**C. N. அண்ணாதுரை M.A.**

| | | |
|---|---|---|
| முக்கனி | 5 | 00 |
| உணர்ச்சி வெள்ளம் | 5 | 00 |
| புதிய வரலாறு | 4 | 00 |
| அண்ணாவின் உவமைகள் | 8 | 00 |
| அண்ணாவின் சமுதாயப் புரட்சி | 7 | 00 |
| பேச்சுக் கலை | 7 | 00 |

**பி. சி. சீதாபதி (குறளடிமை)**

| | | |
|---|---|---|
| வாலி வழக்கில் தீர்ப்பு | 12 | 00 |
| கம்பன் சொல்லும் பொருளும் (பாலகாண்டம்) | 7 | 00 |
| கம்பன் சொல்லும் பொருளும் (அயோத்தியா காண்டம்) | 9 | 00 |
| கம்பன் படைப்பில் குற்றவாளிகள் | 25 | 00 |

**Dr. K. நடராஜன். B.SC., M.D.**

| | | |
|---|---|---|
| நோய் அறிதல் (Text Book of Medicine in Tamil) | 30 | 00 |
| தொத்து நோய்கள் (Infections Diseases) | 30 | 00 |
| தொழு நோய் (Leprosy) | 3 | 75 |


Wrapper Printed by : Vetti Achagam,, Madras-14.